# ஞானப்பாட்டுகள்

மின் நூல்: எஸ்.கே.ராஜன்
டக்கரம்மாள்புரம்.

# ஞானப்பாட்டுகளின் அகராதி

## அட்டவணை

அ ஆ இ உ

ஊ எ ஏ ஒ ஓ

க ச ஞ த ந

ப ம ய ர ல

வ ஜ ஸ்

# அ


1. அகோரகஸ்தி பட்டோராய் ....................................71
2. அஞ்சாதிரு என் நெஞ்சமே ................................. 185
3. அடியார் நெஞ்சைத் தயவாய்...............................245
4. அதோ ஓர் ஜீவ வாசலே ...................................421
5. அதோ மாட்டுத்தொழு பார்.................................375
6. அநாதியான கர்த்தரே.......................................003
7. அநேகர் ஆசை கொள்ளும்................................. 194
8. அபிஷேகம் பெற்ற சீஷர்....................................241
9. அருவிகள் ஆயிரமாய் ......................................341
10. அருள் ஏராளமாய் பெய்யும்................................394
11. அருள் நாதா நம்பி வந்தேன் ..............................205
12. அருள் நிறைந்தவர் ........................................ 177
13. அருள் மாரி எங்குமாக......................................202
14. அருளின் ஊற்றாம் யேசுவே .............................. 168
15. அருளின் ஜோதியான ......................................225
16. அலங்கார வாசலாலே .......................................002

17. அல்லேலூயா அல்லேலூயா ............................080

18. அவிசுவாசத்தில் துவைந்து ................................371

19. அற்ப வாழ்வை வாஞ்சியாமல் ............................223

20. அற்புதம் அற்புதம் ..........................................377

21. அன்பின் ரூபி மோட்சானந்தம் ...........................186

22. அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர் ................352

23. அன்போடு எம்மைப் போஷிக்கும் .......................350

## ஆ

24. ஆ இவ்வேழைக்கு இரங்கும் ..............................252

25. ஆ உமது மா தயையால் ....................................171

26. ஆ என்னில் நூறு வாயும் நாவும் ........................232

27. ஆ கர்த்தாவே தாழ்மையாக ..............................118

28. ஆ களி கூர்ந்து பூரித்து ....................................215

29. ஆ சகோதரர் ஒன்றாய் ......................................240

30. ஆ நீதியுள்ள கர்த்தரே .....................................314

31. ஆ மேசியாவே வாரும் ......................................330

32. ஆ யேசுவே உம்மாலே ......................................252

33. ஆ யேசுவே நான் பூமியில் ................................ 110

34. ஆ வானம் பூமி யாவையும் ................................ 316

35. ஆசையாய்க் கூடுவோம் ................................ 374

36. ஆண்டவா உமக்கே ஸ்தோத்ரம் ........................ 329

37. ஆத்துமாவே உன்னை ஜோடி ........................ 250

38. ஆத்துமாவே உன்னையும் ................................ 046

39. ஆத்ம நேசர் ஆவல்கொண்டு ........................... 380

40. ஆத்மமே உன் ஆண்டவரின் ............................ 323

41. ஆதி திரு வார்த்தையான ................................ 378

42. ஆதியில் இருளை ........................................ 143

43. ஆயுததாரி நான் ........................................ 423

44. ஆராய்ந்து பாரும் கர்த்தரே ............................ 198

## இ

45. இக்கட்டை மா அன்பாக ................................ 015

46. இகத்தின் துக்கம் துன்பம் ................................ 290

47. இங்கே நொந்து கொள்கிறோம் ........................ 300

48. இந்த அருள் காலத்தில் ................................ 332

49. இந்நாள் வரைக்கும் தேவனே ............................ 020

50. இந்நாளே கிறிஸ்து வெற்றியை ..........................081
51. இப்போது தூங்கும்படி நான்...............................018
52. இப்போது நேச நாதா தலை சாய்த்து ....................343
53. இம்மட்டும் ஜீவன் தந்த ....................................281
54. இம்மானுவேல் வாரும் வாருமே .........................325
55. இம்மானுவேலின் இரத்தத்தால் .......................... 163
56. இமால்ய மலையேறி........................................262
57. இயேசு உயிர்த்தெழுந்ததால் ..............................381
58. இயேசு நாதா காக்கிறீர் ....................................351
59. இயேசுவிடம் வா இன்றே...................................428
60. இயேசுவின் இன்ப நாமத்தை ............................098
61. இயேசுவை நம்பி பற்றிக் கொண்டேன்..................390
62. இரக்க ஆசனத்தைப் பார்...................................009
63. இரக்கமுள்ள யேசுவே .....................................064
64. இரட்சகரொருவர் அன்பு....................................410
65. இரட்சிக்க வல்லவர் யேசு .................................399
66. இரட்சிப்பை யுயர்த்திக் கூறுவோம் .......................422
67. இரத்தம் காயம் குத்தும் .....................................068

68. இவ்வேளைக்காக பலியான ..............................203

69. இளைஞர் சேரட்டும்.......................................294

70. இறங்கும் தேவ ஆவியே ................................ 131

71. இன்று கிறிஸ்து எழுந்தார்...................................079

72. இன்னோர் ஆண்டு முற்றுமாய்..........................280

## உ

73. உங்களைப் படைத்தவர் .................................... 153

74. உம் அருள் பெற யேசுவே.....................................253

75. உம் சித்தம் தேவா என் பாக்கியம் .......................365

76. உம் ராஜியம் வருங்காலை கர்த்தரே....................338

77. உம்தன் சொந்தமாக்கினீர் ..................................220

78. உம்மண்டை தேவனே ........................................ 178

79. உம்மாலேதான் என் யேசுவே..............................251

80. உம்மை ராஜா விசுவாச...................................... 199

81. உம்மைத் துதிக்கிறோம் யாவுக்கும்......................317

82. உலகின் வாஞ்சையான........................................ 111

83. உள்ளான தேவ பயமும்.......................................228

84. உளையான சேற்றில் நின்றெடுத்தார் ...................383

85. உன் சஞ்சலத்தை விட்டு ....................................056

86. உன்னதமான கர்த்தரே.......................................028

87. உன்னதமான ஸ்தலத்தில் ...................................040


## ஊ

88. ஊதும் தெய்வாவியை.........................................396


## எ

89. எங்களுக்கு மீட்பராக.......................................... 123

90. எங்கே ஓடுவேன்................................................ 161

91. எங்கே சுமந்து போயினீர் ....................................070

92. எந்தன் ஆத்ம நேசரே .........................................370

93. எந்நேரம் யேசுவே.............................................406

94. எந்நேரமேயும் பாடுவேன்....................................388

95. எப்போதும் யேசு நாதா.......................................207

96. எருசலேம் என் ஆலயம் .....................................289

97. எல்லா நன்மைக்கும் காரணா.............................431

98. எல்லாம் சிஷ்டித்த நமது ....................................036

99. எல்லாம் படைத்த கர்த்தரே................................063

100. எல்லாம் படைத்த நமது....................................030
101. எல்லாருக்கும் மா உன்ன ..................................097
102. எவ்வண்ணமாக கர்த்தரே ..................................146
103. என் அருள் நாதா யேசுவே ................................077
104. என் ஆத்துமாவே கர்த்தரை...............................044
105. என் உள்ளமே கர்த்தாவை ................................047
106. என் கர்த்தர் யேசுவே ......................................116
107. என் கர்த்தாவே உம்மில்தான்...............................192
108. என் களிப்புக்குக் காரணம் ..................................195
109. என் தேவனே என் ஆத்துமா..............................049
110. என் தேவனே என் பாகமே .................................197
111. என் நீதி ஏசுவே ...............................................165
112. என் நெஞ்சமே நீ கர்த்தரை................................043
113. என் நெஞ்சமே நீ மோட்சத்தை ...........................233
114. என் நெஞ்சை சுவாமி உமக்கே ...........................219
115. என் பாவத்தின் நிவர்த்தியை ...............................125
116. என் மீட்பர் யேசு கிறிஸ்துவே..............................254
117. என் மீட்பர் ரத்தம் சிந்தினார் ..............................210

118. என் மேய்ப்பர் யேசுகிறிஸ்துதான்........................208
119. என் மேய்ப்பரே நல்நேசரே................................387
120. என் யேசுவே நீர் எத்தனை ...............................249
121. என் ரக்ஷசகா நீர் என்னிலே..............................200
122. என் ரட்சகர் எல்லாருக்கும்............................... 193
123. என் ஜீவன் கிறிஸ்து தாமே...............................285
124. என் ஜீவன் சுகம் செல்வம் ...............................217
125. என் ஜீவன் போகும் நேரம் ...............................284
126. என்தன் ஜீவன் யேசுவே....................................218
127. என்பிதா வீட்டில் பலவாசஸ்தலங்கள்..................370
128. என்றென்றும் ஜீவிப்போர் அதரிசனர்..................347
129. என்னிடத்தில் பாலர் யாரும்..............................295
130. என்னை தேவ சாயலான.................................... 112

## ஏ

131. ஏகோபித்துச் சேருங்களேன்...............................361
132. ஏதேனில் ஆதி மணம் .....................................275
133. ஏழைப்பிள்ளை ஆயினும் ...............................296

## ஒ

134. ஒப்பற்ற நன்மையே ........................................201

135. ஒப்பில்லா திரு இரா ........................................376

136. ஒரே பேறான மைந்தனை ........................................234

137. ஒன்றாக ஆட்சி செய்கிற........................................318

138. ஒன்றே தேவையென்று சொன்னீர் ........................................181

## ஓ

139. ஓ பெத்லகேமே சிற்றூரே ........................................327

140. ஓசன்னா பாலர் பாடும் ........................................334

141. ஓய் எருசலேமியாரே ........................................091

## க

142. கடல் கொந்தளித்துப் பொங்க ........................................184

143. கண்டீர்களோ சிலுவையில்........................................073

144. கதிக்கெல்லாம் மேலான........................................113

145. கர்த்தர் என் பக்கமாகில் ........................................212

146. கர்த்தர் என் மேய்ப்பரானவர் ........................................206

147. கர்த்தர் சமீபமாம் என்றே ........................................344

148. கர்த்தரின் மாம்சம் வந்துட்கொள்ளுங்கள் .............355
149. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் .................................061
150. கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில்..................435
151. கர்த்தா என் நெஞ்சை உமக்கே..........................213
152. கர்த்தாவாம் யேசுவே .......................................106
153. கர்த்தாவின் ஓய்வுநாள் இதாம் ..........................027
154. கர்த்தாவின் சுத்த ஆவியே ................................130
155. கர்த்தாவின் தாசரே .........................................261
156. கர்த்தாவே அடியாருக்கு ..................................038
157. கர்த்தாவே அடியேனை நீர் ................................039
158. கர்த்தாவே இந்த நேரத்தில் ................................005
159. கர்த்தாவே இந்தக் கோவிலை ............................259
160. கர்த்தாவே இரங்கும் ........................................395
161. கர்த்தாவே இரவின் ..........................................366
162. கர்த்தாவே உம்மை நித்தமே ..............................041
163. கர்த்தாவே உம்மைத் துதிப்பேன் .........................231
164. கர்த்தாவே எதுமட்டும்.......................................092
165. கர்த்தாவே என் பிறப்பினால் ..............................246

166. கர்த்தாவே என்னை மா அன்பாய் ........................019
167. கர்த்தாவே ஏழைப் பாவியை ................................117
168. கர்த்தாவே நாங்கள் நெஞ்சத்தில் ...........................144
169. கர்த்தாவே நாங்கள் பூமியில் ...............................204
170. கர்த்தாவே பரஞ்சோதியால் ...................................416
171. கர்த்தாவே பூதலத்திலே ........................................265
172. கர்த்தாவே போன ராவிலே ....................................014
173. கருணைத் தேவனே ..............................................211
174. கரையேறி உமதண்டை ........................................420
175. கல்வாரி சிலுவையில் ...........................................412
176. களிப்புடன் கூடுவோம் ........................................045
177. காது குளிர பாடுங்கள்..........................................398
178. காரிருளால் மூடப்பட்ட .........................................264
179. காரிருளில் என் நேச தீபமே ...............................311
180. காலம் தோறும் தயவாக .....................................257
181. காற்றுத்திசை நான்கிலும் ....................................137
182. கிருபையாலே ரட்சித்தீரே ....................................384
183. கிறிஸ்து ராயரே ..................................................271

184. கீழ் வான கோடியின்....................................363
185. குணம் அடை சீர்கெட்ட ....................................059
186. கூர் ஆணி தேகம் பாய ....................................337
187. கெட்டோரே தேவன் சொல்வதை ........................155
188. கெட்டோனை ரட்சியும் ....................................400
189. கெம்பீரமாகவே ....................................319
190. கேள் ஜென்மித்த ராயர்க்கே ..............................052

## ச

191. சங்கம் கூடி ஏழைக்கென்று ..............................255
192. சத்ய வேதமான ....................................426
193. சபையாரே கூடிப் பாடி ....................................082
194. சபையின் அஸ்திபாரம் ....................................239
195. சபையே இன்று வானத்தை..............................058
196. சபையே ஏக சித்தத்தை....................................007
197. சமஸ்த மண்டலத்தையும்..............................313
198. சர்வத்தையும் அன்பாய் ....................................230
199. சாந்த இயேசு சுவாமி....................................356
200. சாந்தமுள்ள யேசுவே ....................................302

201. சிலுவை சுமந்தோனாக ........................................ 221

202. சிலுவை மரத்திலே ........................................ 157

203. சிலுவையைப் பற்றி நின்று ........................................ 339

204. சிறு மழைத் தூறல் ........................................ 306

205. சிறையுற்றோரின் மீட்பரே ........................................ 115

206. சின்ன பரதேசி ........................................ 308

207. சீர் கெட்ட லோகமே ........................................ 226

208. சீர்பெறாமல் திக்கில்லாமல் ........................................ 404

209. சுகமாய் நான் தூங்கினேன் ........................................ 016

210. சுத்த ஆவி என்னில் தங்கும் ........................................ 133

211. சுத்த இருதயத்தை நீர் ........................................ 386

212. செய் என்று சிற்றாறு ........................................ 434

213. செல்வோம் யாம் கோயிலுக்கு ........................................ 367

214. சேதம்அற யாவும் வர ........................................ 182

215. சேனைகளின் பரன் யெகோவா ........................................ 369

## ஞ

216. ஞான பர்த்தாவே ........................................ 114

# த

217. தட்டித் தட்டி நிற்கிறார் ....................................409

218. தந்தை தன் சிறு மைந்தனை ..............................179

219. தம் ரத்தத்தில் தோய்ந்த.......................................354

220. தம்மண்டை வந்த பாலரை..................................247

221. தயவுள்ள யேசுவே ..............................................065

222. தயாபரா என் உள்ளத்தில்.....................................222

223. தயாபரா கண்ணோக்குமேன் ...............................402

224. தயாள இயேசு தேவரீர்.........................................335

225. தயை நிறைந்த தேவனே ....................................258

226. தர்மக் காசைப் பாரும் ........................................418

227. தாழ்விலிருந்து கூப்பிடும் ....................................170

228. திவ்ய மைந்தன் பிறந்தீரே ..................................057

229. தீயோர் சொல்வதைக் கேளாமல் .........................214

230. தீர்த்தப் பாவக் கூரொடித்துச் ..............................413

231. தீராத தாகத்தால் ...............................................248

232. தீவினை செய்யாதே...........................................415

233. துக்க பாரத்தால் இளைத்து .................................156

234. துக்கங் கொண்டாட வாராயோ ..........................074
235. துக்கம் திகில் இருள் சூழ ..............................353
236. துதி கனம் மகிமையுமக்கே ...........................372
237. துயருற்ற வேந்தரே ........................................340
238. துள்ளித் துள்ளிப் பாலனே ...........................297
239. தூதாக்கள் விண்ணில் பாடிய ........................048
240. தூய ஆட்டுக்குட்டியே ................................... 121
241. தூய தூய தூயரே த்ரியேக தேவா.......................006
242. தூய தேவா திரியேக தேவா ...........................368
243. தூய பந்தி சேர்ந்த கைகள் ...........................357
244. தூய்மை பெற நாடு கர்த்தர் பாதமே.....................349
245. தெய்வ கிருபையைத் தேடி................................ 149
246. தெய்வன்புதான் மா இனிமை ........................ 187
247. தேசத்தார்கள் யாரும் வந்து...............................262
248. தேவ ஆசீர்வாதத்தோடே...................................011
249. தேவ ஆட்டுக்குட்டியே ...................................120
250. தேவ ஆவியே .................................................. 126
251. தேவ மைந்தனானவர் .......................................083

252. தேவரீரின் சாவினாலே ........................................229
253. தேவன் தந்த ஈவுக்காக........................................322
254. தேவனே நான் எத்தனை ........................................166
255. தேவாவி மனவாசராய் ........................................128
256. தேவாவியால் இரக்கமாய்........................................142
257. தேவாவியே இரக்கமாய் ........................................134
258. தேவாவியே என் நெஞ்சை நீர்........................................141
259. தேவாவியே நீர் அவிழ்ப்பீர் ........................................129
260. தேவாவியே வந்தெங்களை........................................135
261. தோழரே சேர்ந்து வாருங்கள் ........................................362
262. தோழனே உன் ஜீவன் இங்கே ........................................283

## ந

263. நல் ஆவியே நான் பாழ் நிலம் ........................................132
264. நல் மீட்பர் பட்சம் நில்லும்........................................346
265. நல் மீட்பர் யேசு நாமமே ........................................189
266. நல் மீட்பர் யேசுவே ........................................029
267. நல் மீட்பரே இந்நேரத்தில்........................................010
268. நல் மேய்ப்பரே இக் கூட்டத்தை ........................................004

269. நல்ல எண்ணமாய் விழித்து ................................023
270. நல்ல செய்தி யேசுவை ......................................407
271. நள்ளிரவில் மா தெளிவாய் ................................328
272. நற்செய்தி மேசியா இதோ ..................................326
273. நன்மைச் சொரூபியே ......................................122
274. நன்றாய் விழிப்பவன் .......................................237
275. நாங்கள் பாவப் பாரத்தால்.................................164
276. நாதன் வேதம் என்றும் .....................................345
277. நாம் தேவ சந்நிதானத்தில் ..................................008
278. நாம் நித்திரைபண்ணி விழித்தோம் .......................012
279. நாள்தோறும் புதிதாய் .......................................013
280. நாள்போம் என்சாவுவேளைசேரும்.......................282
281. நாற்பது நாள் ராப் பகல் ....................................333
282. நான் உம்மை முழு மனதால்.................................196
283. நான் உம்மைப்பற்றி ரட்சகா ...............................405
284. நான் தூதனாக வேண்டும் ..................................301
285. நான் பாவிதான் ஆனாலும் நீர் ...........................158
286. நான் வாஞ்சையாய் என் மனதை.........................169

287. நிர்ப்பந்தமான பாவியாய் .................................. 159

288. நீ சாய்ந்து தூங்கு பிள்ளையே............................307

289. நீங்காதிரும் என் நேச கர்த்தரே ..........................021

290. நீர் உத்தம சினேகிதர் .....................................102

291. நீர் தந்த நன்மை யாவையும் ............................051

292. நீர் தந்த நாளும் ஓய்ந்ததே ...............................364

293. நீர் நிறைந்த நேசமுள்ளோர் ..............................105

294. நீர் வாரும் கர்த்தாவே .......................................094

295. நீர் ஜீவ அப்பம் பஞ்சத்தில்...............................101

296. நீரோடையை மான் வாஞ்சித்துக் ........................411

297. நேர்த்தியான தனைத்தும்....................................430

298. நேற்றும் இன்றும் என்றும் மாறார் .......................382

## ப

299. பக்தரே வாரும் ...............................................067

300. பகலோன் கதிர்போலுமே ...................................267

301. பட்டப்பகல் போலவே .......................................266

302. பயத்தோடும் பக்தியோடும் தூய ........................358

303. பரத்திலே இருந்துதான் ....................................060

304. பரத்தின் ஜோதியே........................................107

305. பரம சேனைக்கும் ..........................................260

306. பரமண்டலத்திலுள்ள.......................................321

307. பராபரனே உமது...........................................033

308. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா ..........................392

309. பலத்த தேவ வார்த்தையை ................................268

310. பாதாளம் விண் மண் யாவிலும்.........................124

311. பாதை காட்டும் மாயெகோவா ...........................215

312. பார் முன்னணை ஒன்றில்................................429

313. பால்ய வீரர் வாரும் .......................................433

314. பாலரே ஓர் நேசருண்டு ..................................293

315. பாவ தோஷம் நீக்கிட .....................................403

316. பாவ நாசர் பட்ட காயம்...................................069

317. பாவம் தீராததென்ன........................................393

318. பாவி கேள் உன் ஆண்டவர்...............................151

319. பாவி கேள் ஏன் கெடுவாய் ...............................152

320. பாவிக் கவர் காட்டின மா நேசத்தால் ..................391

321. பாவிக்காய் மரித்த யேசு ..................................087

322. பிதா சுதன் ஆவியே.................................242
323. பிதாவே உம்தன் உன்னத ...............................034
324. பிதாவே உமதாவியை ...................................139
325. பிதாவே எங்களை கல்வாரியில் .........................359
326. பிதாவே ஞானம் அன்பினால்............................274
327. பிதாவே மா தயாபரா ..................................031
328. பிதாவே மெய் விவாகத்தை..............................273
329. பிரியமான இயேசுவே ..................................100
330. பிளவுண்ட மலையே......................................109
331. புத்திக்கெட்டாத அன்பின் வாரி பாரும்.................276
332. பூரண வாழ்க்கையே .....................................342
333. பூர்வீகத்தில் மெய்ப் பக்தரை ............................243
334. பூலோக மீட்பர் யேசுவை ...............................076
335. பூலோகத்தாரே யாவரும் ...............................001
336. பூலோகத்தின் மீட்பர் சிங்காசனம் ஏறி ..................089
337. பூவின் நற்கந்தம் வீசும்...................................389
338. பெலவீனரின் பெலனும்..................................162
339. பேரன்பர் யேசு நிற்கிறார் ...............................408

340. போ அற்பமாம் சிற்றின்பமே ....................................227
341. போற்றிடு ஆன்மமே சிருஷ்டி......................................432
342. போற்றும் போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்..096

## ம

343. மகா அருளின் ஜோதியை ........................................103
344. மகா இக்கட்டாம் ஆபத்து..........................................312
345. மகா ராஜாவே .........................................................119
346. மகிழ் கர்த்தாவின் மந்தையே......................................086
347. மயங்கும் தாசனை .....................................................180
348. மரிக்கும் மீட்பர் ஆவியும் ...........................................336
349. மரித்த கிறிஸ்தின் ஆவியும்........................................078
350. மரித்தாரே என் ஆண்டவர்..........................................224
351. மா அன்புள்ள யேசுவே...............................................269
352. மா தூய ஆவி இறங்கும்...............................................244
353. மா தூர லோகத்தில்....................................................305
354. மா தேவ ஆவியே.......................................................136
355. மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம் .........324
356. மா வாதைப்பட்ட யேசுவே .........................................072

357. மாசற்ற தெய்வ நாமத்தை ....................................042
358. மாசில்லாமல் தூய்யதான ....................................104
359. மாறா மீட்பர் அன்பு ............................................379
360. மிகுந்த தயவாலே ..............................................188
361. மிகுந்த பாவச் சேற்றிலே....................................160
362. மின்னும் வெள்ளங்கி பூண்டு ..............................292
363. மீட்கப்பட்ட கூட்டமே.........................................176
364. முயல்வோம் முயல்வோம் ..................................424
365. முள் கிரீடம் பூண்ட நாதனார் ..............................348
366. மூவரான ஏகரே..................................................026
367. மெய் ஒளியான யேசுவே ....................................270
368. மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும் .......................055
369. மெய் வழி நீரே யேசுவே ....................................145
370. மெய் ஜோதியாம் என் நேசரே.............................017
371. மெய்ப் பொழுதான கிறிஸ்துவே ..........................022
372. மெய்யாம் வாசஸ்தலமுண்டே ............................427
373. மெய்யின்பம் இருக்கும் இடம் அறிவேன் ...............373
374. மேலோக வெற்றி சபையும் .................................272

375. மேன்மை கனம் துதி பலம்....320
376. மேன்மை நிறைந்த ஆண்டவர் ....090
377. மோட்ச மண்டலத்திலுள்ள ....287
378. மோட்சலோக நாதரே ....050

## ய

379. யாரிலும் மேலான அன்பர் ....303
380. யுத்தம் செய்வோம் வாரும் ....309
381. யேசு எங்கள் மேய்ப்பர் ....298
382. யேசு கிறிஸ்துவே .... 147
383. யேசு நாதரே ....209
384. யேசுவே அழைக்கிறார் ....304
385. யேசுவே உம்மை சிந்தித்தால்....190
386. யேசுவே உம்மையல்லாமல் .... 167
387. யோர்தான் விட்டேறி மனுஷ....417

## ர

388. ரட்சகரான இயேசுவே ....075
389. ரட்சா பெருமானே பாரும் .... 175

390. ரட்சிப்பு சுத்த தயவால் ........................................ 148

391. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள் ......................053

392. ராஜன் தாவீதூரிலுள்ள ....................................054

393. ராஜாதி ராஜாவே................................................099

## ல

394. லோக நாதா மண்ணோர் மீள ............................256

395. லோக ஜீவன் நிலையற்ற ....................................286

396. லோகம் ஆளும் ஆண்டவர் ..............................278

397. லௌகீக இன்பம் வேடிக்கை ............................. 191

## வ

398. வயல் உழுது தூவி..............................................419

399. வருஷப் பிறப்பாம் இன்று ...................................279

400. வல்ல யேசு கிறிஸ்து நாதா ................................. 173

401. வா நீச பாவி வா .................................................401

402. வா பாவி இளைப்பாற வா.................................. 174

403. வாஞ்சைப்பட்ட யேசுவே....................................085

404. வாரம் முற்றும் சேமமாய்.......................................299

405. வாரும் தேவ ஆவி வாரும் ................................ 127
406. வாரும் மா தேவனே ....................................... 035
407. வாரும் யேசுநாதா வாரும் ................................ 093
408. வாரும் வாஞ்சைப்பட்ட யேசு ............................ 066
409. வாழ்க சிலுவையே வாழ்க ................................ 150
410. வாழ்க நேசமுள்ளோரே ..................................... 277
411. வான பிதா தந்த வேதத்திலே ............................ 397
412. வானம் பூமி ஓடிப்போகும் ................................ 088
413. வானம் பூமி யாவற்றிலும் ................................ 385
414. வானமும் பூமியும் ............................................ 032
415. வானாளும் தேவனே ........................................ 062
416. விண் ஏகுமுன் நல் வார்த்தையை ...................... 140
417. விண் மண் அனைத்தையும் ................................ 235
418. விண் மீன் நோக்கிக் களிப்பாய் ......................... 331
419. விண் வாசஸ்தலமாம் ...................................... 288
420. விண் க்ரீடம் பெறப்போருக்கு ............................ 236
421. விண்ணோர்கள் போற்றும் தேவனே ..................... 037
422. விண்ணோரின் வேந்தரே .................................. 183

423. வியாதியஸ்தர் மாலையில் ................................024

424. விருந்தைச் சேருமேன் ...................................... 154

425. விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே .......................310

426. வீர தீரமாய் நேரும் சீருமாய்..............................425

427. வெள்ளை அங்கி தரித்து ...................................291

428. வெளியில் ஊரில் யாவும் ..................................025

429. வைகறை இருக்கையில்....................................084

## ஜ

430. ஜகத்து நீதிபதியே ............................................095

431. ஜீவ ஒளியிற் போகிறேன் ..................................414

432. ஜெபத்தின் ஆவலை ........................................ 138

433. ஜெயித்த யேசு நாதர் தாம் ................................238

## ஸ்

434. ஸ்தோத்ரம் ஸ்தோத்ரம் இஸ்ரவேலின்..................360

435. ஸ்வாமி மழையின்றியே.....................................315

# ஞானப் பாட்டுகள்

**1. Old Hundredth** **L.M.**

**"All People that on earth do dwell"**

**பூலோகத்தாரே, யாவரும்**
கர்த்தாவில் களிகூருங்கள்;
ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம்
செலுத்திப், பாட வாருங்கள்.

2. யெகோவா தாம் மெய்த்தேவனே
நாம் அல்ல அவர் சிருஷ்டித்தார்;
நாம் ஜனம், அவர் ராஜனே
நாம் மந்தை, அவர் மேய்ப்பனானார்

3. கெம்பீரித்தவர் ஆலய
ப்ரகாரத் துள்ளே வாருங்கள்;
மகிழ்ந்து அவர் திவ்விய
நல் நாமத்தைக் கொண்டாடுங்கள்.

4. கர்த்தர் தயாளர், இரக்கம்
அவர்க்கு என்றும் உள்ளதே;
அவர் அநாதி சத்தியம்
மாறாமல் என்றும் நிற்குமே.

5. விண் மண்ணில் ஆட்சி செய்கிற
திரியேக தெய்வமாகிய
பிதா, குமாரன், ஆவிக்கும்
சதா ஸ்துதி உண்டாகவும்.

**2. All saints; Neander** **8, 7, 8, 7, 7, 7**

**"Open now thy gates of beauty"**

**அலங்கார வாசலாலே**
கோவிலுட் ப்ரவேசிப்பேன்;
தேவ வீட்டில் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்;
தேவா, உம்தம் சமுகம்
நல்கும் திவ்ய; வெளிச்சம்.

2. கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டைக்கு வாருமேன்;
நீர் இறங்கும் போதனந்த
இன்பத்தால் மகிழுவேன்;
ஏழை என்தன் நெஞ்சமும்
தேவ ஸ்தலமாகிடும்.

3. பயத்தோ டும்மண்டை சேர,
என் மன்றாட்டும் துதியும்
நல்ல பலியாக ஏற
உமதாவியைக் கொடும்;
தேகம், ஆவி, யாவையும்
சுத்தமாக்கி யருளும்.

4. நல்ல நிலத்தில் விழுந்த
விதை பயிராகுமே;
அவ்வாறாக நான் மிகுந்த
கனிகளைத் தரவே
வசனத்தைக் காக்க நீர்
ஈவளிக்கக் கடவீர்.

5. விசுவாசத்தை விடாமல்
அதில் பலப்படவும்
ஒருக்காலும் தவறாமல்
உம்மை நான் பின் செல்லவும்
அருட்சக்தியை நீரே
எனக்கீயும், கர்த்தரே.

6. நாதா, பேசும்; தாசன் கேட்பேன்;
நீர் இப்பாழ் நிலத்திலே
பெய்யப் பண்ணும் மன்னா சேர்ப்பேன்
நல் தியானத்துடனே;
தாரும் ஜீவ பானத்தை;
தீரும் பசி தாகத்தை.

**3. Hope: True** **(361)** **L.M.**

**"High in the heavens, Eternal God"**

**அநாதியான கர்த்தரே,**
தெய்வீக ஆசனத்திலே
வானங்களுக்கு மேலாய் நீர்
மகிமையோடிருக்கிறீர்.

2. ப்ரதான தூதர் உம்முன்னே
தம் முகம் பாதம் மூடியே
சாஷ்டாங்கமாகப் பணிவார்,
"நீர் பரிசுத்தர்" என்னுவார்.

3. அப்படியானால், தூசியும்
சாம்பலுமான நாங்களும்
எவ்வாறு உம்மை அண்டுவோம்?
எவ்விதமாய் ஆராதிப்போம்?

4. நீரோ உயர்ந்த வானத்தில்,
நாங்களோ தாழ்ந்த பூமியில்,
இருப்பதால், வணங்குவோம்,
மா பயத்தோடு சேருவோம்.

**4. Shropshire; Alstone, Tallis.** **L.M.**

**Invocation**

**நல் மேய்ப்பரே, இக் கூட்டத்தை**
கண்ணோக்கி ஆசீர்வதியும்;
தாசர் செய்யும் ஆராதனை
அன்பாக அங்கீகரியும்.

2. உம் சித்தத்துக்கு ஏற்றதாய்
ஜெபிக்கக் கட்டளையிடும்;
தேவன்பைக் காட்டி, பக்தியாய்
துதிக்க ஏவியருளும்.

3. இவ் வாலயத்தில் பணிவாய்
ஆராதிப்போர் அனைவரும்
உண்மையும், தூய்மை அன்புமாய்
தொழுதுகொள்ள எழுப்பும்.

**5. Dundee.** **C.M.**

**Invocation**

**கர்த்தாவே இந்த நேரத்தில்**
சமீபமாய் இரும்,
இங்கும்முடைய கோவிலில்
ப்ரசன்னமாய் இரும்.

2. இங்கும்முடைய வார்த்தையை
ப்ரசங்கம் செய்கையில்
தேவாவி எங்கள் நெஞ்சத்தை
நிரப்பக் கேட்கையில்

3. ஜெபத்தைக் கேளும், கர்த்தரே;
கடாட்சமாய் இரும்;
அன்பினால் எங்கள் நெஞ்சமே
நிறையச் செய்திடும்.

**6. Nicoea.** **11, 12, 12, 10 Irregular**

**"Holy, holy, holy, Lord God Almighty!"**

**தூய, தூய, தூயரே! த்ரியேக தேவா,**
உமக்கே எந்நாளும் சங்கீதம் ஏறுமே;
தூய, தூய, தூயரே! சர்வவல்ல நாதா!
காருண்யரே, ஆனந்தக் கடலே!

2. தூய, தூய, தூயரே! அன்பர் சூழ நின்று
தேவ ஆசன முன்னர்தம் க்ரீடம் வைப்பரே;
கேருபீம் சேராபீம் தாழ்ந்து போற்றப்பெற்று,
இன்றென்றும் வீற்றாள்வீர்; அநாதியே!

3. தூய, தூய, தூயரே! ஜோதிப்ரகாசா,
பாவக்கண்ணால் உம்தன் மாண்பைக் காண யார்வல்லோர்?
நீரேபரி சுத்தர்; மனோவாக்குக் கெட்டா
மாட்சிமை, தூய்மை, அன்பும் நிறைந்தோர்.

4. தூய, தூய, தூயரே! த்ரியேக தேவா,
வானம், பூமி, ஆழி உம்மை துதி செய்யுமே;
தூய, தூய, தூயரே! சர்வ வல்ல நாதா!
காருண்யரே, தூய த்ரியேகரே!

**7. Ely; Eman.** **(362) L.M.**

**"Worship the Lord"**

**சபையே, ஏக சித்தத்தை**
அடைந்து பூரிப்பாகுங்கள்;
வணக்கமாகக் கர்த்ரை
எல்லாரும் வாழ்த்தல் செய்யுங்கள்.

2. யெகோவாவே மெய்த்தேவனார்
எல்லாரையும் படைத்தனர்;
அவர் கொடுத்த – மைந்தனார்
எல்லார்க்கும் மீட்புண்டாக்கினார்.

3. மேலான இந்த நன்மையை
நினைத்து இவ்விடத்திலே
சந்தோஷப்பட்டு, நாயனை
புகழ்ந்த போற்றல் ஞாயமே.

4. தேவாவியே, இரக்கமாய்
வந்தடியாரைச் சந்தியும்;
இங்குள்ள யாரும் உண்மையாய்
ஆராதிக்க நீர் போதியும்.

**8. Luther,** **8, 7, 8, 7, 8, 8, 7**

**"Sei Lob und Ehr dem hochsten Gut"**

**நாம் தேவ சந்நிதானத்தில்**
மகா மகிழ்ச்சியாக
வந்தாதி கர்த்தரண்டையில்
வணக்கஞ் செய்வோமாக,
யெகோவாவுக்கு நிகர் ஆர்!
யாவும் நன்றாகச் செய்கிறார்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

2. கர்த்தாதி கர்த்தர் ஞானத்தால்
யாவற்றையும் நன்றாக
சிஷ்டித்துத் திட்டம் செய்ததால்,
மகா வணக்கமாக

விண் மண் கடல் ஆகாசமும்
விடாமல் துதி செலுத்தும்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

3. மேலான அற்புதங்களை
செய்தென்னைப் பூரிப்பாக்கி,
என் மேல் விழுந்த பாரத்தை
இரக்கமாய் விலக்கி
ரட்சித்த மா தயாபரர்
துதிக்கு என்றும் பாத்திரர்;
காத்தாவுக்கே புகழ்ச்சி!

4. மெய் மார்க்கத்தாரே, கர்த்தரை
துதித்துக் கொண்டிருங்கள்;
அவர் சிறந்த நாமத்தை
எந்நேரமும் தொழுங்கள்
அவர் எல்லாம் படைத்தவர்,
கர்த்தாதி கர்த்தரானவர்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

**9. Harrow: Hursley,** **L.M.**

**"Behold the throne of grace!"**

**இரக்க ஆசனத்தைப் பார்.**
அதற்குன்னை அழைக்கிறார்;
அங்கே அன்புள்ள தேவனார்
ஜெபத்தைக் கேட்டருளுவார்

2. கர்த்தாவின் சமுகத்திலும்
இரக்கத்தை நாம் பெறவும்
மா நேசர் மீட்பர் ரத்தமே
நமக்காய்ச் சிந்தப்பட்டதே.

3. நீ வேண்டிக்கொள்ளுவதிலும்
உனக்கு வேண்டும் யாவையும்
கர்த்தாவின் அன்பு, வல்லமை
கடாட்சிக்கும் என்றே நினை.

**10. St. Mathias,** **8,8,8,8,8,8.**

**"Sweet Saviour, bless us ere we go"**

**நல் மீட்பரே, இந்நேரத்தில்**
வந்தாசீர்வாதம் கூறுமேன்;
உம் வார்த்தை கேட்டோர் மனதில்
பேரன்பின் அனல் மூட்டுமேன்,
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ யேசுவே, ப்ரகாசியும்.

2. இன்றெங்கள் செய்கை யாவையும்
தயாபரா, நீர் நோக்கினீர்;
எல்லாரின் பாவம் தவறும்
மா அற்பச் சீரும் அறிந்தீர்.
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ யேசுவே, ப்ரகாசியும்.

3. எப்பாவத் தீங்கிலிருந்தும்
விமோசனத்தைத் தாருமேன்;
உள்ளான சமாதானமும்
சுத்தாங்கமும் உண்டாக்குமேன்.
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ யேசுவே, ப்ரகாசியும்.

4. சந்தோஷம் பயபக்தியும்
நீர் நிறைவாக ஈயுமேன்;
உமக்கொப்பாக ஆசிக்கும்
தூய்தான உள்ளம் தாருமேன்.
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ யேசுவே, ப்ரகாசியும்

5. தரித்ரம் துன்பம் பாவத்தால்
இக்கட்டடைந்த யாரையும்
கண்ணோக்கும் மா கிருபையால்;
நீர் மீட்பர், நீர் சமஸ்தமும்
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ யேசுவே, ப்ரகாசியும்.

**11. Stuttgart: Rathburn** **8,7,8,7.**

**"Dismiss us with Thy blessing, Lord"**

**தேவ ஆசீர்வாதத்தோடே**
அடியாரை அனுப்பும்;
வார்த்தை என்னும் அப்பத்தாலே,
போஷித்து வளர்ப்பியும்.

2. இப்போதும்மைத் தேடிக்கொண்டு
மனதாரப் போற்றினோம்;
மோட்ச லோகத்தில் களித்து,
உம்மை வாழ்த்தித் தொழுவோம்.

**12. Melcombe** **L.M.**

**"New every morning is the love"**

**நாம் நித்திரைபண்ணி விழித்தோம்,**
நற்சுகம் பலம் அடைந்தோம்;
நாள்தோறும் தெய்வ அன்பையே
உணர்ந்து ஸ்துதி செய்வோமே.

2. தீங்கை விலக்கிப் பாவத்தை
மன்னித்து, மோட்ச நம்பிக்கை
மென்மேலும் ஓங்க நாயனார்
கடாட்சஞ் செய்து காக்கிறார்.

3. அன்றன்று வரும் வேலையை
நாம் செய்கின்ற பணிவிடை
என்றெண்ணியே ஒவ்வொன்றையும்
படைப்போம் பலியாகவும்.

4. நம்மை வெறுத்து, தேவனின்
சமீபஞ் சேர விரும்பின்,
அன்றாடகக் கடமையும்
ஓர் ஏதுவாக விளங்கும்.

5. ஜெபிக்கும் வண்ணம் உய்யவும்,
கர்த்தாவே, பலம் ஈந்திடும்;
உம்மண்டை நாங்கள் வாழவும்
தகுந்தோர் ஆக்கியருளும்.

**13. Narenza: Franconia (363) L.M.**

**"Praise and Prayer"**

**நாள்தோறும் புதிதாய்**
நீர் செய்யும் தயைக்கே
என்றைக்கும் மா வணக்கமாய்
துதிப்போம், கர்த்தரே.

2. தப்பாமல் எங்களை
தற்காத்து ரட்சியும்,
எல்லா இக்கட்டு பாவத்தை
விலக்கி ஆண்டிடும்.

3. தீயோனின் சோதனை
திரட்சி ஆயினும்,
விழாதபடி எங்களை
நீர் தாங்கிக் கொண்டிரும்

4. விழித்துப் பக்தியாய்ப்
பரத்தை நோக்கியே
அடியார் செல்லத் தக்கதாய்
நடத்தும் கர்த்தரே

**14. Tallis Ordinal L.M.**

**"Ich dank dir scben durch deinen..."**

**கர்த்தாவே, போன ராவிலே**
இரக்கம் காண்பித்து
தற்காத்ததாலே உம்மையே
துதித்தல் ஏற்றது.

2. இருளில் என்னை நீர் அன்பால்
எவ்விக்கினத்துக்கும்
விலக்கிக் காத்திராவிட்டால்,
பொல்லாங்கு நேரிடும்.

3. நான் அதற்காக ஸ்தோத்திரம்
செலுத்தி நிற்கிறேன்;
என்னில் நீர் கண்ட தப்பிதம்
மன்னிக்கக் கேட்கிறேன்.

4. எந்நாளும் என்னைச் சத்துரு
கெடுக்கப் பார்க்குமே,
அநேகமான கண்ணிக்கு
நேராய் நடத்துமே.

5. த்ரியேகரே, இரக்கமாய்
என்னை நீர் ரட்சியும்;
விழித்திருக்க மா அன்பாய்
பலத்தைத் தந்திடும்.

**15. Aurelia** **7, 6, 7, 6, 7, 6, 7, 6**

**"Aus meines Herzens Grunde"**

**இக்கட்டை மா அன்பாக**
நீர் போன ராவிலே
விலக்கினதற்காக
துதிப்பேன், கர்த்தரே,
ஆ! இந்த நாள் வரைக்கும்
நான் செய்த தீமைக்கும்
எல்லாப் பிழைகளுக்கும்
மன்னிப்பை அருளும்.

2. தேவாவியால் மெய்யாக
ரட்சிப்பின் நம்பிக்கை

என் ஆவிக்கே உண்டாக,
நீர் தேவ நேசத்தை
அடியேன் நெஞ்சில் ஊற்றி,
பிறரை நேசிக்கும்
நேசத்தை அதில் மூட்டி
மென்மேலும் வளர்த்தும்.

3. மகா பொல்லாங்கனான
பிசாசு தனது
விஷமும் கேடுமான
வினையால் எனக்கு
பொல்லாங்கு ஒன்றும் இன்று
செய்ய விடாதிரும்;
நான் ஜெயங் கொள்வதற்கு
சகாயம் செய்திடும்.

4. சர்வத்துக்கும் மா வல்ல
கர்த்தாதி கர்த்தரே,
குறைவில்லாத நல்ல
விசாரிப்புடனே
உம் சித்தம் நிறைவேற
நீர் என்னை நடத்தும்,
அப்போதெல்லாம் நன்றாக
எனக்கு முடியும்.

**16. Maidstone Harts; Spanish Hymn 7,7, 7,7,7,7,7,7,**
**"Morning Praise"**

**சுகமாய் நான் தூங்கினேன்,**
ஒளி தோன்ற விழித்தேன்;
உணர்வும் நற்புத்தியும்
பலமும் சந்தோஷமும்
என் பிதாவின்தயவால்
மீளவும் கிடைத்ததால்,
எனதுள்ளம் முழுதும்
தேவரீரைத் துதிக்கும்.

**17. Abends Hurseley** L.M.

**"Sun of my soul, Thou Saviour dear"**

**மெய் ஜோதியாம் என் நேசரே,**
நீர் தங்கினால் ராவில்லையே;
என் நெஞ்சுக்கும்மை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்.

2. உம் நேசமார்பில் என்றுமே
நான் சாய்வது வாழ்தல் இன்பமே,
என்றெந் தன் படுக்கையிலும்
சிந்திக்க ஏவியருளும்.

3. என்னோடு தங்கும் பகலில்
சுகியேன் நீர் இராவிடில்;
என்னோடு தங்கும் ராவிலும்,
நீர் தாங்கின் அஞ்சேன் சாவிலும்.

4. இன்றைக்குத் திவ்ய அழைப்பை
அசட்டை செய்த பாவியை
நீர் கைவிடாமல், இப்போதே
இழுத்துக் கொள்ளும், மீட்பரே.

5. நோயுற்றோரைக் கண்ணோக்கிடும்.
வறியோரை விசாரியும்;
துக்கிப்போர் சிசுபோலவே
அமர்ந்து தூங்கச் செய்யுமே.

6. விழிக்கும் போதென்னருகில்
நீர் வந்து எந்தன் வேலையில்
என் ஆயுள் காலம் முழுதும்
உம் அருள் தந்து காத்திடும்.

**18. Evan** **(364)**

**"Nun sich der Tag geendet hat"**

**இப்போது தூங்கும்படி நான்**
என் கண்ணை மூடுவேன்;
என் காவலாளர் கர்த்தர்தான்,
கலக்கமாய் இரேன்.

2. அகன்று போங்கள் தூரமாய்,
துர் யோசனைகளே;
கர்த்தாவுக் கென்னைப் பிள்ளையாய்
நான் ஒப்புவித்தேனே.

3. என் ஜீவன் இந்த ராவினில்
சென்றாலும், கர்த்தரே
என் ஆவியை உம்மண்டையில்
நீர் சேர்த்துக் கொள்வீரே

4. பிழைத்தும், செத்தும், மீட்பரே,
நான் உம்முடையவன்;
ஆகையால், பயம் இல்லையே,
நீர் என் பராபரன்

**19. Holy Trinity; Wiltshire C.M.**

**"Nun sich der Tag geendet hat"**

**கர்த்தாவே என்னை மா அன்பாய்**
நீர் இந்த ராவிலும்
பொல்லாங்கில்லாமல் சுகமாய்
தற்காத்துக் கொண்டிரும்.

2. இருட்டிலேயும் தேவரீர்
வெளிச்சமானவர்;
மெய் இஸ்ரவேலைக் காக்கும் நீர்
உறக்கமற்றவர்.

3. என்னால் உண்டான பாவத்தால்
மனம் கலங்கினும்,
க்றிஸ்துவின் தூய ரத்தத்தால்
என் நெஞ்சைக் கழுவும்.

4. இரக்கம் செய்த உமக்கே
புகழும் நன்றியும்
செலுத்துவேன், என் கர்த்தரே;
என்னைத் தள்ளாதிரும்.

**20. Tallis Canon, Breslau. (365) L.M.**

**"All praise to Thee, my God.."**

**இந்நாள் வரைக்கும் தேவனே,**
என்னைத் தற்காத்து வந்தீரே;
உமக்குத் துதி ஸ்தோத்திரம்
செய்கின்றதே என் ஆத்துமம்.

2. ராஜாக்களுக்கு ராஜனே
உமது செட்டைகளிலே,
என்னை அணைத்துச் சேர்த்திடும்,
இரக்கமாகக் காத்திடும்.

3. விரோதம் நெஞ்சில் பேணாது
நான் தூங்க அருள் புரிந்து
க்றிஸ்து நிமித்தம் இரங்கும்;
என் குற்றம் யாவும் மன்னியும்.

4. பிதாவே, என்றும் எனது
அடைக்கலம் நீர்; உமது
முகத்தைக் காணும் காட்சியே
நித்தியானந்த முத்தியே.

5. அருளின் ஊற்றாம் தேவனை,
பிதா குமாரன் ஆவியை
துதியும், வான சேனையே
துதியும் மாந்தர் கூட்டமே.

**21. Eventide.** **10, 10, 10, 10**

**" Abide with me; fast falls the eventide"**

**நீங்காதிரும் என் நேச கர்த்தரே,**
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே;
மற்றோர் ஒத்தாசை அற்றுப்போயினும்
நீர், மெயச் சகாயரே, நீங்காதிரும்

2. நீர்மேலே குமிழ்போல் என் ஆயுசும்
இம்மையில் இன்ப வாழ்வும் நீங்கிடும்;
கண் கண்ட யாவும் மாறிப் போயினும்,
மாறாத கர்த்தரே, நீங்காதிரும்.

3. நீர் கூடநின்று தாங்கிவாருமேன்,
அப்போது தீமைக்கு நான் தப்புவேன்;
நீர் என் துணை என் பாதை காட்டியும்;
என் இன்ப துன்பத்தில் நீங்காதிரும்.

4. நான் அஞ்சிடேன் நீர் கூடத் தங்கினால்;
என் க்லேசம் மாறும் உம் ப்ரசன்னத்தால்;
சாவே, எங்கே உன் கூரும் ஜெயமும்?
என்றார வாரிப்பேன், நீங்காதிரும்.

5. நான் சாகும் அந்தகார நேரமே
நீர் ஒளியாய் விண் காட்சி காட்டுமே;
பேரின்பஜோதி வீசச் செய்திடும்;
வாணாள் சாங்காலிலும் நீங்காதிரும்.

**22. Hursley** **L.M.**

**"Christ, der du bist Tag und Licht"**

**மெய்ப் பொழுதான கிறிஸ்துவே,**
நீர் அஸ்தமிப்பதில்லையே;
ஆ! எங்களுக் கெந்நேரமும்
வெளிச்சம் காண்பித்தருளும்.

2. பொல்லாத விக்கினங்களை
விலக்கிப் போட்டடியாரை
நீர் இந்த ராத்திரியிலே
அன்பாய்க் காப்பாற்றும், கர்த்தரே.

3. ஆகாத பாவத் தூக்கமும்
பிசாசின் சர்ப்பனைகளும்
விலகப்பண்ணி, நெஞ்சிலே
சுத்தாங்கம் தாரும் இயேசுவே.

4. நோவால் தவிப்பவருக்கு
அனுக்ரகத்தைக் காண்பித்து,
துக்கப்பட்டோர் எல்லாரையும்
அன்பாகத் தேற்றி அருளும்.

**23. Triumph** **8, 7, 8, 7, 4, 7**

**"Werde munter, main Gemuthe"**

**நல்ல எண்ணமாய் விழித்து,**
தெளிவாகு நெஞ்சமே;
தேவ அன்பையே சிந்தித்து,
ஸ்தோத்திரி, என் உள்ளமே;
இந்த நாளில்
கர்த்தர் உன்னைக் காத்தாரே.

2. ஆ! பிதாவே, மா அன்புள்ள
தேவரீர் என் வேலையை
வாய்க்கப்பண்ணி, துன்பமுள்ள
பாரம் விக்கினங்களை
நீக்கிப்போட்டீர்;
அதற்காக ஸ்தோத்திரம்.

3. அருள்வீசும் ஜோதியான
கர்த்தர் இந்த ராவிலும்
என்னில் தேவரீர் அன்பான
ஜோதியாய் ப்ரகாசியும்;
என்றென்றைக்கும்
என்னைக் கைவிடாதிரும்.

4. எந்தன் ஆவி, தேகம், ஆஸ்தி,
வீட்டார் சுற்றத்தாரையும்,
தேவரீர் அன்பாய்க் காப்பாற்றி,
என் பகைஞர் யாரையும்
கேட்டினின்று
நீக்கி ரட்சித்தருளும்.

**24. Angelus** **L.M.**

**" At even ere the sun was set"**

**வியாதியஸ்தர் மாலையில்**
அவஸ்தையோடு வந்தாரே;
தயாபரா, உம்மண்டையில்
சர்வாங்க சொஸ்தம் பெற்றாரே.

2. அவ்வாறிப்போதம் ஆவலாய்
பாதாரவிந்தம் அண்டினோம்;
ப்ரசன்னமாகித் தயவாய்க்
கண்ணோக்குவீர் என்றறிவோம்.

3. வியாதி சஞ்சலத்தினால்
அநேகர் க்லேசமுற்றனர்;
மெய்ப்பக்தி அன்பின் குறைவால்
அநேகர் சோர்வடைந்தனர்.

4. ப்ரபஞ்சம் வீண் என்றறிந்தும்;
பற்றாசை பலர் கொண்டாரே;
உற்றாரால் பலர் நொந்தாலும்,
மெய்நேசர் உம்மைத் தேடாரே.

5. மாசற்ற தூய தன்மையை
பூரணமாய்ப் பெறாமையால்,
எல்லோரும் சால துக்கத்தை
அடைந்தோம் பாவப் பாசத்தால்.

6. ஆ, க்றிஸ்துவே, மன்னுருவாய்
மா துன்பம் நீரும் அடைந்தீர்;
எப்பாடும் பாவமும் அன்பாய்
ஆராய்ந்து பார்த்து அறிவீர்.

7. உம் வார்த்தை இன்றும் பலிக்கும்
நீர் தொட்டால் சொஸ்தம் ஆவோமே;
ஆரோக்கியம் எல்லாருக்கும்
இம் மாலை தாரும், இயேசுவே.

**25. Innsbruck Hebron: Bread of Life** **7, 7, 6, 7, 7, 8**

**"Nun ruhen alle Walder"**

**வெளியில் ஊரில் யாவும்**
எல்லா ஜீவாத்துமாவும்
இப்போதமைந்தது;
என் மனதே, நீ பாடி,
உன் கர்த்தரைக் கொண்டாடி,
ஜெபத்தியானமாய் இரு.

2. பகலோன் அஸ்தமித்து,
ரா வந்ததால் ஒளித்து
காணாமல் போயிற்று;
ஆனாலும் யேசுவான
பகலோன் என்னும் ஞான
வெளிச்சமே என் பூரிப்பு.

3. இந்நாளின் வேலையாலும்
தலையும் கையும் காலும்
சலித்துப் போயிற்று;
ஆனால் இனி எப்பாடும்
எப்பாவக்கேடும் மாறும்,
என் மனதே, மகிழ்ந்திரு.

4. என் சுற்றத்தார்கள் மீதும்
இராவில் கேடும் தீதும்
வாராமல், யாவரும்
அருள் நிழலின் கீழே
சுகித்துத் தூங்க நீரே
அன்பாகக் கட்டளையிடும்.

**26. Capetown (366) 7,7,7,5**

**"Three in One and One in Three"**

**மூவரான ஏகரே,**
பூமி, ஆழி, ஆள்வோரே,
கேளும் தயவாகவே
தாசர் கீர்த்தனம்.

2. ஜோதிகளின் ஜோதி நீர்;
காலைதோறும் தேவரீர்
ஒளிதோன்ற, வீசுவீர்
அன்பின் கிரணம்.

3. ஜோதிகளின் ஜோதி நீர்;
மாலைதோறுந் தேவரீர்
மன்னிப்போடு ஈகுவீர்
சமாதானமும்.

4. மூவரான ஏகரே,
அறிதற் கரியோரே,
விண்ணில் அடியாருக்கே
தாரும் க்ரீடமும்.

**27. Church triumphant:** **(367)** **L.M.**

**"Heut ist des Herren Ruhetag"**

**கர்த்தாவின் ஓய்வுநாள் இதாம்,**
விசாரம் வேலையை எல்லாம்
ஒழித்து தேவ தயவை
சந்தோஷமாகவே நினை.

2. கர்த்தர் படைத்தவை எல்லாம்
அவர்க்கு மா புகழ்ச்சியாம்;
இருள் இருந்த பொழுதே
வெளிச்சம் தோன்றச் செய்தாரே.

3. விசேஷமாகப் பாவத்தை
நிவிர்த்தி செய்த அருளை
மகிழ்ந்து பாடிப் போற்றுவோம்,
என்றைக்கும் உம்மை வாழ்த்துவோம்.

4. கெம்பீரமாய் எழுந்த பின்
இந்நாளில் அவர் சீஷரின்
துக்கிப்பை நீக்கி திக்கற்றார்
இருதயத்தைத் தேற்றினார்.

**28. Mainzer: Mozart:** **L.M.**

**"Heut ist des Herren Ruhetag"**

**உன்னதமான கர்த்தரே,**
இவ்வோய்வு நாளைத் தந்தீரே;
இதற்காய் உம்மை போற்றுவோம்
சந்தோஷமாய் ஆராதிப்போம்.

2. விஸ்தாரமான லோகத்தை
படைத்த ஸ்வாமி, எங்களை
இந்நாள் வரைக்கும் தேவரீர்
அன்பாய் விசாரித்து வந்தீர்.

3. எல்லாரும் உமதாளுகை,
பேரன்பு, ஞானம் வல்லமை
மற்றெந்த மாட்சிமையையும்
அறிந்து உணரச் செய்யும்.

4. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே
நீர் எங்கள் ஆத்துமாவிலே
தரித்து, எந்த நன்மைக்கும்
நீர் எங்களை உயிர்ப்பியும்.

5. தேவாவியே, நல் அறிவும்
மெய் நம்பிக்கையும் நேசமும்
சபையிலே மென்மேலுமே
வளர்ந்துவரச் செய்யுமே.

**29. St. Austin: Olivet.** **6, 6, 4, 6, 6, 6, 4**

**"The day of Resurrection"**

**நல் மீட்பர் யேசுவே**
எழுந்த நாள் இதே,
கெம்பீரிப்போம்;
சாவு பாதாளத்தை
பசாசு பாவத்தை
மேற்கொண்ட அவரை
கொண்டாடுவோம்.

2. மீட்புற்ற பக்தரே
மெய்ச்சபை கூட்டமே,
மா கர்த்தரை
போற்றுங்கள் களிப்பாய்
வேண்டுங்கள் கருத்தாய்;
கேளுங்கள் நன்றியாய்
மெய் வேதத்தை.

3. தேவாவியே, அன்பாய்
மெய்ஞ்ஞான ஒளியாய்
ப்ரகாசியும்;
லௌகீக சிந்தனை
அகற்றி, ஜோதியை
கொடுத்து; தயவை
நீர் காண்பியும்.

**30. Cleophas: Redhead 4 Old Hundredth** **L.M.**

**"Helleluja, Lob, Preis und Ehr"**

**எல்லாம் படைத்த நமது**
தயாபர பிதாவுக்கு
படைப்பின் செய்கைக்காகவே,
புகழ் செலுத்தும், மாந்தரே.

2. உலகத்தார்க்கு மீட்பரும்
கர்த்தாவுமாம் சுதனுக்கும்
ரட்சிப்பின் செய்கைக்காகவே,
புகழ் செலுத்தும், மாந்தரே.

3. சுதனிடத்தில் நெஞ்சத்தை
அன்பாய்த் திருப்பி நம்பிக்கை
உண்டாகச் செய்யும் ஆவிக்கே
புகழ் செலுத்தும், மாந்தரே.

4. படைப்பு மீட்பு சுத்தத்தை
நடத்தும் மா த்ரியேகரை
சிருஷ்டி யாவும் அன்போடு
புகழ்ந்து போற்றத் தக்கது.

**31. Rivaulx** **(368)** **L.M.**

**"Father of all, whose love profound"**

**பிதாவே, மா தயாபரா,**
ரட்சிப்பின் ஆதிகாரணா,
சிம்மாசனமுன் தாழுவேன்;
அன்பாக மன்னிப் பீயுமேன்.

2. பிதாவின் வார்த்தை மைந்தனே,
தீர்க்கர், ஆசார்யர், ராயரே,
சிம்மாசனமுன் தாழுவேன்;
ரட்சண்ய அருள் ஈயுமேன்.

3. அநாதி ஆவி, உம்மாலே
மரித்த ஆன்மா உய்யுமே;
சிம்மாசன முன் தாழுவேன்;
தெய்வீக ஜீவன் ஈயுமேன்.

4. பிதா குமாரன் ஆவியே,
த்ரியேகரான தேவனே,
சிம்மாசன முன் தாழுவேன்;
அன்பருள் ஜீவன் ஈயுமேன்.

**32. Flat Lux: Moscow.** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**"Thou, Whose almighty word"**

**வானமும் பூமியும்**
சமஸ்த அண்டமும்
படைத்த நீர்
வேதத்தின் ஒளியை
பரப்பி, இருளை
அகற்றி; செங்கோலை
செலுத்துவீர்.

2. மீட்பை உண்டாக்கவும்
மாந்தரைக் காக்கவும்
பிறந்த நீர்
பாவத்தை அழித்து,
சாத்தானை மிதித்து,
யாரையும் ரட்சித்து
நடத்துவீர்.

3. பாவியின் நெஞ்சத்தை
திருப்பி ஜீவனை
கொடுக்கும் நீர்
சபையை முழுதும்
திருத்தித் தேற்றவும்
ஏகமாய்ச் சேர்க்கவும்
அருளுவீர்.

4. ஞானம் நிறைந்தவர்
அன்பு மிகுந்தவர்
த்ரியேகரே.
ராஜ்ஜியம், வல்லமை,
நித்திய மகிமை,
உமக்கே உரிமை,
ஆண்டவரே.

**33. Eisenach Rivaulx; Winchester.** **L.M.**

**"Ver deinen thron tret ich hiemit"**

**பராபரனே, உமது**
ராஜாசனத்தின் அண்டைக்கு
பணிந்து தாழ்மையாய் வரும்
இப்பாவியைத் தள்ளாதேயும்.

2. பிதாவே, என்னைத் தேவரீர்
உம் சாயலாய்ச் சிருஷ்டித்தீர்;
நீர்தான் என் ஜீவன் உம்மையே
அல்லாமல் மாண்டு போவேனே.

3. தெய்வீக மைந்தன் இயேசுவே,
வற்றாத அன்பின் ஆழியே,
அடியேன் உய்ய, தேவரீர்,
பலியாய் ஜீவனை விட்டீர்.

4. தேவாவியே என் நெஞ்சை நீர்
திருப்பிப் புதிதாக்கினீர்;
என்னென்ன நன்மை என்னிலே
உண்டோ, அதும்மால் வந்ததே.

5. நீர் சோதனையில் தாங்குவீர்,
எத்துன்பத்திலும் கைவிடீர்;
உம்மால் திடனும் வெற்றியும்
மனமகிழ்ச்சியும் வரும்.

**34. Dengen; Luther.** **(126)** **8, 7, 8, 7, 8, 8, 7**

**"Allein Go in der Hoh sei Ehr"**

**பிதாவே, உம்தன் உன்னத**
பேரன்புக்காய் புகழ்ச்சி
என் பாவக்கேட்டை நீக்கின
அருள் மகா திரட்சி;
பூமியில் சமாதானமும்
நரர்களுக்கு நன்மையும்
உண்டாகும்படி செய்தீர்.

2. ஆ யேசு தேவ மைந்தனே
மாபலியைச் செலுத்தி
கெட்டோரை மீட்ட மீட்பரே
மாசற்ற ஆட்டுக்குட்டி,
மா கர்த்தரே, தயாபரா,
அடியார் ஜெபம் கேட்டெல்லா
நரர்க்கும் நீர் இரங்கும்.

3. மெய்யாகத் தேற்றும் உன்னத
நல்லாவியே, இறங்கும்;
பூமியில் கிறிஸ்து சகித்த
மிகுந்த கஸ்தியாலும்
மீட்டோரைச் சாத்தான் கண்ணியில்
விழாமல் காத்து, துன்பத்தில்
மெய்யாறுதலைத் தாரும்.

**35. Stobel; Italian Hymn.** **6,6,4,6,6,6,4**

**"come, Thou almighty King"**

**வாரும், மா தேவனே,**
உம்மைத் துதிக்கவே,
துணை செய்யும்;
உமக்கே கனத்தை,
உமக்கே நன்றியை,
உமக்கே துதியை
செலுத்துவேன்.

2. அநாதி வார்த்தையே,
அன்பாக நித்தமே
என்னோடிரும்
என்னைப் போதிக்கவும்,
உம்மைப் போலாக்கவும்,
மோட்சத்தில் சேர்க்கவும்,
அருள் செய்யும்.

3. மாசற்ற ஆவியே
அடியேன் நெஞ்சிலே
தரித்திரும்;
என் ஆசை அறிவீர்,
குறைவை நீக்குவீர்,
திருப்தியாக்குவீர்
அன்பாகவும்.

4. த்ரியேக தேவனே
நித்திய ஜீவனே
உம்மாலேயே
மானிடர் யாவரும்
இகபரத்திலும்
விரும்பும் பாக்கியம்
கிடைக்குமே.

**36. Frankfort** **8, 8, 7, 8, 8, 7, 4, 12, 8**

**"Halleluja Lob, Preis, Und Ehr"**

**எல்லாம் சிஷ்டித்த நமது**
தயாபர பிதாவுக்கு
அநந்த காலமாக
அல்லேலூயா! மகத்துவம்,
பெலன், புகழ்ச்சி, தோத்திரம்
உண்டாய் இருப்பதாக,
பார்ப்பார், காப்பார்;
வல்லமையும் கிருபையும் அன்பும் எங்கும்
அவர் செய்கையால் விளங்கும்.

2. மா நீசருக்கு மீட்பரும்
கர்த்தாவுமாம் சுதனுக்கும்
ரட்சிப்பின் அன்புக்காக
அல்லேலூயா! புகழ்ச்சியும்,
அநந்த ராஜரீகமும்
உண்டாய் இருப்பதாக;
பாவம், சாபம்
எந்தத் தீங்கும் அதால் நீங்கும்,
என்றென்றைக்கும்
பாக்கியம் எல்லாம் கிடைக்கும்.

3. மனந்திருப்பி, எங்களை
பர்த்தாவாம் யேசுவண்டையே
அழைத்து நேர்த்தியாக
சிங்காரிக்கும் தேவாவிக்கும்,
அல்லேலூயா! புகழ்ச்சியும்
வணக்கமும் உண்டாக;
வான, ஞான
வாழ்வினாலும் செல்வத்தாலும்
தேற்றிவாறார்
அதின் முன் ருசியைத் தாறார்.

4. எல்லா ஜனங்களாலேயும்
பிதா குமாரன் ஆவிக்கும்
அநந்த காலமாக
அல்லேலூயா! மகத்துவம்,
பலம், புகழ்ச்சி, தோத்திரம்
உண்டாய் இருப்பதாக
ஆமேன், ஆமேன்!
நீர் ஆனந்தம், ஆதியந்தம், பரிசுத்தம்
பரிசுத்தம், பரிசுத்தம்.

**37. Westminster** **(369) C.M.**

**"My God, how wonderful Thou art"**

**விண்ணோர்கள் போற்றும் தேவனே**
உம் மேன்மை அற்புதம்
பளிங்குபோலத் தோன்றுமே
உம் கிருபாசனம்!

2. நித்யானந்த தயாபரா,
அல்பா ஒமேகாவே
மாதூயர் போற்றும் ஆண்டவா,
ராஜாதி ராஜாவே!

3. தேவா உம் ஞானம், வல்லமை
அளவிறந்ததே;
நீர் சுத்தர், சுத்தர்; உம்தனை
துதித்தல் இன்பமே!

4. அன்பின் சொரூபி தேவரீர்,
நான் பாவியாயினும்,
என் நீச நெஞ்சைக் கேட்கிறீர்,
உம் சொந்தமாகவும்.

5. உம்மைப்போல் தயை மிகுந்த
ஓர் தந்தையும் உண்டோ?
உம்மைப்போல் அன்பு நிறைந்த
தாய்தானும் ஈடுண்டோ?

6. என் பாவமெல்லாம் மன்னித்தீர்,
சுத்தாங்கம் நல்கினீர்;
என் குற்றமெல்லாம் தாங்கினீர்;
அன்பின் ப்ரவாகம் நீர்!

7. மேலோக நித்ய பாக்யத்தை
நான் பெற்று வாழுவேன்;
உம் திவ்ய இன்ப முகத்தைக்
கண்ணுற்றுப் பூரிப்பேன்.

**38. St. Ann: Winchester old.** **C.M.**

**"O God, our help in ages past"**

**கர்த்தாவே, அடியாருக்கு**
அடைக்கலம் நீரே;
சகாயம் செய்யும்படிக்கு
எழுந்தருள்வீரே.

2. உமது சந்நிதானத்தில்
மகிழ்ச்சி அடைவோம்,
உமது கையை நீட்டுகில்
அஞ்சாமல் நடப்போம்.

3. மலைகள் தோன்றும் முன்னமே
அநாதி காலமாய்
சுயம்புவாய் இருந்தீரே,
இருப்பீர் நித்யமாய்.

4. ஆயிரம் ஆண்டு உமக்கு
ஓர் நாளைப்போல் ஆமே,
யுகங்கள் தேவரீருக்கு
ஓர் இமைக்கொப்பாமே.

5. சாவுக்குள்ளான மானிடர்
நிலைக்கவே மாட்டார்,
உலர்ந்த பூவைப்போல் அவர்
உதிர்ந்து போகிறார்.

6. கர்த்தாவே, அடியாருக்கு
அடைக்கலம் நீரே;
சகாயம் செய்யும்படிக்கு
எழுந்தருள்வீரே.

**39. Hesperus (Elim)** **L.M.**

**"Lord, Thou hast searched and..."**

**கர்த்தாவே, அடியேனை நீர்**
ஆராய்ந் தறிந்திருக்கிறீர்;
என் தேகம் ஆவி சிந்தையும்
உமக்கு நன்றாய்த் தெரியும்.

2. நினைக்கு முன் என் எண்ணமும்
நடக்குமுன் என் வழியும்
நான் பேசுமுன் என் வார்த்தையும்
உமக்கே எல்லாம் தெரியும்.

3. என் முன்னும் பின்னும் நிற்கிறீர்
நீர் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்;
உமக்குத் தப்பி நான் எங்கே
பறந்துபோவேன் கர்த்தரே?

4. உமக்கு மறைந்தோடவே
ஒளிப்பிடம் வேறில்லையே,
என்றெண்ணும் ஞானம் தாருமேன்
எக்காலும் என்னைக் காமுமேன்.

**40. St. Lawrence: Ernan** **L.M.**

**"Jehovah, God, Thy gracious power"**

**உன்னதமான ஸ்தலத்தில்,**
மா ஆழமுள்ள இடத்தில்,
கர்த்தாவே நீர் இருக்கிறீர்,
எல்லாவற்றையும் பார்க்கிறீர்.

2. என் அந்தரங்க எண்ணமும்
உமக்கு நன்றாய்த் தெரியும்;
என் சுகதுக்கம் முன்னமே
நீர் அறிவீர், என் கர்த்தரே.

3. வானத்துக்கேறிப் போயினும்,
பாதாளத்தில் இறங்கினும்,
அங்கெல்லாம் நீர் இருக்கிறீர்,
தப்பாமல் கண்டுபிடிப்பீர்.

4. காரிருளில் ஒளிக்கினும்,
கடலைத் தாண்டிப் போயினும்,
எங்கே போனாலும், தேவரீர்
அங்கென்னைச் சூழ்ந்திருக்கிறீர்.

5. ஆராய்ந்து என்னைச் சோதியும்,
சீர்கேட்டை நீக்கி ரட்சியும்,
நல்வழி தவறாமலே
நடத்தும், எந்தன் தேவனே.

**41. St. Fulbert** **(370)** **C.M.**

**"Ich singe dir mit Herz und Mund"**

**கர்த்தாவே, உம்மை நித்தமே**
துதித்துப் போற்றுவேன்;
எல்லாரின் முன்னும் உம்மையே
அறிக்கை பண்ணுவேன்.

2. எவ்வித பாக்கியங்களும்
உம்மாலே தான் உண்டே;
உண்டான எந்த நன்மைக்கும்
ஊற்றானவர் நீரே.

3. இக்கட்டில் நாங்கள் கூப்பிட்டால்
நீர் கேட்டிரங்குவீர்;
எங்களைச் சுத்த தயவால்
ரட்சித்துத் தாங்குவீர்.

4. அநந்த வாழ்வையும் இனி
கொடுத்தருள்வீரே;
அடியாருக்கு நற்கதி
அப்போதுண்டாகுமே.

5. ஆ! களிகூர்ந்து பூரித்து
மகிழ் என் உள்ளமே;
பராபரன் தான் உனது
அநந்த செல்வமே.

6. அவர் உன் பங்கு, உன் பலம்
உன் கேடகம்; நன்றாய்
திடப்படுத்தும் உன் திடம்,
நீ கைவிடப்பட்டாய்.

**42. St. Stephen: Old Melody** **C.M.**

**"O bless the Lord, my soul"**

**மாசற்ற தெய்வ நாமத்தை**
துதி, என் நெஞ்சமே;
இரக்கம் செய்த கர்த்தரை
துதி, என் உள்ளமே;

2. உன் பாதங்கள் யாவையும்
நிவிர்த்தி செய்கிறார்;
உன் ரோகங்கள் அனைத்தையும்
பரிகரிக்கிறார்.

3. நீ மாண்டுபோகும் பொழுது
உன் ஜீவனை மீட்பார்;
நிறைந்த அன்பால் உனக்கு
கிரீடம் சூட்டுவார்.

4. நன்மைகளால் உன் மனதை
திருப்தியாக்கினார்;
அன்பாய் உன் ஆயுள் காலத்தை
நீடிக்கப்பண்ணினார்.

5. எந்நாளும் இந்த நன்மையை,
என் ஆத்துமாவே, நீ
மறந்திடாமல் கர்த்தரை
வணக்கமாய்த் துதி.

**43. St. Peter** **(371)** **C.M.**

**"Ye humble souls, approach..."**

**என் நெஞ்சமே, நீ கர்த்தரை**
வணக்கமாகவே
புகழ்ந்து, அவர் நாமத்தை
துதிக்க ஞாயமே.

2. கிருபைக் கடல் அவரே;
என் உள்ளமே நன்றாய்
பிதாவின் திவ்ய அன்பையே
எப்போதும் சிந்திப்பாய்.

3. உன் பாவம் போக்கும் பலியாய்
தம் மைந்தனைத் தந்தார்;
உன்னைச் சீராக்கும் படியாய்
தம்மாவி ஊற்றினார்.

**44. Nattingham St. Magnus** **C.M.**

**"O bless the Lord, my soul"**

**என் ஆத்துமாவே, கர்த்தரை**
மகிழ்ந்து போற்றிடு;
அவர் உயர்ந்த நாமத்தை
துதித்துக் கொண்டிரு.

2. மகா விநோதமாய் உன்னை
புவியில் சிஷ்டித்தார்;
பிசாசால் வந்த மோசத்தை
விலக்கி ரட்சித்தார்.

3. உன்னை யுகங்கள் தோன்றுமுன்
அறிந்திருக்கிறார்
தம்மோடிருக்கும் வாழ்வுக்கு
குறித்திருக்கிறார்.

4. இதை உணர்ந்தென் நெஞ்சமே,
விஸ்வாசமாக நீ
பிதா குமாரன் ஆவியை
களிப்பாய்த் தோத்திரி.

**45. Harts: Monkland.**

**"Let us with a gladsome mind"**

**களிப்புடன் கூடுவோம்,**
கர்த்தரை நாம் போற்றுவோம்;
அவர் தயை என்றைக்கும்
தாசரோடு நிலைக்கும்.

2. ஆதி முதல் தேவனே
நன்மை யாவுஞ் செய்தாரே;
அவர் தயை என்றைக்கும்
மாந்தர் மேலே சொரியும்.

3. இஸ்ரவேலைப் போஷித்தார்,
நித்தம் வழி காட்டினார்;
அவர் தயை என்றைக்கும்
மன்னாபோலே சொரியும்.

4. வானம், பூமி புதிதாய்ச்
சிஷ்டிப்பாரோ ஞானமாய்;
அவர் தயை என்றைக்கும்
அதால் காணும் யாருக்கும்.

**46. German Hymn (Pleyel) (372) 7s**

**"Gratitude"**

**ஆத்துமாவே, உன்னையும்**
மற்றெல்லாப் படைப்பையும்
ஞானமாய்ச் செய்தோருக்கு
வாழ்த்தல் செய்து கொண்டிரு.

2. பாவக்கேட்டில் நின்றுன்னை
மீட்ட வல்ல தேவனை
நன்றியோ டாராதித்து
நித்தம் துதி செலுத்து.

3. காலத்துக்கு ஏற்றதாய்
காத்துனக்கு நேசமாய்
அருள் செய்த கர்த்தரை
பக்தியோடு நீ நினை.

4. ஸ்தோத்திரித்து, என்றுமே
நல்ல பிள்ளை போலவே
நாதனுக்குக் கீழ்ப்படு
தோத்திரித்துக் கொண்டிரு.

**47. Frohlich: Day of Rest.** **7s, 6s, 8l.**

**"Nun lob, mein seel, den Herren"**

**என் உள்ளமே, கர்த்தாவை**
ஆவலாய்த் துதித்து,
என் ஆவியே, தெய்வன்பை
எப்போதும் போற்றிடு;
உன் பாவத்தை மன்னித்து,
உன் கேட்டை நீக்கினார்;
உன் ஜீவனை ரட்சித்து,
நற்சீர் அளிக்கிறார்.

2. மகா இரக்கமான
சகாயர் கர்த்தர்தான்,
நொறுங்குண்டோருக்கான
அருளின் ஊற்றேயாம்;
கோபத்தை என்றென்றைக்கும்
என் தேவன் கொள்ளாரே,
மனம் நறுங்குண்டோர்க்கும்
கிருபை செய்வாரே.

3. தந்தை தன் மைந்தருக்கு
இரங்கும் வண்ணமாய்
கர்த்தர் தம் தாசருக்கு
இரங்குவார் மெய்யாய்;
நாம் இன்ன உருவென்று
நன்றாக அறிவார்,
நாம் தூளும் மண்ணும் என்று
அறிந்திருக்கிறார்.

4. கர்த்தரின் வேதம் சொல்லும்
ப்ரமாணப்படியே
இசைந்து அவர் காட்டும்
அன்புக்கு ஏற்கவே
நடந்து கொள்ளுவோர்க்கு
கடாட்சம் அருள்வார்,
பரமாநந்தத்துக்கு
ஆளாக்கி ரட்சிப்பார்.

**48. Dunfermline: Aristides, St. Peter: C.M.**
**"Nun danket all und bringet Ehr"**

**தூதாக்கள் விண்ணில் பாடிய**
தூய பிதாவையே
நன்றாகத் துதி, சகல
நரரின் கூட்டமே.

2. அதிசயங்கள் செய்கிற
பராபரனைப் போல்
நிகருண்டோ, என்றுத்தம
கருத்தாய்ப் போற்றுமே.

3. இந்நாள் வரைக்கும் நமக்கு
சுகம் அருளினார்;
நீங்கா இக்கட்டைத் தமது
நேசத்தால் நீக்கினார்.

4. நாம் செய்துவந்த பாவத்தை
நிவிர்த்தியாக்கினார்,
அகோர ஆக்கினைகளை
அன்பாய் அகற்றினார்.

5. பூமியில் சமாதானத்தை
அநுக்ரகிக்கிறார்;
நாம் செய்யும் அவர் வேலையை
ஆசீர்வதிக்கிறார்.

**49. Irish: Arcadia** **C.M.**

**"What shall I render to my God?"**

**என் தேவனே, என் ஆத்துமா**
நீர் தந்த நன்மையை
சிந்தித்துப் பார்க்கையில், மகா
வியப்பாய்த் தோன்றுதே.

2. உற்பத்திகாலம் முதலாய்
என்னை நடத்தினீர்;
என் ஆவி, தேகம் தயவாய்
இம்மட்டும் தாங்கினீர்.

3. சீர்கேடு நீங்க நெஞ்சத்தை
செம்மைப் படுத்தினீர்;
அநேக ஆறுதல்களை
எனக்கருளினீர்.

4. என் ஜீவகாலம் எல்லாம் நீர்
அன்பாய் விசாரித்தீர்;
இம்மட்டும் என்னைத் தேவரீர்
பராமரிக்கிறீர்.

5. கர்த்தாவே உம்மைப்போற்றுவேன்
இடைவிடாமலே;
எப்போதும் உம்மைப் பற்றுவேன்
உற்சாகமாகவே.

**50. Innocents; Culbach** **(373) 7s**

**"The Author of our being"**

**மோட்சலோக நாதரே,**
நித்தியநேசம் உள்ளோரே,
ஜீவகோடிகள் எல்லாம்
தேவரீரின் செய்கை ஆம்.

2. என்னைப் பிறப்பித்தவர்,
சீர்படுத்தி ஆள்பவர்,
சாவுமட்டும் காப்பவர்,
மோட்ச வீட்டில் சேர்ப்பவர்.

3. எல்லாத் துன்பம் இன்பமும்
எளிமையும் செல்வமும்
துக்கமும் சந்தோஷமும்
தேவனே உம்மால் வரும்.

4. நன்மைக்காதி மூலமே,
எனக்குள்ள யாவுமே
உமக் கொப்புவிக்கவே
மனம், பலம் தாருமே.

5. என்றென்றைக்கும் உம்மையே
ஏத்திப் போற்றல் இன்பமே;
நீர் என் செல்வமானவர்,
நேசத்துக்குப் பாத்திரர்.

**51. Aristides: Southwell** **C.M.**

**"God's care"**

**நீர் தந்த நன்மை யாவையும்**
நினைத்து, தேவனே,
மகிழ்ச்சியோடு என்றைக்கும்
நான் துதி செய்வேனே.

2. குழந்தைப் பருவம் முதல்
குறைவில்லாமலே
எனக்களித்த நன்மைகள்
ஏராளமானதே.

3. என்னோடு வாலிபத்திலும்
இருந்தீர் தேவரீர்!
இக்கட்டுண்டான காலத்தும்
விழாமல் தாங்கினீர்.

4. அநேகமான தீமைகள்
அண்டாமல் தடுத்தீர்;
கைமாறில்லாத நன்மைகள்;
கர்த்தாவே பொழிந்தீர்.

5. இம்மையில் என்றும் தாழ்மையாய்
தேவன்பை நினைப்பேன்,
மறுமையில் வணக்கமாய்
உம்மையே போற்றுவேன்.

6. புகழ்ச்சி, துதி, தோத்திரம்,
ஒன்றான உமக்கே
இகத்திலும் பரத்திலும்
எழும்பத் தகுமே.

**52. Berlin; Mendelsshon** **7s, 10l.**

**"Hark! the herald angels sing"**

**கேள்! ஜென்மித்த ராயர்க்கே**
விண்ணில் துத்யம் ஏறுதே;
அவர் பாவ நாசகர்,
சமாதான காரணர்;
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர் போல் கெம்பீரித்து
பெத்லெகேமில் கூடுங்கள்,
ஜென்ம செய்தி கூறுங்கள்

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே.

2. வானோர் போற்றும் க்றிஸ்துவே!
லோகம் ஆளும் நாதரே,
ஏற்ற காலம் தோன்றினீர்,
கன்னியிடம் பிறந்தீர்;
வாழ்க, நரதேவனே
அருள் அவதாரமே!
நீர், இம்மானுவேல், அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்.

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே.

3. வாழ்க, சாந்த ப்ரபுவே!
வாழ்க, நீதி சூரியனே
மீட்பராக வந்தவர்,
ஒளி, ஜீவன் தந்தவர்!
மகிமையை வெறுத்து,
ஏழைக் கோலம் எடுத்து,
சாவை வெல்லப் பிறந்தீர்
மறுஜென்மம் அளித்தீர்,

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே.

**53. Winchester Old** **C.M.**

**"White shepherds watched their..."**

**ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்**
தம் மந்தை காத்தனர்,
கர்த்தாவின் தூதன் இறங்க
விண் ஜோதி கண்டனர்.

2. அவர்கள் அச்சங் கொள்ளவும்
விண் தூதன்: “திகில் ஏன்?”
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்;

3. "தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்;"

4. "இதுங்கள் அடையாளமாம்,
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்".

5. என்றுரைத்தான்; அக்ஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்.

6. மா உன்னதத்தில், தேவனே,
நீர் மேன்மை அடைவீர்;
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்.

**54. Irby** **8,7,8,7,7,7**

**"Once in royal David's city"**

**ராஜன் தாவீதூரிலுள்ள**
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே,
மாதா, மரியம்மாள் தான்;
பாலன், இயேசு கிறிஸ்துதான்.

2. வானம் விட்டுப் பூமி வந்தார்
மகா தேவ தேவனே;
அவர் வீடோ மாட்டுக் கொட்டில்,
தொட்டிலோ முன்னணையே,
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்

3. ஏழையான மாதாவுக்கு
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்;
பால்ய பர்வம் எல்லாம் அன்பாய்
பெற்றோர்க்கு அடங்கினார்
அவர்போல கீழ்ப்படிவோம்,
சாந்தத்தோடு நடப்போம்.

4. பாலர்க்கேற்ற பாதை காட்ட
பாலனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தன்போல
துன்பம், துக்கம் சகித்தார்,
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்.

5. நம்மை மீட்ட நேசர் தம்மை
கண்ணால் கண்டு களிப்போம்;
அவர் தாமே மோக்ஷலோக
நாதர் என்று அறிவோம்,
பாலரை அன்பாகவே
தம்மிடத்தில் சேர்ப்பாரே.

6. மாட்டுத் தொழுவத்திலல்ல,
தேவ ஆசனத்திலும்,
ஏழைக்கோலமாக அல்ல,
ராஜ கிரீடம் சூடியும்
மீட்பர் வீற்றிருக்கின்றார்,
பாலர் சூழ்ந்து போற்றுவர்.

**55. Yorkshire** **10s, 6l.**

**"Christians, awake, salute the happy morn"**

**'மெய் பக்தரே', நீர் விழித்தெழும்பும்,**
சந்தோஷமாய் இந்நாளை வாழ்த்திடும்;
இன்றைக்கு லோக மீட்பர் ஜென்மித்தார்,
விண்ணோர் இவ்விந்தையைக் கொண்டாடினார்;
தேவாதி தேவன் மானிட னானார்,
ரட்சண்ய கர்த்தாவகத் தோன்றினார்".

2. "இதோ! நற்செய்தி கேளும்; இன்றைக்கே
இம்மானுவேல் தாவீதின் ஊரிலே
பூலோக மீட்பராகப் பிறந்தார்,
எல்லாருக்கும் சந்தோஷம் நல்குவார்"
என்றே ஓர் தூதன் பெத்லேம் மேய்ப்பர்க்கே
இராவில் தோன்றி மொழிந்திட்டானே.

3. அந்நேரம் வானோர் கூட்டம் மகிழ்ந்து,
ஆனந்தப் பாட்டைப் பாடி இசைந்து
"விண்ணில் கர்த்தாவுக்கு மா துதியும்
மண்ணில் நல்லோர்க்குச் சமாதானமும்"
என்றல்லே லூயாபாடி வாழ்த்தினார்,
தெய்வீக அன்பின் மாண்பைப் போற்றினார்.

4. இச்செய்தி கேட்ட மேய்ப்பர் ஊருக்கு
அற்புத காட்சி காண விரைந்து
யோசேப்புடன் தாய் மரியாளையும்
முன்னணைமீது தேவ சேயையும்
கண்டே, தேவன்பை எண்ணிப் போற்றினார்
ஆனந்தமாய் தம் மந்தைக்கேகினார்.

5. கெட்டுப்போனோரை மீட்ட நேசமாம்
உன்னத அன்பைச் சிந்தை செய்வோம் நாம்
தம்ஜென்ம முதல்சாவு மட்டுக்கும்
அப்பாலன் செய்த புண்ய ஜீவ்யமும்
அன்போடு த்யானம் செய்து வருவோம்
நம் மீட்பர் பின்னே செல்ல நாடுவோம்.

**56. Ellacombe; Aurelia** **7s, 6s.**

**"Hail, Thou blessed Saviour!"**

**உன் சஞ்சலத்தை விட்டு,**
கர்த்தாவின் சபையே,
என் மீட்பரைத் துதித்து,
ஆனந்தங் கொள்வாயே;
நீ நம்பி எதிர்பார்த்த
உன் மீட்பர் பிறந்தார்;
கிலேசம் யாவும் ஆற்ற
உன்னோடு தங்குவார்.

2. ஆ, யேசுவே, நீர் வாழ்க!
பிதாவின் சுதனே,
மா ஏழை நரனாக
பிறந்த தேவனே,
விண்ணோருக்காதி கர்த்தர்,
மண்ணில் பிறந்தீரோ?
அநாதியான நித்தர்,
குழந்தை ஆனீரோ?

3. நான் வானத்துக்கு ஏற
பூலோகத்தில் வந்தீர்;
நான் தூதரோடு சேர
நரர்க்குள் தங்கினீர்;
நான் வாழ உம்மை தாழ்த்தி,
பிழைக்க மரித்தீர்;
நான் என்றும் உம்மை வாழ்த்தி
வணங்க, ரட்சிப்பீர்.

**57. Stuttgart** **(375)** **8s, 7s**

**"Born thy people to deliver"**

**திவ்ய மைந்தன் பிறந்தீரே,**
கன்னியாஸ்திரீப் பாலகா;
நீச கோலம் எடுத்தீரே,
சர்வ ஜன ரக்ஷகா.

2. பாவ மாந்தர் மீட்புக்காக
வான மேன்மை வெறுத்தீர்;
நேச நாதா தாழ்மையாக
மண்ணில்தோன்றி ஜென்மித்தீர்.

3. லோக ராஜா, வாழ்க! வாழ்க!
செங்கோல் தாங்கும் அரசே!
பூமியெங்கும் ஆள்க! ஆள்க!
சாந்த ப்ரபு யேசுவே!

4. தேவரீரின் ராஜ்யபாரம்
நித்ய காலமுள்ளது;
சர்வ லோக அதிகாரம்
என்றும் நீங்கமாட்டாது.

5. வல்ல தேவைப் பணிவோடு
ஏக வாக்காய்ப் போற்றுவோம்,
நித்ய பிதா, பக்தியோடு
நமஸ்காரம் பண்ணுவோம்.

6. ஸ்தோத்திரம், கர்த்தாதி கர்த்தா
ஞானத்துக் கெட்டாதவர்!
ஸ்தோத்திரம் ராஜாதி ராஜா
ஆதியந்த மற்றவர்!

**58. St. Magnus - Belmont Nottingham.** **C.M.**

**"Lobt Gott, ihr Christen..."**

**சபையே, இன்று வானத்தை**
திறந்து தமது
சுதனைத் தந்த கர்த்தரை
துதித்துக் கொண்டிரு.

2. பிதாவுக்கொத்த இவரே
குழந்தை ஆயினார்;
திக்கற்று முன்னணையிலே
வெட்காது கிடந்தார்.

3. தெய்வீக ஸ்பாவம் நம்மிலே
உண்டாக ஆண்டவர்
நரரின் ஸ்பாவமாய் இங்கே
வந்து பிறந்தனர்.

4. தாழ்ந்தார் அவர், உயர்ந்தோம் நாம்;
இதென்ன அற்புதம்!
இதுன்னத சிநேகம் ஆம்,
இதன்பின் பூரணம்.

5. திரும்பப் பரதீசுக்கு
வழி திறந்துபோம்;
கேரூபின் காவல் நீங்கிற்று
மகிழ்ந்து பாடுவோம்.

**59. Pearsall; Aurelia** **7s, 6s, 8l.**

**"Mit Ernst o Menschenkinder"**

**குணம் அடை, சீர்கெட்ட**
ஆதாமின் ஜாதியே;
தெளிவடை நீ, மெத்த
இருண்ட லோகமே;
உனக்கு ரட்சிப்பாக
மகா தயாபரர்
மானிட ரூபமாக
இப்பாரில் தோன்றினர்.

2. கறைகள் நீங்க நெஞ்சை
சுத்திகரியுங்கள்;
கர்த்தாவுக்கு வழியை
செவ்வைப்படுத்துங்கள்,
நொறுக்கப்பட்ட ஆவி
அவருக்கேற்றது;
குணப்படாத பாவி,
கெடுநாள் கிட்டுது.

3. கர்த்தாவே, என் உள்ளத்தை
நீர் சுத்தஞ் செய்திடும்;
சிறந்த உம்தன் மீட்பை
என் கண்கள் காணட்டும்;
நான் நித்தம் உம்மைப் போற்றும்
களிப்புண்டாகவே
என் நெஞ்சில் நீரே வாரும்
கடாட்சமாகவே.

**60. Winchester New** **(376)** **L.M.**

**"Vom Himmel hoch da komm ich"**

**பரத்திலே இருந்துதான்**
அனுப்பப்பட்ட தூதன் நான்,
நற்செய்தி அறிவிக்கிறேன்,
பயப்படாதிருங்களேன்".

2. "இதோ! எல்லா ஜனத்துக்கும்
மிகுந்த நன்மையாய் வரும்
சந்தோஷத்தைக் களிப்புடன்
நான் கூறும் சுவிசேஷகன்".

3. "இன்றுங்கள் கர்த்தரானவர்
மேசியா, உங்கள் ரட்சகர்
தாவீதின் ஊரில் திக்கில்லார்
ரட்சிப்புக்காக ஜென்மித்தார்".

4. "பரத்திலே நாம் ஏகமாய்
இனி இருக்கத் தக்கதாய்
இக்கட்டும் பாவமும் எல்லாம்
இம்மீட்பரால் நிவிர்த்தியாம்".

**61. Monkland** **7s.**

**"Gott sei Dank in aller Welt"**

**கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**
மீட்போம், என்ற வாசகம்
தப்பில்லாமல்; நாதனார்
மீட்பரை அனுப்பினார்.

2. முற்பிதாக்கள் யாவரும்
தீர்க்கதரிசிகளும்
சொல்லி ஆசைப்பட்டது
வந்து நிறைவேறிற்று.

3. வாழ்க, ஆதி தீபமே!
ஓசன்னா, என் ஜீவனே!
என்னுடைய நெஞ்சிலும்
அன்புடன் ப்ரவேசியும்.

4. உள்ளே வாரும், ராயரே,
இது உம்முடையதே;
பாவமான யாவையும்
நீக்கி என்னை ரட்சியும்.

**62. Salvator Mundi; - Moscow, Hermon** **(377)** **6,6,4,6,6,6,4**

**"O Jesus Christ, dein"**

**வானாளும் தேவனே,**
மானிடனாகவே
பிறந்தீரே;
எங்கள் சுபாவத்தை
திருத்தி, பக்தியை
வளர்த்து, மோட்சத்தை
அருள்வீரே.

2. ஆ தேவ மைந்தனே,
நீர் தாம் சஞ்சீவியே,
ஆகையாலே

நிர்ப்பந்த மாந்தரை,
நாடின பேரன்பை
நினைக்கும் சிந்தையை
அளிப்பீரே.

3. அநாதி ஜோதியோ,
அடியார் நெஞ்சிலே
ப்ரகாசியும்;
உம்மால் எல்லாருக்கும்
ரட்சிப்புண்டாகவும்
மெஞ்ஞானம் தோன்றவும்
கடாட்சியும்.

**63. Redhead 4; Mainzer** **L.M**

**"Vom Himmel hoch da komm..."**

**எல்லாம் படைத்த கர்த்தரே,**
பொல்லாத மாந்தர் மீதிரே
பேரன்பு வைத்து தேவரீர்;
ரட்சிப்புண்டாக்க ஜென்மித்தீர்.

2. ஓர் பலவீன பாலனாய்,
துணியில் சுற்றப்பட்டோராய்
புல்லணை மீதில் கிடந்தீர்,
மேன்மை அனைத்தும் மறந்தீர்.

3. பூலோகத்தின் ப்ரஸ்தாபமும்
சிங்காரஞ் செல்வம் மேன்மையும்
அனைத்தும் மாயை என்று நீர்
இவ்வாறு நன்றாய்க் காண்பித்தீர்.

4. ஒன்றான நேச மைந்தனை
அன்பாக ஈந்த தேவனை
புகழ்ந்து போற்றும், மாந்தரே;
ரட்சிப்பின் நாள் விடிந்ததே.

**64. Wareham** (378) L.M

**"Gelobet seist du, Jesu Christ"**

**இரக்கமுள்ள யேசுவே,**
நரரின் தன்மையாகவே
பிறந்ததால் துதிக்கிறோம்
சுரரும் பாடக் கேட்கிறோம்.

2. அளவில்லாத வல்லவர்,
அனைத்தையும் படைத்தவர்
மதலையாய்ப் பிறந்தனர்,
மனுஷர்போல வளர்ந்தனர்.

3. அநாதி ஜோதி பூமிக்கு
வெளிச்சம் தோன்ற மாந்தர்க்கு
மெய்ச்சுடலாய் இருட்டிலே
ப்ரகாசமாய் உதித்ததே;

4. அதைக் கருத்தாய் சிந்தித்து,
பூலோகத்தாரே பூரித்து,
அஜ்ஜோதி நோக்கிப் பாருங்கள்,
அதில் நடக்க வாருங்கள்.

**65. University College; Lubeck.** 7s.

**"Jesu, rufe mich"**

**தயவுள்ள யேசுவே,**
என்னை உம்மிடத்திலே
சேர்த்துக் கொள்வதற்கு நீர்
ஏழையாகத் தோன்றினீர்.

2. பெல்லேம் சிற்றூராயினும்
அங்கே நீர் பிறக்கவும்,
மேன்மையுள்ள தாயிற்று,
வேதம் நிறைவேறிற்று.

3. தேவரீரின் ஜென்மமே
புத்திக்கு எட்டாததே;
வானத்தூதர் கூட்டத்தார்
வாழ்த்தி அதைப் பாடினார்.

4. நல்ல செய்தி கேட்கவே
மேய்ப்பர் காணச் சென்றாரே;
ஞானிகளும் வந்தனர்;
காணிக்கை படைத்தனர்.

5. அவ்வாறும்மை நாங்களும்
அண்டிப் பாதம் போற்றவும்,
வந்து எங்கள் நெஞ்சிலே
வாசஞ் செய்யும் கர்த்தரே.

**66. Austria** **8s, 7s, 8l.**

**"Come, Thou long expected Jesus"**

**வாரும் வாஞ்சைப்பட்ட யேசு,**
மீட்பராக வந்த நீர்
பாரமான பாவக்கேடு
நீங்கச் செய்து தேற்றுவீர்;
இஸ்ரவேலின் சர்வ வல்ல
மேசியாவாம் கர்த்தர் நீர்;
மாந்தர் யாரும் எதிர்பார்த்த
பாவ நாசர் தேவரீர்.

2. ரட்சித்தாளப் பாரில் வந்த
பிள்ளையான ராயரே,
என்றும் உம்மை அண்டிக் கொள்ள
அருள் செய்யும் மீட்பரே.
நித்திய ஆவி எங்கள் நெஞ்சில்
தங்கி ஆள அருளும்;
உம்தன் புண்யத்தாலே விண்ணில்
நாங்கள் வாழச் செய்திடும்.

**67. Adesle Fideles:** **Portuguese Hymn.** **P.M. Irregular**

**"Oh come all ye faithful"**

**பக்தரே, வாரும்**
ஆசை ஆவலோடும்;
நீர் பாரும், நீர் பாரும் இப்பாலனை,
வானோரின் ராஜன்
கிறிஸ்து பிறந்தாரே!

சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
யேசுவை.

2. தேவாதி தேவா,
ஜோதியில் ஜோதி,
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்;
நித்ய குமாரன்,
ஒப்பில்லாத மைந்தன்!
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
யேசுவை.

3. மேலோகத்தாரே,
மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடிப்போற்றுமேன்
"விண்ணில் சந்தோஷம்
மண்ணில் சமாதானம்;"
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
யேசுவை.

4. யேசுவே, வாழ்க!
இன்று ஜென்மித்தீரே;
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்;
அன்பின் சொரூபி,
அருள் அவதாரம்
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
யேசுவை.

**68. Passion chorale, 2** **7s, 6s, 8l.**

**"O sacred Head now wounded"**

**இரத்தம் காயம் குத்தும்**
நிறைந்து, நிந்தைக்கே
முட்கிரீடத்தாலே சுற்றும்
குத்துண்ட சிரசே,
முன் திவ்ய மேன்மை கொண்ட
நீர் லச்சை காண்பதேன்?
ஐயோ வதைந்து நொந்த
உம்முன் பணிகிறேன்.

2. நீர் பட்ட வாதை யாவும்
என் பாவப் பாரமே;
இத்தீங்கும் நோவும் சாவும்
என் குற்றம், கர்த்தரே,
இதோ! என்றைக்கும் சாக
நான் பாத்திரன் ஆனேன்
ஆனாலும் நீர் அன்பாக
என்னைக் கண்ணோக்குமேன்.

3. நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி, நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன், யேசுவே,
நான் உம்மில் ஊன்றி நிற்க
சகாயராய் இரும்;
உம்மோடு நான் மரிக்க
கடாட்சித்தருளும்.

4. என் மூச்சொடுங்கும் அந்த
கடை இக்கட்டிலும்
இப்பாவிக்காய் இறந்த
உம்மையே காண்பியும்;
அப்போது என்னைச் சேர்த்து
உம் திவ்ய மார்பிலே
அணைத்துக் கொண்டு காத்து
ஈடேற்றும் யேசுவே.

**69. Love Divine: Batty, Dorrnance** **8s, 7s.**

**"Sweet the moments rich in....."**

**பாவ நாசர் பட்ட காயம்**
பார்த்துணர்ந்து கொள்வது
சுத்தம், செல்வம், நற்சகாயம்
சமாதானம் உள்ளது.

2. ரத்த வெள்ளம் பாய்ந்ததாலே
அன்பின் வெள்ளம் ஆயிற்று;
தேவ நேசம் அதினாலே
மானிடர்க்குத் தோன்றிற்று.

3. ஆணி பாய்ந்த மீட்பர் பாதம்
தஞ்சம் என்று பற்றினேன்;
அவர் திவ்ய நேசமுகம்
அருள் வீசக் காண்கிறேன்.

4. பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி
துக்கத்தால் கலங்குவேன்;
அவர் சாவால் துக்கம் மாறி
சாகா ஜீவன் அடைவேன்.

5. நாதா நானும் மோட்சம் சென்று
உம்மைக் காணுமளவும்
நன்றியுள்ள நெஞ்சத்தோடு
உம்மைப் பற்ற அருளும்.

**70. Chester: Iifracomb** **(379)** **C.M**

**"Wither wih this erushing load?"**

**எங்கே சுமந்து போயினீர்**
சிலுவையைத்தானே?
ஏன் பாடுபட்டு மரித்தீர்
மாசற்ற மீட்பரே?

2. கல்வாரி மேட்டிலெனக்காய்
அவஸ்தைப்பட்டீரே;
நான் அதை எண்ணிப் பக்தியாய்
ஜீவிக்கச் செய்யுமே.

3. நீர் பட்ட பாடும் துக்கமும்
வாக்குக்கெட்டாததே
இவ்வன்பை நான் எக்காலமும்
நினைத்துக் கொள்வேனே.

4. என் நெஞ்சில் உம்மை ஊக்கமாய்
நான் சிந்தை செய்யவும்
நல்லாவியை நீர் நேசமாய்
கடாட்சித்தருளும்.

**71. Elberfeld; Luther, 8,7,8,7,8,8,7.**

**"Who is he?"**

**அகோரகஸ்தி பட்டோராய்**
வதைந்து வாடி நொந்து
குரூர ஆணி தைத்தோராய்
தலையைச் சாய்த்துக் கொண்டு
மரிக்கிறார் மா நிந்தையாய்!
துன்மார்க்கர் சாகும் வண்ணமாய்
மரித்த இவர் யாவர்?

2. சமஸ்தமும் மா வடிவாய்
சிஷ்டித்து ஆண்டுவந்த
எக்காலமும் விடாமையாய்
விண்ணோரால் துதிபெற்ற
மா தேவ மைந்தன் இவரோ?
இவ்வண்ணம் துன்பப்பட்டாரோ
மா தேவ நேச சுதன்?

3. அநாதி ஜோதி நரனாய்
உலகத்தில் ஜென்மித்து,
அரூபி ரூபி தயவாய்
என் கோலத்தை எடுத்து
மெய்யான பலியாய் மாண்டார்,
நிறைந்த மீட்புண்டாக்கினார்
என் ரட்சகர், என் தேவன்.

**72. Belmont** **C.M.**

**"His dying love"**

**மா வாதைப்பட்ட யேசுவே;**
அன்பின் சொரூபம் நீர்;
நிறைந்த உந்தன் அன்பிலே
நான் மூழ்க அருள்வீர்.

2. தேவன்பின் ஆழம் அறிய
விரும்பும் அடியேன்,
நீர் பட்ட கஸ்தி ஒழிய,
வேறொன்றும் அறியேன்.

3. என் மீட்பர் ஜீவன் விட்டதால்
பூமி அசைந்ததே;
கன்மலை அதைக் கண்டதால்
பிளந்துவிட்டதே.

4. அவ்வண்ணமாய் என் நெஞ்சத்தை
பிளந்து, தேவரீர்,
உமது சாவின் பலத்தை
உணர்த்தக் கடவீர்.

5. துராசை நீங்கத் தக்கதாய்
தெய்வன்பை ஊற்றிடும்;
கற்போன்ற நெஞ்சை மெழுகாய்
உருகச் செய்திடும்.

**73. St. Mary** **C.M.**

**"The death of Christ"**

**கண்டீர்களோ சிலுவையில்**
மரிக்கும் யேசுவை?
கண்டீர்களோ காயங்களில்
சொரியும் ரத்தத்தை?

2. "மன்னியும்" என்ற வேண்டலை
கேட்டீர்களே, ஐயோ!
"ஏன் கைவிட்டீர்" என்றார், அதை
மறக்கக்கூடுமோ?

3. கண்மூடி, தலை சாயவே,
"முடிந்தது" என்றார்;
இவ்வாறு லோக மீட்பையே
அன்பாய் உண்டாக்கினார்.

4. அவ்வேண்டல் ஓலம் காயத்தால்
ஈடேற்றம் வந்ததே;
ஆ! பாவி, இதை நோக்குங்கால்
உன் தோஷம் தீருமே.

5. சீர் கெட்டு மாண்டு போகையில்
பார்த்தேன் என் மீட்பரை;
கண்டேன், கண்டேன் சிலுவையில்
மரிக்கும் யேசுவை!

**74. St. Mary** **C.M.**

**"Oh come and mourn with..."**

**துக்கங் கொண்டாட வாராயோ?**
ஆ, யேசு ஜீவனை விட்டார்!
திகில் கலக்கங் கொள்ளாயோ?
மீட்பர் சிலுவையில் மாண்டார்.

2. போர்வீரர், யூதர் நிந்தித்தும்
மா சாந்தமாகச் சகித்தார்,
நாமோ புலம்பி அழுவோம்;
யேசு சிலுவையில் மாண்டார்.

3. கை காலை ஆணி பாய்ந்ததே;
கொடூர தாகம் அடைந்தார்;
மெய்தொய்ந்ததால் கண் இருண்டே
யேசு சிலுவையில் மாண்டார்.

4. மும்மணிநேரம் மாந்தர்க்காய்
தம் மௌனத்தாலே கெஞ்சினார்;
நல்வாக்யம் ஏழும் மொழிந்தே
யேசு சிலுவையில் மாண்டார்.

5. சிலுவையண்டை வந்து சேர்,
நேசர் ஐங்காயம் நோக்கிப்பார்;
ஒப்பற்ற அன்பைச் சிந்தியேன்;
யேசு சிலுவையில் மாண்டார்.

6. உருகும் நெஞ்சும் கண்ணீரும்
உள்ளன்பும் தாரும், யேசுவே;
மாந்தர்மீதன்பு கூர்ந்ததால்
நீர் சிலுவையில் மாண்டீரே!

**75. St. Flavian; St. Mary** **C.M.**

**A Sacrifice for sin**

**ரட்சகரான இயேசுவே,**
எங்களை மீட்க நீர்
சுகந்த பலியாகவே
ஜீவனைக் கொடுத்தீர்.

2. கெட்டோரைச் சேர்த்து, பாவத்தை
கட்டோடே நீக்கிடும்;
இப்போது பாவமன்னிப்பை
எல்லோர்க்கும் ஈந்திடும்.

3. பாவத்தை நாசமாக்கவே
கால் காயப்பட்டது;
கெட்டோரை ஏற்றுக்கொள்ளவே
கை நீட்டப்பட்டது.

4. செந்நீர் நிறைந்த காயங்கள்
சுமந்த கர்த்தனே,
என்னால் விளைந்த பாவங்கள்
எல்லாம் அகற்றுமே.

5. உமது வாக்கை ரூபிக்க
ரத்தத்தால் என்னையும்
கழுவி, உம்மைச் சேவிக்க
கிருபை அளியும்.

**76. St. Spires; St. Cross** **L.M.**

**"Behold the Saviour of mankind"**

**பூலோக மீட்பர் யேசுவை;**
சிலுவைமீது நோக்குங்கள்;
எவ்வளவாக மாந்தரே,
நேசித்தாரென்று பாருங்கள்!

2. முடிந்ததென்று யேசுவே
உரைத்து ஜீவன் விட்டனர்;
“தேவ குமாரன் இவரே”,
என்று கண்டோர் விளம்பினர்.

3. விண் ஜோதிகள் இருண்டன,
திரை இரண்டாய்க் கிழிந்தது,
கற்பாறைகள் பிளந்தன,
இப்பூமியும் அதிர்ந்தது.

4. எங்கள் நிமித்தம் வேதனை
அன்பாய்ச் சகித்து மாண்டாரே;
அவர் நிமித்தம் எங்களை
நீர் ரட்சித்தாளும், தேவனே.

**77. Rockingham: Williams** **L.M.**

**"When I servey the wondrous..."**

**என் அருள் நாதா, யேசுவே!**
சிலுவைக்காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே,
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்

2. என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்?
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்.

3. கை தலை காலிலும், இதோ!
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ?
முள் முடியும் ஒப்பற்றதே

4. சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்?
என் ஜீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்

5. மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித்தீந்த யேசுவே
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே!

**78. Williams: Rockingham** **(380)** **L.M.**

**"Die Seele Christ heil'ge mich"**

**மரித்த கிறிஸ்தின் ஆவியும்**
வதைக்கப்பட்ட தேகமும்
என் தேகம், ஆவி யாவையும்
என்றைக்கும் காத்து ரட்சிக்கும்.

2. என் மீட்பரின் ஐங்காயத்தில்
வடிந்த தூய ரத்தத்தில்
நான் மூழ்க, பாவம் யாவுமே
நிவிர்த்தியாகி விட்டதே.

3. அன்புள்ள இயேசு கிறிஸ்துவே,
ஒதுக்கை உம்மிடத்திலே
விரும்பித் தேடும் என்னையும்
மறைத்துப் பாது காத்திடும்.

4. என் ஆவி போகும் நேரத்தில்
அதை நீர் தேற்றி, மோட்சத்தில்
என்றைக்கும் உம்மைப்போற்றவே
உம்மண்டை சேரும், கர்த்தரே.

**79. Easter Morn. 7s.** **(with Alleluia)**

**"Jesus Christ is ris'n to-day"**

**இன்று க்றிஸ்து எழுந்தார்,**
அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார்!
அல்லேலூயா!
சிலுவையில் மாண்டவர்,
அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தவர்
அல்லேலூயா!

2. அவர் வெற்றி கூறுவோம்,
அல்லேலூயா!
ஸ்தோத்திரப்பாட்டுப் பாடுவோம்,
அல்லேலூயா!
யேசு தாழ்ந்துயர்ந்தாரே;
அல்லேலூயா!
வான ராஜா அவரே,
அல்லேலூயா!

3. பாடனுபவித்தவர்,
அல்லேலூயா!
ரட்சிப்புக்குக் காரணர்,
அல்லேலூயா!
விண்ணில் வேந்தன் ஆயினார்,
அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார்,
அல்லேலூயா!

**80. Victory** **8, 8, 8, (with Alleluia)**

**" The strife is o'er, the battle done"**

**அல்லேலூயா! அல்லேலூயா!**
அல்லேலூயா!
இப்போது போர் முடிந்தது,
சிறந்த வெற்றி ஆயிற்று;
ஜெய கெம்பீர நாள் இது
அல்லேலூயா!

2. யேசுவெம்சாவை மேற்கொண்டார்;
பாதாளச் சேனையை வென்றார்,
உயர்ந்த நாமம் அடைந்தார்,
அல்லேலூயா!

3. இந்நாள் எழுந்த வேந்தரே,
என்றைக்கும் அரசாள்வீரே;
களித்து ஆர்ப்பரிப்போமே,
அல்லேலூயா!

4. எல்லாரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த்திருக்கிறீர்;
சாகாத ஜீவன் அருள்வீர்,
அல்லேலூயா!

**81. Church triumphant,** **8, 8, 8, 8, 4**

**"Erschienen ist der herrlich Tag"**

**இந்நாளே க்றிஸ்து வெற்றியை**
அடைந்து, தம் பகைஞரை
சிறைப்பிடித்துக் கொண்டுபோம்
ஜெயநாள் என்று பாடுவோம்
அல்லேலூயா!

2. பிசாசு, பாவம், நரகம்
எக்கேடும் இன்றையத்தினம்
எழுந்த கிறிஸ்தின் காலுக்கு
கீழாய் வீழ்ந்து கெட்டது
அல்லேலூயா!

3. இந்நாளில் சீஷர் கர்த்தரின்
அற்புதக் காட்சி கண்டபின்
துக்கித்தவர்கள் நெஞ்சுக்கு
சந்தோஷப் பூரிப்பாயிற்று
அல்லேலூயா!

4. கர்த்தாவே, எங்கள் நீதிக்காய்
நீர் எழுந்தீர் கெம்பீரமாய்;
வெற்றி சிறந்த உமக்கே
மா ஸ்தோத்திரம் உண்டாகவே!
அல்லேலூயா!

**82. Regent Square,** **8, 7, 8, 7, 4, 7**

**"Lasset uns den Herren preisen"**

**சபையாரே, கூடிப் பாடி,**
கர்த்தரை நாம் போற்றுவோம்;
பூரிப்பாய் மகிழ் கொண்டாடி,
களிகூரக்கடவோம்.
யேசு க்றிஸ்து
சாவை வென்று எழுந்தார்

2. சிலுவையில் ஜீவன் விட்டு,
பின்பு கல்லறையிலே
தாழ்மையாக வைக்கப்பட்டு
மூன்றாம் நாள் எழுந்தாரே;
லோக மீட்பர்,
வெற்றி வேந்தர் ஆனாரே.

3. மீட்பரே, நீர் மாட்சியாக
ஜீவனோடெழுந்ததால்
நாங்கள் நீதிமான்களாக
கர்த்தர் முன்னே நிற்பதால்
என்றென்றைக்கும்
உமக்கே மா ஸ்தோத்திரம்!

4. சாவின் ஜெயம் ஜெயமல்ல,
தேகம் மண்ணாய்ப் போயினும்
எல்லாம் கீழ்ப்படுத்த வல்ல
கர்த்தர் அதை மீளவும்
ஜீவிப்பித்து
மறுரூப மாக்குவார்.

**83. St. Midred; Harts, Cyprus,** **7,**

**"Nun is tauferstanden"**

**தேவ மைந்தனானவர்,**
இயேசு என்னும் ரட்சகர்,
திவ்ய சத்துவத்தினால்
கல்லறையை விட்டதால்.

2. சாபம், துன்பம் யாவையும்
நீக்கி, சுகவாழ்வையும்
மாந்தர்க்கீந்து ரட்சித்தார்;
வெற்றி வேந்தர் ஆயினார்.

3. ஆதலால் இந்நன்மையை
ஈந்த, உங்கள் மீட்பரை
வாஞ்சையோடு நாடுங்கள்
ஏற்றுக்கொண்டு பாடுங்கள்.

4. யேசு உம்தன் ஆவியை
ஈந்து, திவ்ய ரட்சிப்பை
எங்குமுள்ள மாந்தரும்
காண நீர் கடாட்சியும்.

5. ஆண்டவர்க்கு ஸ்தோத்திரம்!
அல்லேலூயா! கீர்த்தனம்!
மீட்கப்பட்ட கூட்டத்தார்
என்றும் உம்மை வாழ்த்துவார்.

**84. Maidstone** **7, 8l,**

**"Mary to the Saviour's tomb"**

**வைகறை இருக்கையில்**
ஓடி வந்த மரியாள்
கல்லறையின் அருகில்
கண்ணீர் விட்டு அழுதாள்
“என்தன் நாதர் எங்கேயோ?
அவர் தேகம் இல்லையே!
கொண்டுபோனவர் யாரோ?”
என்று ஏங்கி நின்றாளே.

2. இவ்வாறேங்கி நிற்கையில்,
யேசு, “மரியாள்” என்றார்
துக்கங்கொண்ட நெஞ்சத்தில்
பூரிப்பை உண்டாக்கினார்
தேவ வாக்கு ஜீவனாம்,
தேவநேசம் மோட்சமே;
சுத்த சிந்தையோர் எல்லாம்
காட்சி பெற்று வாழ்வாரே.

**85. Wurtemberg: St. Albinus - Williston (381) 7, 7, 7, 7, 4.**

**"Hail the day that sees Him rise"**

**வாஞ்சைப்பட்ட யேசுவே,**
இந்தப் பூதலத்திலே
கொஞ்ச நாள்தான் தங்கினீர்;
மோட்ச வீட்டுக்கேகினீர்;
அல்லேலூயா!

2. வான ஆசனத்திலே
வீற்றிருந்து நித்தமே
போற்றப்படும் தேவரீர்
பூதலத்தை மறவீர்
அல்லேலூயா!

3. திருக்கரம் குவித்து,
திருக்காயம் காண்பித்து,
திருவாய் மலர்ந்து, நீர்
மாந்தர்க்காய் மன்றாடுவீர்
அல்லேலூயா!

4. மண்ணை விட்டுப் பிரிந்தும்,
வான லோகம் போயினும்,
எங்கள் ஜெபம் கேளுமேன்
எங்கள் நெஞ்சில் தங்குமேன்
அல்லேலூயா!

**86. Thanks giving: Church triumphant L.M.**

**"Nun freut euch, Gottes Kinder all"**

**மகிழ், கர்த்தாவின் மந்தையே;**
மகா, கெம்பீரத்துடனே
பரத்துக்குன் அதிபதி
எழுந்து போனதால் துதி.

2. விண்ணோர் குழாம் கெம்பீரமாய்
கொண்டாடி, மா வணக்கமாய்
பணிந்து, யேசு சுவாமிக்கு
புகழ் செலுத்துகின்றது.

3. ஆ, யேசு தேவ மைந்தனே,
கர்த்தா, பர்த்தா, முதல்வரே!
அடியார் நெஞ்சு உமக்கு
என்றைக்கும் சொந்தமானது.

4. விண்ணோரைப்போல் மண்ணோர்களே,
நம் ஆண்டவரை என்றுமே
அன்பாகக் கூடிப் பாடுங்கள்,
அவரின் மேன்மை கூறுங்கள்.

**87. Helmsley** **8, 7, 8, 7, 4, 7**

**"Lo! He comes with clouds..."**

**பாவிக்காய் மரித்த யேசு**
மேகமீதில் இறங்குவார்;
கோடி தூதர் அவரோடு
வந்து ஆரவாரிப்பார்;
அல்லேலூயா!
கர்த்தர் பூமி ஆளுவார்.

2. வெண்மையான ஆசனத்தில்
வீற்று வெளிப்படுவார்;
துன்புறுத்திச் சிலுவையில்
கொன்றோர் அவரைக்காண்பார்
திகிலோடே
அவர் சத்தத்தைக் கேட்பார்.

3. அவர் தேகம் பட்ட காயம்
அன்றும் காணப்படுமே;
பக்தர்கள் மகிழ்ச்சியாயும்
நோக்குவார்கள் அப்போதே;
அவர் காயம்
தரும் நித்ய ரட்சிப்பை.

4. உம்மை நித்ய ராஜனாக
யாரும் போற்றச் செய்திடும்;
ராஜரீகத்தை அன்பாக
ஏற்று ஆளும் என்றைக்கும்;
ஆ, கர்த்தாவே
சீக்கிரம் வந்தருளும்.

**88. Mannhein; Zion** **8, 7, 8, 7, 4, 7**

**"Heaven and earth shall pass away"**

**வானம் பூமி ஓடிப்போகும்**
மேகத்தின்மேல் வருவார்;
அவர் முன்பு லோகம் யாவும்
கூடி நிற்க அழைப்பார்.
மரித்தோரும்
ஜீவன் உற்றுக் கூடுவார்.

2. முன்பு ஏழையாக வந்து
முட்கிரீடம் தாங்கினோர்,
நொந்து மரத்தில் இறந்து
ஜீவனற்றுக் கிடந்தோர்
தாமே ரூபம்
மாறி விண்ணில் தோன்றுவார்.

3. நீதிமான்கள் பயமின்றி
ஆண்டவரை வாழ்த்துவார்;
அவரோடு வானில் ஏறி
என்றென்றைக்கும் வாழுவார்;
தீயோர் நாணி
சாபம் பெற்று அழிவார்.

4. யேசுவே, நீர் வரும் நாளில்
என்னை நினைத்தருளும்;
நீதிமான்கள் சேரும் வீட்டில்
நானும் சேர அழையும்;
ஆசீர்வாதம்
தந்து, என்னை ரட்சியும்.

**89. Burlington.** **12, 11, 12, 8.**

**"The Prince of Salvation in triumph is riding"**

**பூலோகத்தின் மீட்பர் சிங்காசனம் ஏறி,**
செங்கோலுஞ் செலுத்த மெய்யாய் வருவார்;
மெய்த் தாசர் இப்போது இச்செய்தியைக் கூறி,
பூவெங்கும் பிரஸ்தாபிக்கின்றார்.

2. தேசாதேசமாக அந்தந்த ஜனங்கள்
ராஜாக்களும் கூட பேரானந்தமாய்;
ஒரே கூட்டமாக வந்தாராதிப்பார்கள்
நன்மீட்பரை வணக்கமாய்.

3. பூலோகத்தார் யாரும் விண்ணோர்களைப் போலே
மாசற்ற சுத்தாங்கராய்த் தொண்டு செய்வார்;
சங்கீதங்கள் பாடி, மகா களிப்போடே
ஆனந்த கெம்பீரங் கொள்வார்.

4. பூலோகத்தின் மீட்பர் சிங்காசனம் ஏறி
செங்கோலுஞ் செலுத்த மெய்யாய் வருவார்;
விண்ணோரும் மண்ணோரும் சங்கீர்த்தனம் கூறி
முன்பின் சேனையாய்ப் பணிவார்.

**90. Sinai; Luther** **8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Es ist gewisslich an der Zeit"**

**மேன்மை நிறைந்த ஆண்டவர்,**
பூலோகத்தார் எல்லார்க்கும்
தகுந்த நீதி செய்பவர்
இறங்கும் நாள் உதிக்கும்;
அப்போது மா ப்ரஸ்தாபமாய்
எங்கும் விளங்கும் ஜோதியாய்
மின்போலத் தோன்றுவாரே.

2. இலக்கமற்ற தூதர்கள்
அவர்க்கு முன்னதாக
பலத்த சத்த தாரைகள்
உடையவர்களாக
முழக்கம் செய்ய, பூமியும்
விஸ்தாரமான வானமும்
கரைந்து வெந்து போகும்.

3. அத்தூதரின் எக்காளங்கள்
எத்திக்கிலும் முழங்கும்;
அந்நேரம் மாந்தர் கூட்டங்கள்
உயிரடைந்தெழும்பும்;
ஓர் பக்கத்தில் சன்மார்க்கரும்
ஓர் பக்கத்தில் துன்மார்க்கரும்
வணக்கமாய் நிற்பார்கள்.

4. சன்மார்க்கர் மோட்ச பாதையில்
நடந்ததால் மகிழ்ந்து
சிறப்படைந்து நிற்கையில்
துன்மார்க்கரோ அதிர்ந்து
நியாயமான சாபத்தை
அடைந்து, கர்த்தர் முகத்தை
விட்டோடி மாளுவார்கள்.

5. என் மனமே, துன்மார்க்கத்தை
வெறுத்துத் தள்ளிவிட்டு,
அன்புள்ள யேசுகிறிஸ்துவை
நம்பிக்கையாய்ப் பிடித்து,
கறையும் மாசுமின்றியே
கர்த்தர் முன்பாக நிற்கவே
நீ ஆவலோடு தேடு.

**91. Sleepers, Wake, awake - Herrnhut. Irregular**
**"Wachet auf ruft uns die stimme"**

**ஓய் எருசலேமியாரே,**
விழியுங்கள்; மெய் மார்க்கத்தாரே,
இப்பாதி ராத்திரியிலே
பத்தா வாறார்; வேகமாக
எழுந்திருங்கள்; புத்தியாக
இருக்கும் கன்னிகள் எங்கே?
தீவர்த்திகளையே
எடுத்தெதிர்கொண்டே
போம் நேரமாம்
என்றிரவில் அலங்கத்தில்
நிற்பாரின் கூக்குரல் உண்டாம்.

2. சீயோனாகிய மனைவி
சந்தோஷம் மனதில் பரவி
விழித்தெழுந்திருக்கிறாள்;
அவள்நேசர் மேன்மையோடும்
சிநேகத்தோடும் தயவோடும்
வெளிப்படுகிறதினால்
கிலேசம் நீங்கிற்று;
ஆ ஸ்வாமி உமக்கு ஓசியன்னா;
அடியாரும் கம்பீரிக்கும்
சுதிக்குச் செல்வோமே, கர்த்தர்.

3. சுரமண்டலங்களாலும்,
நரர் சுரர்கள் நாவினாலும்
துதிக்கப்பட்டோர், தேவரீர்,
மோட்ச லோகம் மா சிறப்பு
நீர் எங்களை வானோர்களுக்கு
ஒப்பானோராக மாற்றுவீர்;
அவ்வாழ்வைக் கண்டோர் ஆர்?
காதாலே கேட்டோர் ஆர்?
நாங்கள் மகா
சந்தோஷமும் மகிழ்ச்சியும்
அடைகிறோம்; அல்லேலூயா.

**92. Vulpius Havergal, - St. Giles.** **7s, 6s.**

**"How long, O Lord, our Saviour?"**

**கர்த்தாவே, எதுமட்டும்**
வராமல் இருப்பீர்?
மெய்ப் பக்தரின் ஆயாசம்
நீர் நன்றாய் அறிவீர்.

2. மா ஜோதி அருணோதயம்
என்னேரம் உதிக்கும்?
பேர் வாழ்வின் சுபதினம்
எப்போது விடியும்?

3. தாசர் அநேகர் தூங்கி
வீண் காலம் கழிப்பார்;
நீர் தோன்ற, சிலர் மட்டும்
காத் தெதிர்ப் பார்க்கிறார்.

4. வராமல் எதுமட்டும்,
மா மணவாளனே,
தாமதிப்பீர்? அநேகர்
நம்மால் போனாரே!

5. நல் மணவாட்டி தானும்
மெய்வாழ்வை மறந்தாள்;
தன் நாயகர் இல்லாமல்
சந்தோஷம் ஆகின்றாள்.

6. ஆ! தாசர் தங்கம் தூக்கம்
விட்டெழுந் தாவலாய்
நீர் வர எதிர்நோக்கி
நிற்கட்டும் விழிப்பாய்.

**93. Rousseau, Greenville** **8s, 7s, 6l.**

**"Saviour hasten Thine appearing"**

**வாரும், யேசுநாதா, வாரும்;**
பக்தர் காத்து நிற்கிறார்;
காடு போன்ற லோகில், பாரும்,
மோட்ச யாத்ரை செய்கிறார்;
உம்மை காண
ஆவல் கொண்டு செல்கின்றார்.

2. சர்வ சிஷ்டி ஏகமாக
காத்து தவிக்கின்றதே!
மீட்புதோன்ற ஆவலாக
எதிர் நோக்குகின்றதே;
நீர் வந்தாலோ
பூமி செழித்தோங்குமே.

3. லோகமெங்கும் துன்பப்பட்ட
யூதர் வந்து கூடுவார்,
காயமாகிக் குத்தப்பட்ட
திரு மேனி நோக்குவார்
குணம் மாறி
உம்தன் தொண்டராகுவார்.

4. வாரும் யேசுநாதா, வாரும்;
வானம் பூமி ஆளுவீர்;
உம்மை நம்பினோரெல்லாரும்
வாழ்வு காணச் செய்குவீர்;
பேரானந்தம்
தந்து பூரிப்பாக்குவீர்.

**94. Swabia, Day, Gorton** **S.M.**

**"Come, Lord, and tarry not"**

**நீர் வாரும், கர்த்தாவே;**
ராக் காலம் சென்று போம்;
மா அருணோதயம் காணவே
ஆனந்தம் ஆகுவோம்.

2. நீர் வாரும், பக்தர்கள்
களைத்துச் சோர்கின்றார்;
நல்லாவி மணவாட்டியும்,
"நீர் வாரும்" என்கிறார்.

3. நீர் வாரும், சிஷ்டியும்
தான் படும் துன்பத்தால்
ஏகோபித் தேங்கி ஆவலாய்
தவித்து நிற்பதால்

4. நீர் வாரும், ஆண்டவா;
மாற்றாரைச் சந்திப்பீர்,
இருப்புக்கோலால் தண்டித்து
கீழாக்கிப் போடுவீர்.

5. நீர் வாரும், யேசுவே;
பயிர் முதிர்ந்ததே,
உம் அரிவாளை நீட்டுமேன்,
மா நீதிபரரே.

6. நீர் வாரும் வையத்தில்
பேர் வாழ்வை நாட்டுவீர்;
பாழான பூமி முற்றிலும்
நீர் புதிதாக்குவீர்.

7. நீர் வாரும் ராஜாவே;
பூலோகம் ஆளுவீர்;
நீங்காத சமாதானத்தின்
செங்கோல் செலுத்துவீர்.

**95. Veni cito Peniel** **(384) LM 6l.**

**"Oh, quickly come, dread Judge..."**

**ஜகத்து நீதிபதியே,**
சந்தேகம், மருள் நீக்கிடும்;
மகத்வ உம்தன் காட்சியே
மெய்மை விளங்கச் செய்திடும்;
விரைந்து வாரும்; உம்முன்னே
மறையும் எந்தப் பொய்யுமே.

2. மன்னா மன்னா, வந்தாளுமே
மண்ணிலும் தாசர் நெஞ்சிலும்;
இன்னா இக்கட்டு நீங்கவே
இகத்தின் பாவம் மாய்ந்திடும்!
விரைந்து வாரும்; உம்முன்னே
மறையும் எந்தத் தீங்குமே.

3. எல்லா நரர்க்கும் ஜீவனே,
எவ்வீட்டிலும் பலத்தோடும்
பொல்லாத சாவு புகவே
பாடுற்றோர் அடியார்களும்;
விரைந்து வாரும், உம்முன்னே
மறைந்து நோவு சாவுமே.

4. மெய்யான எங்கள் ஜோதியே,
மங்குல எப்பாலும் மூடவும்,
அய்யா, உம்தன் வருகைக்கே
ஆசித்து நின்றோம் நாங்களும்;
விரைந்து வாரும், யேசுவே,
வந்தடியாரைத் தேற்றுமே.

**96. Praise Him** **12s, 10s, 8l.**

**"Praise Him, Praise Him, Jesus, Our blessed Redeemer"**

**போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!**
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்
பாரிலேயும் நாமசங்கீர்த்தனம் செய்ய,
மாந்தர் யாரும், வாரும் ஆனந்தமாய்;
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
யேசு நாதர் நம்மையும் தாங்குவார்,
போற்றும், போற்றும்! தெய்வ குமாரனைப் போற்றும்!
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.

2. போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்;
பாடுபட்டுப் ப்ராணத் தியாகமுமாகி
வானலோக வாசலைத் திறந்தார்;
மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும்! என்றும்!
வாழ்க, வாழ்க, ஜெகத்து ரட்சகா!
அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி!
வல்ல நாதா, கருணை நாயகா!

3. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்
போற்றும், போற்றும், மீட்பர் மகத்துவமாக!
ஆட்சி செய்வார் நித்திய காலமும்;
ஏக ராஜா, மாட்சிமையோடு வந்து,
யேசு ஸ்சுவாமி பூமியில் ஆளுமேன்
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.

**97. Miles Lane** **C.M.**

**"All Hail the power of Jesus's name"**

**எல்லாருக்கும் மா உன்ன**
கர்த்தாதி கர்த்தரே;
மெய்யான தெய்வ மனிதர்,
நீர் வாழ்க, யேசுவே!

2. விண்ணில் ப்ரதானியான நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்;
நீர் வாழ்க, யேசுவே!

3. பிசாசு, பாவம், உலகம்,
இச்சத்துருக்களே
அழிந்துபோக மிதியும்;
நீர் வாழ்க, இயேசுவே!

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே!
பரத்தில் செங்கோல் செலுத்தும்
நீர் வாழ்க, யேசுவே!

5. விண்ணோர்களோடு மண்ணுளோர்
என்றைக்கும் வாழ்கவே,
பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க, யேசுவே!

**98. Laud, London new** **(385)** **C.M.**

**"All Hail the power of Jesus's name"**

**இயேசுவின் இன்ப நாமத்தை**
எல்லாரும் போற்றுங்கள்,
விண்ணோர்கள் போல அவரை,
“நீர் வாழ்க!” என்னுங்கள்.

2. பிசாசினின்று மாந்தரை
மீட்டோரைப் போற்றுங்கள்,
ஒப்பற்ற நேசர் அவரை,
"நீர் வாழ்க!" என்னுங்கள்.

3. எல்லாரும் அருள்நாதரை
மகிழ்ந்து போற்றுங்கள்;
ஜீவாதிபதி அவரை,
"நீர் வாழ்க!" என்னுங்கள்.

4. நாம் விண்ணில் சேரும்பொழுது
ஓயாமல் போற்றுவோம்;
நம் மீட்பர் பாதம் பணிந்து;
"நீர் வாழ்க!" என்னுவோம்.

**99. Moscow, Fiat Lux,** **6, 6, 4, 6, 6, 4, 6.**

**The almighty King**

**ராஜாதி ராஜாவே,**
உம்மைத் துதிப்பதே
ஆனந்தமாய்;
தேவகுமாரன் நீர்
யாவையும் படைத்தீர்
எப்போதும் ஆளுவீர்
விண், மண் எல்லாம்.

2. அநாதி ஜோதியே,
கார் இருள் நீக்கவே
விளங்கினீர்;
நெஞ்சில் ப்ரகாசியும்,
மருளைப் போக்கிடும்
அன்பும் சந்தோஷமும்
தந்தருள்வீர்.

3. வல்ல சகாயரே
நீர் எங்கள் நெஞ்சிலே
தரித்திரும்;
சாத்தானின் சோதனை
எதிர்க்க வல்லமை
கொடுத்து எங்களைக்
காத்தருளும்.

4. அன்புள்ள யேசுவே,
பூரணமாகவே
ரட்சை செய்யும்;
இனிமேல் மோட்சத்தை
அடைந்து இன்பத்தைப்
பெறவே எங்களைக்
கடாட்சியும்.

**100. Laudate Dominum, Attole paulum (Elberfield) 8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Mein Herzens-Jesu, meine Lust"**

**பிரியமான இயேசுவே,**
என் நெஞ்சைத் தயவாக
நீர் பூரிப்பாக்கி என்னிலே
மிகுந்த நிறைவாக
தெய்வீக அன்பை ஊற்றியே
பேரருள் தந்த உம்மையே
நான் துதி செய்வேனாக.

2. என் நெஞ்சில் உம்மால் பற்றின
அன்பென்னும் தீ எரியும்;
என் மனதும்மால் உத்தம
மகிழ்ச்சியை அறியும்;
நான் உம்மை நோக்கும்போதெல்லாம்,
என் துக்கம் உம்மிலே உண்டாம்
அருளினால் தெளியும்.

3. நீர் என் வெளிச்சம்; உம்மால் நான்
திறந்த முகமாக
பிதாவின் இன்ப நெஞ்சைத்தான்
என் ஆறுதலுக்காக
கண்ணோக்கும்போது தயவாய்
நீர் என்னை நீங்கா ஜோதியாய்
ப்ரகாசிப்பிப்பீராக.

4. நீர் மோட்சத்துக்கு போம் வழி;
உனக்குள்ளான யாரும்
தப்பிப் போகார்; ஆ! இந்நெறி
விலகினோர் எல்லாரும்
கெட்டழிந்து போவார்களே;
வழியாம் ஸ்வாமி, உம்மிலே
நிலைக்க என்னைக் காரும்.

5. நீர் சத்தியம்; நான் உம்மையே
தெரிந்து கொண்டிருப்பேன்;
மாறாத மெய்ப் பொருள் நீரே!
வீண் மாய்கையை வெறுப்பேன்;
உம்மாலே பாக்கியம் வரும்
மெய்யே, என் நெஞ்சை என்றைக்கும்
நான் உமக்கே கொடுப்பேன்.

6. நீர் ஜீவன்; என்னை நீர் நீரே
பலத்தால் இடைகட்டும்;
திடன் இல்லா அந்நேரமே
என் நெஞ்சில் ஊக்கம் தாரும்;
தெய்வீக ஜீவன் என்னிலே
மென்மேலும் வளர்ந்தோங்கவே
நல்லாவியாலே காரும்.

**101. Sohren, Attole Paulum: (Elberfield)** **8, 7, 8, 7, 8, 8, 7**

**Second Part**

**நீர் ஜீவ அப்பம்; பஞ்சத்தில்**
உம்மால் என் பசி ஆறும்;
நான் போம் வனாந்தரங்களில்
என் உள்ளம் உம்மை நாடும்;
பிதாவின் ஈவாம் மன்னாவே,
நீர் என்னைப் பாவ இச்சைக்கே
விலக்கிக் காத்துக் கொள்ளும்.

2. நீர் ஜீவ ஊற்று, உம்மாலே
என் ஆத்ம தாகம் தீரும்;
நீர் தரும் ஈவு நித்தமே
திறக்கும் தண்ணீராகும்;
நீரூற்றாய் என்னில் ஊறுமேன்,
நிறைவாய் நித்தம் தாருமேன்
ஆரோக்கியமும் சீரும்.

3. நீர் என்னை ஜோடிக்கும் உடை,
நீர் என் அலங்கரிப்பு;
நாம் உம்முடைய நீதியை
அணிவதென் விருப்பு;
பூலோகத்தின் சிங்காரமாம்
விநோத சம்பிரமம் எல்லாம்
என் ஆவிக்கு வெறுப்பு.

4. நீர் நான் சுகித்து தங்கிற
அரமனையும் வீடும்;
புசல் அடித்தும் விருதா,
பேய் வீணாய் என்னைச் சீறும்;
நான் உம்மில் நிற்பேன், ஆகையால்
கெடேன்; பொல்லார் எழும்பினால்
நீர் என் வழக்கைத் தீரும்.

5. என் மேய்ப்பராய் இருக்கிறீர்
என் மேய்ச்சலும் நீர்தாமே;
காணாமல் போன என்னை நீர்
அன்பாக மீட்போராமே;
இவ்வேழை ஆட்டை என்றைக்கும்
நீர் பாதுகாத்துப் போஷியும்
நான் உம்முடையோனாமே.

6. நீரே நான் என்றும் வாஞ்சிக்கும்
மா நேசமுள்ள நாதர்,
நீரே என் ஆசாரியரும்
பலியுமான கர்த்தர்;
நீர் என்னை ஆளும் ராஜாவும்,
உம்மோடே எந்தப் போரிலும்
ஜெயிப்பேன், மா சமர்த்தர்.

**102. Baden, Attole Paulum: (Elberfield)** **8, 7, 8, 7, 8, 8, 7**

**Third Part**

**நீர் உத்தம சினேகிதர்,**
என் நெஞ்சும் மேலே சாயும்;
நீர் உத்தம சகோதரர்,
நீர் என்னைப் பார்க்கும் தாயும்,
நீர் நோயில் பரிகாரியே
உம்மாலே ஆறிப்போகுமே
என் காயமும் விடாயும்.

2. படையில் நீர் சேனாதிபதி,
வில் கேடயம் சீராவும்;
கருங் கடலில் நீர் வழி
காண்பிக்கும் சமுக்காவும்;
எழும்பும் கொந்தளிப்பிலே
நீர் என் நங்கூரம், யேசுவே
நான் ஒதுங்கும் குடாவும்.

3. நீர் ராவில் என் நட்சத்திரம்
இருளில் என் தீவர்த்தி;
குறைவில் நீர் என் பொக்கிஷம்,
தாழ்விலே என் உயர்த்தி,
கசப்பிலே என் மதுரம்;
நான் தொய்ந்தால் மீண்டும் என் மனம்
பலக்க நீர் என் சக்தி.

4. நீர் ஜீவனின் விருட்சமும்,
நீர் செல்வங்கள் பொழியும்
பூங்காவனமும், என்றைக்கும்
சுகம் தரும் கனியும்;
முள்ளுள்ள பள்ளத்தாக்கிலே
என் ஆவிக்கு நீர், ஏசுவே
குளிர்ந்த பூஞ்செடியும்.

5. நீர் துக்கத்தில் என் ஆறுதல்,
நீர் வாழ்வில் என் களிப்பு;
நீர் வேலையில் என் அலுவல்,
பகலில் என் சிந்திப்பு;
நீர் ராவில் என் அடைக்கலம்;
நீர் தூக்கத்தில் என் சொப்பனம்
விழிப்பில் என் குறிப்பு.

6. ஆ ஒப்பில்லாத அழகே!
நான் எத்தனை சொன்னாலும்
என் நாவினாலே கூடாதே;
நான் என்ன வாஞ்சித்தாலும்
அதெல்லாம் நீரே, யேசுவே
ஆ தயவுள்ள நேசரே,
நீர் என்றும் என்னை ஆளும்.

**103. Frankfort** **(388) 8, 8, 7, 8, 8, 7, 4, 12, 8.**

**"How bright appears the..."**

**மகா அருளின் ஜோதியை**
வீசும் மெய்ச்சுடர் எத்தனை
ப்ரகாசமாய் விளங்கும்!
தாவீதின் மைந்தன், யேசுவே,
நீர், நீர், என் நேச நாதனே,
என் பொக்கிஷம், என் பங்கும்;
முற்றும் சுற்றும்
தயவாலும் உண்மையாலும்
நீர் நிறைந்தோர்,
மேன்மை நாமமும் அடைந்தோர்.

2. என் முத்தே, என் கிரீடமே,
உம்மோடு, தேவ மைந்தனே,
நான் ஐக்யமாக வேண்டும்;
உயர்ந்த ராஜா, உமது
நற்சுவிசேஷம் எனக்கு
அமிர்தம் பாலும் தேனும்;
ஐயா, மெய்யா,
தேவ ரூபே, வாடாப் பூவே,
நீரே யாவும்
ஜீவ ஊற்றும் மெய் மன்னாவும்.

3. மகிழ்வேன், என் சிநேகிதர்
அல்பா ஒமேகா என்பவர்,
என் நேசர் ஆதி அந்தம்;
இனி மோட்சானந்தத்திலே
நான் அவரண்டை சேர்வேனே,
என் பாக்கியம் அநந்தம்;
ஆமென், ஆமென்!
வா, ரட்சிப்பே, வா, வெற்றியே,
உனக்காக
வாஞ்சை ஆனேன், சேர்வாயாக.

**104. Sleepers, Wake, awake - Hermhut** **Irregular**

**"Heiligster Jeus, Heil' gungs"**

**மாசில்லாமல் தூய்யதான**
பளிங்கிலேயும் தெளிவான
சுத்தாங்க ஊற்றே, யேசுவே
கேரூபீன்கள் துய்ய சீரின்
ப்ரகாசம் யாவும் தேவரீரின்
முன்பாக மங்கிப் போகுமே;
என் பாவத்தின் இருள்
மறைய நீர் அருள்
கடாட்சியும்,
ஆ, இயேசுவே, நான் உமக்கே
ஒப்பாய்ச் சுத்தாங்கமாகவும்.

2. மனசார, முற்றுமாக
பிதாவின் சித்தம் ஆவதாக,
என்றீர், அமர்ந்த இயேசுவே;
என் மனமும் தேவசித்தம்
என் நன்மை ஆகுமென்று நித்தம்
கீழ்ப்பட்டுத் தாழ்ந்து உம்மையே
பின்பற்ற தேவரீர்
சகாயம் பண்ணுவீர்,
என் நோவிலும்,
என் யேசுவே, நான் உமக்கே
ஒப்பாய் அமர்ந்திருக்கவும்.

3. ராப்பகல் உறக்கமற்று,
நல் மேய்ப்பராய்ப் ப்ரயாசப்பட்டு,
நன்றாய் விழித்தீர், யேசுவே,
நித்தம்; நித்தம் நீர் போதித்தீர்,
ஜெபத்தில் ராவிலும் தரித்தீர்,
மங்கா வெளிச்சக் கண்ணனே;
விழித்துக் கெஞ்சவே
நான் உம்மிடத்திலே
படிக்கட்டும்,
ஆ யேசுவே, நான் உமக்கே
ஒப்பாய் விழித்திருக்கவும்.

**105. Sleepers, Wake, awake - Hermhut** **Irregular**

**Second Part**

**நீர் நிறைந்த நேசமுள்ளோர்**
எல்லாரின் மேலும் தயவுள்ளோர்
மகா அன்புள்ள யேசுவே;
உம்மால் தீயோர் பேரிலேயும்
பகல் உதிக்கும், மாரி பெய்யும்,
பெரிய உபகாரியே;
ஆ, இந்த உமது
குணம் என் மனது அடையட்டும்,
என் யேசுவே, நான் உமக்கே
ஒப்பாய் அன்பாய் இருக்கவும்.

2. குற்றமின்றி க்ரோதமற்று
எல்லா இகழ்ச்சியையும் பட்டு
மன்னித்தீர், சாந்த யேசுவே;
தேவ வீட்டுக்காய் அல்லாமல்
நீர் வேறெரிச்சலைக் காட்டாமல்
இருந்தீர் ஆட்டுக்குட்டியே;
நான் அந்தப் பக்தியாய்
மிகுந்த சாதுவாய் இருக்கட்டும்;
ஆ, யேசுவே, நான் உமக்கே
ஒப்பாக சாந்தமாகவும்.

3. சுய மேன்மையைத் தேடாமல்,
ஓர் மேட்டிமையை காட்டாமல்
மா தாழ்மையானீர், யேசுவே,
வேலைக்காரன் போல் திரிந்தீர்,
எல்லாரிலும் நீரே பணிந்தீர்,
மகா பெரிய கர்த்தரே;
ஆ! என்னை உம்முட
அடிகளில் வர படிப்பியும்;
என் யேசுவே, நான் உமக்கே
ஒப்பாகத் தாழ்மையாகவும்.

**106. Olivet Moscow,** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**"Herr Jesu, ew'ges Licht"**

**கர்த்தாவாம் யேசுவே,**
அடியார் நெஞ்சிலே
சீர் அருளும்;
விடாத தயவாய்,
பூரண ஒளியாய்
விளங்கி உச்சமாய்
ப்ரகாசியும்.

2. பிதாவின் ஈவெல்லாம்
உம்மாலேயே உண்டாம்,
மா தேவனே;
தயவைக் காண்பிப்பீர்,
பாவத்தை நீக்குவீர்,
சுத்தாங்கம் பண்ணுவீர்,
ரட்சகரே.

3. அநாதி ஜோதியே,
பிதாவின் மைந்தனே
வணக்கமாய்
உம்மண்டை சேருவோம்,
என்றைக்கும் பற்றுவோம்,
அன்பாகச் சேவிப்போம்,
மெய்ப் பக்தியாய்.

**107. Raleigh. - Christ Church, Lenox** **(390) 6, 6, 6, 6, 8, 8.**

**"Zeuch meinen Geist triff meinee..."**

**பரத்தின் ஜோதியே,**
என்மேல் இறங்கிடும்,
ப்ரகாசத்துடனே
உள்ளத்தில் விளங்கும்;
நீர் ஜீவ ஜோதி, தேவரீர்
நற் கதிர் வீசக்கடவீர்.

2. நிறைந்த அருளால்
லௌகீக ஆசையை
அகற்றி, ஆவியால்
பேரின்ப வாஞ்சையை
வளர்த்து நித்தம் பலமாய்
வேரூன்றச் செய்யும் தயவாய்.

3. நீர் என்னை ஆளுகில்,
நான் வாழ்ந்து பூரிப்பேன்;
நீர் என்னை மறக்கில்,
நான் தாழ்ந்து மாளுவேன்;
என் ஊக்கம் ஜீவனும் நீரே,
கடாட்சம் செய்யும், கர்த்தரே.

4. தேவன்பும் தயவும்
உம்மாலேயே உண்டாம்;
நற் குணம் யாவுக்கும்
நீர் ஜீவ ஊற்றேயாம்;
நான் வாழும்படி என்றைக்கும்
என்னை நிரப்பி அருளும்.

**108. Hollingside** **7s, 8l.**

**"Jesus lover of my soul"**

**எந்தன் ஆத்ம நேசரே**
வெள்ளம்போன்ற துன்பத்தில்,
தாசன் திக்கில்லாமலே
தடுமாறிப் போகையில்
தஞ்சம் தந்து, யேசுவே
திவ்ய மார்பில் காருமேன்;
அப்பால் கரையேற்றியே
மோட்ச வீட்டில் சேருமேன்.

2. வல்ல தேவரீர் அல்லால்
வேறே தஞ்சம் அறியேன்;
கைவிடாமல் நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்,
நீரே என்தன் நம்பிக்கை;
நீர் சகாயம் செய்குவீர்;
ஏதுமற்ற ஏழையை
செட்டையாலே மூடுவீர்.

3. குறை யாவும் நீக்கிட,
நாதா, நீர் சம்பூரணர்,
திக்கற்றோரைத் தாங்கிட
நீரே மா தயாபரர்;
நான் அசுத்த பாவிதான்,
நீரோ தூயர் சுத்தரே;
நான் அநீதி கேடுள்ளோன்,
நீர் நிறைந்த நித்யரே.

4. பாவம் யாவும் மன்னிக்க
ஆரருள் அமைந்த நீர்
என்னைச் சுத்திகரிக்க
அருள் பாயச் செய்குவீர்,
ஜீவ ஊற்றாம் யேசுவே,
எந்தன் தாகம் தீருமேன்;
ஸ்வாமி, என்றும் என்னிலே
நீர் சுரந்து ஊறுமேன்.

**109. Readhed 76** **7s, 6l.**

**"Rock of Ages cleft for me"**

**பிளவுண்ட மலையே,**
புகலிடம் தாருமே;
பக்கம் பட்ட காயமும்,
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவ தோஷங்கள் யாவும்
போக்கும்படி அருளும்.

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
கஷ்டதவம் புரிந்தும்
பாவம் நீங்கமாட்டாதே,
நீரே மீட்பர், யேசுவே;
ஏதுமின்றி ஏழையேன்
உம்மில் தஞ்சம் புகுந்தேன்.

3. நிழல்போன்ற வாழ்வினில்,
கண்ணை மூடும் சாவினில்,
மறுமைக்குப் போகையில்,
நடுத்தீர்ப்புத் தினத்தில்
பிளவுண்ட மலையே,
புகலிடம் தாருமே.

**110. Wareham** **L.M.**

**"Herr Jesu Christ, zieh uns dir..."**

**ஆ! யேசுவே, "நான் பூமியில்**
உயர்த்தப்பட்டிருக்கையில்
எல்லாரையும் என் பக்கமே
இழுத்துக்கொள்வேன்", என்றீரே.

2. என் நெஞ்சை நீர் இழுக்கையில்
என் ஆசை கெட்ட லோகத்தில்
செல்லாமல் பாவத்தை விடும்,
சிறந்த நன்மைக்குட்படும்.

3. தராதலத்தில் உம்முடன்
உபத்ரவப்படாதவன்
உம்மோடு விண்ணில் வாழ்ந்திரான்
சகிப்பவன் சந்தோஷிப்பான்.

4. பிதாவின் வீட்டில் தேவரீர்,
இருப்பிடம் உண்டாக்கினீர்;
அங்கே வசிக்கும் பாக்கியர்
ஆபத்தும் நோவும் அற்றவர்.

**111. Greenland, - Ellacombe, Well** **7s, 6s, 8l.**

**"Wie Soll ich dieh empfangen"**

**உலகின் வாஞ்சையான**
என் ஸ்வாமி யேசுவே,
நான் உம்மை ஏற்றதான
வணக்கத்துடனே
சந்திக்கச் செய்வதென்ன?
நான் தேவரீருக்கு
செலுத்த உமக்கென்ன
பிரியமானது.

2. நான் யாதொரு கதியும்
இல்லாதவனுமாய்;
நிர்பந்தமும் பயமும்
நிறைந்தவனுமாய்
இருந்தபோதன்பாக
நீர் என்னை நோக்கினீர்,
நீரே என் மீட்புக்காக
இவ்வுலகில் வந்தீர்.

3. கட்டுண்டு நான் கிடந்தேன்,
என் கட்டை அவிழ்த்தீர்;
இகழ்ச்சியைச் சுமந்தேன்,
நீர் அதை நீக்கினீர்;
நீர் என்னை மேன்மையாக்கி
என் ஆத்துமத்திலே
இன்ப நிறைவுண்டாக்கி
ரட்சிக்க வந்தீரே.

4. வியாகுலம் அடைந்த
நரரின் கூட்டமே,
இக்கட்டினால் நிறைந்த
நிர்ப்பந்த மாந்தரே,
இதோ! சகாயர் வந்தார்;
கர்த்தர் கெட்டோருக்கு
இரட்சகரைத் தந்தார்
அதால், மகிழ்ந்திரு.

5. பொல்லாதவர்களுக்கு
மா ஆக்கினைகளும்,
நல்லோரின் கூட்டத்துக்கு
அனந்த பூரிப்பும்
முடிவிலே உண்டாக
அந்நாள் வருவாரே;
ஆம், எங்கள் மீட்புக்காக
நீர் வாரும் யேசுவே.

**112. Leipsic - Regent square** **8, 7, 8, 7, 4, 7**

**"Liebe, die du mich zum Bilde"**

**என்னை தேவ சாயலான**
சிஷ்டியாக்கி, பின்பு நான்
கெட்டபோதென் மீட்பரான
கர்த்தரே; நீர் நேசவான்;
என்னை என்றும்,
உம்மில் நிற்கச் செய்திடும்.

2. மானிடர்க்கு மெய்மையையும்
மார்க்கத்தையும் நித்திய
ஜீவனையும், மோட்சத்தையும்
ஈந்த மீட்பராகிய
நீரே என்றும்
என்னில் தங்கி ரட்சியும்.

3. எனக்காகப் பாடுபட்டு
நிந்தையுள்ளதாகிய
சாவால் பரமண்டலத்து
பாக்கியத்தைத் தேடின
யேசு ஸ்வாமி,
என்னைக் காத்திரட்சியும்.

**113. Passion Chorale 2** **7s, 6s, 8l.**

**"Schatz uber alle Schatze"**

**கதிக்கெல்லாம் மேலான**
கதியாம் யேசுவே;
ஒப்பற்ற நேசரான
பர்த்தாவே உமக்கே
என் நெஞ்சை வாஞ்சையாலே
ஒப்புக்கொடுக்கிறேன்;
நான் உமது நோவாலே
ஆரோக்யம் ஆனேன்.

2. ஆ! உமது குளிர்ந்த
முகத்தைக் காண்பியும்,
என் மனதில் மிகுந்த
அன்பாய் ப்ரகாசியும்;
நீர் என்னண்டை தரித்தால்,
வாழ்வேன், என் ஜீவனே;
நீர் அடியேனை விட்டால்
நிர்ப்பந்தன் ஆவேனே.

3. மண் மேன்மை, ஆஸ்தி யாவும்
குப்பை என்றெண்ணுவேன்
என் ஆவி உம்மைத்தாவும்,
பரத்தை நோக்குவேன்;
என் யேசுவே, நீர் தாமே
என் செல்வமானவர்;
உம்மால் மெய் வாழ்புண்டாமே,
மண் வாழ்வெல்லாம் பதர்.

4. என் பொழுதே, உதியும்;
ஆ! என்னை உம்மண்டை
அழைக்கத் தீவிரியும்;
நான் இந்த லோகத்தை
சந்தோஷமாக விட்டு
போவேன் என் ஜீவனே;
உம்மண்டையில் சுகித்து
இருப்பேன் கர்த்தரே.

**114. Haarlem Fatherland** **5, 5, 8, 8, 5, 5**

**"Seelen-Brautigam"**

**ஞான பர்த்தாவே**
பாவக் கேட்டிலே
சாகும் என்னைத் தப்புவித்து
சேர்த்த உம்மை நான் துதித்து
போற்ற ஏவுமே,
ஞான பர்த்தாவே.

2. அன்பின் ரூபம் நீர்;
துன்ப நாளிலே
பாவ மோசத்துக்குத் தப்ப
என்னை வன்மையால் நிரப்ப
வாரும் யேசுவே,
வல்ல கர்த்தரே.

4. உம்மைப் பற்றினேன்,
என்றைக்கும் விடேன்;
உம்மை விசுவாசத்தாலே
அண்டிக்கொண்டேன், ஆகையாலே
லோகத்தை நாடேன்
உம்மைப் பற்றினேன்.

**115. Faith, French (Dundee)** **C.M.**

**" Author of Selvation"**

**சிறையுற்றோரின் மீட்பரே,**
என் யேசுவே, நீர் தாம்
தயையால் என்னைத் தேற்றவே
மகா இரக்கமாம்.

2. ஆன்மாவைத் தாங்க வல்லவர்,
உதார வள்ளல் நீர்
ரட்சிப்புக் காதிகாரணர்;
பொல்லாங்கை நீக்குவீர்.

3. நான் சொந்த நீதி அற்றவன்;
என் நீதி கந்தைதான்;
உம்மால் நான் நீதியுள்ளவன்,
மிகுந்த பாக்யவான்.

4. சிறந்த இந்த நன்றியை
நான் என்றும் மறவேன்;
என் மீட்பர் என்ற நாமத்தை
எந்நாளும் போற்றுவேன்.

**116. Hazolwood, Moscow, Olivet** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**"My Master and my Lord"**

**என் கர்த்தர் யேசுவே,**
என் நெஞ்சை உமக்கே
ஒப்புவித்தேன்;
நீர் அதைத் தயவால்
சீராக்கி அன்பினால்
நிரம்பப் பண்ணினால்,
நான் வாழுவேன்.

2. என் மீட்பர், எஜமான்,
என் ஆண்டவர் நீர் தான்;
எந்நேரமும்
நான் உம்மை வாஞ்சையாய்
பின் பற்றித் தாழ்மையாய்
நடக்கத் தக்கதாய்
கடாட்சியும்.

3. யேசுவே, தயவை
மறந்தடி யேனை
தள்ளாதேயும்;
நீர் விட்ட கண்ணீரும்
இரத்த வேர்வையும்
மரணவாதையும்
நினைத்திடும்.

**117. Erfurt Wareham, Winchester.** **L.M.**

**"Vom Himmel hoch da Komm..."**

**கர்த்தாவே, ஏழைப் பாவியை**
நீர் கைவிடாமல் இத்தனை
தாழ்வாய் என்னண்டை வந்தது
அளவில்லாத தயவு.

2. மா இன்பமுள்ள யேசுவே,
மெய் ஆஸ்தியான உம்மையே
நான் பெற்றுவாழ என்றைக்கும்
என் நெஞ்சில் வாசமாயிரும்.

3. உள்ளத்தில் ஜோதி வீசுவீர்;
தேவன்பை நெஞ்சில் ஊற்றுவீர்,
அஜ்ஜோதி இருள் நீக்குமே.
அவ்வன்பு பயம் ஓட்டுமே.

4. அதால் நான் மனத்திடனாய்
இருந்து, மா சந்தோஷமாய்
இவ்வுலகத்தை வெறுப்பேன்,
கதியாம் உம்மைப் பற்றுவேன்.

**118. Benediction** **8, 7, 8, 7, 4, 7.**

**"Ermuntre dich, mein, schwacher"**

**ஆ கர்த்தாவே, தாழ்மையாக**
திருப் பாதத்தண்டையே
தெண்டனிட ஆவலாக
வந்தேன், நல்ல யேசுவே;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

2. வல்ல கர்த்தாவினுடைய
தூய ஆட்டுக்குட்டியே,
நீரே என்றும் என்னுடைய
ஞான மணவாளனே;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

3. என் பிரார்த்தனையைக் கேளும்,
அத்தியந்த பணிவாய்
கெஞ்சும் என்னை ஏற்றுக்கொள்ளும்
உம்முடைய பிள்ளையாய்;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

**119. St. Hubert Haarlem (391) 5, 5, 8, 8, 5, 5.**

**"Wer ist wohl wie du"**

**மகா ராஜாவே,**
தாழ்மையாகவே
தேவரீரையே பணிந்து,
உந்தன் திவ்ய வாக்கைக் கேட்டு
எந்தன் நெஞ்சிலே
வைப்பேன் யேசுவே.

2. இப்ரபஞ்சத்தை
நாடும் நெஞ்சத்தை
உம்மை நாடிப்பற்றச் செய்யும்;
நீர் என் ஆஸ்தி நீர் என் வாழ்வும்
லோக பாசமே
கேடுண்டாக்குமே.

3. என்னை முற்றிலும்
ஆட்கொண்டருளும்;
நேசத்தோடு பூரிப்பாக
உம்மைச் சார்ந்து கொள்வேனாக;
என்னை முற்றிலும்
ஆட்கொண்டருளும்.

**120. Dix 7s, 6l**

**"Liebster Jesu, liebstes Leben"**

**தேவ ஆட்டுக்குட்டியே,**
லோகத்தாரின் மீட்பரே,
உம்மால் மீட்கப்பட்ட நான்
தேவரீர்க்கு அடியான்;
நீர் என் கோட்டை, தஞ்சமாம்,
ஆர் என் வாழ்வை நீக்கலாம்?

2. தேவரீரின் ரட்சிப்பை
சாரும் விசுவாசியை
லோகம் மாம்சம் பாவமும்
மூர்க்கமாய் விரோதிக்கும்
சாத்தான் நித்தம் எதிர்ப்பான்
கண்ணி வைத்துச் சோதிப்பான்.

3. கர்த்தரே, என் உள்ளத்தில்
அருள் தந்தென் மனதில்
அந்தகாரம் நீங்கிட,
அன்பின் தீபம் ஸ்வாலிக்க
ஆவியின் நல் ஈவையும்
பூர்த்தியாக அளியும்.

4. எந்த நாழிகையிலே
நீர் வந்தாலும், யேசுவே
உம்மையே நான் சந்திக்க
கண்ணால் கண்டு களிக்க
நான் விழித்திருக்கவே
நித்தம் ஏவி வாருமே.

**121. Lubeck, St. Bees**

**"Stilles Lamm und Friedefurst"**

**தூய ஆட்டுக்குட்டியே,**
நீர் என் நெஞ்சின் வாஞ்சையே;
எப்போ தேழை அடியேன்
உமக் கேற்றவன் ஆவேன்?

2. நானும் மனத் தாழ்மையாய்
சாந்தமுள்ள சிந்தையாய்
என் உள்ளத்தை உமக்கே
படைப்பேன் என் கர்த்தரே.

3. வாதையான நோவிலும்
மரண இக்கட்டிலும்
உம்மை என்றும் பற்றவே
துணை செய்யும் மீட்பரே.

4. மோட்சத்தில் உம்மோடுதான்
மாசில்லாதோனாக நான்
என்றும் வாழச் செய்திடும்,
உம்மைப் போற்ற அருளும்.

**122. Stobel, Calvari - Olivet** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**"All, and in all"**

**நன்மைச் சொரூபியே,**
மோட்சத்தின் ஜோதியே,
ப்ரகாசியும்;
எட்டாத ரட்சிப்பை,
எண்ணா மகிமையை;
விடாத தயவை
அளித்திடும்.

2. பூலோக ரட்சகர்
சர்வ தயாபரர்
தேவரீரே;
சுத்தமும் ஜீவனும்
வாடாக் கிரீடமும்
பூரண மீட்சியும்
அருள்வீரே.

3. ஆதியும் அந்தமும்
நித்தியம் ஞானமும்
தேவரீரே;
நீரே என் வாஞ்சையும்
நீரே என் தஞ்சமும்
சமஸ்த நன்மையும்
ஆனவரே.

**123. St. Oswald, stuttgart** **8s, 7s.**

**"Victory through Christ"**

**எங்களுக்கு மீட்பராக**
தேவ மைந்தனான நீர்
பூமியில் மா ஏழையாக
மனுபுத்திரன் ஆனீர்.

2. ஆதி தந்தை மூலமாக
வந்த பாவ தோஷத்தை
நீர் சுமந்து, பலியாக
நீக்கினீர் என் பாரத்தை.

3. நாங்கள் உம்மைப்பற்றிக் கொண்டு
நற் போராட்டம் பண்ணியே
பாவம் லோகம் சாவை வென்று
மோட்சம் சேரச் செய்யுமே.

4. வெற்றிகொண்ட பக்தர் சபை
விண்ணோரோடு என்றைக்கும்
உம்தன் ஒப்பில்லாத அன்பை
போற்றிப் பாடித் துதிக்கும்.

**124. St. Peter, Serenity** **C.M.**

**"Jesus the name high over all"**

**பாதாளம், விண், மண் யாவிலும்**
மேலான யேசுவே,
உமக்கு பேய்க் கணங்களும்
நடுங்குவார்களே.

2. உமது நாமம் பாவிக்கு
ஜீவாமிர் தமாமே;
நான் சொஸ்தமாகும்படிக்கு
சஞ்சீவி அதுவே.

3. சிறையுற்றோரின் விலங்கை
தறித்துப் போடுவீர்;
பெலனற்றோர்க்குப் பெலத்தை
கொடுத்துத் தாங்குவீர்.

4. என் வாழ்வு தாழ்வு சாவிலும்
நான் உம்மைப் பற்றுவேன்;
உம்மால் உண்டான மீட்பையும்
கொண்டாடிப் போற்றுவேன்.

**125. Rockingham, Williams** **(392) L.M.**

**"O Jesu, du mein Brautigam"**

**என் பாவத்தின் நிவர்த்தியை**
உண்டாக்க, அன்பாய் ஜீவனை
கொடுத்து, சிலுவையிலே
மரித்த தெய்வ மைந்தனே.

2. எல்லாருக்கும் நீர் ரட்சகர்,
தவிப்புள்ளோர்க்கு தாரகர்;
மருந்து நீர், ஆ! என்னையும்
குணப்படுத்தி ரட்சியும்.

3. எனது தஞ்சம் ஆனீரே;
குணம் அளியும், யேசுவே;
அசுத்தமான யாவையும்
நிவிர்த்தியாக்கி அருளும்.

4. இருண்ட நெஞ்சில் ஒளியும்
மெஞ்ஞானம் விசுவாசமும்
கொடுத்தென் பாதை காட்டவே,
ப்ரகாசியும், விண் ஜோதியே!

5. நான் சாகும்போதென் ஆவியை
உம்மண்டை சேர்த்து மோட்சத்தை
அடையச் செய்யும், கர்த்தரே;
புகழ் உமக்குண்டாகவே!

**126. Fatherlan, Haarlem** **(393) 5, 5, 8, 8, 5, 5.**

**"Fountain of Blessing"**

**தேவ ஆவியே,**
பூர்வ நாளிலே
பல பாஷை பேசும் நாவும்
மேன்மையான வரம் யாவும்
உம்மால் வந்ததே
தேவ ஆவியே.

2. சத்ய ஆவியே
போதகர் நீரே;
மீட்பர் அருமையைக் காட்டி
அவர் சாயலாக மாற்றி
என்னை ஆளுமே,
சத்ய ஆவியே.

3. ஜீவ ஊற்று நீர்
என்னில் ஊறுவீர்
சுத்தமற்ற ஸ்பாவம் நீக்க,
ஆத்துமாவின் தாகம் தீர்க்க,
ஜீவ ஊற்று நீர்,
என்னில் ஊறுவீர்.

4. நேச ஆவியே,
என் தன் நெஞ்சிலே
ஐயம் நீங்க, இச்சை மாள,
தேவ சமாதானம் ஆள
வாசம் பண்ணுமே,
நேச ஆவியே.

**127. Oriel, Mannheim - Shephered, 8, 7, 8, 7, 4, 7.**
**"Komm, o komm, du Geist"**

**வாரும், தேவ ஆவி, வாரும்**
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக்குயிரைத் தாரும்,
வாரும் சுத்த ஆவியே!
ஞான தீபம்,
ஸ்வாமி, நீரே ஏற்றுமே!

2. எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி,
தேவ பக்தி தோன்றவே
அதை நீர் குணப்படுத்தி,
தப்பு சிந்தையாவுமே
மாற்ற வாரும்,
நல்ல தேவ ஆவியே!

3. மோட்ச மார்க்கத்தில் எதிர்த்து
நிற்கும் எவ்விரோதமும்
நீங்க எங்களைத் தற்காத்து
நல்லோராக்கி அருளும்,
கால் தள்ளாடி
போகில், தாங்கி நடத்தும்.

4. நெஞ்சு எங்களில் கலங்கி,
"நாயகனே இரட்சியும்,"
என்று கெஞ்சும் போதிரங்கி
ஆற்றித் தேற்றிக் கொண்டிரும்!
துன்பம் நீங்க
நீர் சகாயராய் இரும்.

**128. Wiltshire, Psalmody, - Nox Proecessit** **C.M.**

**"Spirit divine, attent our prayers"**

**தேவாவி, மனவாசராய்**
வந்தனல் மூட்டுவீர்;
உம் அடியாரின் உள்ளத்தில்
மா க்ரியை செய்குவீர்.

2. நீர் ஜோதிபோல் ப்ரகாசித்து
நிர்ப்பந்த ஸ்திதியும்
என் கேடும் காட்டி ஜீவனாம்
மெய்ப்பாதை காண்பியும்.

3. நீர் வான அக்னிபோலவே
துர் ஆசை சிந்தையும்
தீக்குணமும் சுட்டெரிப்பீர்
பொல்லாத செய்கையும்.

4. நற் பனிபோலும் இறங்கும்
இவ்வேற்ற நேரத்தில்;
செழிப்புண்டாகச் செய்திடும்
பாழான நிலத்தில்.

5. புறாவைப் போலச் சாந்தமாய்
நீர் செட்டை விரிப்பீர்;
மெய்ச் சமாதானம் ஆறுதல்
நற் சீரும் அருள்வீர்.

6. நீர் பெருங் காற்றைப்போலவும்
வந்தசைத் தருளும்,
கல் நெஞ்சை மாற்றி பேரன்பை
நன்குணரச் செய்யும்.

**129. Bristol, Ortonville St. Agnes (394) C.M.**

**"Eternal Spirit, by whose power"**

**தேவாவியே, நீர் அவிழ்ப்பீர்**
எப்பாவப் பாசமும்;
எல்லோரின் மேலும் ஊதுவீர்;
உயிர்ப்பித் தெழும்பும்.

2. மெய்வழி காட்டி, பயமும்
நீர் நீங்கச் செய்குவீர்;
கல் நெஞ்சில் அன்பு பொங்கவும்
வந்தனல் மூட்டுவீர்.

3. துன்புற்று ஏங்கி விழுந்தால்,
கை தூக்கித் தாங்குவீர்;
ப்ரசன்னமாகித் தேற்றலால்
சந்தேகம் நீக்குவீர்

4. இவ்வருள் வேதம் வாசிக்க
பேர் ஒளி வீசுவீர்;
கேட்போரின் நெஞ்சில் புதிய
சகாயம் பண்ணுவீர்.

5. வல்லாவியே, இக்கூட்டத்தை
நீர் சந்தித்தருளும்;
ஏராள அருள் மாரியை
இப்போதே பொழியும்.

**130. Frankfort.** **8, 8, 7, 8, 8, 7, 4, 12, 8.**

**"O heil ger Geist kchr bei uns ein"**

**கர்த்தாவின் சுத்த ஆவியே,**
நீர் எங்கள் ஆத்துமாவிலே
இறங்கி வாசம் பண்ணும்;
பரம ஜோதியாகிய
உம்மாலே நாங்கள் சீர்ப்பட
தெளிந்த நெஞ்சும் கண்ணும்
தந்து, வந்து
மெய் ஜெபத்தை, நற்குணத்தை
போதித்தீயும்;
மெய்ச் சந்தோஷத்தை அளியும்.

2. நீர் போதிக்கும் நல்வார்த்தையே
எப்போதும் எங்கள் நெஞ்சிலே
மெய்த் தீபமாவதாக,
பிதா, சுதன் இருவரால்
இறங்கும் உம்மையும் அதால்
த்ரியேக தெய்வமாக
நல்ல, வல்ல
கனிவோடும் பணிவோடும்
போற்றிப் பாடும்
வாக்கை எங்களுக்குத் தாரும்.

3. கற்போடு எங்கள் நாட்களை
கழிக்க எங்கள் ஆவியை
பலப்படுத்த வாரும்;
பொல்லாத ஆசை இச்சையை
விலக்கி, அது எங்களை
தீண்டாதபடி காரும்;
வான, ஞான
வாழ்வை நாடும் சீரைத்தாரும்,
மோட்சம் காட்டும்;
அதால் எங்கள் நெஞ்சை ஆற்றும்.

**131. Union Chapel - Warrington, Melcombe L.M.**
**"Komm, heiliger Geist, Here Gott"**

**இறங்கும், தேவ ஆவியே,**
அடியார் ஆத்துமத்திலே;
பரத்தின் நன்மையைக் கொடும்,
மிகுந்த அன்பை ஊற்றிடும்.

2. உம்மாலே தோன்றும் ஜோதியால்,
எத்தேசத்தாரையும் அன்பால்
சம்பந்தமாக்கி, யாவர்க்கும்
மெய் நம்பிக்கையை தந்திடும்.

3. பரத்தின் தூய தீபமே,
அன்புள்ள ரட்சகரையே
எல்லோரும் பற்றிக்கொள்ளவும்,
துதிக்கவும் செய்தருளும்.

4. களிப்பிலும் சலிப்பிலும்
பிழைப்பிலும் இறப்பிலும்
எப்போதும் ஊக்கமாகவே
இருக்கும்படி செய்யும், ஆவியே.

**132. Nox Proecissit. St. Stephen, St. Agnes C.M.**
**"Mein Gott, das Herz ich bringe dir"**

**நல் ஆவியே, நான் பாழ் நிலம்,**
இரக்கமாய் இரும்;
விண் மாரியால் என் ஆத்துமம்
செழிக்கச் செய்திடும்.

2. இருள் பகை விரோதமும்
உம்மாலே நீங்கவே
நற்புத்தி அன்பு சாந்தமும்
உண்டாக்கும் ஆவியே.

3. என் உள்ளத்தை இரக்கமாய்
சுத்திகரித்திடும்;
அதை என் மீட்பர் சாயலாய்
திருத்தி ஆண்டிடும்.

4. உமது ஜீவ மார்க்கத்தில்
உறுதியாகவும்
நடக்கப்பண்ணி, மோட்சத்தில்
நான் சேர அருளும்.

**133. Gounod. All Saints, Irby 8, 7, 8, 7, 7, 7.**

**"Gracious Spirit, dwell with me"**

**சுத்த ஆவி, என்னில் தங்கும்;**
நானும் சுத்தன் ஆகவே
பாவ அழுக்கெல்லாம் நீக்கும்;
உமதாலயமாகவே
என்னை நீர் சிங்காரியும்;
வாசம் பண்ணும் நித்தமும்.

2. சத்ய ஆவி, என்னில் தங்கும்;
நானும் சத்யன் ஆகவே
தேவ பக்தி என்னில் முற்றும்
வளர்ந்தேறச் செய்யுமே;
நீர் என்னில் ப்ரவேசியும்
ஆண்டுகொள்ளும் நித்தமும்.

3. நேச ஆவி, என்னில் தங்கும்,
நானும் நேசன் ஆகவே
துர்ச்சுபாவம் போகப்பண்ணும்;
அன்பில் நான் வேரூன்றவே
அன்பின் ஸ்வாலை எழுப்பும்,
மென்மேலும் வளர்த்திடும்.

4. வல்ல ஆவி, என்னில் தங்கும்;
நானும் வல்லோன் ஆகவே
சாத்தான் என்னைத் தூண்டிவிடும்
போது ஜெயங்கொள்ளவே
நீர் என் பக்கத்தில் இரும்
என்னைப் பலப்படுத்தும்.

5. நல்ல ஆவி, என்னில் தங்கும்;
நானும் நல்லோன் ஆகவே
பகை, மேட்டிமை, விரோதம்,
மற்றும் தீமை யாவுமே
என்னை விட்டகற்றுமேன்,
என்னைச் சீர்ப்படுத்துமேன்.

6. தெய்வ ஆவி, என்னில் தங்கும்
நானும் உம்மில் தங்கவே
மோட்ச பாதையில் நடத்தும்,
யேசுவின் முகத்தையே
தெளிவாகக் காண்பியும்;
என்னை முற்றும் ரட்சியும்.

**134. Farrant, Belmont** **C.M.**

**"O Holy Spirit Lord of grace"**

**தேவாவியே, இரக்கமாய்**
என்னில் ப்ரகாசியும்;
என் நெஞ்சின் இருளை அன்பாய்
விலக்கி ரட்சியும்.

2. என் மீட்பர் திவ்ய முகத்தை
அன்பாகத் காண்பியும்,
எனக்கு தேவ சித்தத்தை
உணர்த்தியருளும்.

3. துக்கம் நிறைந்த மனதை
சந்தோஷப்படுத்தும்;
நொறுக்கப்பட்ட உள்ளத்தை
சுகப்படுத்திடும்.

4. தேவாவியே, இரக்கமாய்
என் நெஞ்சை நிரப்பும்;
என்றைக்கும் என்னை மற்றுமாய்
ஆட்கொண்டு நடத்தும்.

**135. St. Fullbert** **C.M.**

**"Come, Holy Ghost our hearts..."**

**தேவாவியே வந்தெங்களை**
எழுப்பிக் கொண்டிரும்;
மெய்ப்பக்தி ஜீவன் பெலனை
ஈவாக அளியும்.

2. பரம ஜோதி, எங்களில்
இறங்கித் தங்கிடும்;
இருளை நீக்கி மனதில்
வெளிச்சம் தந்திடும்.

3. நீர் வீசும் அருள் ஜோதியாய்
கர்த்தாவை அறிவோம்;
தேவன்பின் ஆழம் காண்பதால்
அவ்வன்பில் மூழ்குவோம்.

**136. Harewood,** **6, 6, 6, 6, 8, 8.**

**"The earnest of the Spirit"**

**மா தேவ ஆவியே,**
என் நெஞ்சில் தங்கிடும்,
பேரின்ப வீட்டுக்கே
அச்சமாயிரும்;
அசுத்தம் நீக்கித் தயவாய்
நல் ஈவைத் தாரும் நிறைவாய்.

2. நீர் காட்டும் பாதையால்
பிதாவை அண்டுவேன்;
நீர் ஈயும் அருளால்
நான் வேண்டிக்கொள்ளுவேன்;
என் ரட்சிப்பை நீர் நேசமாய்
உறுதியாக்கும் நித்தமாய்.

3. இறங்கும் ஆவியே,
என் நெஞ்சைத் தேற்றிடும்;

என் வழி காட்டியே;
தப்பாமல் நடத்தும்;
மன்றாட்டைக் கேட்டு வாருமேன்;
என் நெஞ்சில் வாசஞ் செய்யுமேன்.

**137. Redhead 45** **7s.**

**"Breathe upon us"**

**காற்றுத்திசை நான்கிலும்**
நின்றுலர்ந்த எலும்பும்
ஜீவன் பெறச்செய்யுமே,
வல்ல தேவ ஆவியே.

2. ஈரமற்ற நெஞ்சத்தில்
பனிபோல் இந்நேரத்தில்
இறங்கும் நல்லாவியே;
புது ஜீவன் தாருமே.

3. சத்துவத்தின் ஆவியே
பேயை நித்தம் வெல்லவே
துணை செய்ய வாருமேன்,
போந்த சக்தி தாருமேன்.

4. ஞானம் பெலன் உணர்வும்
அறிவும் விவேகமும்
தேவ பக்தி பயமும்
ஏழும் தந்து தேற்றிடும்.

5. தந்தை மைந்தன் ஆவியே
எங்கள் பாவம் நீங்கவே
கிருபை கடாட்சியும்
சுத்தமாக்கியருளும்.

**138. St. George, Braden, Gorton** **S.M.**

**"Help us to pray"**

**ஜெபத்தின் ஆவலை**
என் நெஞ்சில் அருளும்;
தேவாவி, லோக நேசத்தை
என்னை விட்டகற்றும்.

2. பூலோக சிந்தையை
வெறுத்துத் தள்ளுவேன்
மேலான நித்ய இன்பத்தை
நான் தேட ஏவுமேன்.

3. எனக்குத் துணையாய்
என் பக்கத்தில் இரும்;
நான் நிலை நிற்கும்படியாய்
கிருபை அளியும்.

4. தேவன்பின் பாசத்தால்
கட்டுண்டு என்றைக்கும்
உம்மை என் முழு மனதால்
பின்பற்றச் செய்திடும்.

**139. Angels' Song. St. Crispin.** **L.M.**

**"Gott Vater sende deinen Geist"**

**பிதாவே உமதாவியை**
அன்பாய் அனுப்பி அவரை
அடியாருக்கு ஈந்திடும்
நற் சீரைத் தந்திரட்சியும்.

2. கெட்டோம் திரும்ப ரட்சித்தீர்;
விழுந்தோம், மீட்புண்டாக்கினீர்;
இம்மீட்பை நாங்கள் பற்றவும்
மெய் விசுவாசம் தந்திடும்.

3. துன்பத்தை இன்பமாக்குவீர்
இருளில் ஜோதி காண்பிப்பீர்,
மந்தாரம் மூடும் சாவிலே
அருளின் ஒளி வீசுமே.

**140. St. Cuthbert** **8, 6, 8, 4.**

**"Our blest Redeemer ere He..."**

**விண் ஏகுமுன் நல் வார்த்தையை**
நம்மீட்பர் மொழிந்தார்;
மா தூய தேற்றரவாளனை
வாக்களித்தார்.

2. அவ்வாறு வல்ல ஆவியே
சகாயராய் வந்தார்;
மெய்ப் பக்தர் நைந்த நெஞ்சிலே
சஞ்சரிப்பார்.

3. ஆகாத சிந்தை தோன்றினால்
மேலிடவே ஒட்டார்;
வீண் பயமும் மென் சொல்லினால்
அகற்றுவார்.

4. நற்குணம், செய்கை, விருப்பம்
மெய்ப் பக்தி யாவுமே
தேவாவியாலே மாத்திரம்
உண்டாகுமே.

5. மா தூய நேச ஆவியே,
தாசர்க் கிரங்குமேன்;
சுத்தாங்கம் தந்து நெஞ்சிலே
வந்தாளுமேன்.

**141. Canonbury, Dwight.** **L.M.**

**"Komm, Gott schopfer, heiliger..."**

**தேவாவியே, என் நெஞ்சை நீர்**
திருப்பிப் புதிதாக்குவீர்;
உம்மாலேயன்றி என்னிலே
ஓர் நன்மைதானும் இல்லையே.

2. உம்மால் கர்த்தாவை அறிவேன்
உம்மால் “பிதாவே” என்கிறேன்;
நீர் என்னைச் சத்தியத்திலே
முடியவும் தற்காப்பீரே.

3. என் பாதங்கள் யாவையும்
நீக்கி என் நெஞ்சைக் கழுவும்;
என் விசுவாசம் நேசமும்
மென்மேலும் வளரச் செய்யும்.

4. இவ்வருள் செய்யும் உமது
அளவிறந்த அன்புக்கு
இப்போதெப்போதும் உமக்கே
மா ஸ்தோத்திரம் உண்டாகவே.

**142. London New, Evan** **(397)** **C.M.**

**"How precious is the Book divine"**

**தேவாவியால் இரக்கமாய்**
உண்டான வேதமே
உயர்ந்த ஞானமுள்ளதாய்
அருளப்பட்டதே.

2. அதில் பிறந்த போதனை
விளக்கைப் போலவே
கதிக்குப் போகும் மார்க்கத்தை
விளக்கிக் காட்டுமே.

3. இருள் நிறைந்த பூமியில்
அதே நடத்துமே;
பரத்தை நோக்கிப் போகையில்
நட்சத்திரம்போல் ஆமே.

4. இவ்வருள் வேதம் தந்ததால்
கர்த்தாவே, உமக்கே
எந்நாளும் சர்வ சபையால்
புகழ் உண்டாகுமே.

**143. Fiat luk Moscow.** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**"Thou whose almighty word"**

**ஆதியில் இருளை**
அகற்றி ஒளியைப்
படைத்த நீர்
வேதம் பரம்பவும்
லோகத்தார் யாவரும்
அவ்வொளி காணவும்
அருள் செய்வீர்.

2. கருணை சத்தியம்,
தயவு இரக்கம்
நிறைந்த நீர்
பாவிக்கு ரட்சிப்பை,
பேதைக்கு ஞானத்தை,
எல்லார்க்கும் ஒளியை
கடாட்சிப்பீர்.

3. நித்திய ஆவியே
சத்திய புறாவே!
பூரணமாய்த்
தீமையை நீக்கவும்
நன்மையை நாட்டவும்
தாசரைத் தேற்றவும்
வாரும் அன்பாய்.

4. ஞானமும் பெலனும்
சர்வ ஆனந்தமும்
உள்ளவரே!
கடலைப்போலவும்
அறிவும் உண்மையும்
பரம்ப அருளும்
த்ரியேகரே.

**144. Erk, Sinai** **(398) 8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Wir Menschen sind zu dem, O Gott"**

**கர்த்தாவே, நாங்கள் நெஞ்சத்தில்**
மெய்ஞ் ஞானமற்ற மாந்தர்;
நீர் புத்தியைத் தராவிடில்,
எப்போதும் புத்தியீனர்;
உம்மால் உண்டான வேதமும்
நீர் ஈயும் தூய ஆவியும்
நற்பாதை காட்டவேண்டும்.

2. வேதத்துக்காக ஸ்தோத்திரம்
உமக்குண்டாவதாக!
தெய்வீக வார்த்தையைத் தினம்
எல்லாரும் பக்தியாக
ஆராய்ந்து பார்த்துச் சிந்தித்து
கைக்கொள்ள நீர் கடாட்சித்து
நல்லாவியை அளியும்.

3. பிதாவே எங்கும் உமது
நல் வார்த்தை செல்வதாக;
ஆ! யேசுவே, நீர் காட்டிய
வழியில் போவோமாக!
தேவாவி, எங்கள் உள்ளத்தில்
இறங்கி, வேதத்தால் அதில்
நற்சீர் அளிப்பீராக!

**145. St. James, Dalehurst, Haight** **C.M.**

**"Thou art the Way, by Thee..."**

**மெய் வழி நீரே, யேசுவே,**
நீர் பாவ நாசராம்
பிதாவிடத்தில் சேர்வதே
உமதிரக்கமாம்.

2. சத்தியம் நீரே, ஆகையால்
உம் வாக்கு ஞானமே,
என் நெஞ்சில் அதின் ஜோதியால்
வெளிச்சம் தோன்றுமே.

3. நீரே என் ஜீவன்; உம்மிலே
பிழைத் தசைகிறேன்;
உமக்கு ப்ரீயமாகவே
நடந்து கொள்ளுவேன்.

4. நீரே வழியும் சத்தியமும்
ஜீவனும் ஆனவர்;
உம்மையே நம்பும் யாவரும்
பிழைத்து வாழுவர்.

**146. Wiltshire, Serenity.** **C.M.**

**"Wherewith, O God, shall I draw..."**

**எவ்வண்ணமாக, கர்த்தரே**
உம்மை வணங்குவேன்?
தெய்வீக ஈவைப் பெறவே
ஈடென்ன தருவேன்?

2. அநேக காணிக்கைகளால்
உம் கோபம் மாறுமோ?
நான் புண்ய க்ரியை செய்வதால்
கடாட்சம் வைப்பீரோ?

3. பலியின் ரத்தம் வெள்ளமாய்
பாய்ந்தாலும், பாவத்தை
நிவிர்த்தி செய்து சுத்தமாய்
ரட்சிக்க மாட்டாதே.

4. நான் குற்றவாளி, ஆகையால்
என் பேரில் கோபமே
நிலைத்திருந்து சாபத்தால்
அழிதல் ஞாயமே.

5. ஆனால் என் பாவம் சுமந்து
ரட்சகர் மரித்தார்;
சாபத்தால் தலை குனிந்து
தம் ஆவியை விட்டார்.

6. இப்போதும் பரலோகத்தில்
வேண்டுதல் செய்கிறார்;
உம் திவ்ய சந்நிதானத்தில்
என்னை நினைக்கிறார்.

7. இவ்வண்ணமாக, கர்த்தரே,
உம்மை வணங்குவேன்;
என் நீதி இயேசு க்றிஸ்துவே,
அவரைப் பற்றினேன்.

**147. Hampstead, Morpeth Fatherland, (399) 5, 5, 8, 8, 5, 5.**

**"wer ist wohl wie du"**

**யேசு கிறிஸ்துவே,**
பூதலத்திலே
கெட்டுப்போனவர்க்கு ஞான
ஒளியும் உயிருமான
ரட்சகர் நீரே
இயேசு க்றிஸ்துவே.

2. என்னை மீட்க நீர்
ஜீவனை விட்டீர்;
குற்றம் யாவையும் தொலைக்க;
ஆக்கினை எல்லாம் விலக்க
எனக்காக நீர்
ஜீவனை விட்டீர்.

3. ஆஸ்தி ஜீவனும்
மற்ற யாவையும்
தேவரீருக்காய் வெறுக்க
ஆசை என்னிடத்திருக்க
என்னை முழுதும்
ரட்சித்தருளும்.

**148. Dettingen, Yoheleth. Erk. (400) 8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Es ist das Heil uns kommen her"**

**ரட்சிப்பு சுத்த தயவால்**
உண்டான தேவதத்தம்;
அது நாம் செய்த தர்மத்தால்
கிடைப்பது அபத்தம்;
பூலோகத்தின் கடன்களை
செலுத்தித் தீர்த்த யேசுவை
அண்ணாந்து பார்க்க வேண்டும்.

2. தெய்வீக கற்பனைகளை
நாம் கைக்கொள்ளாமல் விட்டு
துர் ஸ்பாவத்தாலே பாவத்தை
எப்போதும் நடப்பித்து
கர்த்தாவைக் கோபமூட்டினோம்,
நிர்ப்பந்தத்தைச் சம்பாதித்தோம்,
சீர்கேடு பெருகிற்று.

3. இப்போதோ யேசு க்றிஸ்துவால்
நாம் நீதிமான்களாயும்
தேவாவியின் நற் க்ரியையால்,
ஜென்மிக்கப்பட்டோராயும்,
மெய்த் தொண்டராயும் நடப்போம்
கர்த்தாவின் அன்பைக் கூறுவோம்
எந்நாளும் துதி செய்வோம்.

**149. Redhead, 143, St. Oswald** **8s, 7s.**

**"Ringe recht, wenn Gottes Gnade"**

**தெய்வ கிருபையைத் தேடி,**
பாவி, மனந் திரும்பு;
மீட்பர் தரும் ஈவை நாடி
தூக்கம் விட்டெழுந்திரு.

2. வாசலானதோ இடுக்கம்,
தாழ்மையாகி உட்படு;
ஜீவ வழியோ நெருக்கம்,
லோக நேசத்தை விடு.

3. மாம்சம் லோகம், ஆசாபாசம்,
பாவம் யாவும் அகற்றி
யேசுவில் மெய் விசுவாசம்
வைத்து உன்னை ஒப்புவி.

4. கர்த்தர் உன்னைத் தயவாக
ஏற்றுக்கொண்ட பிறகு
ஜெபத்தோடு விழிப்பாக
அவரில் நிலைத்திரு.

6. ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் இருப்பினும்
தேவ கரம் பலமாக
உன்னை காத்து நடத்தும்

**150. Ad inferos, St. Sylvester** **8s, 7s.**

"Gluck zu, Keruz, von ganzem..."

**வாழ்க, சிலுவையே வாழ்க!**
பாரமற்ற பாரமே,
உன்னை முழு மனதார
தோள் மேல் ஏற்றுக்கொள்வேனே.

2. இந்த நிந்தை லச்சை அல்ல,
இது வெட்கம் அல்லவே;
ஏனெனில் பொல்லாப்புக்கல்ல
நன்மைக்காக வருதே.

3. உலகத்தின் ஜோதியான
யேசு தாமும் நிந்தைக்கே
ஏதுவாகி, ஈனமான
சிலுவையில் மாண்டாரே.

4. சிலுவை சுமந்தோராக
அவரைப் பின்பற்றுவோம்;
தீரங் கொண்டு வீரராக
துன்பம், நிந்தை சகிப்போம்.

5. நேசர் தயவாய் நம்மோடு
சொல்லும் ஒரு வார்த்தையே
துக்கத்தை எல்லாம் கட்டோடு
நீங்கிப்போகச் செய்யுமே.

6. சாகும் போது, திறவுண்ட
வானத்தையும் அதிலே
மகிமையினால் சூழுண்ட
யேசுவையும் காண்போமே.

7. வாழ்க, சிலுவையே! வாழ்க,
மோட்சத்தின் முன் தூதனே,
நீதிமான்கள் இளைப்பாற
நேர் வழியாம் வாசலே!

**151. St. Bees.** **7s.**

**"Hark! my soul, it is the Lord"**

**பாவி கேள்! உன் ஆண்டவர்,**
அறையுண்ட ரக்ஷகர்
கேட்கிறார், "என் மகனே,
அன்புண்டோ என் பேரிலே?"

2. "நீக்கினேன் உன் குற்றத்தை,
கட்டினேன் உன் காயத்தை,
தேடிப்பார்த்து ரக்ஷித்தேன்,
ஒளி வீசப் பண்ணினேன்."

3. "தாயின் மிக்க பாசமும்,
ஆபத்தாலே குன்றினும்
குன்ற மாட்டாதென்றுமே
ஒப்பில்லா என் நேசமே."

4. "என தன்பின் பெருக்கும்,
ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாது, பார்;
என்னைப் போன்ற நேசனார்?"

5. "திவ்ய ரூபம் தரிப்பாய்,
என்னோடர சாளுவாய்;
ஆதலால் சொல் மகனே,
அன்புண்டோ என் பேரிலே?"

6. யேசுவே, என் பக்தியும்
அன்பும் சொற்பமாயினும்
உம்மையே நான் பற்றினேன்
அன்பின் ஸ்வாலை ஏற்றுமேன்

**152. Cyprus, St. Bees.** **(46)** **7s.**

**"Sinners turn, why wil ye die?"**

**பாவி கேள்! ஏன் கெடுவாய்?**
கர்த்தர் தாம் இரக்கமாய்
கேட்டுக் கொண்டு நிற்கிறார்,
மோட்ச செல்வம் தருவார்.

2. உன்னைச் சிஷ்டி செய்தவர்
காத்துக் கொண்டு வந்தவர்,
தந்தைபோல நேசமாய்
ஏற்றுக்கொள்வார் தயவாய்.

3. உன்னை ஆவியானவர்
காயம் சுத்தஞ் செய்பவர்;
விசுவாசத்தோடுபார்,
இப்போதுன்னை ரட்சிப்பார்.

**153. Ramoth, Maidstone, Blumenthal 7s, 8l.**

"Sinners turn, why will ye die?"

**உங்களைப் படைத்தவர்,**
சருவ தயாபரர்;
தம்மில் வாழ்ந்து ஜீவிக்க,
என்றும் தம்மோடிருக்க
ஆசைப்பட்டோர் உங்களைப்
பார்த்து, "என் சிநேகத்தை
தள்ளிவிட்டு நிற்பதார்?
திரும்புங்கள்", என்கிறார்.

2. உங்களை ரட்சித்தவர்
தெய்வ சுதனானவர்;
திரு ரத்தம் சிந்தினார்,
சிலுவையில் மரித்தார்;
"நீங்கள் வீணில் சாவதேன்
செத்து உங்களை மீட்டேன்"
என்று கூறி நிற்கிறார்,
"திரும்புங்கள்," என்கிறார்.

3. உங்களை நேசிப்பவர்,
தூய ஆவியானவர்;
நயம் பயம் காட்டினார்,
குணப்பட ஏவினார்;
"தயை பெற வாரீரோ,
மீட்பைத் தேடமாட்டீரோ!"
என்றிரங்கிக் கேட்கிறார்,
"திரும்புங்கள்," என்கிறார்.

**154. St. Edmund; Feast** **6, 4, 6, 4, 6, 6, 6, 4.**

**"Come, for the feast is spread"**

**விருந்தைச் சேருமேன்,**
அழைக்கிறார்;
ஆகாரம் பாருமேன்,
போஷிப்பிப்பார்;
தாகத்தைத் தீர்க்கவும்
யேசுவின் மார்பிலும்
சாய்ந்திளைப்பாறவும்
வா, பாவி, வா.

2. ஊற்றண்டை சேரவும்,
ஜீவனுண்டாம்;
பாடும் விசாரமும்
நீங்கும் எல்லாம்;
நம்பி வந்தோருக்கு
திர்ப்தி உண்டாயிற்று;
ஜீவாற்றின் அண்டைக்கு
வா, பாவி, வா.

3. மீட்பரின் பாதமும்
சேராவிடில்,
தோல்வியே நேரிடும்
போராட்டத்தில்;
யேசுவே வல்லவர்,
யேசுவே நல்லவர்,
யேசுவே ஆண்டவர்;
வா, பாவி, வா.

4. மோட்சத்தின் பாதையில்
முன் செல்லுவாய்;
சிற்றின்ப வாழ்வினில்
ஏன் உழல்வாய்?
வாடாத க்ரீடமும்
ஆனந்தக் களிப்பும்
பேர் வாழ்வும் பெறவும்
வா, பாவி, வா.

5. சேருவேன், யேசுவே
ஏற்றுக்கொள்வீர்;
பாவமும் அறவே
சுத்தம் செய்வீர்;
அப்பாலே மோட்சத்தில்
ஆனந்தக் கடலில்
மூழ்கிப் பேரின்பத்தில்
கெம்பீரிப்பேன்.

**155. Breslau, St. Crispin** **L.M.**

"Listen to His voice"

**கெட்டோரே, தேவன் சொல்வதை**
அல்லத்தட்டாமல் அவரை
இப்போதே தேடிக்கொள்ளுமேன்
பேரன்பை நம்பி வாருமேன்.

2. இப்போது மனஸ்தாபமாய்
திரும்பி வந்தால், தயவாய்
பிதா அணைத்துக் கொள்ளுவார்,
குமாரன் மூலம் மன்னிப்பார்.

3. தேவாவி உங்கள் மனதை
இளக்கி, மீட்பர் ரத்தத்தை
கொண்டேசுந்தாங்கம் செய்குவார்
நிறைவாய் ஆசீர்வதிப்பார்.

4. பிதா குமாரன் ஆவியே
இவ்வாறு ரட்சை செய்யவே
மரித்தோர் ஜீவன் அடைந்தார்;
என்று தூதாக்கள் பாடுவார்.

**156. Stephanos, Cairnbrook** **8, 5, 8, 3.**

" Art thoug weary, art thou languid"

**துக்க பாரத்தால் இளைத்து**
நொந்து போனாயோ?
யேசு உன்னைத் தேற்றிக்கொள்வார்
வாராயோ?

2. “அன்பின் ரூப காரமாக
என்ன காண்பித்தார்?”
“அவர் பாதம் கை விலாவில்
காயம் பார்.”

3. “அவர் சிரசதின் கிரீடம்
செய்த தெதனால்?”
“ரத்தினம் பொன்னாலுமல்ல
முள்ளினால்.”

4. “கண்டுபிடித் தண்டினாலும்
துன்பம் வருமோ!”
“கஷ்டம், துக்கம், கண்ணீர்யாவும்
இம்மையே.”

5. “அவரைப் பின்பற்றி னோர்க்கு
துன்பம் மாறுமோ?”
“சாவின் கூரும் மாறிப்போகும்,
போதாதோ?”

6. “பாவியெனை ஏற்றுக்கொள்ள
மாட்டேன் என்பாரோ!”
“விண், மண் ஒழிந்தாலும் உன்னை
தள்ளாரே!”

7. “போரில் வெற்றி சிறந்தோர்க்கு
கதியா ஈவார்?”
“தூதர், தீர்க்கர், தூயர், யாரும்
ஆம், என்பார்.”

**157. Ratisbon** **7s, 6l.**

**"From the Cross uplifted high"**

**சிலுவை மரத்திலே**
யேசுவை நான் நோக்கவே
என்னைப் பார்த்தழைக்கிறார்;
காயங்காட்டிச் சொல்கின்றார்;
“மீட்பின் செய்கை ஆயிற்றே,
வாழ வாவேன், பாவியே!”

2. "பாவப் பலியானதால்
குத்தப்பட்டேன் ஈட்டியால்;
ரத்தம் பூசப்பட்டு நீ
எனக்குன்னை ஒப்புவி;
மீட்பின் செய்கை ஆயிற்றே
வாழ வாவேன், பாவியே."

3. "பான போஜனம் நானே,
விருந்துண்டு வாழ்வாயே;
பிதாவண்டை சேரலாம்,
நேசபிள்ளை ஆகலாம்;
மீட்பின் செய்கை ஆயிற்றே,
வாழ வாவேன், பாவியே."

4. "சீக்கிரத்தில் வருவேன்,
உன்னைச் சேர்ந்து வாழ்விப்பேன்,
நித்யானந்தம் மோட்சத்தில்
உண்டு, வா என்னண்டையில்,
மீட்பின் செய்கை ஆயிற்றே,
வாழ வாவேன், பாவியே."

**158. Misercordia, Troyte 1.** **8, 8, 8, 6.**

**"Just as I am without one plea"**

**நான் பாவிதான், – ஆனாலும் நீர்**
மாசற்ற ரத்தம் சிந்தினீர்;
வா, என்று என்னைக் கூப்பிட்டீர்;
என் மீட்பரே, வந்தேன்.

2. நான் பாவிதான், – என் நெஞ்சிலே
கறை பிடித்திருக்குதே;
என் கறை நீங்க, இப்போதே,
என் மீட்பரே, வந்தேன்.

3. நான் பாவிதான், – பயத்தினால்
அலைந்து, பாவ பாரத்தால்
அழிந்து மாண்டு போவதால்,
என் மீட்பரே, வந்தேன்.

4. நான் பாவிதான், – மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சமும்
உம்மாலே பெற்று வாழவும்,
என் மீட்பரே, வந்தேன்.

5. நான் பாவிதான், – இரங்குவீர்,
அணைத்துக் காத்து ரட்சிப்பீர்,
அருளாம் செல்வம் அளிப்பீர்;
என் மீட்பரே, வந்தேன்.

6. நான் பாவிதான், – அன்பாக நீர்
நீங்காத் தடைகள் நீக்கினீர்,
உமக்குச் சொந்தம் ஆக்கினீர்,
என் மீட்பரே, வந்தேன்.

**159. Vater Unser, St. Chrysostom - Stella, St. Mathias.** **8s, 6l.**

"Ich armer Mensch, ich armer..."

**நிர்ப்பந்தமான பாவியாய்**
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலக்கமாய்
நடுங்கிவந்தேன், கர்த்தரே;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக்கேட்கிறேன்.

2. ஆ! என் குரூர பாவத்தால்
மிகுந்த துக்கம் அடைந்தேன்;
ஆ ஸ்வாமி, துயரத்தினால்
நிறைந்த ஏழை அடியேன்,
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக்கேட்கிறேன்.

3. என் குற்றத்துக்குத் தக்கதாய்
செய்யாமல் தயவாய் இரும்;
பிதாவே, என்னைப் பிள்ளையாய்
இரங்கி நோக்கி அருளும்;
இரங்குமேன், இரங்குமேன்
என்றும்மைக் கெஞ்சிக்கேட்கிறேன்.

4. என் நெஞ்சின் திகில் தணித்து
என் மேல் இரங்கி ரட்சியும்;
திவ்ய சந்தோஷம் அளித்து,
எப்போதும் கூடவே இரும்;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக்கேட்கிறேன்.

**160. St. Bernard, Belmont** **C.M.**

"Ach, Gott und Herr"

**மிகுந்த பாவச் சேற்றிலே**
அமிழ்ந்தவன் ஆனேன்;
விஸ்தார பூதலத்திலே
சகாயத்தைக் காணேன்.

2. மா தூரமாய் எத்திக்கிலும்
போனாலும், இன்னுமே
என் தோஷம் ஆராலாகிலும்
நீங்காமல் நிற்குமே.

3. தள்ளுண்ணவே நான் பாத்திரன்;
கெட்டேன் என் பாவத்தால்;
நீரோ மகா தயாபரன்
நிறைந்தோர் அன்பினால்.

4. ஆ! யேசுவே, என் இக்கட்டில்
சகாயராய் இரும்;
தெய்வீக அன்பை நெஞ்சத்தில்
அளித்து ரட்சியும்.

**161. Seelen-Brautigam, Morpeth - Fatherland:** **5, 5, 8, 8, 5, 5.**

"Wo soll ich fliehen hin"

**எங்கே ஓடுவேன்?**
பாதகன் ஆனேன்;
தீமை எங்கும் என்னை மூடும்,
ஆதரிக்க ஆரால் கூடும்?
எங்கே ஓடுவேன்?
பாதகன் ஆனேன்.

2. யேசு ஸ்வாமி, நீர்
என்னைக் கூப்பிட்டீர்
ஆதலால் உம்மண்டை வந்து
அன்புடன் உம்மைப் பணிந்து
நிற்கிறேன்; ஆ! நீர்
என்னைக் கூப்பிட்டீர்.

3. பாவத்தால் உண்டாம்
துன்பமே எல்லாம்
உம்மால் தீர நீர் மரித்தீர்,
மாசில்லாத ரத்தம் விட்டீர்
இவ்விதமாய் நீர்
என்னை ரட்சித்தீர்.

4. குற்றம் தீயது;
அதிலும் அது
நீர் அடைந்த சாவினாலே
நீங்கிப் போயிற்றாதலாலே
ஏழைப் பாவியேன்
நீதிமானானேன்.

**162. Realms of Glory, Bithynia - Alleluia dulce carmen** **8, 7, 8, 7, 4, 7.**

"Jeus, Kraft der bloden Herzen"

**பெலவீனரின் பெலனும்**
துக்க பாரம் சுமந்த
பாவ மாந்தர் நம்பிச் சாரும்
கன்மலையுமாகிய
யேசு நாதா
என்னைப் பெலப்படுத்தும்.

2. என் இதயம் ஜன்ம பாவம்
ஊறும் ஊற்றேயானது;
என்னுடைய முழு ஸ்பாவம்
தீமையால் நிறைந்தது;
பாவத்தோடு,
ஐயோ, நான் பிறந்தேனே!

3. உம்முடைய ரத்தத்தாலே
குற்றம் நீக்கி ரட்சியும்;
என்னை உம்தன் ஆவியாலே
சுத்தமாக்கி அருளும்;
ஆ கர்த்தாவே!
ஆற்றித் தேற்றி ரட்சியும்.

4. என்னுடைய நெஞ்சில் வந்து
தங்கும், என் சகாயரே;
துக்கத்தை அதால் மறந்து,
வெற்றிக்கொண்டு வாழ்வேனே;
பூரிப்போடு
உம்மைப் பாடிப்போற்றுவேன்.

**163. Belmont, Old melody,** **C.M.**

**"There is a fountain filled..."**

**இம்மானுவேலின் இரத்தத்தால்**
நிறைந்த ஊற்றுண்டே;
எப்பாவத் தீங்கும் அதனால்
நிவிர்த்தியாகுமே

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்;
மன்னிப்பும் மோக்ஷாநந்தமும்
அடைந்து பூரித்தான்.

3. அவ்வாறு நானும் யேசுவால்
விமோசனம் பெற்றேன்;
என் பாவம் நீங்கிப்போனதால்
ஓயாமல் பாடுவேன்.

4. காயத்தில் ஓடும் ரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்;
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் ப்ரஸ்தாபிப்பேன்

5. விண் வீட்டில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்;
என்தனை மீட்ட நேசத்தைக்
கொண்டாடிப் போற்றுவேன்.

**164. Aberystwyth, Refuge** **7s, 8l.**

**"Saviour, when in dust to Thee"**

**நாங்கள் பாவப் பாரத்தால்**
கஸ்திப்பட்டுச் சோருங்கால்
தாழ்மையாக உம்மையே
நோக்கி, கண்ணீருடனே
ஊக்கத்தோடு வாஞ்சையாய்
கெஞ்சும் போது தயவாய்
சிந்தை வைத்து யேசுவே,
எங்கள் வேண்டல் கேளுமே.

2. மாந்தனாய்ப் நீர் பிறந்ததும்,
ஏழையாய் வளர்ந்ததும்,
பசிதாகம் கொண்டதும்
சாத்தானை நீர் வென்றதும்
மோக்ஷம் விட்ட விந்தையும்
லோகம் மீட்ட நேசமும்
நீர் நினைத்து யேசுவே,
எங்கள் வேண்டல் கேளுமே.

3. காவில் பட்ட கஸ்தியும்
ரத்தஞ் சொரி வேர்வையும்
முட் க்ரீடம், நிந்தனை,
ஆணி, ஈட்டி, வேதனை
உம்தன் ஐந்து காயமும்,
சாவின் நோவும், வாதையும்
நீர் நினைத்து, யேசுவே,
எங்கள் வேண்டல் கேளுமே.

5. ப்ரேதச் சேமம், கல்லறை
காத்த காவல், முத்திரை,
சாவை வென்ற சத்துவம்,
பரமேறும் அற்புதம்,
நம்பினோர்க்கு ரட்சிப்பை
ஈயும் அன்பின் வல்லமை
சிந்தை வைத்து, யேசுவே,
எங்கள் வேண்டல் கேளுமே.

**165. Potsdam, St. Michael - Badea (402) S.M.**

**"Ist, Gott fur mich, so trete"**

**என் நீதி ஏசுவே;**
அவர் இல்லாவிட்டால்,
பிதாவுக்கு முன்பாகவே
நான் கேட்டேன் பாவத்தால்.

2. என் சாவு யேசுவால்
விழுங்கப்பட்டது;
அவர் காருண்ணியத்தினால்
என் பாவம் நீங்கிற்று.

3. எப்போதும் வாழுவேன்;
நியாயத் தீர்ப்புக்கும்
பயப்படாதவன் ஆவேன்;
என் ஆவி பூரிக்கும்.

**166. Weber, Heinlein - Depth of Merch (403) 7s.**

**"Depth of Mercy"**

**தேவனே நான் எத்தனை**
பாவ பாதங்களை
செய்துவந்தேன் என்று நீர்
நன்றாய்த் தூண்டிக் காட்டுவீர்.

2. ஐயோ! பாவ தோஷத்தால்
கெட்டுப்போனேன், ஆதலால்
நித்தம் வாடி நோகிறேன்,
துக்கத்தால் திகைக்கிறேன்.

3. நெஞ்சு என்னைக் குத்தவும்
துன்பம் துயர் மிஞ்சவும்
ஆவியும் கலங்கிற்றே,
கண்ணீர் பாய்ந்து ஓடிற்றே.

4. வெட்கம் கொண்ட அடியேன்
துக்கமுள்ளோனாய் வந்தேன்;
ஸ்வாமி, என்னைச் சாலவும்
தேற்றி மன்னித்தருளும்.

**167. Sharon, Dorrnance** **8s, 7s.**

**" Ach, was sind wir ohne Jesu"**

**யேசுவே, உம்மையல்லாமல்**
நாங்கள் மா நிர்ப்பாக்கியர்;
எந்த நன்மையுமில்லாமல்
கெட்டுப்போன மானிடர்.

2. நாங்கள் பாவ இருளாலே
அந்தகாரப்பட்டவர்;
சர்ப்பத்தின் விஷத்தினாலே
தாங்கா நோய் பிடித்தவர்.

3. இந்தக் கெட்டலோகம் எங்கும்
பாவக் ண்ணி மிகுதி;
தேவரீராலன்றி யாரும்
தப்பி வாழ்வதெப்படி?

4. யேசுவே, பலத்தைத் தந்து
அந்தகாரம் அகற்றும்
ஞானக்கண்ணைத் தெளிவித்து
எங்கள் மேல் ப்ரகாசியும்.

**168. Elberfield** **(404)** **8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Herr Jesu Christ du hochstes Gut"**

**அருளின் ஊற்றாம் யேசுவே**
வியாகுலமும் பாடும்
அடைந்த என்தன் நெஞ்சிலே,
உண்டான நோவைப் பாரும்;
என் பாவங்கள் அகோரமே
அநேக அம்புபோலவே
என் மனதை வதைக்கும்.

2. மரத்தில் தொங்கி வாதையாய்
நீர் பட்ட நோவைப்பாரும்;
என் நோவை நீக்கி தயவாய்
ரட்சிப்பளிக்க வாரும்
மா துக்கத்தாலே வாடிய
என் ஆத்துமாவினுடைய
நிர்ப்பந்தத்தை விலக்கும்

3. இப்போதும் நொந்திருக்கிற
என் மனசாட்சியாலே
வதைத்த நான் நீர் சிந்தின
தெய்வீக ரத்தத்தாலே
மன்னிப்படைய ஆவலாய்
உம்மண்டை வந்து தாழ்மையாய்
மன்றாடி நிற்கிறேனே.

4. பலத்த ஜீவ ஆவியால்
இவ்வேழையைக் காப்பாற்றும்;
நீர் பாடுபட்டு மாண்டதால்
என் சாவில் என்னை ஆற்றும்;
என் நெஞ்சில் விசுவாசத்தை
முடிய காத்தடியேனை
உம்மண்டை சேர்த்துக் கொள்ளும்.

**169. Eisenach, Leipsic,** **L.M.**

"Schaff in mir, Gott, ein reines"

**நான் வாஞ்சையாய் என் மனதை**
உயரப் பண்ணி, பாவத்தை
வெறுக்கச் சுத்த நெஞ்சை நீர்
என்னில் சிருஷ்டிக்கக்கடவீர்.

2. மனக் கலக்கம் அற்றோனாய்
நான் உமக்கேற்ற பக்தியாய்
நடக்க என்னை நித்தமும்
நீர் செம்மை ஆக்கியருளும்.

3. இச்சையின் மோசம் என்னிலே
செய்த பொல்லாப்பைக்கண்டீரே;
என் நெஞ்சு துயரப்படும்,
ஆ! கோபமாய் இராதேயும்.

4. கர்த்தாவே உமதாவியை,
கொடுத்து எனதுள்ளத்தை
ப்ரகாசிப்பித்து, யாவையும்
மன்னித் திரக்கமாய் இரும்.

**170. Maitland Attolle Paulum (Elberfield)** **8, 7, 8, 7, 8, 8, 7.**

"Aus tiefer Noth Schrei ich zu dir"

**தாழ்விலிருந்து கூப்பிடும்**
என் சத்தம் கேட்டன்பாக
நான் செய்கிற மன்றாட்டுக்கும்
செவி கொடுப்பீராக;
கர்த்தாவே, நரர் பாவத்தை
நீர் மன்னியாமல், நீதியை
பார்த்தால், யார் நிற்கக்கூடும்?

2. மன்னிப்பை மாந்தன் எவனும்
தன் புண்ணியங்களாலே
அடையான்; உம்மை பாவியும்
தாழ்வான மனதாலே
தேடி நம்பிக்கையுடனே
வந்தால், மா தயவாகவே
மன்னிக்கிறீர், கர்த்தாவே.

3. என் மீட்பர் பேரில் சாவேன்
என் புண்ணியம் அபத்தம்;
தேவன்பையே நான் நம்புவேன்
அதற்கு வாக்குத்தத்தம்
மெய்யான வேத வார்த்தையில்
உண்டென்பதே என் மனதில்
நன்றாய்ப் பதிப்பீராக.

**171. Brbylon's Streams, Holley (406) L.M.**

**"Erbarm dich mein, O Herre Gott"**

**ஆ! உமது மா தயையால்**
என் மேல் இரங்கும், கர்த்தரே;
என் பாவ பாதங்களால்
மனம் கலங்ககின்றதே.

2. நான் செய்த பாவம் உமக்கே
விரோதம் என்றழுகிறேன்;
நீர் தண்டித்தல் நியாயமே,
என்றாலும் மன்னிப்பீயுமே.

3. நான் ஜென்மத்தால் அடைந்த சீர்
எல்லாப் பொல்லாங்கும் பாவமும்;
நல் உண்மையை விரும்பும் நீர்
சுத்தாங்கத்தை தந்தருளும்.

4. என் பாவக் குஷ்ட ரோகத்தை
அகற்றி என்னைக் கழுவும்,
நொறுக்கப்பட்ட ஆவியை
திரும்பவும் உயிர்ப்பியும்.

**172. Lugano, Deerhurst** **8s, 7s, 8l.**

**"Liebster Jesu, in den Tagen"**

**ஆ! இவ்வேழைக்கு இரங்கும்,**
ஆத்ம பரிகாரியே;
என்னைப் பாரும், என்னில் எங்கும்
நோவும் ரோகமும் உண்டே;
பாவக் குஷ்டம் முற்றும் நீங்க
கையை நீட்டித் தொடுமேன்;
சருவாங்க சொஸ்தமாக
நீர் கடாட்சம் செய்யுமேன்.

2. உம்முடைய வஸ்திரத்தின்
ஓரம் தொடவே வந்தேன்;
சொஸ்தம் ஈயும் தேவரீரின்
சத்துவத்தை நம்பினேன்;
அச்சம் நீக்கும் திவ்ய வாக்கை
அன்பால் பொங்கிச் சொன்னீரே
ஆ! கர்த்தாவே, நல்ல சீரை
அனுக்கிரகம் செய்யுமே.

3. ஏழைப்பாவி செய்த ஜெபம்
கேட்டுப் பாவம் போக்கினீர்;
சுத்தமாக்கி உம் சமீபம்
என்னைச் சேர்த்து அணைத்தீர்;
அதால் பயபக்தியாக
ஸ்தோத்திரஞ் செலுத்துவேன்,
உம்மையே புகழ்ச்சியாக
வாழ்த்தல் சொல்லி ஏத்துவேன்.

**173. St. Andrew - St. Oswald, Trust** **8s, 72.**

**"Blessed Jesus, loving Saviour"**

**வல்ல யேசு கிறிஸ்து நாதா,**
நல்ல நேச மீட்பர் நீர்;
பற்று, பாசம் கட்டு முற்றும்
அற்றுப்போகப் பண்ணுவீர்.

2. அருள் ஜோதி தோன்றிடாமல்,
இருள் மூடிக் கிடந்தோம்;
திக்கில்லாமல் பாவப் பற்றில்
சிக்கிக் கொண்டே இருந்தோம்.

3. பக்தி ஒன்றுமில்லை, பாரும்
சக்தியற்றுப் போயினோம்;
ஜீவ பாதை சென்றிடாமல்
பாவ பாதை நடந்தோம்.

4. யேசு நாதரே, இப்போது
நேசமாக நிற்கிறீர்;
“என்னை நம்பு, பாவம் நீக்கி
உன்னைக் காப்பேன்” என்கிறீர்.

5. நம்பி வந்து, பாவ நாசா,
உந்தன் பாதம் அண்டினோம்;
தூய ரத்தம் பாயக் கண்டு,
தீய செய்கை வெறுத்தோம்.

6. பாவச் சேற்றில் விழாமல்
தேவரீரே காத்திடும்;
வல்ல ஆவியாலே என்றும்
வெல்லச் செய்து ரட்சியும்.

**174. Vox dilecti** **D.C.M.**

**"I heard the voice of Jesus say"**

**"வா, பாவி, இளைப்பாற வா,**
என் திவ்ய மார்பிலே
நீ சாய்ந்து சுகி," என்பதாய்
நல் மீட்பர் கூறவே,
இளைத்துப்போன நீசனாய்
வந்தாறித் தேறினேன்;
என் பாரம் நீங்கி, யேசுவால்
சந்தோஷமாயினேன்.

2. "வா, பாவி, தாகந்தீர்க்க வா,
தாராளமாகவே
நான் ஜீவ தண்ணீர் தருவேன்,"
என்றார் என் நாதரே;
அவ்வாறு ஜீவ ஊற்றிலே
நான் பானம் பண்ணினேன்;
என் தாகம் தீர்ந்து பலமும்
பேர் வாழ்வும் அடைந்தேன்.

3. "வா, பாவி, இருள் நீங்க வா;
நான் லோக ஜோதியே,
உன் நெஞ்சில் ஒளி வீசுவேன்,"
என்றார் என் நேசரே;
மெய்ஞான அருணோதயம்
அவ்வாறு நான் கண்டேன்;
அஜ்ஜோதியில் சந்தோஷமாய்
நான் என்றும் ஜீவிப்பேன்.

**175. Pastor, Shepherd.** **8s, 7s, 6l.**

**"Saviour like a shepherd lead us"**

**ரட்சா பெருமானே, பாரும்**
புண்ய பாதம் அண்டினோம்;
சுத்தமாக்கி சீரைத் தாரும்,
தேடிவந்து நிற்கிறோம்!
யேசு நாதா, யேசு நாதா,
உம்தன் சொந்தமாயினோம்.

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்;
ஜீவ தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்;
யேசு நாதா, யேசு நாதா,
மேய்ச்சல் காட்டிப்போஷிப்பீர்.

3. நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்;
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்!
யேசு நாதா, யேசு நாதா,
ஒருபோதும் கைவிடிர்.

4. ஜீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்;
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச்செய்குவீர்;
இயேசு நாதா, இயேசு நாதா,
ஊழி காலம் வாழ்விப்பீர்.

**176. Supplication, St. Magnus - Teleman's Chant** **7s.**

**"Now begin the heavenly theme"**

**மீட்கப்பட்ட கூட்டமே,**
உங்கள் மீட்பர் பேரிலே
பாடி, வாழ்த்தல் செய்யுங்கள்
மீட்பின் அன்பைச் சொல்லுங்கள்.

2. தேவனாம் பிதா தயை
யேசுவால் உண்டானதை
பார்த்துப் போற்றிப் பாடுங்கள்,
மீட்பையே உயர்த்துங்கள்.

3. நீடுகாலம் உங்களை
கேடு செய்த ஆசையை
தள்ளுதற்கு மைந்தனார்,
மீட்பையே உண்டாக்கினார்.

4. ஆதலால் மகிழ்வோடே
போற்றிப்பாட மாந்தரே,
தூதரோடும் கூடுங்கள்
மீட்பையே உயர்த்துங்கள்.

**177. Olivet** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**"My faith looks upto Thee"**

**அருள் நிறைந்தவர்,**
பூரண ரட்சகர்
தேவரீரே;
ஜெபத்தைக் கேட்கவும்
பாவத்தை நீக்கவும்
பரத்தில் சேர்க்கவும்
வல்லவரே.

2. சோரும் என் நெஞ்சுக்கு
பேரருள் பொழிந்து
பெலன் கொடும்,
ஆ! எனக்காகவே
மரித்தீர், யேசுவே;
என் அன்பின் ஸ்வாலையே
ஓங்கச் செய்யும்.

3. பூமியில் துக்கமும்
சஞ்சலம் கஸ்தியும்
வருகினும்,
இரவில் ஒளியும்
சலிப்பில் களிப்பும்
துன்பத்தில் இன்பமும்
அளித்திடும்.

4. மரிக்கும் காலத்தில்
கலக்கம் நேரிடில்,
சகாயரே,
என்னைக் கைதூக்கவும்
ஆறுதல் செய்யவும்
மோட்சத்தில் சேர்க்கவும்
வருவீரே.

**178. Horbury, Propior, - Deo, Bethany.** **6, 4, 6, 4, 6, 6, 4.**

"Nearer, my God, to Thee"

**உம்மண்டை, தேவனே,**
நான் சேரட்டும்;
சிலுவை சுமந்து
நடப்பினும்,
என் ஆவல் என்றுமே
உம்மண்டை, தேவனே,
நான் சேர்வதே.

2. தாசன் யாக்கோபைப்போல்,
ராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின் மேல்
நான் துயில்கையில்,
என்தன் கனாவிலே
உம்மண்டை தேவனே,
இருப்பேனே.

3. நீர் என்னை நடத்தும்
பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிபோல்
விளங்குமாம்;
தூதர் அழைப்பாரே
உம்மண்டை, தேவனே,
நான் சேரவே.

4. விழித்து உம்மையே
நான் துதிப்பேன்;
என் துயர்க் கல்லை உம்
வீடாக்குவேன்;
என் துன்பத்தாலுமே
உம்மண்டை, தேவனே,
நான் சேர்வேனே.

**179. Sawley, Watch** **C.M.**

**"As helpless as a child who clings"**

**தந்தை தன் சிறு மைந்தனை**
கையேந்தித் தாங்குவான்;
சீராட்டப் பெற்ற பாலகன்
அபாயம் நினையான்.

2. அவ்வாறே என்னை, பிதாவே,
காப்பாற்றித் தாங்குவீர்;
என் பலவீனம் நீங்கவும்
கையேந்தி வருவீர்.

3. மாதாவின் நேச மடியில்
சாய்ந்தாடும் குழந்தை
தாயாரின் முகம் பார்க்கையில்
மறக்கும் க்லேசத்தை.

4. அவ்வாறே, நேச ரக்ஷகா
உம்அருள் முகத்தை
நான் பார்க்க, ஸ்திரமாக்குவீர்
என் விசுவாசத்தை.

5. தாய்தந்தைப் பக்கம் பாலரை
உட்கார வைக்குங்கால்,
சந்தோஷித்துள்ளங் களிப்பார்
பெற்றோரின் அன்பினால்.

6. அவ்வாறே திருப்பாதத்தில்
ஆனந்தம் அடைந்தேன்;
மென் மேலும் அருள் நாதரே
பேரன்பை ருசிப்பேன்.

**180. Ibstone, Sigillus. - Dolomite Chant.** **6s.**

"Thy why not mine, O Lord"

**மயங்கும் தாசனை**
தேவா, நீர் நடத்தும்;
என் பாதை; காட்டியாய்
சகாயம் புரியும்.

2. நீர் காட்டும் பாதைதான்
எப்போதும் நல்லதே;
சுற்று, நேர் ஆயினும்
விண் வீடு சேர்க்குமே.

3. கபோதி நான் ஐயா,
முன் நிற்பதறியேன்;
நீர் என்னை நடத்தும்
நான் பின்னே செல்லுவேன்.

4. உம் சித்தம்போல நீர்
என் பாத்ரம் எடுத்தும்
சந்தோஷம், சஞ்சலம்,
ஏதேனும் நிரப்பும்.

5. வியாதி, சுகமோ?
இஷ்டர், பகைஞரோ?
வறுமை, செல்வமோ?
சிறிதோ, பெரிதோ?

6. என் பங்கேதாயினும்,
என் இஷ்டம் எதிலும்
வேண்டாம், என் தேவனே,
நீர் ஆண்டு நடத்தும்.

அட்டவணை

**181. St. Raphael.** **(197)** **8, 7, 8, 7, 4, 7.**

**"Eins is noth: ach Herr, dies Eine"**

**ஒன்றே தேவையென்று சொன்னீர்**
நாதா, அதை நாடுவேன்;
அன்பாய் என்னை நீர் அழைத்தீர்;
பாவம் முற்றும் வெறுப்பேன்;
மாய லோகம்
தழுவாமல் ஜீவிப்பேன்.

2. நன்மை சிஷ்டிகளிடத்தில்
தேடினாலும், கிட்டாதே;
யேசு ஸ்வாமி உம்மிடத்தில்
வாழ்வெல்லாம் கிடைக்குமே
அதைத் தாரும்,
நேசமுள்ள மீட்பரே.

3. இந்த நன்மை மரியாளே
வேண்டுமென்று வாஞ்சையாய்
தேடித் தெரிந்து கொண்டாளே;
உம்மிடத்தில் சாந்தமாய்
கேட்ட நன்மை
பெற்றுக் கொண்டாள் பூரிப்பாய்.

4. நானும் முழு வாஞ்சையோடும்
உம்மையே, என் யேசுவே,
அண்டிக்கொண்டேன்; நீர் என்னோடும்
ஐக்யமாகும், கர்த்தரே;
உம்மைப் பற்றும்
விசுவாசம் ஈயுமே.

**182. All for Jesus, St. Oswald, - Dorrance.** **8s, 7s.**

**"Gott wills machen, dass die Sachen"**

**சேதம்அற யாவும் வர,**
கர்த்தர் தாம் நடத்துவார்;
காற்றடித்தும், கொந்தளித்தும்,
யேசுவை நீ பற்றப் பார்.

2. “யேசு பாரார், அவர் காரார்,
அவர் கேளார்”. என்னாதே;
கலங்காதே, தவிக்காதே,
நம்பினோனை விடாரே.

3. கண் மூடாத உறங்காத
உன் கர்த்தாவைப் பற்றி நீ
அவர் தாமே காப்பாராமே
என்று அவரைப் பணி.

4. உன் விசாரம் மா விஸ்தாரம்
ஆகிலும் கர்த்தாவுக்கு
நீ கீழ்ப்பட்டு, க்லேசமற்று
அவருக்குக் காத்திரு.

5. தேவ கைக்கும் வல்லமைக்கும்
சகலமும் கூடாதோ?
எந்தச் சிக்கும் எந்தப் பிக்கும்
அவரால் அறும் அல்லோ?

6. சீரில்லாத உன் ஆகாத
மனதுன்னை ஆள்வது
நல்லதல்ல; அதற்கல்ல,
கர்த்தருக்குக் கீழ்ப்படு.

7. நேச யேசு தேவரீர்க்கு
சித்தமான யாவையும்
நீர் குறித்து, நீர் கற்பித்து,
நீர் நடத்தி அருளும்.

**183. Salvator Mundi. - Calvary, Olivet, 6, 6, 4, 6, 6, 6, 4.**

**"Our victorious Leader"**

**விண்ணோரின் வேந்தரே;**
மண்ணோரின் மீட்பரே,
மா தேவரீர்,
கேட்டில் என் ரட்சிப்பாய்,
தாழ்வில் என் ஜீவனாய்
விளங்குவீர்.

2. என் பாவத் தீட்டை நீர்
கழுவி நீக்கினீர்,
நல் மீட்பரே;
என் சாபம் தோஷமும்
என் பாவ குஷ்டமும்
நீர் முற்றும் அகற்றும்
அன்பாகவே.

3. பிசாசு பலத்தை
காண்பித்துப் பயத்தை
அகோரமாய்
என்னில் உண்டாக்கினும்,
சகாயராயிரும்;
சாத்தானை அகற்றும்,
மா தயவாய்.

4. நீர் யேசு, ஆகையால்
இம்மேன்மை நாமத்தால்
நான் வெல்லுவேன்;
நீர் ஜோதியானதால்
உம்தன் ப்ரகாசத்தால்
நேர் பாதை செல்வதால்
சந்தோஷிப்பேன்.

**184. Austria** **8s, 7s, 8.**

**"Christ on the sea"**

**கடல் கொந்தளித்துப் பொங்க,**
கப்பல் ஆடிச் செல்கையில்
புசல் காற்று சீறி வீச
பாய் கிழிந்து போகையில்,
யேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாய் இரும்;
காற்றமைத்துத் துணை நின்று
கரை சேரச் செய்திடும்.

2. கப்பல் ஏறிப் போவோருக்கு
கடும் மோசம் வரினும்,
பாறை, மின், முழக்கம், காற்று,
உமக்கெல்லாம் அடங்கும்
இருளில் நீர் பரஞ்சோதி,
வெய்யிலில் நீர் நிழலே
யாத்திரையில் திசை காட்டி,
சாவில் எங்கள் ஜீவனே.

3. எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்;
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்;
யேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாய் இரும்
காற்றடக்கித் துணை நின்று
கரையேறச் செய்திடும்.

**185. Purleigh, Magdalen College, - Ariel** **8, 8, 6, 8, 8, 6.**

"Frisch auf, mein Seel verzage-"

**அஞ்சாதிரு, என் நெஞ்சமே,**
உன் கர்த்தர் துன்ப நாளிலே
கண் பார்ப்போம் என்கிறார்;
இக்கட்டில் திகையாதிரு,
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் செய்குவார்.

2. தாவீதும் யோபும் யோசேப்பும்
அநேக நீதிமான்களும்
உன்னிலும் வெகுவாய்
கஸ்தி அடைந்தும், பக்தியில்
வேரூன்றி ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்.

3. கருத்தாய் தேவ தயவை
எப்போதும் நம்பும் பிள்ளையைச்
சகாயர் மறவார்;
மெய்பக்தி உன்னில் வேர்கொண்டால்
இரக்கமான கரத்தால்
அணைத்து பாலிப்பார்.

4. என் நெஞ்சமே, மகிழ்ந்திரு;
பேய், லோகம், துன்பம் உனக்கு
பொல்லாப்புச் செய்யாதே;
இம்மானுவேல் உன் கன்மலை,
அவர்மேல் வைத்த நம்பிக்கை
அபத்தம் ஆகாதே.

**186. Gluck Everton, Beecher, 8s, 7s, 8l**

"Love divine, all loves excelling"

**அன்பின் ரூபி, மோட்சானந்தம்**
பாரில் ஈய வந்தீரே;
எங்கள் ஏழை நெஞ்சில் வாசம்
பண்ணி மருள் தீர்ப்பீரே;
யேசுவே நீர் பரிதாபம்
அன்புமாய் இருக்கிறீர்;
பார துக்கங்கொண்ட உள்ளம்
வந்து தேற்றல் செய்குவீர்.

2. உமது நல் ஆவி தாரும்,
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நீரே வாரும்,
சுத்த நேச வடிவாய்;
பாவ ஆசை எல்லாம் நீக்கி
அடியாரை ரட்சியும்,
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராய் இரும்.

3. சர்வ வல்லவரே, வாரும்,
நாங்கள் உமதாலயம்
எங்களுக்குத் தயை தாரும்
என்றும் விலாகாதேயும்;
என்றும் உம்மை ஸ்தோத்திரித்து,
வானோர் போல சேவிப்போம்;
குறைவற்ற அன்பைப் பெற்று
ஒழியாமல் துதிப்போம்.

4. நாங்கள் மோட்ச வீட்டில் சேர்ந்து
கரை திரை இன்றியே
உம்தன் சாயல் பெற்று வாழ்ந்து
தேவ அன்பில் மூழ்கியே
எங்கள் க்ரீடம் உன்தன் பாதம்
வைத்துப் போற்றும் வரைக்கும்
நாதா, அடியாரை நித்தம்
மறு ரூபமாக்கிடும்.

**187. Colwyn Bay, Chapel Royal. - Plymouth** **8, 8, 6, 8, 8, 6.**

"O love divine, how sweet thou..."

**தெய்வன்புதான் மா இனிமை;**
அதற்கென்றே என் உள்ளத்தைக்
கொடுத்திருக்கிறேன்;
என் மீட்பர் அன்பின் அளவை
அறிவதே என் மகிமை;
எப்போது அறிவேன்?

2. பாதாளம் சாவைப் பார்க்கிலும்
அவரின் நேசம் பலமும்
ஆழமுமானதே;
பூலோகத்தார் எல்லாருக்கும்
மாட்சிமையுள்ள வானோர்க்கும்
எட்டாததாயிற்றே.

3. தேவன்பின் ஆழம், கர்த்தாவே;
அளந்து பார்த்தவர் நீரே;
அன்பின் ப்ரவாகத்தை
என் ஏழை நெஞ்சில் ஊற்றிடும்;
இதே என் உள்ளம் வாஞ்சிக்கும்
தீராத வாஞ்சனை.

4. உமது முகம் பார்ப்பதே
உம்மண்டை நித்தம் சேர்வதே
எனக்கு விருப்பம்;
உமது சத்தம் கேட்பது
எனக்கு இன்பம் களிப்பு
என் மோட்ச பாக்யம்.

**188. Munich, Ellacombe. - Rutherford.** **(408)** **7s, 6s, 8l.**

"The great love where with He..."

**மிகுந்த தயவாலே**
ரட்சிக்க மீட்பரே,
தெய்வீக அன்பினாலே
நிறைந்த யேசுவே,
நான் உம்மோடைக்யமாக
நீர் என்னைக் கூப்பிட்டீர்
நான் உம்மை என்றும் சார
நீர் தயை காண்பிப்பீர்.

2. கல்லான இந்த நெஞ்சை
மிருதுவாக்கியே,
சீர்கெட்ட விருப்பத்தை
கட்டோடே அழித்தே
நான் என்றும் உம்மில் நிற்க
அன்பாக காத்திடும்;
நான் உண்மையில் நிலைக்க
பெலன் கடாட்சியும்.

3. என் முழு மனதோடு
லோகத்தை வெறுப்பேன்,
விடாத ஆவலோடு
யேசுவை வாஞ்சிப்பேன்;
இவ்வாஞ்சை என்றுமாக
நிலைக்கும்படிக்கே,
கர்த்தாவே தயவாக
சகாயம், செய்யுமே.

**189. St. Peter** **C.M.**

**"How Sweet the name of Jesus..."**

**நல் மீட்பர் யேசு நாமமே**
என் காதுக்கின்பமாம்;
புண்பட்ட நெஞ்சை ஆற்றவே
ஊற்றுண்ட தைலமாம்.

2. அந்நாமம் நைந்த ஆவியை
நன்றாகத் தேற்றுமே,
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தை
திடப்படுத்துமே.

3. பசித்த ஆத்துமாவுக்கு
மன்னாவைப் போலாகும்;
இளைத்துப் போன ஆவிக்கு
ஆரோக்யம் தந்திடும்.

4. என் ரட்சகா, என் கேடகம்,
என் கோட்டையும் நீரே;
நிறைந்த அருள் பொக்கிஷம்,
அனைத்தும் நீர் தாமே.

5. மா நேசர், மேய்ப்பர், பர்த்தாவும்,
என் ஜீவனும் நீரே;
என் தீர்க்கரும், என் ராஜாவும்
ஆசாரியருமே.

6. ப்ராண நாதா ஆண்டவா
நான் உம்மைப் போற்றுவேன்;
என் வாழ் நாளெல்லாம் ரக்ஷகா;
பேரன்பை சாற்றுவேன்.

7. என் ஜீவன் போகும் நேரமும்
உம் நாமம் பற்றுவேன்;
எப்போதும் அதைப் பாடவும்
விண் கரையேறுவேன்.

**190. St. Agnes** **C.M.**

**"Jesus, the very thought of Thee"**

**யேசுவே, உம்மை சிந்தித்தால்,**
என் உள்ளம் கனியும்;
கண்ணார உம்மைக் காணுங்கால்
பேரின்பம் சுரக்கும்.

2. மானிட மீட்பர் யேசுவின்
சீர் நாமம் போலவே,
இங்கீத நாதம் ஆய்ந்திடின்,
உண்டோ இப்பாரிலே?

3. துன்புற்ற நெஞ்சின் தஞ்சமும்
அன்பர்க்கு இன்பும் நீர்,
கேட்போருக்குச் சால வள்ளலும்
பேர் வாழ்வும் தேவரீர்.

4. கண்டடைந்தோரின் பாகத்தை
யார் கூற வல்லவர்?
உம் தாசர் அல்லால் பேரன்பை
யார் ருசி பார்த்தவர்?

5. யேசுவே, எங்கள் முத்தியும்
மகிழ்ச்சியும் நீரே;
இப்போதும் நித்திய காலமும்
நீர் எங்கள் மேன்மையே.

**191. Lusatie St. Mathias** **8s, 6l.**

**"Ach sagt mir nichts von gold..."**

**லௌகீக இன்பம், வேடிக்கை**
செல்வமும் எனக்கு வேண்டாம்;
பரம நன்மை ஒன்றுமே
இங்கில்லை, யாவும் மாயையாம்;
பொருளல்லாததை நாடேன்,
நான் யேசுவைச் சிநேகிப்பேன்.

2. லௌகீக வாழ்வு ஒழியும்;
சரீர அழகற்றுப்போம்,
நரரின் வேலை அழியும்,
இவ்வுலகமும் வெந்துபோம்;
பொருளல்லாததை நாடேன்,
நான் யேசுவைச் சிநேகிப்பேன்.

3. இயேசுவின் இராஜ்ஜியம்
அழிந்துபோக மாட்டாதே,
அவரது சிம்மாசனம்
விழாமல் என்றும் நிற்குமே;
பொருளல்லாததை நாடேன்,
நான் யேசுவைச் சிநேகிப்பேன்.

4. நான் இங்கே தங்கும் நாள் எல்லாம்
துயரம் நீங்க மாட்டாதே,
பரத்தில் போன பின் உண்டாம்
மகிமை செல்வம்; பூரிப்பே;
பொருளல்லாததை நாடேன்,
நான் யேசுவைச் சிநேகிப்பேன்.

**192. Cassel St. John - Redhead 76.** **7s, 6l**

**"Meine Seele, willst, dn ruhn"**

**என் கர்த்தாவே, உம்மில்தான்**
முழு நெஞ்சத்தாலே நான்
வாஞ்சை கொண்டு, நித்தமும்

லோக வாழ்வை அற்பமும்
குப்பையும் என்றெண்ணுவேன்,
உம்மையே சிநேகிப்பேன்.

2. லோகத்தாரின் களிப்பு
துக்கங் கொண்ட நெஞ்சுக்கு
சஞ்சலத்தை அன்றியே,
தேற்றத்தை உண்டாக்காதே;
உம்மையே சிநேகிப்பேன்,
அதால் பாக்கியம் அடைவேன்.

3. தேவரீரில் வாழ்வெல்லாம்
பூர்த்தியாகவே உண்டாம்;
உம்மில் வாஞ்சைகொள்வோனாய்
உண்மையான நேசனாய்
சேர்வோனுக்குத் தேவரீர்
அந்த வாழ்வைக் கொடுப்பீர்.

4. ஆறுதலும் பூரிப்பும்,
ஜீவனும் மகிழ்ச்சியும்
உம்மால்தானே என்றைக்கும்
குறைவின்றிக் கிடைக்கும்;
நீரே அன்பின் காரணர்,
கருணைத் தயாபரர்.

**193. Spohr: Sawley** **(409)** **C.M.**

"The Saviour's love"

**என் ரட்சகர் எல்லாருக்கும்**
மகா தயாபரர்,
எக்கீர்த்தி கனம் துதிக்கும்
எப்போதும் பாத்திரர்.

2. என் பெற்றோர் வீட்டார் நேசராய்
இருந்தும், யேசுதாம்
யாரையும் பார்க்க உண்மையாய்
விளங்கும் நேசராம்.

3. நான் வாடா க்ரீடம் தரிக்க
முள் க்ரீடம் சூடினார்,
தேவன்பு நன்றாய் விளங்க
எக்கஸ்தியும் பட்டார்.

4. பிதாவின் சாயல் தரித்தும்.
மகா அன்புடனே
நிஷ்டூர வெட்க சாவுக்கும்
அவர் உட்பட்டாரே.

5. எப்போதம் இதை நினைத்து
இவ்வேழை அடியேன்,
மீட்பரே, உம்மை வாஞ்சித்து
பின்பற்றி நடப்பேன்.

**194. Ewing** **7s, 6s, 8l.**

**"Keinen hat Gott verlassen"**

**அநேகர் ஆசை கொள்ளும்**
பொருளை வாஞ்சியேன்,
கர்த்தாவின் வார்த்தை சொல்லும்
மெய்ப் பொருள் நாடுவேன்;
என் பொக்கிஷம், என் செல்வம்
என் ஆஸ்தி க்றிஸ்துவே,
என் பாக்கியம், பேரின்பம்
எல்லாம் என் மீட்பரே.

2. என் யேசுவை நான் பற்றி
தொடர்வேன் ஆவலாய்;
என் சாபத்தை அகற்றி
ரட்சித்தார் நேசமாய்;
நான் தப்ப எனக்காக
தம் ரத்தம் சிந்தினார்;
எனக்கு ஜீவனாக
ஜெயித்தெழும்பினார்.

3. இவ்வண்ணம் என்னை மீட்டு
ஆள்கொண்ட யேசுவே,
நான் உம்மையே புகழ்ந்து
துதித்தல் ஞாயமே;
பூரிப்படைந்தோனாக
நான் போற்றத் தேவரீர்
என் நெஞ்சத்தை அன்பாக
எழுப்பக் கடவீர்.

**195. St. Stephen, Claremont, - St. peter.** **C.M.**

**"My God, the spring of all my joys"**

**என் களிப்புக்குக் காரணம்**
என் நல்ல தேவனே,
பகலில் நீர் என் மகிமை,
ராவில் என் ஜோதியே.

2. இருளிலே நீர் தோன்றினால்
என் மனம் மகிழும்;
நீர் விடிவெள்ளி, ஆனதால்
என்னில் ப்ரகாசியும்.

3. யேசுவைத் தந்த தயவு
என் செல்வமானதால்,
என் ஆத்துமா சந்தோஷித்து
மகிழும் வாழ்வினால்.

4. நரகத்துக்கும் சாவுக்கும்
அஞ்சாமல் இருப்பேன்
தேவன்பும் விசுவாசமும்
கொண்டு நான் வெல்லுவேன்.

**196. Troas, Stella, St. Mathias** **8s, 6l.**

**"Thee will I love, my strength..."**

**நான் உம்மை முழு மனதால்**
சிநேகிப்பேன், என் யேசுவே;
நான் உம்மை நித்தம் வாஞ்சையால்
பின்பற்றுவேன், என் ஜீவனே;
என் சாவு வேளைமட்டும் நீர்
என் நெஞ்சில்தானே தங்குவீர்.

2. நான் உம்மை நேசிப்பேன், நீர் தாம்
என் உத்தம சிநேகிதர்;
நீர் தேவ ஆட்டுக்குட்டியாம்;
நீரே என் மீட்பரானவர்;
நான் உம்மை முன் சேராததே
நிர்ப்பந்தம் வெட்கம், நஷ்டமே.

3. உம்மைப் பற்றாமல் வீணணாய்
பொல்லாங்கைச் செய்து சுற்றினேன்
பரத்தை விட்டுத் தூரமாய்
இகத்தை அன்பாய்ப் பற்றினேன்
இப்போ நான் உம்மைச் சேர்ந்தது
நீர் தாமே செய்த தயவு.

4. நான் உம்மைச் சுக வாழ்விலும்
சிநேகிப்பேன், என் கர்த்தரே;
நான் உம்மைத் துன்ப நாளிலும்
நேசிப்பேன், என்தன் யேசுவே;
என் சாவு வேளைமட்டும் நீர்
என் நெஞ்சில் தானே தங்குவீர்.

**197. Redhead, 66 Spohr.** **(410)** **C.M.**

**"God our portion"**

**என் தேவனே, என் பாகமே**
நீர் நித்த மாட்சிமை;
விஸ்தார வையகத்திலே
நீரே என் வாஞ்சனை.

2. இவ்வானமும் இப்பூமியும்
மிகுந்த அற்பமே;
இவைகளில் ஒன்றாகிலும்
உமக்கொப்பில்லையே.

3. பூலோக ஆஸ்திகள் எல்லாம்
என் சொந்தமாயினும்,
நீரே என்னில் இராவிட்டால்,
என் நெஞ்சு நோய்ப்படும்.

4. நிநேகிதரும் செல்வமும்
கொடுப்பவர் நீரே;
அவையும் நன்மை, ஆகிலும்
என் தேவன் அல்லவே.

5. அது நிமித்தம், கர்த்தரே,
உம்மையே ஈந்திடும்;
நீர் நிறைவான ஆஸ்தியே,
நீரே சமஸ்தமும்.

**198. St. Flavian, France** **C.M.**

**"Search me, O God, my action try"**

**ஆராய்ந்து பாரும், கர்த்தரே,**
என் க்ரியை யாவையும்
நீர் காணுமாறு காணவே
என்னில் ப்ரகாசியும்.

2. ஆராயும் என்தன் உள்ளத்தை,
நீர் சோதித்தறிவீர்;
என் அந்தரங்க பாவத்தை
மா தெளிவாக்குவீர்

3. ஆராயும் சுடரொளியால்
துராசை தோன்றவும்;
மெய் மனஸ்தாபம் அதனால்
உண்டாக்கியருளும்.

4. ஆராயும் சிந்தை, யோசனை,
எவ்வகை நோக்கமும்,
அசுத்த மனோபாவனை
உள்ளிந்திரியங்களும்.

5. ஆராயும் மறைவிடத்தை
உம் தூய கண்ணினால்;
அரோசிப்பேன் என் பாவத்தை
தேவானுக்ரகத்தால்.

6. இவ்வாறு நீர் ஆராய்கையில்,
சாஷ்டாங்கம் பண்ணுவேன்,
உம் சரணார விந்தத்தில்
சுத்தாங்கம் தேடுவேன்.

**199. Storl, Greedville, 8s, 7s, 6l.**

**"Sieh, hier bin ich, Ehrenkonig"**

**உம்மை, ராஜா, விசுவாச**
பக்தியாய் பணிகிறேன்;
தாழ்மையோடும் கண்ணீரோடும்
தேவரீரை அண்டினேன்;
நீர் மண்ணான பாண்டமான
என்னை அன்பாய்ப் பாருமேன்.

2. என்னைச் சுத்த சீர்படுத்த
அருள் செய்யும், கர்த்தரே;
என்னைச் சொந்த ஆடாய்க்கொண்ட
மேய்ப்பரான உம்மையே
சேர்வேனாக, நீர் அன்பாக
என்னைப் பாரும், யேசுவே.

3. ஆ, என் ஞானப் ஒளியான
தெய்வ ஆட்டுக்குட்டியே,
எனதாவி உம்மைத் தாவி
தேடும், மணவாளனே;
பட்சத்தோடும் தயவோடும்
என்னைப் பாரும், மீட்பரே.

4. ஏங்கலோடும் பணிவோடும்
என்னுடைய ஆத்துமம்,
வாயும் நெஞ்சும் கூவிக்கெஞ்சும்
சத்தம் கேட்டென் சஞ்சலம்
தீர்ப்பீராக; நீர் அன்பாக
என்னைப் பார்த்தால் பாக்கியம்.

5. உலகத்துப் பொய்ச் சம்பத்து
மாயையும் சிங்காரமும்
ஆன நல்ல செல்வம் அல்ல,
நெஞ்சை அது வாதிக்கும்;
மெய் வாழ்வான நீர் அன்பான
பார்வை தந்து ரட்சியும்.

**200. Solomon, Old Church** **C.M.**

**"O Jesus Christ grow Thou in me"**

**என் ரக்ஷசகா, நீர் என்னிலே**
மென்மேலும் விளங்கும்;
பொல்லாத சிந்தை நீங்கவே
சகாயம் புரியும்.

2. என் பலவீனம் தாங்குவீர்
மா வல்ல கரத்தால்;
சாவிருள் யாவும் நீக்குவீர்
மெய் ஜீவன் ஜோதியால்.

3. துராசாபாசம் நீங்கிடும்
உந்தன் ப்ரகாசத்தால்;
சுத்தாங்க குணம் பிறக்கும்
நல்லாவி அருளால்.

4. மாசற்ற திவ்ய சாயலை
உண்டாக்கியருளும்;
என்னில் தெய்வீக மகிமை
மென்மேலும் காண்பியும்.

5. சந்தோஷிப்பித்துத் தாங்குவீர்
ஒப்பற்ற பலத்தால்;
என் நெஞ்சில் அனல் மூட்டுவீர்
பேரன்பின் ஜ்வாலையால்.

6. நீர் பெருக, நான் சிறுக
நீர் க்ரியை செய்திடும்;
மெய் பக்தியில் நான் வளர
காடாட்சித்தருளும்.

**201. Cliffort, Franconia.** **S.M.**

"Du unvergleichlichs Gut"

**ஒப்பற்ற நன்மையே**
நான் உம்மை நேசிப்பேன்;
விடாத வாஞ்சையுடனே
நான் உம்மைத் தேடுவேன்.

2. உமக்குத் தூரமாய்
நான் நிற்கும்போதெல்லாம்
என் நெஞ்சத்தில் அகோரமாய்
விசாரங்கள் உண்டாம்.

3. மாசற்ற நேசரே,
நீர் என்னை நோக்குமேன்;
நித்திய அன்பின் ஜ்வாலையே
அனல் உண்டாக்குமேன்.

**202. Even me - Etiam et mihi.** **8, 7, 8, 7, 6, 7.**

"Lord, I hear of showers of blessing"

**அருள் மாரி எங்குமாக**
பெய்ய அடியேனையும்,
கர்த்தரே, நீர் நேசமாக
சந்தித்தாசீர்வதியும்,
என்னையும், என்னையும்
சந்தித்தாசீர்வதியும்.

2. என் பிதாவே, பாவியேனை
கைவிடாமல் நோக்குமேன்;
திக்கில்லா இவ்வேழையேனை
நீர் அணைத்துக் காருமேன்,
என்னையும், என்னையும்
நீர் அணைத்துக் காருமேன்.

3. யேசுவே, நீர் கைவிடாமல்
என்னைச் சேர்த்து ரட்சியும்;
ரத்தத்தாலே மாசில்லாமல்
சுத்தமாக்கியருளும்;
என்னையும், என்னையும்
சுத்தமாக்கியருளும்.

4. தூய ஆவி, கைவிடாமல்
என்னை ஆட்கொண்டருளும்,
பாதை காட்டிக் கேடில்லாமல்
என்றும் காத்துத் தேற்றிடும்,
என்னையும், என்னையும்
என்றும் காத்துத் தேற்றிடும்.

5. மாறா சுத்த தெய்வ அன்பும்
மீட்பர் தூய ரத்தமும்,
தெய்வ ஆவி சக்திதானும்
மாண்பாய்த் தோன்றச் செய்திடும்;
என்னிலும், என்னிலும்
மாண்பாய்த் தோன்றச் செய்திடும்.

**203. Selle, Mauricewood** **9, 8, 9, 8, 8, 8.**

"Ich habe nun hen Grund gefunden"

**இவ்வேளைக்காக பலியான**
என் யேசுவின் மகா தயை,
நான் என்றும் நிற்கத்தக்கதான
உறுதியான கன்மலை;
விண்மண் ஒழிந்தும், இதுவே
அசைவில்லாமல் நிற்குமே.

2. அவர் அனைவருக்குமாக
மீட்கும் பொருளைத் தந்தாரே;
குணப்படும் எல்லாருக்காக
பாவமன்னிப்புண்டாகுமே
ஆ! யேசுவால் உண்டானது
அளவில்லாத தயவு.

3. ஆ! அவருக்குப் பக்தியாக
நான் என்னை ஒப்புவிக்கிறேன்;
திகில் என் பாவங்களுக்காக
வந்தால், அவரை நோக்குவேன்;
அப்போதவர் என் பேரிலே
இரக்கமாய்க் கண்வைப்பாரே.

4. இம்மண்ணில் துன்பம் தொல்லையாலும்
நான் மெத்த வாதிக்கப்பட்டால்
தினம் பல வருத்தத்தாலும்
என் பாரம் மிகுதியானால்
என் யேசுவின் இரக்கமே
என் ஆத்துமத்தைத் தேற்றுதே.

5. நான் ஜீவனோடிருக்குமட்டும்
கர்த்தாவே நீர் என் நம்பிக்கை;
என் விசுவாசம் உம்மைப்பற்றும்,
இதே என் பிரதிக்கினை;
ஆம் என் அடைக்கலம் நீரே
இரக்கமுள்ள யேசுவே.

**204. St. Agnes** **C.M.**

**"Talk with us, Lord, thyself reval"**

**கர்த்தாவே, நாங்கள் பூமியில்**
இருக்கும் நாளில் நீர்
தேவன்பைக் காட்டி, எங்களில்
தரிக்கக்கடவீர்.

2. உம்மோடு பசி இக்கட்டை
எண்ணாமல் மறப்போம்;
உம்மோடிருக்கில் துன்பத்தை
இன்பம் என்றெண்ணுவோம்.

3. கர்த்தாவே, என்னில் தங்கியே
சந்தோஷப்படுத்தும்;
என் சித்தம் என்றும் உமக்கே
இணங்கச் செய்திடும்.

4. நான் உள்ளமட்டும் நித்தமும்
உம்மோடே நடப்பேன்,
என் செல்வம் நீரே, என்றைக்கும்
மகிழ்ந்து பூரிப்பேன்.

**205. Trust, Bullinger - St. Helen's** **8, 5, 8, 3.**

**"I am trusting Thee Lord Jesus"**

**அருள் நாதா, நம்பி வந்தேன்,**
நோக்கக் கடவீர்.
கைமாறின்றி என்னை முற்றும்
ரக்ஷிப்பீர்.

2. தஞ்சம் வேண்டி நம்பி வந்தேன்
திருப் பாதத்தில்;
பாவ மன்னிப்பருள்வீர் இந்
நேரத்தில்.

3. தூய்மை வேண்டி நம்பி வந்தேன்
உந்தன் ஆவியால்;
சுத்தி செய்வீர் மாசில்லாத
ரத்தத்தால்.

4. துணை வேண்டி நம்பி வந்தேன்,
பாதை காட்டுவீர்;
திர்ப்தி செய்து, நித்தம் நன்மை
நல்குவீர்.

5. சக்தி வேண்டி நம்பி வந்தேன்;
ஞான பெலனும்;
அக்னி நாவும் வல்ல வாக்கும்
ஈந்திடும்.

6. யேசு நாதா நம்பி வந்தேன்
தவறாமலே,
என்னை என்றும் தாங்கி நின்று
காருமே.

**206. Baden, Luther** **8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Der Herr ist mein getrener Hirt"**

**கர்த்தர் என் மேய்ப்பரானவர்,**
நன்றாகக் காக்கிறாரே;
அனைத்தையும் என் ரட்சகர்
அன்பாக ஈகிறாரே,
எல்லாவற்றிலும் உத்தம
தெய்வீக வார்த்தையாகிய
நல் மேய்ச்சல் எனக்குண்டு.

2. ஜீவாற்றின் நல்ல தண்ணீரை
எனக்கு அவர் காட்டி
என் ஆத்துமாவின் தாகத்தை
அதால் நன்றாக ஆற்றி,
தாகம் யேசு என்னப்பட்டதால்
என்னை மிகுந்த நேசத்தால்
நடத்தி ஆண்டுகொள்வார்.

3. ஓர் வேளை ஜோதியின்றியே
நான் மரண கெடியின்
இருண்ட பள்ளத்தாக்கிலே
நடந்தும் அவ்விருளின்
பொல்லாப்புக்கு பயப்படேன்,
நீர் நீட்டும் கோலைப் பற்றுவேன்,
அதே என்னை நடத்தும்.

4. அடியேனுக்கோர் பந்தியை
பகைஞர்க் கெதிராக
வைத்தெண்ணையால் என் சிரசை
மகா கடாட்சமாக
நீர் அபிஷேகஞ் செய்கிறீர்;
அடியேனை நீர் மறவீர்,
என் பாத்திரம் நிரம்பும்.

5. என் ஜீவனுள்ள மட்டுக்கும்
தேவன்பை நான் உணரும்
படியாய் என்னை நன்மையும்
கடாட்சமும் தொடரும்;
கர்த்தாவின் வீட்டில் இங்கேயும்
பிற்பாடு என்றும் அங்கேயும்
நிலைத்துக் கொண்டிருப்பேன்.

**207. Days of Rest** **7s, 6s, 8l.**

**"O Jesus, I have promised"**

**எப்போதும், யேசு நாதா,**
உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக
நான் வாக்குக் கொடுத்தேன்;
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர்,
அப்போது அஞ்சிடேன்;
முன் சென்று பாதை காட்டும்,
நான் வழி தவறேன்.

2. பூலோக இன்பம் செல்வம்,
வீண் ஆசாபாசத்தால்,
என் ஆத்துமா மயங்காமல்;
தெய்வீக பலத்தால்
நீர் துணை நின்று தாங்கும்,
என் அருள் நாயகா;
தீங்கணுகாமல் காரும்
மா வல்ல ரட்சகா.

3. ஆங்காரம் சுய சித்தம்
தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி
நான் தடுமாறினால்
நீர் பேசும் அருள் நாதா,
கொந்தளிப்படங்கும்;
உம் நேச சத்தம் கேட்டு
என் ஆவி மகிழும்.

4. "பின்பற்றினால் விண் வீட்டில்
பேரின்பம் பெறுவீர்."
என்றே உம் சீஷர் நோக்கி
நீர் வாக்கு அளித்தீர்;
அவ்வருள் வாக்கை நம்பி
இவ்வேழை அடியேன்,
"இதோ பின் செல்வேன்," என்று
ப்ரதிக்னை பண்ணினேன்.

5. ஓயாமல் பெலன் தாரும்;
உம்மடிச்சுவட்டில்
கால் வைத்து நடந்தேகி
நான் யாத்ரை செய்கையில்
நீர் வழிகாட்டி, என்னை
கைதாங்கி வருவீர்;
அப்பாலே மோட்ச வீட்டில்
பேர் வாழ்வை அருள்வீர்.

**208. Dominus regit me** **8s, 7s.**

**"The king of love my Shepherd is"**

**என் மேய்ப்பர் யேசுகிறிஸ்துதான்**
நான் தாழ்ச்சியடையேனே
ஆட்கொண்டோர் சொந்தமான நான்
குறையடைகிலேனே.

2. ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால்
என் ஆத்மத் தாகம் தீர்ப்பார்
மெய்மன்னாவாம் தம் வார்த்தையால்
நல் மேய்ச்சல் எனக்கீவார்.

3. நான் பாதை விட்டு ஓடுங்கால்
அன்பாகத் தேடிப் பார்ப்பார்;
தோள்மீதில் ஏற்றிக் காப்பதால்
மகா சந்தோஷங் கொள்வார்.

4. சா நிழல் பள்ளத்தாக்கிலே
நான் போக நேரிட்டாலும்
உன் அன்பின் கோலைப் பற்றவே
அதே என் வழிகாட்டும்.

5. இவ்வேழைக்கும் ஓர் பந்தியை
பகைஞர்க்கெதிர் வைத்தீர்;
உம்மாவியால் என் சிரசை
தைலா பிஷேகஞ் செய்வீர்.

6. என் ஆயுள் எல்லாம் என் பாத்ரம்
நிரம்பி வழிந்தோடும்;
ஜீவாற்றின் நீரால் என்னுள்ளம்
நிறைந்து பொங்கிப்பாயும்.

7. என் ஜீவ காலம் முற்றிலும்
கடாட்சம் பெற்று வாழ்வேன்;
கர்த்தாவின் வீட்டில் என்றைக்கும்
நான் தங்கிப் பூரிப்பாவேன்.

**209. Exalation, Haarlem** **5, 5, 8, 8, 5, 5.**

**"Jesus, meine Fruede"**

**யேசு நாதரே**
என் சுகிர்தமே
நீர் என் பூரிப்பென்றைக்கும்
உம்மில் பாக்கியம் கிடைக்கும்;
உம்மை நோக்குவேன்,
என்னைச் சேருமேன்.

2. வல்ல சர்ப்பமும்
சாவின் தூதரும்
என்னில் பாய்ந்து சீறினாலும்
என்னை அழிக்க வந்தாலும்.
நான் பயப்படேன்,
உம்மால் வெல்லுவேன்.

3. தேவரீருக்கு
மேன்மை தக்கது;
உம்முடைய ஜோதியாலே
நான் ப்ரகாசமானதாலே
என்றும் அடியேன்
உம்மைப் போற்றுவேன்.

**210. Credo, Solid Rock** **8s, 6l.**

"My hope is built on nothing..."

**என் மீட்பர் ரத்தம் சிந்தினார்**
மா நீதியும் சம்பாதித்தார்;
என் சொந்த நீதி வெறுத்தேன்,
யேசுவின் நாமம் நம்புவேன்;
நான் நிற்கும்பாறை க்றிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல்தான்.

2. கார் மேகம் அவர் முகத்தை
மறைக்கும் காலம் அவரை
எப்போதும் போல நம்புவேன்
மாறாதவர் என்றறிவேன்
நான் நிற்கும்பாறை க்றிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல்தான்.

3. மரண வெள்ளம் பொங்கினும்
என் மாம்சம் சோர்ந்து போயினும்
உம் வாக்குத்தத்தம் ஆணையும்,
என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும்,
நான் நிற்கும்பாறை க்றிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல்தான்.

4. நியாயத் தீர்ப்புக் காலத்தில்
எக்காளச் சத்தம் கேட்கையில்
அஞ்சேன், என் மீட்பர் நீதியே
அநீத னென்னை மூடுமே;
நான் நிற்கும்பாறை க்றிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல்தான்.

**211. Darwall's 148th - St. John** **6, 6, 6, 6, 8, 8.**

"God our refuge"

**கருணைத் தேவனே,**
நான் உம்மை நாடுவேன்;
என் அடைக்கலமே,
உம்மண்டை ஓடுவேன்;
என் தஞ்சமே, என் ஜீவனே,
மா அன்புடன் கண்ணோக்குமேன்.

2. பூலோக வாசியாய்
சஞ்சாரம் செய்கையில்
எப்போதும் தாழ்மையாய்
சந்தோஷிப்பேன் உம்மில்
எத்தொல்லை, துன்பம், விக்கினம்;
வந்தாலும் நீர் புகலிடம்.

3. தேவாவி, ஈய்ந்திடும்
மெய் விசுவாசமே;
அச்சம் சந்தேகமும்
அகலச் செய்யுமே;
செத்தாலும், ஜீவன் அடைவேன்,
பிதாவின் வீட்டில் சேருவேன்.

**212. St. Theodulph, Aurelia** **7s, 6s, 8l.**

"Ist Gott fur mich, so trete"

**கர்த்தர் என் பக்கமாகில்,**
எனக்குப் பயம் ஏன்?
உபத்ரவம் உண்டாகில்
மன்றாடிக் கெஞ்சுவேன்;

அப்போதென்மேலே வந்த
பொல்லா வினை எல்லாம்
பலத்த காற்றடித்த
துரும்புபோலே ஆம்.

2. என் நெஞ்சின் அஸ்திபாரம்
மேலான கர்த்தரே;
அதாலே பக்தர் யாரும்
திடன் கொள்வார்களே;
நான் ஏழைப் பலவீனன்,
வியாதிப் பட்டோனே;
அவரில் சொஸ்தம், ஜீவன்
சமஸ்தமும் உண்டே.

3. என் உள்ளமே களிக்கும்,
துக்கிக்க வேண்டுமோ?
கர்த்தர் என் மேல் உதிக்கும்
பகலோன் அல்லவோ?
பரத்தில் வைக்கப்பட்ட
ஆனந்த பூரிப்பே
என் ஆவிக்கு பலத்த
திடன் உண்டாக்குமே.

**213. St. Bernard** **C.M.**

**"Mein Gott, das Herz ich bring dir"**

**கர்த்தா என் நெஞ்சை உமக்கே**
அன்பாய் படைக்கிறேன்;
விடாத வாஞ்சையுடனே
நான் உம்மைத் தேடுவேன்.

2. நீர் என்னிலே நல் நம்பிக்கை
மெய்யன்பும் பூரிப்பும்
உண்டாகும்படி ஆவியை
என்மேல் பொழிந்திடும்.

3. இவ்வண்ணமாய் நல் ஈவுகள்
நீர் தந்து என்னிலும்
சிறந்த உம்தன் குணங்கள்
இலங்க அருளும்.

4. தேவன்பின் சாயல் தரித்து
நன்மையில் வர்த்திப்பேன்;
உம்மை மென்மேலும் அறிந்து
உமக்கொப்பாகுவேன்.

**214. Yareham, Deerhurst** **8s, 7s, 8l.**

**Psalm 1**

**தீயோர் சொல்வதைக் கேளாமல்**
பாவத்துக்கு விலகி
பரிகாசரைச் சேராமல்
நல்லோரோடு பழகி
கர்த்தர் தந்த வேதம் நம்பி
வாஞ்சை வைத்து அதைத்தான்
ராப்பகலும் ஓதும் ஞானி
என்றும் வாழும் பாக்யவான்.

2. நதி ஓரத்தில் வாடாமல்
நடப்பட்டு வளர்ந்து,
கனி தந்து, உதிராமல்,
இலை என்றும் பசந்து;
காற்றைத் தாங்கும் மரம்போல
அசைவின்றியே நிற்பான்,
அவன் செய்கை யாவும் வாய்க்க
ஆசீர்வாதம் பெறுவான்.

3. தீயோர், பதர்போல் நில்லாமல்
தீர்ப்பு நாளில் விழுவார்;
நீதிமான்களோடிராமல்
நாணி நைந்து அழிவார்;
இங்கே பாவி மகிழ்ந்தாலும்,
பாவபலம் நாசந்தான்;
நீதிமான் இங்கழுதாலும்
கர்த்தர் வீட்டில் வாழுவான்.

**215. Realms of Glory - Triumph** **8, 7, 8, 7, 4, 7.**

**"Guide me, O thou great Jehovah"**

**பாதை காட்டும், மாயெகோவா**
பரதேசியான நான்
பலவீனன், அறிவீனன்,
இவ்வுலோகம் காடுதான்;
வானாகாரம்
தந்து என்னைப் போஷியும்.

2. ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்;
தீபமேக ஸ்தம்பம் காட்டும்
வழியில் நடத்துமேன்;
வல்ல மீட்பர்!
என்னைத் தாங்கும், இயேசுவே.

3. சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து,
என்னைச் சேரும் மோட்சத்தில்
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்

**216. Winchester old** **C.M.**

**"Ich singe dir mit Herz und Mund"**

**ஆ! களி கூர்ந்து பூரித்து**
மகிழ், என் உள்ளமே;
அன்புள்ள கர்த்தர் உனது
அநந்த செல்வமே.

2. நெஞ்சத்தில் ராவும் பகலும்
விசாரம் ஏன்? இனி
உன் சிந்தனை அனைத்தையும்
கர்த்தாவுக் கொப்புவி.

3. உன் சிறு வயது முதல்
பராமரித்தாரே;
கர்த்தாவால் வெகு மோசங்கள்
விலக்கப்பட்டதே.

4. அதாலே நீ கர்த்தாவுக்கு
நற் பிள்ளைக்கேற்றதாய்
எப்போதும் கீழ்ப்படிந்திரு
அப்போது வாழ்வாய்.

**217. Kocher, Knecht, Argyle** **7s, 6s.**

**"In full and glad surrender"**

**என் ஜீவன், சுகம், செல்வம்**
ப்ரதிஷ்டை செய்கிறேன்
உற்சாக பலியாக
நான் ஒப்புவிக்கிறேன்.

2. என் நாதா, அடியேனை
நீர் ஏற்றுக்கொள்ளுமே;
நான் உம்தன் சொந்தமாக
எந்நாளும் ஜீவிப்பேன்.

3. என் நெஞ்சில் நீரே வந்து
ப்ரசன்னமாகுவீர்;
ஏகாதிபதியாக
ஆங்காட்சி செய்குவீர்.

4. நீர் ஆளும், யேசு நாதா
என் ராஜாவாயிரும்
எக்காலும் அடியேனை
ஆட்கொண்டு நடத்தும்.

**218. Consecration** **7s.**

**"Take my life and let it be"**

**என்தன் ஜீவன், யேசுவே,**
சொந்தமாக ஆளுமே;
என்தன் கால நேரமும்
நீர் கையாடி யருளும்.

2. என்தன் கை பேரன்பினால்
ஏவப்படும் என்தன் கால்
பணிசெய்ய விரையும்,
அழகாக விளங்கும்.

3. என்தன் நாவு இன்பமாய்
உம்மைப்பாடவும், என் வாய்
மீட்பின் செய்தி கூறவும்
ஏதுவாக்கி யருளும்.

4. என்தன் ஆஸ்தி, தேவரீர்
முற்றும் அங்கீகரிப்பீர்;
புத்தி, கல்வி யாவையும்
சித்தம்போல் ப்ரயோகியும்.

5. என்தன் சித்தம் யேசுவே
ஒப்புவித்து விட்டேனே;
என்தன் நெஞ்சில் தங்குவீர்,
அதை நித்தம் ஆளுவீர்.

6. திருப்பாதம் பற்றினேன்,
எந்தன் நேசம் ஊற்றினேன்;
என்னையே சமூலமாய்
தத்தம் செய்தேன் நித்யமாய்.

**219. Emmaus St. Flavian - Arcadia** **C.M.**

**"Mein Gott, das Herz ich bringe dir"**

**என் நெஞ்சை, சுவாமி, உமக்கே;**
இதோ! படைக்கிறேன்;
நீர் இந்தக் காணிக்கையையே
கேட்டீர் என்றறிவேன்.

2. என் மகனே உன் நெஞ்சைத்தா
என் றன்பாய்க் கேட்கிறீர்;
நீர் மீட்டதால், என் ஆண்டவா
உம் சொந்தம் என்கிறீர்.

3. பிதாவே, அதைத் தயவாய்
அங்கீகரிக்கவும்,
நான் அதை உள்ள வண்ணாய்
தந்தேன் தள்ளாதிரும்.

4. என் முழு நெஞ்சையும் அன்பாய்
சுவாமி நீர் என்றைக்கும்
அகமும் ஆலயமுமாய்
ஏற்றுக்கொண்டருளும்.

5. நீர் அதை ஆளும், கர்த்தரே,
அதால் நான் பாக்கியன்;
நான் உலகத்தான அல்லவே,
நான் உம்முடையவன்.

6. போ! லோகமே! போ! பாவமே!
என் நெஞ்சை அடியேன்
உமக்கே என்றும் யேசுவே,
கொடுத்திருக்கிறேன்.

**220. Newington, Seymour.** **75**

"Thine for ever, God of love"

**உம்தன் சொந்தமாக்கினீர்,**
அடியேனை நோக்குவீர்;
பாதுகாரும், யேசுவே,
என்றும் தீங்கில்லாமலே.

2. நான் உம் சொந்தம்; லோகத்தில்
மோட்ச யாத்ரை செய்கையில்
ஜீவன், சத்யம், வழியும்,
நீரே, ரட்சித்தாண்டிடும்.

3. நான் உம் சொந்தம்; ரட்சியும்;
மட்டில்லாத பாக்யமும்,
அருள் நாதா, நல்கினீர்,
இன்னமும் காப்பாற்றுவீர்.

4. நான் உம் சொந்தம்; நித்தமாய்
தாசனை நீர் சுகமாய்
தங்கச் செய்து, மேய்ப்பரே,
காத்தும் மேய்த்தும் வாருமே.

5. நான் உம் சொந்தம்; தேவரீர்
வழி காட்டிப் போஷிப்பீர்
பாவம் நீங்கக் கழுவும்,
ஆயுள் முற்றும் நடத்தும்.

**221. Deerhurst, Everton - Polycarp 8s, 7s, 8l.**

**"Jesus I my Cross have taken"**

**சிலுவை சுமந்தோனாக,**
இயேசு உம்மைப் பற்றினேன்;
ஏழைப் பரதேசியாக
மோட்ச வீடு நாடுவேன்;
உற்றார், மேன்மை, ஆஸ்தி, கல்வி,
ஞானம், லோகம்அனைத்தும்
அற்பகுப்பை என்று எண்ணி
வெறுப்பேனே முற்றிலும்.

2. துஷ்டர் என்னைப் பகைத்தாலும்,
நீரே தஞ்சம் ஆகுவீர்;
கஸ்தி என்ன நேரிட்டாலும்,
இனி மேன்மை தருவீர்;
உமதன்பு என்னைத் தேற்ற
துக்கம், பயமில்லையே;
நாதா, உம்ப்ர சன்னம் நீங்க,
இன்பமெல்லாம் துன்பமே.

3. நெஞ்சமே, விண்மேன்மை நோக்கி
பாவம் பயம் அகற்று;
எந்தக் கஷ்டத்தையும் தாங்கி
மீட்பரை நீ பின்பற்று
திவ்ய அன்பைச் சிந்தை செய்து
நித்ய மீட்பை நினையேன்;
ஆவியின் சகாயம் நம்பு,
நெஞ்சமே கலக்கம் ஏன்?

**222. Beatitudo, Ortonville** **L.M.**

**"Jesus, Thine all-victorious Love"**

**தயாபரா, என் உள்ளத்தில்**
தேவன்பை ஊற்றுமேன்;
அப்போது திவ்ய நேசத்தில்
வேரூன்றி நிலைப்பேன்.

2. வானாக்னி என்னில் மூட்டியே,
துராசை எரிப்பீர்;
எப்பாவ மேடும் குன்றுமே
உருக்கி விடுவீர்.

3. முன் பெந்தேகோஸ்தே நாளிலே
தீப்போலத் தோன்றினீர்;
சுட்டெரிப்பின் நல்லாவியே;
என் பாவம் அழிப்பீர்.

4. உள்ளிந்திரியங்கள் எங்கணும்
ஊடுருவிச் சென்றே
சுத்தாங்கம், ஜீவன், ஜோதியும்
உண்டாகச் செய்யுமே.

5. அப்போது இடறாமலும்
நற்பாதை செல்லுவேன்;
என் மீட்பர்பேரில் முற்றிலும்
எக்காலும் சாருவேன்.

**223. Avingnon, Cairus** **8, 8, 8, 6.**

**"Seek ye first, not earthly pleasure"**

**அற்ப வாழ்வை வாஞ்சியாமல்;**
இன்பம், செல்வம் பின்பற்றாமல்
தேவ நேசத்தை ஓயாமல்
நாடுவாய், நாடுவாய்.

2. விரும்பாதே பேர்ப்ரஸ் தாபம்
லோக மகிமைப்ர தாபம்
ஆத்ம வாழ்வின் நித்ய லாபம்
நாடுவாய், நாடுவாய்.

3. நாடுவாய் தேவாசீர் வாதம்;
கர்த்தர் ஈயும் சற்பிர சாதம்;
பாவம் தீரத் திருப்பாதம்
நாடுவாய், நாடுவாய்.

4. மீட்பர்போல் சுத்தாங்கமாக,
தாழ்மையோடு சாந்தமாக
தொண்டு செய்ய ஆவலாக
நாடுவாய், நாடுவாய்.

5. பிறர் யேசுவண்டை சேர;
அவராலே கடைத்தேற;
தேவ சித்தம் நிறைவேற
நாடுவாய், நாடுவாய்.

6. அருள்நாதர் அரசாளும்
காலம் வந்து சர்வத்ராளும்
மீட்பைக் காணவும் எந்நாளும்
நாடுவாய், நாடுவாய்.

**224. Burford Abridge, Arcadia** **C.M.**

**"Alast and did my saviour bleed?"**

**மரித்தாரே என் ஆண்டவர்,**
சிலுவையில் தானே!
மரித்தாரே என் ரட்சகர்,
ஆ, எனக்காகவே.

2. மரத்தில் தொங்கி ஜீவனை
விட்டார் என் யேசுவே;
உனக்குத்தான் இப்பலியை
கொடுத்தார், பாவியே.

3. நான் எண்ணி எண்ணிவருகில்
என் நேசம் ஊக்கமாய்
கொழுந்துவிட்டு நெஞ்சத்தில்
எரியும் பக்தியாய்.

4. என் மீட்பர் யேசு க்றிஸ்து தாம்
இவ்வருள் செய்தாரே;
நான் என்ன பதில் செய்யலாம்?
தகுதி இல்லையே.

5. என் தேகம், செல்வம், சுகமும்
என் ஜீவன் யாவுமே
சுகந்த பலியாகவும்
படைப்பேன் யேசுவே.

**225. Herr Christ, Der Einge - Gott'ssohn, Vittoria** **7, 6, 7, 6, 7, 7, 6**

**"Herr Jesu, Gnadensonne"**

**அருளின் ஜோதியான**
அன்புள்ள யேசுவே,
நரரின் ஜீவனான
உம்மாலே என்னிலே
வெளிச்சமும் குணமும்
சந்தோஷமும் திடமும்
உண்டாகித் தங்குமே.

2. என் பாவத்தை மன்னித்து
அகற்றியருளும்,
சினத்தை நீக்கி விட்டு
என் மேல் அன்பாய் இரும்;
என் நெஞ்சின் பயம் நீங்க
மெய்ச் சமாதானம் தர
பணிந்து கேட்கிறேன்.

3. நான் உம்மைச் சார்ந்தோனாக
எப்போதும் உண்மையில்
நிலைக்கும்படியாக
மெய்ப் பக்தியை என்னில்
வளரச் செய்தன்பாலே
தெய்வீக வார்த்தையாலே
நீர் பாதை காட்டுமேன்.

4. நான் லோகத்தை வெறுத்து,
என் நெஞ்சை நித்தமே
காணிக்கையாய் உமக்கு
படைத்து வாழவே
துர் ஆசை என்னில் பேர்த்து,
உம்மண்டை என்னைச் சேர்த்து
சுத்தாங்கம் தாருமேன்.

**226. St. Geroge (Gauntlett) - Clifton** **S.M.**

"Was fag ich nach der Welt"

**சீர் கெட்ட லோகமே**
உன் வாழ்வு எனக்கேன்?
என் ரட்சகர் என் கதியே,
நான் உன்னைச் சார்வதேன்?

2. என் ஆஸ்தி யேசு தான்,
என் செல்வம் அவரே;
உன் மேன்மை அற்பகுப்பைதான்,
சீர் கெட்ட லோகமே.

3. என் யேசுவைச் சார்வேன்,
விண் நன்மை நிற்குமே;
உன்னில்யாதொன்றையும் நம்பேன்
சீர் கெட்ட லோகமே.

4. ஓர் நிமிஷத்திலே
உன் வாழ்வு அழியும்;
என் சாவு வரும் நாளிலே
மகிழ்ச்சி முடியும்.

5. ஆனாலும் வாழுவேன்,
என் வாழ்வு யேசுவே;
உன் செல்வத்தைநான் வெறுப்பேன்
சீர்கெட்ட லோகமே.

**227. Sidbury, Angelus. - Canonbury** **L.M.**

**"Weg, lust, du unlustvolle Seuch"**

**போ, அற்பமாம் சிற்றின்பமே;**
போ, கெட்ட லோக இச்சையே,
வா, தேவ நேசமே; வாவேன்;
நான் உனதாலயம் ஆவேன்.

2. தேவ குமாரன் ஜீவனை
கொடுத்த திவ்ய நேசத்தை
நினைத்து இச்சை யாவையும்
வெறுத்துத் தள்ளச் செய்திடும்.

3. ஓர் நிமிஷ சிற்றின்பமே
அநந்த நோவுண்டாக்குமே;
பற்றாசை நீக்கி என்னிலே
மேலான சிந்தை தாருமே.

4. நான் மோட்சத்தில் பங்கற்றோனாய்
போகாதபடி உண்மையாய்
சீர்பட்டு உம்மை நேசிக்கும்
நேசத்தை என்னில் ஊற்றிடும்.

5. இம்மையில் மாந்தர் அறிவை
கடந்த பேரானந்தத்தை
மேலுலகாம் பரத்திலே
கிடைக்கப் பண்ணும், கர்த்தரே.

**228. Farrant, St. Fulbert.** **C.M.**

"I want a principle within"

**உள்ளான தேவ பயமும்**
பாவத்தை வெறுத்து
எதிர்த்து நிற்கும் குணமும்
என் வாஞ்சையானது.

2. ஆங்காரமும் துராசையும்
எழும்பும்போது நான்
அவை அடக்கும் காரணம்
அன்பும் பயமும் தான்.

3. இனி நான் என்றும் உம்மையே
விடாதபடிக்கு
பிள்ளைக்குத் தகும் பயமே
அளியும் எனக்கே.

4. நான் உம்மை விடும் நேரத்தில்
நீர் என்னைக் கண்டியும்,
மெய் துக்கத்தை என் மனதில்
எழுப்பியருளும்.

**229. Dismissal, St. Raphael,** **6, 7, 8, 7, 4, 7.**

" A living sacrifice"

**தேவரீரின் சாவினாலே**
தாழ்ச்சியற்ற ரட்சிப்பு
நான் அடைந்து கொண்டதாலே
நித்தம் என்னை உமக்குப்
பலியாக
பூரிப்பாய்ச் செலுத்துவேன்.

2. சீரில்லாத என்னைப் பார்த்து
துஷ்ட பேயின் சக்தியை
ஜெயமாக நீர் முறித்து
நித்ய ஜீவ வாசலை
நீர் திறந்து
வைத்ததாலே ஸ்தோத்திரம்.

3. இப்போ நான் களிப்படைந்து
பூர்த்தியாகப் பாடுவேன்;
என் மாற்றானை நீரே வென்று
தாழ்த்தும் போது அடியேன்,
"நீர் என் ராஜா"
என்று சொல்லிச் சேவிப்பேன்.

**230. Nun danket** **6, 7, 6, 7, 6, 6, 6, 6.**

**"Now thank we all our God"**

**சர்வத்தையும் அன்பாய்**
ஆதரிக்கும் கர்த்தாவை,
அநேக நன்மையால்
ஆட்கொண்ட எம்பிரானை
இப்போது ஏகமாய்
எல்லாரும் போற்றுவோம்;
மா தயை பெற்றதால்
நாம் நன்றி சொல்லுவோம்.

2. தயாள தேவனே
நீர் என்றும் பாதுகாரும்;
கடாட்சங் காண்பித்து
நற் சமாதானந் தாரும்;
மயங்கும் வேளையில்
நீர் அன்பாய் தாங்கிடும்,
இம்மை மறுமையில்
மெய்ப்பாக்யம் ஈந்திடும்.

3. வானாதி வானத்தில்
என்றென்றும் அரசாளும்
த்ரியேக தேவனை
விண்ணோர், மண்ணோர் எல்லாரும்
இப்போதும் எப்போதும்
ஆதியில் போலவே
புகழ்ந்து ஸ்தோத்திரம்
செலுத்துவார்களே.

**231. Laudate Dominum; Yoheleth - Luther.** **8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Sei Lob und Ehr dern hochsten..."**

**கர்த்தாவே, உம்மைத் துதிப்பேன்**
மகா மகிழ்ச்சியாக,
என்றைக்கும் உம்மைப் போற்றுவேன்
உத்தம பணிவாக;
என் ஆவியும் என் தேகமும்;
உம்மை நன்றாகத் துதிக்கும்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

2. அதேனெனில், என் துன்பத்தில்
கர்த்தாவைக் கெஞ்சிக் கொண்டேன்
அப்போது ஏற்ற வேளையில்
மகா ரட்சிப்பைக் கண்டேன்;
எல்லாரும் இதைக் கேளுங்கள்,
என்னோடு கூடப் பாடுங்கள்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

3. கர்த்தர் ஒர்போதும் தமது
ஜனத்தைக் கைவிடாரே;
கண்ணோக்கி ஆசீர்வதித்து
சகாயம் அளிப்பாரே;
இருளில் இடற ஒட்டார்,
பிதாவைப் போலத் தாங்குவார்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி.

**232. Augsburg, Surrey - Mauricewood** **9, 8, 9, 8, 8, 8.**

"O dass ich tausend Zungen hatte"

**ஆ! என்னில் நூறு வாயும் நாவும்**
இருந்தால் கர்த்தர் எனக்கு
அன்பாகச் செய்த நன்மையாவும்
அவைகளால் ப்ரசங்கித்து
துதிகளோடு சொல்லுவேன்
ஓயாத் தொனியாய்ப் பாடுவேன்.

2. என் சத்தம் வானமளவாக
போய் எட்டவேண்டும் என்கிறேன்
கர்த்தாவைப் போற்றவாஞ்சையாக
என் ரத்தம் பொங்க ஆசிப்பேன்;
ஒவ்வொரு மூச்சும் நாடியும்
துதியும் பாட்டும் ஆகவும்.

3. ஆ! என்னில் சோம்பலாய் இராதே,
என் உள்ளமே, நன்றாய் விழி;
கர்த்தாவை நோக்கி ஓய்வில்லாதே
கருத்துடன் இஸ்தோத்திரி;
இஸ்தோத்திரி, என் ஆவியே!
இஸ்தோத்திரி, என் தேகமே!

4. வனத்தில் உள்ள பச்சையான
எல்லாவித இலைகளே,
வெளியில் பூக்கும் அந்தமான
மலர்களின் ஏராளமோ,
என்னோடு கூட நீங்களும்
அசைந்திசைந்து போற்றவும்.

5. கர்த்தாவால் ஜீவன் பெற்றிருக்கும்
கணக்கில்லா வகைகளே,
பணிந்து போற்ற உங்களுக்கும்
எந்நேரமும் அடுக்குமே;
துதியாய் உங்கள் சத்தமும்
ஓர்மித்தெழும்பி ஏறவும்.

**233. Magaalen College - Hull, Purleigh** **8, 8, 6, 8, 8, 6.**

"Psalm exiviii"

**என் நெஞ்சமே, நீ மோட்சத்தை**
விரும்பித் தேடி, கர்த்தரை
வணக்கத்துடனே
துதித்துப்பாடி, என்றைக்கும்
புகழ்ந்து போற்று நித்தமும்
மகிழ்ச்சியாகவே.

2. நட்சத்திரங்கள், சந்திரன்,
வெங் காந்தி வீசும் சூரியன்,
ஆகாச சேனைகள்,
மின், மேகம், காற்று, மாரியே,
வானங்களின் வானங்களே,
ஒன்றாகப் பாடுங்கள்.

3. விஸ்தாரமான பூமியே,
நீயும் எழுந்து வாழ்த்தல் செய்;
யெகோவா நல்லவர்;
சராசரங்கள் அனைத்தும்
அவர் சொற்படி நடக்கும்;
அவரே ஆண்டவர்.

4. பரத்திலுள்ள சேனையே,
புவியிலுள்ள மாந்தரே,
வணங்க வாருங்கள்.
யெகோவா தாம் தயாபரர்,
எல்லாவற்றிற்கும் காரணர்;
அவரைப் போற்றுங்கள்.

**234. Tallis' Ordinal,** **(414)** **C.M.**

"Sei Lob und Ehr dem hochest en..."

**ஒரே பேறான மைந்தனை**
அருளிச் செய்தவர்,
நன்மைகளால் என் உள்ளத்தை
நிரப்ப வல்லவர்.

2. உபத்திரவத்தின் பாரத்தை
அன்பாக நீக்கினார்;
இலக்கமற்ற பாவத்தை
எண்ணாமல் மன்னித்தார்.

3. கல்போல் உறைந்த நெஞ்சத்தை
கரையப் பண்ணினார்;
என் மனதின் விசாரத்தை
களிப்பாய் மாற்றினார்.

4. இருண்டு கெட்ட புத்தியை
வெளிச்சமாக்கினார்,
பொல்லாங்குக்கான ஏதுவை
அன்பாய் விலக்கினார்.

5. இவ்வளவான நன்மையை
இரங்கிச் செய்தவர்
இடைவிடாத வாழ்த்தலை
அடையப் பாத்திரர்.

6. இதை உணர்ந்தென் நெஞ்சமே
இடைவிடாமலே
இரக்கமுள்ள நாதனை
துதித்தல் ஞாயமே.

**235. Croft's 148th, Cephas - Bevan. (415) 6, 6, 6, 6, 8, 8.**

**"Monarche aller Ding"**

**விண், மண் அனைத்தையும்**
படைத்த கர்த்தாவே
வானோர்க் குழாங்களும்
பணியும் ராஜாவே
என் எளிமையில் என்னை நீர்
அன்பாய்க் கண்ணோக்கக் கடவீர்.

2. சர்வ சம்பூரணா
ஒப்பற்ற தேவரீர்
இவ்வேழைப் பாவிக்காய்
அன்பாய் இரங்கினீர்?
அடியேனைப் பிதாவாம் நீர்
உம்மண்டைக்கே அழைக்கிறீர்.

3. நீர் அஸ்தமிப்பில்லா
மா சூர்யனானவர்
இருளிலே மங்கா
வெளிச்சம் தந்தவர்,
அடியேன் ஆத்துமாவிலும்
ப்ரகாசத்தைத் தந்தருளும்.

4. அன்பின் சொரூபி உம்
ஒப்பற்ற நேசமே
விண்ணோரின் உள்ளமும்
களிக்கச் செய்யுமே;
அதே என் இதயத்திலும்
நிரம்பப் பண்ணி அருளும்.

**236. St. Matthew, Ellacombe - All Saints 2 C.M. 8l.**

**"The son of God goes forth to war"**

**விண் க்ரீடம் பெறப்போருக்கு**
கிறிஸ்தேசு செல்கின்றார்;
அவரின் வெற்றிக்கொடிக்கு
கீழாகப் போவோன் யார்?
தன் துக்க பாத்ரம் குடித்து
சோராமல் நிற்போன் யார்?
தன் சிலுவையை எடுத்து
அவர் பின் செல்வோன் யார்?

2. முதலாம் ரத்த சாட்சியாய்
மரித்தோன், வானத்தில்
கர்த்தாவை விசுவாசமாய்
கண்ணோக்கித் துன்பத்தில்
கொலைஞர்க்காக வேண்டிட
சண்டாளரால் மாண்டான்
பகைஞர்க்காக ஜெபிக்க
யார் அவன் பின் செல்வான்?

3. தேவாவி வந்து தங்கின
ஈராறு சீஷர்கள்
மகத்வமாய் விளங்கின
நம்பிக்கையுள்ளோர்கள்;
தீ, துன்பம், வாளைச் சகித்தே
சிங்கத்தால் பீறுண்டார்;
மரிக்கவும் அஞ்சாமலே
அவர்போல் செல்வோர் யார்?

4. சிறந்த சேனாவீரராய்
கெம்பீரக் கூட்டத்தார்
சிங்காசனத்தைச் சூழ்ந்தோராய்
கொண்டாடி நிற்கிறார்;
எப்பாடும் நீங்கி மோட்சத்தை
சேர்ந்தோர்போல் நாங்களும்
உம்மண்டை சேர அருளை,
தேவா, கடாட்சியும்.

**237. Franconia., Carlisle, Laban** **S.M.**

**"Watch and pray"**

**நன்றாய் விழிப்பவன்**
சோதனைக்குட்படான்
விழிப்பில்லா திருப்பவன்
தீமைக்கு ஆளாவான்.

2. ஏவாள் ஓர் கனியை
புசித்த தாலேயே
கர்த்தாவின் சாப ஆக்கினை
மாந்தர்க்கு வந்ததே.

3. அத்தன்மையாய் நானும்
விழிப்பில்லாமலே
பொல்லாங்கைச் செய்தால், என்றைக்கும்
சாகாமல் சாவேனே.

4. நான் இதை எண்ணினால்,
என் தேகம் ஆவியும்
பயம் அடைந்து எங்கலால்
அதிர்ந்து நடுங்கும்.

5. அன்புள்ள யேசுவே,
என்மேல் இரங்குமேன்,
நான் உம்மைப்போல் விழிக்கவே
சகாயம் பண்ணுமேன்.

**238. Shropshire, Redhead 90** **L.M.**

**"Victory"**

**ஜெயித்த யேசு நாதர் தாம்**
சம்பாதித்த மெய் ஆஸ்தியாம்
சாகாத ஜீவன் பூரிப்பும்
நமக்கென்றைக்கும் கிடைக்கும்.

2. பயமும் நோவும் யேசுவால்
முற்றும் விலகிப் போவதால்
சந்தோஷமாய் போராடுவோம்,
அவரால் வெற்றி கொள்ளுவோம்.

3. சா மட்டும் நிலைநின்றவன்,
போராட்டம் செய்து வென்றவன்
வானோரின் சங்கம் சேருவான்;
தன் மீட்பரோடு வாழுவான்.

4. வெற்றி சிறந்த தேவரீர்
ஜெயிக்கப் பாதை காண்பித்தீர்;
நீர் வென்ற வண்ணம் நாங்களும்
வென்றேறத் தயை அருளும்.

**239. Aurelia** **7s, 6s, 8l.**

**"The Church's one foundation"**

**சபையின் அஸ்திபாரம்**
நம் மீட்பர் கிறிஸ்துவே
சபையின் ஜன்மாதாரம்,
அவரின் வார்த்தையே;
தம் மணவாட்டியாக
வந்ததைத் தேடினார்.
தமக்குச் சொந்தமாக
மரித்ததைக் கொண்டார்.

2. எத்தேசத்தார் சேர்ந்தாலும்,
சபை ஒன்றே ஒன்றாம்;
ஒரே விஸ்வாசத்தாலும்
ஒரே ரட்சிப்புண்டாம்;
ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும்;
ஓர் திவ்ய ஞானாகாரம்
பக்தரைப் போஷிக்கும்.

3. புறத்தியார் விரோதம்
பயத்தை உறுத்தும்;
உள்ளானவரின் த்ரோகம்
கிலேசப்படுத்தும்;
பக்தர் ஓயாத சத்தம்
'எம்மட்டும்?' என்பதாம்;
ராவில் நிலைத்த துக்கம்
காலையில் களிப்பாம்.

4. மேலான வான காட்சி
கண்டாசீர்வாதத்தை
பெற்று; போர் ஓய்ந்து வெற்றி
சிறந்து, மாட்சிமை
அடையும் பரியந்தம்
இன்னா உழைப்பிலும்
நீங்காத சமாதானம்
மெய்ச்சபை வாஞ்சிக்கும்.

**240. Lubeck, Cyprus** **7s.**

**"Sieh, Wie lieblich und wie fein"**

**ஆ, சகோதரர் ஒன்றாய்**
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தல், எத்தனை
நேர்த்தியான இனிமை.

2. அது ஆரோன் சிரசில்
வார்த்துக் கீழ் வடிகையில்,
கந்தம் வீசும் எண்ணெய்க்கு
ஒத்ததாய் இருக்குது.

3. அது எர்மோன் மேலேயும்
சீயோன் மேடுகளிலும்
பெய்கிற ஆகாசத்து
நற் பணிக்கு ஒத்தது.

4. விண்ணில் ஆளும் சிரசே,
பிரிவினை நீக்கியே
க்றிஸ்தவர் எல்லாரையும்
நீர் ஒன்றாக்கியருளும்.

5. மேய்ப்பரே, நீர் ஐக்யத்தை
ஈந்து சிதறுண்டதை
ஏக மந்தையாகவும்
சேர்த்தணைத்துக் கொண்டிரும்.

6. நீரே நெஞ்சை நெஞ்சுடன்
கட்டி நேசத்தின் பலன்
நன்மை தின்மை நாளிலும்
தோன்றக் கட்டளையிடும்.

**241. Stuttgart** **8s, 7s.**

**"Go ye therefore, and teach all..."**

**அபிஷேகம் பெற்ற சீஷர்**
தேவ வாக்கைக் கூறினார்;
கட்டளை கொடுத்த மீட்பர்
"கூட இருப்பேன்" என்றார்.

2. யேசுவே, நீர் சொன்ன வண்ணம்
ஏழை அடியாருக்கே
ஊக்கம் தந்து நல்ல எண்ணம்
சித்தியாகச் செய்வீரே.

3. முத்திரிக்கப்பட்ட யாரும்
ஆவியால் நிறைந்தோராய்
வாக்கைக் கூற வரந்தாரும்,
அனல் மூட்டும் தயவாய்.

4. வாக்குத் தத்தம் நிறைவேற
சர்வ தேசத்தார்களும்
உம்தன் பாதம் வந்துசேர
அனுக்ரகம் செய்திடும்.

5. பிதா, சுதன், சுத்த ஆவி
என்னுந் தேவரீருக்கே
தோத்திரம், புகழ்ச்சி, கீர்த்தி
விண் மண்ணில் உண்டாகுமே!

**242. Tichfield** **(416)** **7s, 8l.**

**"One Lord, one faith, one baptism"**

**பிதா, சுதன், ஆவியே,**
ஏகரான தேவனே,
கேளும் நெஞ்சின் வேண்டலை
தாரும் சமாதானத்தை;
அன்புக்கேற்ற உணர்வும்
அந்நியோந்த ஐக்யமும்
ஈந்து ஆசீர்வதியும்,
திவ்ய நேசம் ஊற்றிடும்.

2. உம்தன் அடியாரை நீர்
ஒரே மந்தையாக்குவீர்;
ஒரே ஆவியும் உண்டே,
விசுவாசமும் ஒன்றே,
ஒன்றே எங்கள் நம்பிக்கை
ஐக்கியமாக்கி எங்களை
ஆண்டு கொள்ளும், கர்த்தரே,
ஏக சிந்தை தாருமே.

3. மீட்டுக் கொண்ட ஆண்டவா
அந்நியோந்ய காரணா,
ஜீவ நேசா, தேவரீர்
வேண்டல் கேட்டிரங்குவீர்;
பிதா, சுதன் ஆவியே,
ஏகரான தேவனே,
உம்தன் திவ்ய ஐக்யமும்
தந்து ஆட்கொண்டருளும்.

**243. Mainzer Boston - St. Lawrence** **L.M.**

**"Holy orders"**

**பூர்வீகத்தில் மெய்ப் பக்தரை**
தெரிந்துகொண்ட தேவரீர்
இவ்வேளை வந்தித் தாசரை
அன்பாக ஆசீர்வதிப்பீர்.

2. தெரிந்துகொண்ட பக்தர்கள்
எல்லாத்திசையும் சென்றனர்;
ஆவி நிறைந்து அவர்கள்
நற்செய்தி எங்கும் கூறினார்.

3. இவ்வேளை வந்தித் தாசரை
தேவாவியாலே நிரப்பும்;
மேலான ஞான வரத்தை
அன்பாகத் தந்து நடத்தும்.

4. அப்போஸ்தலர் விவேகமாய்
கர்த்தாவின் வாக்கை கூறவே
விரைந்து போன மேரையாய்
இத்தாசர் கூறச் செய்யுமே.

5. ஜெபத்திலும் விழிப்பிலும்
இடைவிடாமல் நிலைத்தே
தீவர்த்திபோல இவரும்
விளங்கச் செய்யும்; யேசுவே

**244. Veni Creator (I)** **L.M.**

**"Come, Holy ghost, our souls..."**

**மா தூய ஆவி, இறங்கும்,**
விண் தீபம் நெஞ்சில் ஏற்றிடும்;
ஞானாபிஷேகமான நீர்
நல் வரம் ஏழும் ஈகிறீர்.

2. மெய் ஜீவன், ஆறுதல், அன்பும்
நீர் வார்க்கும் வான தைலமே;
உம் ஜோதி வீசி நித்தமும்
ஆன்மாவின் மருள் அகற்றும்.

3. துன்புற்ற நெஞ்சைத் தேற்றவே
ஏராள அருள் பெய்யுமே;
மாற்றார் வராமல் ரட்சியும்;
சீர், வாழ்வு சுகம் ஈந்திடும்.

4. பிதா குமாரனோடு நீர்
திரியேகரா யிருக்கிறீர்
என்றே அறிந்து யாவரும்
பணிந்து போற்றப் போதியும்.

**245. Veni Creator (2), Melcombe** L.M.

"Come Holy Ghost, our souls"

**அடியார் நெஞ்சைத் தயவாய்**
அன்பால் நிரப்பி, உமக்கே
பொருந்தும் அலங்காரமாய்
படையும், தேவ ஆவியே.

2. மெய்த் தேற்றரவளிக்கிற
பர ஈவாய் இருக்கிறீர்;
வானாபிஷேகமாகிய
ஜீவாறும் நேசத் தீயும் நீர்.

3. வெளிச்சம் தாரும் மனதில்
சூடன்பை நெஞ்சிலே கொடும்,
சரீர பலவீனத்தில்
பலம் உண்டாக்கியருளும்.

4. அடியார் எச்சரிக்கையாய்
நீர் ஏவும்போல் நடக்கவே
பிசாசின் சூதைத் தூரமாய்
விலங்கும், மன வாசரே.

5. பிதா சுதனையும் நன்றாய்
அறிந்து அண்டிக்கொள்ளவே
நீர் எங்கள் தேவ வாத்தியாய்
இரும், இருவர் ஆவியே.

6. த்ரியேக தெய்வமாகிய
பிதா குமாரன் ஆவிக்கும்
எப்போதென்றைக்கும் சகல
புகழ்ச்சியும் உண்டாகவும்.

**246. Sohren, Sinai - Luther** **(417) 8, 7, 8, 7, 8, 8, 7.**

**"O Gott da ich gar keinen Rat"**

**கர்த்தாவே, என் பிறப்பினால்**
உமக்குத் தூரமான
நான் மீண்டும் விசுவாசத்தால்
உமக்குப் பிள்ளையான
சீர் அடைதல் மா பாக்கியம்;
ஆ, உமக்கென்றும் தோத்திரம்
பிதா, குமாரன், ஆவி!

2. த்ரியேகரான உம்மையே
நான் முழுப் பக்தியாக
பணிந்து உமக்கேற்கவே
நடப்பேன் என்பதாக
நான் பெற்ற ஞானஸ்நானத்தால்
உடன் படிக்கை செய்ததால்
இதை நினைப்பேனாக.

3. பாவத்தைத் தீராப் பகையாய்
என் உள்ளத்தில் பகைப்பேன்
என்றே நான் முழு உண்மையாய்
உமக்கு வாக்குத் தந்தேன்;
பிசாசு மாம்சம் லோகத்தை
நான் வெல்ல நற் சகாயத்தை
அன்பாகவே நீர் தாரும்.

4. நீர் தாரும் தேவ பலத்தால்
துரிச்சைக்கு நான் சாக,
கடன் என்மேல் இருப்பதால்
எந்நாளும் ஊக்கமாக
போராடிச் சிலுவையிலே
அதை அறைந்து போடவே
கர்த்தாவே, பெலன் தாரும்.

**247. Alstone, Holley** **L.M.**

"Let the Children come"

**தம்மண்டை வந்த பாலரை**
ஆசீர்வதித்த ரட்சகர்
இப்போதும் சிறுவர்களை
அணைக்கத் தயையுள்ளவர்.

2. குழந்தைகளுக்காகவும்
மரித்துயிர்த்த ஆண்டவர்
சிறந்த நன்மை வரமும்
தரக் காருண்யமுள்ளவர்.

3. ஆ யேசுவே, இப்பிள்ளையை
அனைத்து ஏந்தியருளும்,
அளவில் லாசீர்வாதத்தை
அன்பாகத் தந்திரட்சியும்.

**248. Quam Dilecta, Dolomite Chant.** **6s.**

"I hunger and I thirst"

**தீராத தாகத்தால்**
என் உள்ளம் தொய்யுதே!
ஆ! ஜீவ தண்ணீரால்,
தேற்றுமேன், யேசுவே.

2. விடாய்த்த பூமியில்
சகாயம் செய்யுமேன்;
நீர் போஷிக்காவிடில்,
திக்கற்றுச் சாகுவேன்.

3. தெய்வீக போஜனம்,
மெய் மன்னா நீர் தாமே;
விண்ணோரின் அமிர்தம்
தாரும், என் நாயனே.

4. மாசற்ற ரத்தத்தால்,
எம் பாவம் போக்குவீர்;
மெய்யாம் ஆகாரத்தால்
என் நெஞ்சைப் போஷிப்பீர்.

5. மா திவ்ய ஐக்கியம்
இதால் உண்டாக்குவீர்,
மேலான பாக்கியம்
அன்பாக ஈகுவீர்.

6. இவ்வருட் பந்தியில்
ப்ரசன்னமாகுமேன்;
என் ஏழை நெஞ்சத்தில்
நீங்காமல் தங்குமேன்.

**249. Esca Viatorum, Purieigh - Meribah** **8, 8, 6, 8, 8, 6.**

**"Wie wohi hast du gelabet"**

**என் யேசுவே, நீர் எத்தனை**
நன்றாகத் தேற்றுந் தயவை
இப்போது காண்பித்தீர்!
மகா உயர்ந்த விதமாய்
நீர் உம்மைப் பானம் ஊணுமாய்
அன்பாக அளித்தீர்.

2. தெய்வீக அன்பை நினைத்து
என் நெஞ்சை முற்றும் உமக்கு
என்றென்றும் படைப்பேன்;
இத்திவ்ய முத்ரை பெற்றோனாய்
உம் ரத்தம் மீட்ட தாசனாய்
நான் உம்மைச் சேவிப்பேன்.

3. இப்பந்தியில் விளங்கினீர்
மேலான நேசம் காட்டினீர்
ஆ! இன்னுந் தேவரீர்
கடாட்சஞ் செய்து, உம்மிலும்
நான் தங்க எந்த நேரமும்
என் நெஞ்சைத் தாங்குவீர்.

4. இவ்வண்ணந் தயை காண்பிக்கில்,
தெளிந்து ஜீவ பாதையில்
மலர்ந்தோனாகவே
உம்மைப் பின்பற்றி, யாவிலும்
களித்து, எந்தப் போரிலும்
நான் வெற்றிக் கொள்வேனே.

**250. St. Raphael** **8, 7, 8, 7, 4, 7.**

**"schmucke dich, o liebe seele"**

**ஆத்துமாவே, உன்னை ஜோடி;**
துக்கம் யாவையும் விடு;
மீட்பர் சமுகத்தைத் தேடி
சேர ஜாக்ரதைப்படு;
கர்த்தர் உன்னை
பந்திக்கு அழைக்கிறார்.

2. இந்தப் போஜனத்தின்மேலே
வாஞ்சையாய் இருக்கிறேன்;
உம்மையே, இம்மானுவேலே,
பக்தியாய் உட்கொள்ளுவேன்,
தேவரீரே
ஜீவ அப்பமானவர்.

3. மாசில்லாத ரத்தத்தாலே
என்னை அன்பாய் ரட்சித்தீர்;
அதை மா இரக்கத்தாலே
நெஞ்சத்துக்கு ஈகிறீர்;
இந்தப் பானம்
என்னைப் பெலப்படுத்தும்

4. உம்முடைய சாவின் லாபம்
மாட்சிமை மிகுந்தது;
என்னிடத்திலுள்ள சாபம்
உம்மால்தானே நீங்கிற்று;
இதை எண்ணி
உம்மை அன்பாய்ப் போற்றுவேன்.

அட்டவணை

**251. Abridge, Leicester - St. Flavian** **C.M.**

"O Jesu, meine Wonne"

**உம்மாலேதான் என் யேசுவே,**
ரட்சிக்கப்படுவேன்;
உம்மாலேதான் பேரின்பத்தை
அடைந்து களிப்பேன்.

2. இப்பந்தியில் நீர் ஈவது
பரம அமிர்தம்;
இனி நான் பெற்றுக்கொள்வது
அனந்த பாக்கியம்.

3. இவ்வேழை அடியேனுக்கு
சந்தோஷத்தைத் தந்தீர்;
இக்கட்டு வரும்பொழுது,
நீர் என்னைத் தேற்றுவீர்.

4. பூமியில் தங்கும் அளவும்
உம்மையே பற்றுவேன்;
எவ்வேளையும் எவ்விடமும்
நான் உம்மைப் போற்றுவேன்.

**252. Dies, Dominica - Day of Rest** **7s, 6s, 8l**

"O Jesu, meine Wonne"

**ஆ யேசுவே, உம்மாலே**
நான் மீட்கப்பட்டேனே;
உமது நீதியாலே
நான் சுத்தமானேனே;
மிகுந்த கஸ்தியாலே
என் குற்றத்தைத் தீர்த்தீர்;
உமது சாவினாலே
நீர் என்னை ரட்சித்தீர்.

2. நான் உம்மால் என்றும் வாழ,
இப்பந்தியில் நீரே

என் ஆவிக்கேற்றதான
அமிர்தம் தந்தீரே;
அன்போடு என்னைச் சேர்த்து,
இரக்கம் காண்பியும்;
என் குற்றத்தைப் பொறுத்து
மன்னிப்பை அருளும்.

3. நீர் இன்னும் என்னில் காணும்
பொல்லாங்கு யாவையும்
அகற்றிப்போட வாரும்
என்றைக்கும் ரட்சியும்;
நான் உம்மைப் பற்றிக்கொள்ள
நீர் என்னை ஏவுமேன்;
மிகுந்த தாழ்மையுள்ள
மனம் உண்டாக்குமேன்.

4. நல் மீட்பரே, உம்மோடு
நான் ஐக்யமாகவும்,
நாடோறும் வாஞ்சையோடு
மிகுந்த அன்பினாலே
துணை செய்தே இரும்;
துணை செய்தருளும்;
தெய்வீக அப்பத்தாலே
நீர் என்னைப் போஷியும்.

**253. Leicester, Beatitude** **C.M.**

"I am not worthy, Holy Lord"

**உம் அருள் பெற, யேசுவே,**
நான் பாத்திரன் அல்லேன்,
என்றாலும் தாசன் பேரிலே
கடாக்ஷம் வையுமேன்.

2. நீர் எனக்குள் ப்ரவேசிக்க,
நான் தக்கோன் அல்லவே;
நீர் என் பாழ் நெஞ்சை ஆசிக்க
நிமித்தம் இல்லையே.

3. ஆனாலும் வாரும் தயவாய்
மா நேச ரக்ஷகா;
என்றைக்கும் தங்கும் ஐக்யமாய்
என் பாவ நாசகா.

4. நற் கருணையாம் பந்திக்கும்
அபாத்ரன் ஆயினேன்;
நற் சீரைத் தந்து என்னையும்
கண்ணோக்கிப் பாருமேன்.

5. தெய்வீக பான போஜனம்
அன்பாக ஈகிறீர்;
மெய்யான திவ்ய அமிர்தம்
உட்கொள்ளச் செய்கிறீர்.

6. என் பக்தி, ஜீவன் இதினால்
நீர் விர்த்தியாக்குமேன்;
உந்தன் சரீரம் இரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமேன்.

7. என் ஆவி தேகம் செல்வமும்
நான் தத்தம் செய்கிறேன்;
ஆ! யேசுவே சமஸ்தமும்
பிரதிஷ்டை செய்கிறேன்.

**254. Pavai, Canonbury** **L.M.**

**"The body and blood of the Lord"**

**என் மீட்பர் யேசு கிறிஸ்துவே;**
உம் பாதத்தண்டை நிற்கிறேன்;
திக்கற்ற பிள்ளை கெஞ்சவே,
தள்ளாமல்சேர்த்துக் கொள்ளுமேன்.

2. என் க்ரியைகள் எம்மாத்திரம்?
ப்ரயாசை எல்லாம் விருதா;
உம்மாலேயே மெய்ப் பாக்கியம்
உண்டாகும் நேச ரட்சகா.

3. உம்தன் சரீரம் ரத்தமும்
மெய்ப்பொருள் என்று அறிவேன்;
உட்கொண்டன்பாய் அருந்தவும்,
நான் பரவசமாகுவேன்.

4. மாசற்ற திரு ரத்தத்தை
கொண்டென்னைச் சுத்திகரியும்;
மா திவ்ய ஜீவ அப்பத்தை
என் நெஞ்சத்தில் தந்தருளும்.

5. என் நாதா உம் சரீரமே
மேலான திவ்ய போஜனம்;
மாசற்ற உம்தன் ரத்தமே
மெய்யான பானபாக்கியம்.

**255. Beecher, Benediction. - Austria** **8s, 7s, 8l.**

**"A cheerful giver"**

**சங்கம் கூடி ஏழைக்கென்று**
நல் விவேகத்துடனே
அறஞ் செய்யும் குணம் நன்று
அதைத் தாரும், தேவனே;
ஆஸ்தியுள்ளவர்கள் வந்து
மா உதாரத்துடனே
ஏழைகள் மேல் தயை வைத்து
நன்மை செய்ய ஏவுமே.

2. நேசம் காட்டி ஓர் விதவை
நல்ல மனதுடனே
எளிமையில் போட்ட காசை
மேன்மையாய்ப் புகழ்ந்தீரே;
தேவனே, உம்மாலே நாங்கள்
நன்றாய்க் காக்கப்பட்டோமே
இம்மைக்கேற்ற பாக்கியங்கள்
உம்மால் பெற்றுக் கொண்டோமே.

3. நாதா, நீர் பொழிந்த அருள்
நாங்கள் எண்ணி, அவ்வாறே
எங்கள் சொந்தமான பொருள்
வறியோர்க்கு ஈயவே
தேவரீருக்கேற்றதான
தர்ம சிந்தை நிறைவாய்
எங்களுக்கிப் போதுண்டாக
ஏதும் மா கடாட்சமாய்.

**256. Charitas** **(418)** **8s, 7s, 8l.**

**"Lord of glory, who hast bought us"**

**லோக நாதா, மண்ணோர் மீள**
உம்தன் ரத்தம் சிந்தினீர்,
கெட்டுப்போனோர் என்றும் வாழ
உம்மைப் பலியாக்கினீர்;
நன்றிகெட்ட மாந்தர்க்கென்றும்
தயவாக, தேவரீர்
எண்ணிறந்த நன்மை சற்றும்
கைமாறின்றி ஈகிறீர்.

2. உம்தன் நேசக் காந்தியாலும்
எங்கள் நெஞ்சுருகியே,
அன்பில்லாத தன்மை யாவும்
நீங்கச் செய்யும், யேசுவே;
அதால் நாங்கள் ஏற்பதிலும்
ஈதல் நன்றென்றுணர்வோம்;
நீரே தந்த ஆஸ்தியிலும்
தான தர்மம் பண்ணுவோம்.

3. சிறியோர்க்குச் செய்த நன்மை
உமக்கிட்ட தர்மமே
என்றந்நாள் நீர் சொல்லும்வாக்கை
கேட்பதின்ப பாக்யமே;
சொத்து செல்வம் ஏதும் அற்ற
எளியோரால் தேவரீர்

தான தர்மங் கேட்பதாக
இதினாலே போதித்தீர்.

4. லோக நாதா, மண்ணோர் மீள
உம்தன் ரத்தஞ் சிந்தினீர்;
கெட்டுப்போனோர் என்றும் வாழ
உம்மைப் பலியாக்கினீர்;
உம்மை அண்டிப்பற்றிக் கொள்ள
நம்பிக்கை விஸ்வாசமும்
மா சிறந்த மேன்மையுள்ள
திவ்ய அன்பும் ஈந்திடும்.

**257. Waltham, All Saints** **3, 8, 7, 8, 7, 7, 7.**

**"We plough the fields and scatter"**

**காலம் தோறும் தயவாக**
தேவரீர் அளித்திடும்
பலவித நன்மைக்காக
என்ன ஈடுதான் தகும்?
எங்கள் வாயும் உள்ளமும்
என்றும் உம்மைப் போற்றிடும்.

2. ஏழை மாந்தர்கள் விதையை
பூமியில் விதைக்கிறார்;
கர்த்தரே அன்பாக அதை
முளைத்தோங்கச் செய்கிறார்;
ஏற்ற காலம் மழையும்
பெய்து பூண்டை நனைக்கும்.

3. உம்முடைய சித்தத்தாலே
காற்று வெயில் வீசுமே;
நீர் அனுப்பும் பனியாலே
பயிர்கள் செழிக்குமே;
எங்கள் கையின் வேலை நீர்
சித்தியாகச் செய்கிறீர்.

4. ஆதலால் மகிழ்ந்து நாங்கள்
உம்மை அன்பாய்த் துதிப்போம்
தாழ்மையோடு உமக்கெங்கள்
நெஞ்சத்தையே படைப்போம்;
தேகம் போஷிப்பிக்கும் நீர்
ஆவியையும் போஷிப்பீர்.

**258. Melcombe** **L.M.**

**"Bountiful harvests"**

**தயை நிறைந்த தேவனே,**
அறுப்புக் காலம் உம்மையே
துதித்துப் போற்றிப் பாடுவோம்,
நீர் செய்த நன்றி சொல்லுவோம்.

2. முன் மாரியும் பின் மாரியும்
அளித்து மா அன்பாகவும்
நிலத்தில் போட்ட வித்தை நீர்
நிறைந்த பலன் ஆக்கினீர்.

3. விளைச்சலை நீர் தந்ததால்
நாடெங்கும் மா மகிழ்ச்சியால்
நிரம்பித் தேவரீருக்கு
சங்கீதம் பாடுகின்றது.

4. வயல் விளைந்த வண்ணமே
நல்வார்த்தை எங்கள் நெஞ்சிலே
பலித்து நற்கனிகளும்
கொடுக்க அருள் ஈந்திடும்.

5. கடைசி நாள் அறுப்புக்கே
தூதர்கள் வரும்பொழுதே
எல்லாரும் ஆயத்தமாகவே
இருக்கப்பண்ணும், கர்த்தரே.

**259. Redhead 4** **L.M.**

**"God's temple"**

**கர்த்தாவே, இந்தக் கோவிலை**
கட்டி உம்மாலே முடித்தோம்;
அன்பாக, தேவரீர், இதை
கண்ணோக்கக் கெஞ்சி நிற்கிறோம்.

2. இங்கே உம் தாசர் தாழ்மையாய்
தம் பாவத் தன்மை உணர்ந்தே
மன்றாடும்போது தயவாய்
ஜெபத்தைக் கேளும், தேவனே.

3. உமது தயை, மாட்சிமை
அதில் எப்போதும் விளங்கும்
ஆராதிப்போரின் நெஞ்சத்தை
ஆலயமாக்கியருளும்.

4. பிதா குமாரன் ஆவியே,
இங்கே ப்ரசன்னமாயிரும்,
சீர் பாதம் அண்டும் தாசர்க்கே
நல் ஆசீர்வாதம் அளியும்.

**260. Moscow - Italian Hymn** **(420)** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**"Supplication"**

**பரம சேனைக்கும்**
பூலோகத்தாருக்கும்
ஆண்டவரே,
அன்பு நிறைந்தவர்,
இரக்கமுள்ளவர்
கிருபை செய்பவர்
தேவரீரே.

2. உம் மகிமைக்கென்றே
இவ்வாலயத்தையே
காணிக்கையாய்
படைக்கக் கூடினோம்,

ப்ரதிஷ்டை செய்கிறோம்,
கொண்டாடிட நிற்கிறோம்,
ஆனந்தமாய்.

3. உயர்ந்த வானமும்
விசால பூமியும்
நிறைக்கும் நீர்
தயவைக் காண்பிக்க,
சபையைக் காண்பிக்க,
இங்கே ப்ரகாசிக்க,
வந்தருள்வீர்.

4. குருக்கள் ஜனங்கள்
செலுத்தும் ஜெபங்கள்
மா தயவாய்
இங்கே கேட்டருளும்,
கிருபை காண்பியும்,
கெட்டோரை ரட்சியும்,
வல்லமையாய்.

5. அப்போது இங்கேயும்
பின் மோட்ச வீட்டிலும்
உமக்கென்றே
கனமுந் துதியும்
அன்புடன் நன்றியும்
என்றென்றும் எழும்பும்,
ஆண்டவரே.

**261. St. Godric. St. John - (Havergal), Lenox** **6, 6, 6, 6, 8, 8.**

**"Blow ye the trumpet, blow"**

**கர்த்தாவின் தாசரே,**
எக்காளம் ஊதுங்கள்;
சந்தோஷ செய்தியை
எங்கெங்கும் கூறுங்கள்;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

2. எல்லார் முன்பாகவும்
யேசுவை உயர்த்துங்கள்,
அவரே யாவர்க்கும்,
ரட்சகர் என்னுங்கள்;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

3. மோட்சத்தைப் பாவத்தால்
இழந்த மாந்தரே,
க்றிஸ்துவின் ரத்தத்தால்
மோட்சம் கிடைக்குமே;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

4. பாவம் பிசாசுக்கும்
சிறைப்பட்டோர்களே,
உங்களை ரட்சிக்கும்
மீட்பர் நல் யேசுவே;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

5. சந்தோஷ செய்தியை
எல்லாரும் கேளுங்கள்,
அன்போடு யேசுவை
இப்போதே சேருங்கள்;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

**262. St. Thomas, Helmsley** **8s, 7s, 6l.**

"Let all nations come"

**தேசத்தார்கள் யாரும் வந்து**
சுவிசேஷ வார்த்தையே
கேட்டு உம்தன் ஜோதிகண்டு,
சேவிப்பார்கள் என்றீரே;
ஆ கர்த்தாவே,
வாக்கை நிறைவேற்றுமேன்.

2. வையகம் எல்லாம் மிகுந்த
புத்தியீன முள்ளது,
அதால் மாந்தர்க்குள் புகுந்த
கேடு மா பலத்தது,
ஆ கர்த்தாவே,
மாந்தரை இரட்சியும்.

3. உம்முடைய வார்த்தை சொல்ல
போகும் போதகர்களை
நீர் பலப்படுத்தி, நல்ல
புத்தி தந்து நேசத்தை
ஆவியாலே
ஊழியர்க்கு ஈந்திடும்.

4. வார்த்தை கேட்கும் ஊர் ஜனங்கள்
உண்மையை உணரவும்
அங்கங்குள்ள பொய் மதங்கள்
யாவும் நீங்கிப்போகவும்,
தூய வல்ல
ஆவியைக் கடாட்சியும்.

**263. Missionery Hymn** (421) 7s, 6s, 8l

**"India's coral strand"**

**இமால்ய மலையேறி**
தேசாந்தம் நோக்குமேன்,
வங்காளக்கடல் தாண்டி,
மேற்றிசை வாருமேன்;
எத்தனையோ அநேகர்
விக்ரக பக்தியால்
இழுப்புண்டு போனார்கள்
மெய்யறிவின்மையால்.

2. இச்செல்வ தேசம் யாவும்
மா செழிப்பாயினும்,
நற் புஷ்பச் செடி எங்கும்
சுகந்தம் வீசினும்;
ஐயோ! நரரின் நெஞ்சு
துர்க்கந்த முற்றதால்
சாத்தான் வலையில் வீழ்ந்து
மாள்வாரே பாவத்தால்.

3. நாஸ்திகம், லோக ஞானம்,
விக்ரக பக்தியும்
புராண நம்பிக்கையும்
அவபக்தியுமே
நிர்மூலமாக்கி, நல்ல
ப்ரகாசம் காட்டுவீர்,
கர்த்தாவே நீரே வல்ல
மெய் வேதம் ஸ்தாபிப்பீர்.

4. ஐரோப்பா ஆசியாவும்
ஆப்ரிக்கா கண்டமும்
எத்திசை தேசம் யாவும்
பூலோகம் அனைத்தும்
இம்மானுவேலைச் சேரும்
சுதந்த்ர சொந்தமாய்;
யேசுவின் மார்க்கம் நிற்கும்
மகா ப்ரபல்யமாய்.

5. யேசுவினாலுண்டான
நற்செய்தி பாடுவோம்;
பேரன்பின் மகத்தான
ரட்சிப்பைக் கூறுவோம்;
பூலோக மெங்குமாக
பேரொளி வீசவே,
யேசுவே, ராஜாவாக
வந்தர சாள்வீரே

**264. Regent square - Dismissal** **8, 7, 8, 7, 4, 7.**

**"O'er the gloomy hills of darkness"**

**காரிருளால் மூடப்பட்ட**
பர்வதங்கள் மேலே பார்;
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
ஜோதி தோன்றச் செய்கிறார்;
அதற்காக
நெஞ்சமே, மகிழ்ச்சி கொள்.

2. கல்வாரியில் பட்டபாட்டை
எண்ணி, மானிடர்களில்
அன்பு வைத்து மா ரட்சிப்பை
செய்து மோட்ச மார்க்கத்தில்
முன் நடந்து,
மோட்சத்தை சம்பாதித்தீர்.

3. அதைத் தேசத்தார் எல்லாரும்
காணச் செய்யும், கர்த்தரே;
அந்தகாரமுள்ள யாரும்
அதால் சீராவார்களே
நீர் சகித்த
சாவின் பலன் அதுவே.

4. இப்போ லட்ச லட்சமான
பேர்கள் அருள் பெற்றது
உம்முடைய உண்மையான
அன்பினாலே ஆயிற்று;
அதற்காக
உமக்கே மா ஸ்தோத்திரம்.

**265. Wareham** **L.M.**

**"Look down, O God, with pitying..."**

**கர்த்தாவே, பூதலத்திலே**
உண்டான கேட்டைப் பாருமேன்
எத்தேசமும் இருளிலே
இருந்து நீங்கச் செய்யுமேன்.

2. நீரே மெய்த் தேவன்; மாந்தர்கள்
வீணான மார்க்கமாகவே
பொன், வெள்ளி, மண், கல் வீரர்கள்
தேவர்கள் என்கிறார்களே.

3. வல்லவரான க்றிஸ்துவே,
அப்பொய்களை அகற்றுமேன்;
தெய்வீக வார்த்தையால் நீரே
துன்மார்க்கத்தை அதட்டுமே.

4. எல்லாரும் ஏக சித்தமாய்
மெய்த்தேவனான உம்மையே
அறிந்து உம்மேல் நேசமாய்
இருக்கச் செய்யும் கர்த்தரே.

**266. German Hymn (Pleyel's)** **7s.**

**"Light of day"**

**பட்டப்பகல் போலவே**
இருள் யாவும் நீங்கவே,
மீட்பரே, நீர் எழும்பும்,
லோகம் எங்கும் ஆண்டிடும்.

2. அன்பின் ராஜ்ஜியம் எங்கும்
பரவச் செய்தருளும்;
எல்லாப் பொய் மதங்களும்
நாசமாகச் செய்திடும்.

3. யூதர், புறச் சாதியார்
சேர்ந்து உம்மைப் பணிவார்;
பூமி எல்லாம் உம்மையே
போற்றித் தொண்டு செய்யுமே.

4. சத்ய சுவிசேஷத்தை
அனுப்பி இப்பூமியை
எல்லாம் சொந்தமாகவே
ஆண்டுகொள்ளும் யேசுவே

**267. Galilee, Missionary Chant** **(422)** **L.M.**

**" Jesus shall reign where's the sun"**

**பகலோன் கதிர்போலுமே**
யேசுவின் ராஜரீகமே
பூலோகத்தில் வியாபிக்கும்,
நீடூழி காலம் வர்த்திக்கும்.

2. பற்பல ஜாதி தேசத்தார்
அற்புத அன்பைப் போற்றுவார்;
பாலரும் இன்ப ஓசையாய்
ஆராதிப்பார் சந்தோஷமாய்.

3. நல் மீட்பர் ராஜ்ஜியம் எங்குமே,
சிரேஷ்ட பாக்கியம் தங்குமே;
துன்புற்றோர் ஆறித் தேறுவார்;
திக்கற்றோர் வாழ்ந்து பூரிப்பார்.

4. பூலோக மாந்தர் யாவரும்
வானோரின் சேனைத் திரளும்
சாஷ்டாங்கம் செய்து போற்றுவார்,
நீர் வாழ்க, ராயனே "என்பார்."

**268. Erk, Luther** **6, 7, 8, 7, 8, 8, 7.**

"Es woll uns Gott genadig sein"

**பலத்த தேவ வார்த்தையை**
எல்லா இடமுமாக,
கடாட்சித்து நற்செய்தியை
எல்லாருக்குள்ளுமாக
விளங்கப்பண்ணும், யேசுவே,
எல்லாரையும் ரட்சிக்கவே
பூலோகத்துக்கு வந்தீர்.

2. கர்த்தாவே பொய் மதங்களை
நியாயந் தீர்த்தழித்து,
மாந்தர்க்கு ஜீவ மார்க்கத்தை
அன்பாகவே காண்பித்து,
எல்லா வகை துன்மார்க்கமும்
ஒழிந்துபோகச் செய்திடும்;
அதற்குப் பாடுபட்டீர்.

3. கர்த்தாவே, எந்த தேசமும்
உமக்குள்ளாவதாக,
உம்மை எல்லா ஜனங்களும்
துதி செய்வார்களாக;
நீர் மாத்திரம் மெய்த் தேவனே;
புகழ்ச்சி உமக்கேற்றதே;
அதை நீர் ஏற்றுக்கொள்ளும்.

**269. Vienna** **(423) 7s.**

**"Prayer for victory"**

**மா அன்புள்ள யேசுவே**
மானிடர்கள் பேரிலே
நீர் இரங்கி, யாரையும்
சீர்படுத்தி ரட்சியும்.

2. தேவரீர் ஜெயங் கொண்டீர்,
அதைக் கூறப் பண்ணினீர்;
மீட்கப்பட்ட யாருக்கும்
வெற்றியில் பங்களியும்.

3. எங்கும் மானிடர்களே
தங்கள் கேட்டைக் காணவே
புத்தியைக் கடாட்சியும்,
கேட்டை நீக்கி ரட்சியும்.

4. சத்ய சுவிசேஷத்தை,
தேவரீரின் தயவை
மாந்தர் யாரும் பற்றவே
செய்யும்; நல்ல மீட்பரே.

**270. Breslau, Melcombe** **L.M.**

**"O Jesu Christe, Wahres licht"**

**மெய் ஒளியான யேசுவே,**
இருளிலுள்ளோர் பேரிலே
இரங்கி, மாந்தர் யாருக்கும்
வெளிச்சம் கட்டளையிடும்.

2. பொய்ப் போதகத்தில் உழன்று
சீர்கெட்டுப்போன மாந்தர்க்கு
மெய்ஞ்ஞானம் நெஞ்சில் தோன்றவே
உணர்த்தும் குருநாதரே.

3. காணாமல் போன பாவியை
அன்பாய் நீர் தேடி அவனை
உம்மண்டையில் சேர்த்தருளும்,
இனி கெடாமல் ரட்சியும்.

**271. St. Cecilia, Mosely.** **6s.**

**"Thy Kingdom come, O God"**

**கிறிஸ்து ராயரே,**
வந்தாளுகை செய்யும்;
வெம் பாவம் நீங்கவே
செங்கோலைச் செலுத்தும்.

2. விரோதம் நீங்கியே,
விண் போல மண்ணிலும்
தூய்மையும் அன்புமே
எப்போது செழிக்கும்?

3. உம் வாக்குக்கேற்றதாய்
வீண் போரும் பகையும்
சீர் கேடும் முற்றுமாய்
எப்போது ஒழியும்?

4. எழும்பும், கர்த்தாவே,
வல்லராய் வாருமேன்,
தாசர் தவித்தோமே,
வந்தாற்றித் தேற்றுமேன்.

5. உம் மார்க்கம் நாமமும்
பலர் பழிக்கின்றார்;
துர்க் கிரியைப் பலரும்
நாணாமல் செய்கின்றார்.

6. பற்பல தேசமும்
அஞ்ஞானம் மூடிற்றே;
விண் ஜோதி வீசிடும்,
மா விடி வெள்ளியே.

**272. Warringtom, Old Hundredth (424) L.M.**

**"The Church triumphant"**

**மேலோக வெற்றி சபையும்**
பூலோக யுத்த சபையும்
ஒன்றாகக் கூடிச் சுதனை
துதித்துப் பாடும் கீர்த்தனை.

2. ராஜாக்களுக்கு ராஜாவே,
கிருபாதார பலியே,
மரித்தெழுந்த தேவரீர்
செங்கோல் செலுத்தி ஆளுவீர்.

3. பூமியில் உள்ள தேசத்தோர்,
பற்பல பாஷை பேசுவோர்,
எல்லாரையும் ஒன்றாகவே
இழுத்துக் கொள்வேன் என்றீரே.

4. கிரேக்கர், யூதர், தீவார்கள்;
ராஜாக்கள், குடி ஜனங்கள்,
கற்றோர், கல்லாதோர், யாவரும்
வந்தும்மைப் போற்றச் செய்திடும்.

5. பொன், வெள்ளி, முத்து, ரத்னமும்
எல்லாப் பூலோக மேன்மையும்
காணிக்கையாக உமக்கே
செலுத்தப்படும் இயேசுவே.

**273. Luther, Brk** **8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Herr Gott, der du den Ehestand"**

**பிதாவே மெய் விவாகத்தை**
கற்பித்துக் காத்து வந்தீர்
நீர் அதினாலே மாந்தரை
இணைத்து வாழ்வைத் தந்தீர்;
அதற்கெப்போதும் கனமும்
மிகுந்த ஆசீர்வாதமும்
நீர் தாமே வரப்பண்ணும்.

2. நன்னாளிலும் துன்னாளிலும்
மனம் பொருந்தச் செய்யும்;
இவர்கள் இருபேரையும்
அன்பில் நிலைக்கப்பண்ணும்;
உம்மை முன்னிட்டு ஏதெதை
செய்வார்களோ; நீரே அதை
நன்றாக வாய்க்கப்பண்ணும்.

3. ஆ! ஜீவ ஊற்றாம் யேசுவே,
நீர் ஜீவன் ஈகிறீரே;
ஆத்துமத்தையும் நித்தமே
நீர் தேற்றி நிற்கிறீரே;
ஆ! ஞான மணவாளனே,
என்றைக்கும் அடியாருக்கே
குறைச்சல் ஒன்றும் இல்லை.

**274. Luther, Erk** **(426)** **8, 7, 8, 7, 8, 8, 7.**

**"O Father, all created things"**

**பிதாவே ஞானம் அன்பினால்**
அனைத்தையும் படைத்தீர்;
ஏதேனிலே விவாகத்தால்
ஆண் பெண்ணையும் இணைத்தீர்
அப்பூர்வ ஆசீர்வாதத்தை,
இல்வாழ்க்கையின் நல்லின்பத்தை
இவர்களுக்கும் ஈயும்.

2. கானா ஊர் விருந்தாளியே,
இங்கே ப்ரசன்னமாகும்;
உம்தன் சம்பூரணத்தாலே
குறைவை நிறைவாக்கும்;
இவர்கள் இக இன்பமே
பரத்தின் பாக்கியமாகவே
நீர் மாறும்படி செய்யும்.

3. புனித ஆவி தேவரீர்
இவர்கள் மேலே ஊதும்;
உம் தூய்மை அன்பினாலும் நீர்
இவர்களைத் தற்காரும்;
எப்பாவத்துக்கும் நீங்கியே,
ஒரே சரீரம் போலவே
இவர்கள் வாழச் செய்யும்.

4. த்ரியேகா நீர் கட்டாவிடில்,
ப்ரயாசம் வீணே ஆகும்;
நீர் ஆசீர்வதிக்காவிடில்
இன்பமும் துன்பமாகும்;
உம்மால் இணைக்கப்பட்டோரை
குன்றாத நேசமுள்ளோரை
யார்தான் பிரிக்கக்கூடும்?

**275. St. Alphege** **7s, 6s.**

**"The voice that breathed o'er Eden"**

**ஏதேனில் ஆதி மணம்**
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே.

2. இப்போதும் பக்தியுள்ளோர்
விவாகம் தூய்மையாம்;
மூவர் ப்ரசன்னமாவார்,
மும்முறை வாழ்த்துண்டாம்.

3. ஆதாமுக்கு ஏவாளைக்
கொடுத்த பிதாவே,
இம்மாப்பிள்ளைக் குப்பெண்ணை
அளிக்க வாருமே.

4. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே,
இவர் இரு கையும்
இணைக்க வாருமே.

5. மெய் மணவாளனான
தேவ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே.

6. நீரும் இந்நேரம் வந்து
இவ்விரு பேரையும்
இணைத்து, அன்பாய் வாழ்த்தி
மெய்பாக்கியம் ஈந்திடும்.

**276. O perfect love** **11, 10, 11, 10.**

**"O perfect Love, all human thought transcending"**

**புத்திக்கெட்டாத அன்பின் வாரி பாரும்,**
உம் பாதம் அண்டினோமே, தேவரீர்
விவாகத்தால் இணைக்கும் இரு பேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்.

2. ஆ! ஜீவ ஊற்றே, இவரில் உம் நேசம்,
நல் நம்பிக்கையும், நோவு சாவிலும்
உம் பேரில் சாரும் ஊக்க விசுவாசம்
குன்றாத தீரமும் தந்தருளும்.

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி,
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்;
வாழ்நாளின் ஈற்றில் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன், அன்பும் நல்குவீர்.

**277. Ephraim, Redheard 45** **7s.**

"God's blessing"

**வாழ்க, நேசமுள்ளோரே!**
இனம் இனம் யாருமே,
களிப்புடன் கூடுங்கள்,
வாழ்த்தல் சொல்லிப் பாடுங்கள்.

2. கர்த்தர் தாமே ஆதியில்
பாவம் இல்லாக் காலத்தில்
தந்தை தாயை நேசமாய்
சேர்த்திணைத்தார் ஏகமாய்.

3. நெஞ்சை நெஞ்சுடன் அன்பாய்
ஐக்யமாக்கி, தயவாய்
இல்லறத்தின் வாழ்விலே
பாதுகாரும் யேசுவே.

**278. Innocents, St. Bees** **7s.**

"Prayer for the bride and bridegroom"

**லோகம் ஆளும் ஆண்டவர்,**
ஆணும் பெண்ணும் செய்தனர்,
இரு பேரும் வாழவே
ஆசீர்வாதம் தந்தாரே.

2. ஆதலால் விவாகமே
மேன்மையுள்ள தாயிற்றே;
இந்த நன்மைக்காகவும்
ஸ்தோத்திரம் உண்டாகவும்.

3. தேவ வாக்குக் கேற்றதாய்
விசுவாச முள்ளோராய்
நடப்போர்க்கு நன்மையே
தவறா தளிப்பாரே.

4. இந்த இரு பேரையும்
கர்த்தரே புகழ்ச்சியே
இவரால் புகழ்ச்சியே
தேவரீர்க்குண்டாகவே.

**279. Everton, Deerhurst - Austria** **8s, 7s, 8l.**

**"Hilf, Herr Jessu, lass gelingen"**

**வருஷப் பிறப்பாம் இன்று**
புதுப்பக்தியுடனே
தேவரீரிடத்தில் வந்து
வாழ்த்தல் செய்ய யேசுவே
உம்தன் ஆவியை அளித்து
என்னைப் பலப்படுத்தும்,
அடியேனை ஆதரித்து,
வழி காட்டியாய் இரும்.

2. இது கிருபை பொழியும்
வருஷம் ஆகட்டுமேன்;
என்னில் ஒளி வீசச் செய்யும்!
என் அழுக்கை அடியேன்
முழுவதும் கண்டறிந்து
அருவருக்கப் பண்ணும்;
பாவம் யாவையும் மன்னித்து
நற்குணத்தை அளியும்.

3. நீர் என் அழுகையைக் கண்டு
துக்கத்தாலே கலங்கும்
அடியேனைத் தேற்றல் செய்து
திடன் அளித்தருளும்;
இந்த புது வருஷத்தில்
பாவத்துக்கும் கேட்டுக்கும்
தப்புவித்து, என்னிடத்தில்
கிருபை கூர்ந்தருளும்

4. பூரிப்பாய் இவ்வருஷத்தை
நான் முடிக்க என்னை நீர்
தாங்கி உம்தன் திருக்கையை
என்மேல் வைக்கக் கடவீர்;
வருத்தம் வந்தாலும், உம்மை
நம்பிப் பற்றிக்கொள்ளுவேன்
மரித்தாலும், பேரின்பத்தை
நான் அடைந்து வாழுவேன்.

**280. Monkland.** **7s.**

**"Safely through another year"**

**இன்னோர் ஆண்டு முற்றுமாய்**
எங்களை மகா அன்பாய்
காத்து வந்தீர் யேசுவே;
உம்மைத் துதி செய்வோமே.

2. நீரே இந்த ஆண்டிலும்
எங்கள் துணையாயிரும்;
எந்தத் துன்பம் தாழ்விலும்
கூடத் தங்கியருளும்.

3. யாரேனும் இவ்வாண்டினில்
சாவின் பள்ளத்தாக்கினில்
செல்லின், உம்தன் கோலாலே
தேற்றும் நல்ல மேய்ப்பரே.

4. நாங்கள் உம்தன் தாசராய்,
தூய்மை பக்தி உள்ளோராய்
சாமட்டும் நிலைக்க நீர்,
காத்து கிரீடம் ஈகுவீர்.

5. ஏக கர்த்தராம் நீரே
மன்னர் மன்னன் எனவே
என்றும் உம்மைப் போற்றுவோம்
உம்தன் வீட்டில் வாழுவோம்.

**281. Arg** **7s.**

**"Nun lasst uns gehn und treten"**

**இம்மட்டும் ஜீவன் தந்த**
கர்த்தாவை அத்தியந்த
பக்தி விநயமாக
பாடித் துதிப்போமாக.

2. திக்கற்றவரைக் காரும்,
நோயாளிகளைப் பாரும்,
துக்கித்தவரைத் தேற்றும்,
சாவோரைக் கரையேற்றும்.

3. பரத்துக்கு நேராக
நடக்கும்படியாக
அடியாரை எந்நாளும்
தேவாவியாலே ஆளும்.

4. அடியார் அத்தியந்த
பணிவாய்க் கேட்டு வந்த
நன்மைகளை அன்பாக
அருளிச் செய்வீராக.

**282. God of the Living - Mauricewood** **9, 8, 9, 8, 8, 8.**

"Wer weiss, wie nehe mir mein..."

**நாள்போம், என்சாவுவேளைசேரும்**
இதெத்தனை சமீபமோ?
என் ஜீவ ஓட்டம் நிறைவேறும்
அவஸ்தை எப்போ காணுமோ?
ஆ! உம் அடைக்கலத்திலே
மரிப்பேனாக, யேசுவே.

2. காலையில் சுகமாயிருந்து,
ரா வருமுன் நான் சாகலாம்
என் காலை எங்கே நான் வைத்தாலும்
என் பிராணனுக்கு மோசமாம்
ஆ! உம் அடைக்கலத்திலே
மரிப்பேனாக யேசுவே.

3. கர்த்தாவே, க்றிஸ்தின் நீதியாலே
என் பாதகத்தை மூடுமேன்;
நான் அதை விசுவாசத்தாலே
உடுத்தி சுத்தமாகிறேன்;
ஆ! உம் அடைக்கலத்திலே
மரிப்பேனாக, யேசுவே.

4. என் ஜீவன் இன்றைக்கு போனாலும்
என் மீட்பரால் நான் பாக்கியன்,
என் சாவு நாளைக்கு வந்தாலும்,
அவர்க்குள் நான் நிலைப்பவன்;
ஆ! உம் அடைக்கலத்திலே
மரிப்பேனாக, யேசுவே.

5. நீர் இங்கே என்னை வைத்திரக்கும்
நாள் மட்டும் என்னை உமக்கே
பிரியனாக என்றென்றைக்கும்
நடத்தும் கடைசியிலே
நான் உம் அடைக்கலத்திலே
மரிப்பேனாக, யேசுவே.

**283. Mannheim, Life** **8, 7, 8, 7, 4, 7.**

**"What is your life?"**

**தோழனே உன் ஜீவன், இங்கே**
என்றென்றைக்கும் நிற்குமோ?
தோன்றிப் போகும் புகைபோல்
அது நீங்கும் அல்லவா?
ஆயுள் நாளை
நீ ஆதாயம் பண்ணிக்கொள்.

2. இவ்வுலகில் உள்ள பொருள்
நிலையாமல் நீங்குமே;
பரலோக பொக்கிஷங்கள்
என்றென்றைக்கும் நிற்குமே;
திடன் கொண்டு
அவையே நீ தேடிக்கொள்.

3. மாந்தர் மேன்மை மேட்டிமைகள்
புல்லைப் போல உலர்ந்துபோம்,
லோகக் கல்வியோசனைகள்
சீக்கிரம் ஒழிந்துபோம்;
பெலவானும்
பெலனற்றவன் ஆவான்.

4. தேக சொஸ்தமுள்ளவர்கள்
நினையா நேரத்திலே
இம்மை விட்டுப் போகிறார்கள்;
இதை எண்ணி, தோழனே
சாவுக்கென்று
பக்தியோடு காத்திரு.

5. சாவின்மேலே ஜெயங்கொண்ட
பாவ நாசர் பாதத்தை
தஞ்சமென்று வந்தடைந்த
ஆத்துமாவின் பயத்தை
அவர் நீக்கி
நீங்கா வாழ்வை ஈகுவார்.

**284. Rutherford** **7s, 6s, 8l.**

"The sands of time are sinking"

**என் ஜீவன் போகும் நேரம்**
சமீபம் வந்ததே;
பேரின்ப அருணோதயம்,
இதோ! விடிந்ததே;
ராக் கால மோசம் நீங்கும்
விண் சுடரொளியில்;
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில்.

2. ஆ, நேச ஜீவ ஊற்று
என் அருள் நாதரே!
ஈண்டுண்ணும் ஜீவ தண்ணீர்
அங்காழி போலாமே;
பேரன்பின் பெரு வெள்ளம்
பாய்ந்தோடும் மோட்சத்தில்
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில்;

3. அன்போடும் நீதியோடும்
என் சுக துக்கமும்
ஆண்டென்னைப் பாதுகாத்து
வந்தார் எந்நேரமும்;
ஆ! போற்றுவேன் தேவன்பை
ஆனந்த கடலில்
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில் .

4. நல் நித்திரை செய்து பின்பு
மாசற்றெழும்புவேன்;
என் மீட்பரை நான் கண்டு
ஆனந்தம் அடைவேன்;
ராஜாதி ராஜன் என்னை
அழைக்கும் நேரத்தில்
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில் .

5. தன் ஆடையைப் பாராமல்
பர்த்தாவின் முகத்தை
பத்தினி நோக்குமாறு,
நான் ஜீவ க்ரீடத்தை
நோக்காமல், மீட்பர் மாண்பை
பார்ப்பேன் அவ்வேளையில்;
இம்மானுவேலே ஜோதி
பேரின்ப தேசத்தில்!

**285. St. Alphege** **7s, 6s.**

**"Christus, der ist mein Laben"**

**என் ஜீவன் கிறிஸ்து தாமே,**
அதாலே எனக்கு
என் சாவாதாயமாமே;
நெஞ்சே, மகிழ்ந்திரு.

2. நான் இயேசு வசமாக
சேர்ந்தென்றும் வாழவே,
மகா மகிழ்ச்சியாக
பிரிந்து போவேனே.

3. பாடற்றுபோம், அந்நாளே
என் நோவும் முடியும்;
என் மீட்பர் புண்யத்தாலே
மெய் வாழ்வு தொடங்கும்.

4. நான் பேச்சு மூச்சில்லாமல்
குளிர்ந்து போகச்சே
என் ஆவியைத் தள்ளாமல்
கண்ணோக்கும், கர்த்தரே.

5. அப்போது நான் அமர்ந்து,
கலக்கம் இன்றியே
நான் நித்திரை அடைந்து
சுகிப்பேன் யேசுவே.

**286. Requiem, Evensong - All Saints 3** **8, 7, 8, 7, 7, 7.**

"What is life? tis but a vapor"

**லோக ஜீவன் நிலையற்ற**
புகைக்கு ஒப்பானதே;
வாடிப்போகும் பூவைப்போல
அது மாண்டுபோகுமே;
நெஞ்சமே, பரத்தைப் பார்;
யேசு சாவை ஜெயித்தார்.

2. மோட்ச ஜோதி எண்ணிறந்த
மேன்மையாய்ப் ப்ரகாசிக்கும்;
ஆ! அங்கே வெற்றி சிறந்த
மீட்பர் ஆளுவார் என்றும்;
நெஞ்சமே பரத்தைப் பார்;
யேசு வாசல் திறந்தார்.

3. ஆசனத்தைச் சூழ நிற்கும்
தூதர் கோடாகோடியாய்
அவர் அன்பைப் போற்றி என்றும்
பாடுவார்கள் இன்பமாய்;
நெஞ்சமே, பரத்தைப் பார்;
யேசு உன்னை ரட்சித்தார்.

4. மீட்கப்பட்ட சேனையோடு
நானும் நின்று பாடுவேன்;
என்னை மீட்ட அன்பைப் பார்த்து
மீட்பரை நான் போற்றுவேன்
நெஞ்சமே, பரத்தைப் பார்;
யேசு கரை ஏற்றுவார்.

**287. Unser Herrscher, - Triumph** **8s, 7s, 6l.**

**"Meines Lebens be to Freude"**

**மோட்ச மண்டலத்திலுள்ள**
மாட்சிமை என் பாக்யம்;
க்றிஸ்து என்னும் நேசமுள்ள
ரட்சகர் என் பொக்கிஷம்;
மோட்ச லோக
நன்மையே என் ஆறுதல்.

2. மானிடர் மண்ணாஸ்தியாலே
தங்களைத் தேற்றட்டுமேன்
நான் என் நெஞ்சை யேசுவாலே
தேற்றி விண்ணை நோக்குவேன்
ஆஸ்தி போகும்.
நிரோ என்றும் நிற்கிறீர்.

3. க்றிஸ்துவால் எனக்குயர்ந்த
ஆஸ்திகள் உண்டாயிற்று,
விக்கினங்களால் நிறைந்த
லோக ஆஸ்தி எதுக்கு?
க்றிஸ்து நாதா
என்றுமுள்ள பொக்கிஷம்.

4. அந்த மோட்ச மண்டலத்தில்
நான் என் பங்கடையவே
நீர்தான் இவ்வனாந்தரத்தில்
நீங்கிடாச் சகாயரே;
நான் என்றைக்கும்
உம்முடன் இருப்பேனே.

**288. The Blessed Home. (427) 6s, 8s.**

**"There is a blessed Home"**

**விண் வாசஸ்தலமாம்**
பேரின்ப வீடுண்டே;
கிலேசம் பாடெல்லாம்
இல்லாமல் போகுமே;
காணாதவைகளை
கண்ணாலே நோக்குவோம்,
விண் ஜோதி மகிமை
அடைந்து பூரிப்போம்.

2. தூதர் ஆராதிக்கும்
பேர் வாழ்வின் நாடதாம்;
அங்கே ஆர்த்தொலிக்கும்
ஓயாத கீதமாம்;
த்ரியேகர் ஜோதியாய்
ப்ரசன்னமாகுவார்;
தூயோர் மா திரளாய்,
"வாழ்க"! என்றேத்துவார்.

3. தேவாட்டுக் குட்டியின்
கை கால் விலாவிலே
ஐங் காயம் நோக்கிடின்,
பேரின்பம் பொங்கிடும்;
வென்றேறச் செய்ததால்
அன்போடு சேவிப்போம்,
பேர் நன்மை தந்ததால்
என்றைக்கும் போற்றுவோம்.

4. துன்புற்ற பக்தரே,
விண் வீட்டை நாடுமேன்;
தொய்யாமல் நித்தமே
முன் சென்று போகுமேன்;
இத்துன்பம் மாறுமே,
மேலோக நாதனார்
நல் வார்த்தை சொல்லியே
பேரின்பந் தருவார்.

**289. Southwell, Aristides.** **C.M.**

**"Jerusalem my happy home"**

**எருசலேம் என் ஆலயம்**
ஆசித்த வீடதே;
நான் அதைக் கண்டு பாக்கியம்
அடைய வேண்டுமே.

2. பொன் தளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன்?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில்
என்றைக்குத் தொழுவேன்?

3. எந்நாளும் கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார்
யேசுவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார்.

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து லோக துன்பத்தில்
களிப்பேன், யேசுவே.

5. எருசலேம் என் ஆலயம்
நான் உன்னில் வாழுவேன்;
என் ஆவல், என் அடைக்கலம்;
எப்போ கண்டடைவேன்?

**290. St. Victor, kocker - St. Alphege** **7s, 6s.**

**"Brief life is here our portion"**

**இகத்தின் துக்கம், துன்பம்,**
கண்ணீரும் மாறிப்போம்;
முடிவில்லாத இன்பம்
பரத்தில் பெறுவோம்.

2. இதென்ன நல்ல ஈடு!
துன்பத் துக்கின்பமா?
பரத்தில் நிற்கும் வீடு
மரிக்கும் பாவிக்கா?

3. இப்போது விழிப்போடு
போராட்டம் செய்குவோம்,
விண்ணில் மகிழ்ச்சியோடு
பொற் க்ரீடம் சூட்டுவோம்.

4. இகத்தின் அந்தகார
ராக்காலம் நீங்கிப்போம்;
சிறந்த ஜெயமாக
பரத்தில் வாழுவேம்.

5. என் சொந்த ராஜாவான
கர்த்தாவை நோக்குவேன்;
கடாட்ச ஜோதியான
அவரின் பூரிப்பேன்.

**291. Benevento, Hollingside - Boulah.** **7s, 8l**

**"Who are these in bright array?"**

**வெள்ளை அங்கி தரித்து**
சுடர் ஒளியுள்ளோர் ஆர்?
தேவனை ஆராதித்து
பூரிப்போர், களிப்போர் யார்?
சிலுவையை எடுத்து
யேசுவின் நிமித்தமே
யுத்தம் பண்ணிப் பொறுத்து
நின்றோர் இவர்கள்தானே.

2. மா துன்பத்திலிருந்து
வந்து விசுவாசத்தால்
தேவ நீதி அணிந்து
சுத்தமானார்; ஆதலால்
ஓய்வில்லாமல் கர்த்தரை
கிட்டி நின்று சேவிப்பார்;
கர்த்தர் சுத்தவான்களை
சேர்த்து ஆசீர்வதிப்பார்.

3. அவர் ஜெயங்கொண்டோராய்
இனி சோதிக்கப்படார்;
தீமை நீங்கி சுத்தராய்
பசி தாகம் அறியார்;
மத்தியான உஷ்ணம்
இனி படமாட்டாதே;
அவர்கள் மெய்ப் பாக்கியம்
வளர்ந்தோங்கும் நித்தமே.

4. தேவ ஆட்டுக்குட்டியும்
அவர்களைப் போஷிப்பார்;
ஜீவ தருக் கனியும்
ஜீவ நீரும் அளிப்பார்
துக்கம் துன்பம் ஒழித்து
குறை யாவும் நீக்குவார்;
கண்ணீரையும் துடைத்து
அன்பினால் நிரப்புவார்.

**292. Alford** **(428) 7, 6, 8, 6, 8l.**

**"The thousand times ten thousand"**

**மின்னும் வெள்ளங்கி பூண்டு**
மீட்புற்ற கூட்டத்தார்
பொன்னகர் வீதி எங்குமே
பண்பாக நிற்கிறார்;
வெம் பாவம் சாவை எல்லாம்
வென்றே போர் ஓய்ந்தாரே;
செம் பொன்னாம் வாசல் திறவும்
செல்வார் இவர் உள்ளே.

2. முழங்கும் அல்லேலூயா
மண் விண்ணை நிரப்பும்!
விளங்கும் கோடி வீணைகள்
விஜயஞ் சாற்றிடும்!
சராசரங்கள் யாவும்
சுகிக்கும் நாள் இதே;
தராதலத்தின் துன்பமும்
தொலைந்து போயிற்றே!

3. அன்பான நண்பர் கூடி
ஆனந்தம் அடைவார்;
மாண்பான நேசம் எந்நாளும்
மங்காமல் வாழுவார்;
கண்ணீர் வடித்த கண்கள்
களித்திலங்கிடும்;
அண்ணலே தஞ்சம், ஆகையால்
அபாயம் நீங்கிடும்.

4. சிறந்த உம்தன் மீட்பை
சமீபமாக்குமே;
தெரிந்து கொள்ளப்பட்டோரின்
தொகை நிரப்புமே;
உரைத்த உம்தன் காட்சி
உயர்வில் காட்டுவீர்
இறைவா, ஏங்குந் தாசர்க்கு
இரங்கி வருவீர்.

**293. In memoriam. - Heslington** **8, 6, 7, 6, 7, 6, 7, 6.**

**"There's friend for little children"**

**பாலரே, ஓர் நேசருண்டு**
விண் மோட்ச வீட்டிலே
நீங்கா இந்நேசர் அன்பு
ஓர் நாளும் குன்றாதே.
உற்றாரின் நேசம் யாவும்
நாட்செல்ல மாறினும்
இவ்வன்பர் திவ்ய நேசம்
மாறாமல் நிலைக்கும்.

2. பாலரே, ஓர் வீடு உண்டு
விண் மோட்ச நாட்டிலே;
பேர் வாழ்வுண்டாக யேசு
அங்கரசாள்வாரே;
ஒப்பற்ற அந்த வீட்டை
நாம் நாட வேண்டாமோ?
அங்குள்ளோர் இன்ப வாழ்வில்
ஓர் தாழ்ச்சிதானுண்டோ?

3. பாலரே ஓர் கிரீடம் உண்டு
விண் மோட்ச வீட்டில், நீர்
நல் மீட்பரின் பேரன்பால்
பொற் கிரீடம் அணிவீர்;
இப்போது மீட்பைப் பெற்று
மா நேசர் பின் சென்றார்;
இவ்வாடா ஜீவ க்ரீடம்
அப்போது சூடுவார்.

4. பாலரே ஓர் கீதம் உண்டு
விண் மோட்ச வீட்டிலே,
மா ஜெய கீதம் பாட
ஓர் வீணையும் உண்டே;
அந்நாட்டின் இன்பம் எல்லாம்
நம் மீட்பர்க்குரிமை;
நீர் அவரிடம் வாரும்;
ஈவார் அவ்வின்பத்தை.

**294. St. Michael, Badea** **S.M.**

**"Suffer the children to come"**

**இளைஞர் சேரட்டும்**
தடுக்கவே வேண்டாம்;
பரத்திலே சுதந்தரம்
இவர்களுக்குண்டாம்".

2. என்றேக உரைத்து
அன்பாக ஏந்தினார்;
அவர்கள் மேலே கரத்தை
வைத்தாசீர்வதித்தார்.

3. யேசுவே; தயவாய்
என்னையும் ஏந்திடும்,
உம்மோடு நானும் நித்யமாய்
மகிழச் செய்திடும்.

**295. Bethany, Deerhurst, - Nettleton** **8s, 7s, 8l.**

**"Children's praises"**

**என்னிடத்தில் பாலர் யாரும்**
வரவேண்டும் என்கிறார்;
இப்பேர்ப்பட்டவர் எல்லாரும்
வான ராஜ்யம் அடைவார்,
என்றுசொல்லி, நேசக்கையில்
யேசு ஏந்தி அணைத்தார்;
பாலர் அவரை உள்ளத்தில்
அன்பாய் எண்ணிப் போற்றுவார்

2. "தாவீதின் குமாரனுக்கு
ஓசன்னா! மா ஸ்தோத்திரம்"!
என்று பாடி, சீயோனுக்கு
நேரே சென்ற சமயம்
வாழ்த்தல் செய்தவண்ணம் நாமும்
வாழ்த்திப் பாடி, பக்தியாய்
யேசுவை வணங்கி, என்றும்
ஸ்தோத்தரிப்போம் ஏகமாய்.

4. பாலனாய்ப் பிறந்த மீட்பர்
ராஜாவாக வருவார்
கூட வரும் தேவதூதர்
மேகமீது தோன்றுவார்;
நல்லோர், தீயோர் ஏசுவாலே
தீர்ப்படையும் நேரத்தில்
பாலர் போன்ற குணத்தாரே
வாழ்வடைவார் மோட்சத்தில்.

**296. Scheffler, Harts, Innocents** **7s.**

**"God's care"**

**ஏழைப்பிள்ளை ஆயினும்**
கர்த்தர் அன்ன வஸ்த்ரமும்
தந்து என்னைக் காக்கிறார்,
என்னில் நேசம் வைக்கிறார்.

2. நித்திரை விழிப்பிலும்
வேலை செய்யும் போதிலும்
யேசு கூட இருப்பார்,
என்னை நித்தமும் காப்பார்.

3. வானம் ஆளும் ஆண்டவன்
என்னைப் போல பாலகன்
ஆகி, நீதி செய்யவே
ஏழை ரூபெடுத்தாரே.

4. கூடு உண்டு பட்சிக்கு
குழி உண்டு நரிக்கு,
தலை சாய்க்கத் தமக்கே
இடம் இல்லை என்றாரே.

5. இங்கிருக்கு மட்டவர்
என்னை ஆசீர்வதிப்பார்
ஜீவன் போகும் நேரத்தில்,
சேர்த்தக் கொள்வார் மோட்சத்தில்.

**297. Warnborough, Vienna Madura** **7s.**

**"Children's joy"**

**துள்ளித் துள்ளிப் பாலனே,**
கீதம் பாடிப் பாடியே;
யேசுவண்டை ஓடி வா,
நேசர் அவர் அல்லவா?

2. பெத்லேகேமில் பிறந்தார்,
பெற்றோருக்கு அமைந்தார்;
தீயதான குணங்கள்
உண்டோ? இல்லை, அவரில்.

3. சிறு பிள்ளை நீயும் வா
நெஞ்சை யேசுவுக்குத் தா;
அவர் கையில் ஏந்துவார்;
ஆசீர்வாதம் தருவார்.

4. வாரும், சிறு பாலரே,
அஞ்ச வேண்டாம், நேசரே;
பயம், துக்கம் நீக்குவார்,
கண்ணீர் யாவும் துடைப்பார்.

5. பேதையான பிள்ளையும்
தாழ்ந்த சிந்தையுள்ளோரும்
மோட்ச வீட்டில் நேசராம்
அவர் மூலம் சேரலாம்.

6. பொற் கிரீடம் அவரே
சூட்டுவார் என் தோழரே
தேவதூதரோடு நீர்
கீதம் பாடிப் போற்றுவீர்.

**298. Goshen. - Mary Magdalene** **6s, 5s, 8l.**

**"Jesus is our Shepherd"**

**யேசு எங்கள் மேய்ப்பர்,**
கண்ணீர் துடைப்பார்,
மார்பில் சேர்த்தணைத்து
பயம் நீக்குவார்;
துன்பம் நேரிட்டாலும்,
இன்பம் ஆயினும்,
யேசுவின் பின் செல்வோம்
பாலர் யாவரும்.

2. நல்ல மேய்ப்பர் சத்தம்
நன்றாய் அறிவோம்,
காதுக்கின்பமாக
கேட்டுக் களிப்போம்;
கண்டித்தாலும், நேசர்
ஆற்றித் தேற்றுவார்
நாங்கள் பின்னே செல்ல
வழி காட்டுவார்.

3. ஆட்டுக்காக மேய்ப்பர்
ரத்தம் சிந்தினார்,
அதில் மூழ்கினோரே
தூயர் ஆகுவார்;
பாவ குணம் நீக்கி
முற்றும் ரட்சிப்பார்;
திவ்ய தூய சாயல்
ஆக மற்றுவார்.

4. யேசு நல்ல மேய்ப்பர்
ஆட்டைப் போஷிப்பார்;
ஓநாய்கள் வந்தாலும்,
தொடவே ஒட்டார்;
சாவின் பள்ளத்தாக்கில்
அஞ்சவே மாட்டோம்
பாதாளத்தின் மேலும்
ஜெயங் கொள்ளுவோம்.

**299. Morning, Dix. - Spanish Hymn.** **7s, 6l.**

**"Safety through another week"**

**வாரம் முற்றும் சேமமாய்**
தேவன் காத்தார் தயவாய்;
ஆலயத்திற் கூடுவோம்
வேதங் கேட்டு வாழ்த்துவோம்
வாரத்தில் மேலானதே,
மோட்சங் காட்டும் நாள் இதே.

2. யேசு நாதர் ரத்தத்தால்
நீதியை நாம் பெற்றதால்
நேசர் அவர் நாமத்தில்
கூடி வேதங் கேட்கையில்
லோக வேலை விட்டோய்வோம்,
வாஞ்சையோ டாராதிப்போம்.

3. தேவ ஆவி அருளால்
தேவ அன்பைக் காண்பதால்
ஆவலாகப் போற்றுவோம்;
தேவ சாயல் ஆகுவோம்
மோட்சவீட்டின் வாழ்விலே
வாழ்வோமாக பாலரே.

4. மாசிலா யெருசலேம்
நாம் வசிக்கும் ஆலயம்,
நீதி அங்கி பெற்றதால்
ஜோதியுள்ளோர் யேசுவால்
வாரம் தோறும் பாடுவோம்,
வேதம் ஓதிப் போற்றுவோம்.

**300. Rejoicing. Joyful.** **7, 7, 6, 6, 6, 6, 7.**

**"Here we suffer grief and pain"**

**இங்கே நொந்து கொள்கிறோம்**
கூடிப் பின்பு நீங்குவோம்,
அங்கென்றும் நீங்கிடோம்.

ஆ, அதுவே இன்பம்
இன்பம், இன்பம், இன்பம்!
ஆ, அதுவே இன்பம்
விண்ணில் என்றும் தங்குவோம்.

2. தேவ தாசர் யாவரும்
தூய மோட்ச வாசரும்
அங்கொன்றாய்ப்பாடுவோம் – ஆ, அதுவே

3. பள்ளிக்கூடம் யாவிலும்
உள்ள நல்ல பாலரும்
அங்கென்றும் தங்குவார். - ஆ, அதுவே

4. எங்கள் நல் உபாத்திமார்,
நேசமுள்ள குருமார்
நீங்காமல் தங்குவார். - ஆ, அதுவே

5. மா சந்தோஷங் கொள்ளுவோம்
யேசுவை நாம் காணுவோம்
சிம்மாசனத்தின் மேல். - ஆ, அதுவே

6. அங்கெல்லாரும் கூடுவோம்
கிறிஸ்துவைக் கொண்டாடுவோம்
ஓயாமல் பாடுவோம். - ஆ, அதுவே

**301. Angel's Story - Day of Rest.** **7s, 6s, 8l.**

"I want to be an angel"

**நான் தூதனாக வேண்டும்**
விண் தூதரோடேயும்;
பொற் கிரீடம் தலைமேலும்
நல் வீணை கையிலும்
நான் வைத்துப் பேரானந்தம்
அடைந்து வாழுவேன்;
என் மீட்பரின் சமுகம்
நான் கண்டு களிப்பேன்.

2. அப்போது சோர்வதில்லை,
கண்ணீரும் சொரியேன்;
நோய், துக்கம், பாவம், தொல்லை,
பயமும் அறியேன்;
மாசற்ற சுத்தத்தோடும்
விண் வீட்டில் தங்குவேன்;
துதிக்கும் தூதரோடும்
நான் என்றும் பாடுவேன்.

3. ப்ரகாசமுள்ள தூதர்
நான் சாகும் நேரத்தில்
என்னைச் சுமந்து போவார்
என் யேசுவண்டையில்
நான் பாவியாய் இருந்தும்
என் மீட்பர் மன்னித்தார்
எண்ணில்லாச் சிறியோரும்,
என்னோடு வாழுவார்.

4. மேலான தூதரோடும்
நான் தூதன் ஆகுவேன்,
பொற் கிரீடம் தலைமேலும்
தரித்து வாழுவேன்;
என் மீட்பர் முன் ஆனந்தம்
நான் பெற்று வாழ்வதே
வாக்குக் கெட்டாத இன்பம்,
அநந்த பாக்யமே.

**302. Dijon, Innocents.** **7s.**

**"Gentle Jeus, meek and mild"**

**சாந்தமுள்ள யேசுவே,**
பாலன் முகம் பாருமே;
என்னில் தயை கூருமேன்
என் உள்ளத்தில் தங்குமேன்.

2. உம்மை நாடிப் பற்றுவேன்,
என்னை ஏற்றுக் கொள்ளுமேன்;
மோட்ச ராஜ்ஜியத்திலே
எனக்கிடம் தாருமே.

3. இன்ப முகம் காட்டுவீர்;
என்னைக் கையில் ஏந்துவீர்;
உமக்கேற்றோன் ஆகவே
சுத்தம் பண்ணும், யேசுவே.

4. தீயோர் செய்கையொன்றுமே
நான் செய்யாதிருக்கவே
என்னை ஆண்டு நடத்தும்
என்னில் வாசமாயிரும்.

5. ஆ, அன்புள்ள யேசுவே,
அடியேனைப் பாருமே,
என்னை அன்பாய் ரட்சியும்
மோட்ச பாக்யம் அருளும்.

**303. Caritas** **8, 4, 8, 4, 8, 8, 4.**

**"O, how He love!"**

**யாரிலும் மேலான அன்பர்**
மா நேசரே;
தாயைப் பார்க்க நல்ல நண்பர்
மா நேசரே;
மற்ற நேசர் விட்டுப் போவார்,
நேசித்தாலுங் கோபங் கொள்வார்
யேசுவோ என்றென்றும் விடார்,
மா நேசரே!

2. என்னைத் தேடிச் சுத்தஞ் செய்தார்
மா நேசரே!
பற்றிக் கொண்ட என்னை விடார்,
மா நேசரே;
இன்றும் என்றும் பாதுகாப்பார்,
பற்றினோரை மீட்டுக் கொள்வார்,
துன்ப நாளில் தேற்றல் செய்வார்,
மா நேசரே!

3. நெஞ்சமே நீ த்யானம் பண்ணு
மா நேசரை;
என்றுமே விடாமல் எண்ணு
மா நேசரை;
எந்தத் துன்பம் வந்தும், நில்லு,
நேரே மோட்ச பாதை செல்லு
யேசுவாலே யாவும் வெல்லு;
மா நேசரே!

4. என்றென்றைக்கும் கீர்த்தி சொல்வோம்;
மா நேசரே!
சோர்வுற்றாலும் வீரங்கொள்வோம்;
மா நேசரே!
கொண்ட நோக்கம் சித்தி செய்வார்,
நம்மை அவர் சேர்த்துக் கொள்வார்
மோட்ச நன்மை யாவும் ஈவார்;
மா நேசரே!

**304. Invitation, Duncan** **7, 5, 7, 5, 7, 7, 7, 5.**

**"Jesus calls"**

**யேசுவே அழைக்கிறார்**
வா, – வா, – பிள்ளையே;
ஏழை உன்னை ரட்சிப்பார்,
வா, – வா, – பிள்ளையே;
தேவன் மனுவாகினார்,
உன்னைப் போல பிறந்தார்,
தயவாய் அழைக்கிறார்;
வா, – வா, – பிள்ளையே.

2. சிலுவை சுமந்தவர்
வா, – வா, – பிள்ளையே;
உன்னை மீட்ட ரட்சகர்,
வா, – வா, – பிள்ளையே;
திவ்ய ரத்தம் சிந்தினார்,
அதால் உன்னை ரட்சிப்பார்,
திருக்கையில் ஏந்துவார்;
வா, – வா, – பிள்ளையே.

3. மோட்ச வீட்டில் ஏற்றுவார்,
வா, – வா, – பிள்ளையே;
பொற் கிரீடம் சூட்டுவார்,
வா, – வா, – பிள்ளையே;
துன்பம், துக்கம் அடையாய்,
பாவம் நீங்கிக் களிப்பாய்
யேசுவோடும் வாழுவாய்;
வா, – வா, – பிள்ளையே.

**305. Happy Land** **6, 4, 6, 4, 6, 7, 6, 4.**

"There is a happy land"

**மா தூர லோகத்தில்**
ஆனந்தமாய்,
மாசற்ற ஸ்தலத்தில்
மின் ஜோதியாய்
நின்றென்றும் பாடுவார்
யேசுவையே பாடுவார்
கெம்பீரங் கொள்ளுவார்
வானோர்களே.

2. பேரின்ப வாழ்வையே
நாடுங்களேன்;
ஆ! அதில் சேரவே
தாமதம் ஏன்?
நாம் களி கூருவோம்.
பாவம், துக்கம் நீங்குவோம்;
க்றிஸ்துவண்டை தங்குவோம்
என்றென்றுமே.

3. அங்குள்ள யாவரும்
சந்தோஷிப்பார்,
யேசுவின் பாலரும்;
சேர்ந்திருப்பார்;
கீர்த்தி ப்ரதாபராய்,
க்ரீடந் தரித்தோர்களாய்,
தூதாட்கள் தோழராய்,
வாழ்ந்திருப்பார்.

**306. Eudoxia, Now the Day is over - Little Drops.** **6s, 5s.**

"Little drops of water"

**சிறு மழைத் தூறல்**
பெரு வெள்ளமாம்;
சிறு அணுத் திரள்
பெரும் பூமியாம்.

2. சிறு நொடி நேரம்
சேர்ந்து யுகமாம்,
பல யுகாயுகம்
ஊழி காலமாம்.

3. சிறு பனங் கொட்டை
முளைத் தோங்கியே;
திரளாக நன்மை
தரும் உண்மையே.

4. சிறிதான பாவம்
தீமை விளைக்கும்;
சொற்ப உபகாரம்
நன்மை பயக்கும்.

5. சிற்றெழுத்துக் கோவை
செய்யுள் ஆகுமாம்;
சிறிதான நாவு
பெரு நெருப்பாம்.

6. சிறு பிள்ளையாய், நீயும்
கொஞ்சக் காலத்தில்;
மோட்சம் சேரக்கூடும்
யேசு அண்டையில்.

**307. Evan, Sphor** **C.M.**

**"Nun Schlaf, mein liebes Kindelein"**

**நீ சாய்ந்து தூங்கு பிள்ளையே,**
கண்மூடு, கண்ணே; நீ
அஞ்சாதே, மோசம் இல்லையே
கர்த்தாவின் கண்மணி.

2. பிதா தாமே உன் பக்கத்தில்
துணையாய் நிற்கிறார்;
அவரே உன்னைக் காக்கையில்
பொல்லாங்கு செய்வதார்?

3. குமாரன் கெட்டுப் போனதை
ரட்சிக்கவே வந்தார்;
உனக்குச் சுவிகாரத்தை
அளிக்க மரித்தார்.

4. தேவாவி உன்னில் தங்குவார்
உன்னை நடத்துவார்;
எந்நாளும் உன்னைத் தாங்குவார்
பேரின்பம் அளிப்பார்.

5. நீ சாய்ந்து தூங்கு, பிள்ளையே,
கண்மூடு, கண்ணே; நீ
அஞ்சாதே, மோசம் இல்லையே,
கர்த்தாவின் கண் மணி.

**308. North Coates, Eudoxia, - St. Alban** **6s, 5s.**

"I'm a little pilgrim"

**சின்ன பரதேசி**
மோட்சம் நாடினேன்;
லோகத்தின் சிற்றின்பம்
வெறுத்து விட்டேன்.

2. முத்தி அடைந்தோரை
பாவம் சேராதே;
துக்க சத்தம் அங்கே
என்றும் கேளாதே.

3. சின்ன பரதேசி
இங்கே சீர்ப்படேன்;
அங்கே வெள்ளை அங்கி
தரித்துக் கொள்வேன்.

4. என்னைச் சுத்தமாக
காரும், யேசுவே;
தினம் வழி காட்டும்,
தேவ ஆவியே.

5. சின்ன பரதேசி
பாவத்தை விட்டேன்;
என்றும் மோட்ச வாசி
ஆகப் போகிறேன்.

**309. St. Gertrude (429) 6s, 6s, 8l.**

**"On ward, Christian soldiers"**

**யுத்தம் செய்வோம், வாரும்,**
கிறிஸ்து வீரரே!
இயேசு சேனை கர்த்தர்
பின்னே செல்வோமே!
வெற்றி வேந்தராக
முன்னே போகிறார்,
ஜெயக்கொடி ஏற்றி
போர் நடத்துவார்;

*யுத்தம் செய்வோம், வாரும்,*
*க்றிஸ்து வீரரே!*
*இயேசு சேனை கர்த்தர்*
*பின்னே செல்வோமே!*

2. க்றிஸ்து வீரர்காள், நீர்
வெல்ல முயலும்;
பின்னிடாமல் நின்று
ஆரவாரியும்!
சாத்தான் கூட்டம் அந்த
தொனிக்கதிரும்;
நரகாஸ்திவாரம்
அஞ்சி அசையும்!
யுத்தம்,

3. கிறிஸ்து சபை வல்ல
சேனை போன்றதாம்;
பக்தர் சென்ற பாதை
செல்கின்றோமே நாம்;

க்றிஸ்து தாசர் யாரும்
ஓர் சரீரமே;
விசுவாசம், அன்பு,
நம்பிக்கை ஒன்றே.
யுத்தம்.

4. க்ரீடம், ராஜ மேன்மை
யாவும் சிதையும்,
க்றிஸ்து சபைதானே
என்றும் நிலைக்கும்;
“நரகத்தின் வாசல்
ஜெயம் கொள்ளாதே”,
என்ற திவ்ய வாக்கு
வீணாய்ப் போகாதே.
யுத்தம்.

5. பக்தரே, ஒன்றாக
கூட்டங் கூடுமேன்;
எங்களோடு சேர்ந்து
ஆர்ப்பரியுமேன்!
விண்ணோர் மண்ணோர் கூட்டம்
யேசு ராயர்க்கே
கீர்த்தி, புகழ், மேன்மை
என்றும் பாடுமே.
யுத்தம்.

**310. St. Philip, troyte's Chant2, Sarum** **10, 10, 10, 4.**

**"For all the saints who from their labours rest"**

**விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே,**
தம் வேலை முடித்தோர் நிமித்தமே,
கர்த்தாவே, உம்மைத் துதி செய்வோமே,
அல்லேலூயா! அல்லேலூயா!

2. நீர் அவர் கோட்டை, ஆயினீர்
வெம் போரில் வெற்றி தந்து வாழ்வித்தீர்;
காரிருளில் மா ஜோதி வீசினீர்,
அல்லேலூயா! அல்லேலூயா!

3. முன் நாளில் பக்தர் நற்போராடியே
வென்றார்போல் நாங்கள் வீரராகவே
பொற் க்ரீடம் பெற்றுக்கொள்வோமாகவே.
அல்லேலூயா! அல்லேலூயா!

4. கடூரமான யுத்த கோஷ்டத்தில்
கெம்பீர கீதம் விண்ணில் கேட்கையில்
அஞ்சாமல் வீரங்கொள்வோம் நெஞ்சத்தில்
அல்லேலூயா! அல்லேலூயா!

5. செவ்வானம் மேற்கில் தோன்றி ஒளிரும்;
மெய் வீரருக்கு ஓய்வு வாய்த்திடும்;
சீர் பரதீசில் பாக்யம் அமையும்;
அல்லேலூயா! அல்லேலூயா!

6. அப்பாலே நித்ய பகல் விடியும்;
வென்றோர்கள் மாட்சியாய் எழும்பவும்,
க்றிஸ்துவின் ராஜரீகம் எழும்பும்,
அல்லேலூயா! அல்லேலூயா!

**311. Sandon** **10, 4, 10, 4, 10, 10.**

**"Lead, kindly light, amidth..."**

**காரிருளில் என் நேச தீபமே,**
நடத்துமேன்;
வேறொளியில்லை, வீடும் தூரமே,
நடத்துமேன்;
நீர் தாங்கின், தூர காட்சி ஆசியேன்
ஓர் அடி மட்டும்
என் முன் காட்டுமேன்.

2. என் இஷ்டப்படி நடந்தேன், ஐயோ!
முன்னாளிலே
ஒத்தாசை தேடவில்லை; இப்போதோ
நடத்துமே;
உல்லாசம் நாடினேன், திகிலிலும்
வீம்பு கொண்டேன்,
அன்பாக மன்னியும்.

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்;
இனிமேலும்
காடாறு சேறு குன்றில் தேவரீர்
நடத்திடும்;
உதய நேரம் வர, களிப்பேன்;
மறைந்துபோன
நேசரைக் காண்பேன்.

**312. Elim, Hesperus (Quebec)** **L.M.**

"Wenn wir in hochsten Nothen..."

**மகா இக்கட்டாம் ஆபத்து**
உண்டாகி, எங்கள் மனது
ஓர் யோசனையும் இன்றியே
கலங்கி வாடுகின்றதே.

2. கர்த்தாவே, மனத்தாழ்மையாய்
உம்மண்டை சேர்ந்து ஏகமாய்
அடி பணிந்த கெஞ்சுதல்
அடியாருக்கு ஆறுதல்.

3. நொறுக்கப்பட்ட நெஞ்சோடே
வந்தோம் இரங்கும், கர்த்தரே;
ஆ! கோபமாய் இராதேயும்,
மன்னிப்பை ஈந்து தற்காரும்.

4. இக்கட்டில் யேசு மூலமாய்
மன்றாடினோரைத் தயவாய்
ரட்சிப்போம் என்று தேவரீர்
நல்வாக்குத் தத்தம் பண்ணினீர்.

5. ஆ! எங்கள் மீறுதல்களை
பாராமல், யேசு க்றிஸ்துவை
பார்த்தெங்கள் வாதை யாவையும்
அன்பாக நீக்கியருளும்.

**313. Hursley.** **C.M.**

**"Prayer for rain"**

**சமஸ்த மண்டலத்தையும்**
படைத்த நாதனே
சமஸ்த ஜீவ ஜெந்தையும்
போஷிக்கும் தேவனே.

2. உம்மாலே நாங்கள் இம்மட்டும்
ஜீவித்து வாழ்கிறோம்;
ஊண், உடை, சுகம், பெலனும்
உம்மால் அடைகிறோம்.

3. இதை அறிந்தும் வீணராய்
நடந்து சீர் கெட்டோம்;
தண்டனைக்கேற்ற நீசராய்
பொல்லாங்கில் நாள் விட்டோம்.

4. இரக்கமுள்ள தேவனே
வருந்திச் சாகிறோம்;
திருத்தி எம்மை ஆளவே
பணிந்த கேட்கிறோம்.

5. அருள் பொழியும் மாரியை
சொரியும், கர்த்ததே;
முடிவில் மோட்சானந்தத்தை
அடியார்க் கீயுமே.

**314. Maitland: Luther** **(431)** **8, 7, 8, 7, 8, 8, 7.**

**"Ach Herre, du gerechter"**

**ஆ, நீதியுள்ள கர்த்தரே,**
வயல் வறண்டதாலே
எச்சீவனும் வதங்கிற்றே;
இக்கேடு எங்களாலே
நடந்த பாவத்தின் பலன்,
என்றெங்களில் ஒவ்வொருத்தன்
துக்கித்துச் செல்வானாக.

2. ஆ, எங்கள் மீறுதல்களை
இரக்கமாய் மன்னியும்;
நீரே அடியார் நம்பிக்கை,
சகாயத்தை அளியும்;
கர்த்தாவே, சுத்த தயவால்
மழையைத் தந்து அதினால்
நிலத்தைப் பூரிப்பாக்கும்.

3. தயாபரா, நீர் உமது
நல் வாக்கு நிறைவேற
காய்ந்து கிடக்கும் பூமிக்கு
தண்ணீர் இறைப்பீராக;
வானுலகாளும் கர்த்தரே,
மழையை உம்மை அன்றியே
ஆர் பெய்யப் பண்ணக்கூடும்?

4. மூச்சற்ற விக்ரகங்களால்
கூடாது; தேவரீரே
வானத்தைத் திருக்கரத்தால்
விரித்தீர்; அதில் நீரே
அளவில்லாமல் ஆள்பவர்,
நீரே பிதா, நீர் ரட்சகர்,
உம்மாலே யாவும் ஆகும்.

**315. Heinlein, Weber** **7s.**

**"Famine"**

**ஸ்வாமி, மழையின்றியே**
வெண்கலம்போல வானமே
மா கடினம் ஆயிற்று,
பூமியெங்கும் காய்ந்தது.

2. ஏரி, குளம், ஆறுகள்
எங்குமுள்ள ஜீவன்கள்
யாவும் மாரிக்காகவே
சால ஏங்குகின்றதே.

3. பச்சை எல்லாம் காய்ந்தது
பயிர் எல்லாம் தீய்ந்தது,
அகவிலை ஏறிற்று
அப்பம் குறைவாயிற்று.

4. மாந்தர் கொடும் பசியால்
வாடிப் பலவீனத்தால்
தொய்ந்து தொய்ந்து போகிறார்
நித்தம் நித்தம் சாகிறார்.

5. உம்மை அன்றி, பஞ்சத்தை
நீக்கி எங்கள் பசியை
தீர்க்கும் ஜீவ தாரகர்
இல்லை, நீரே ரட்சகர்.

6. தயவுள்ள தேவனே,
யேசுவின் நிமித்தமே
மேகத்துக்குக் கற்பியும்,
சோனாமாரி பொழியும்.

7. அதால் பூமி குளிரும்
நிலம் பலனைத் தரும்,
தேசம் எங்கும் செழிக்கும்,
எல்லாம் உம்மைத் துதிக்கும்.

**316. Duke St. St. Ambrose** **L.M.**

**"Dedication of a new house"**

**ஆ, வானம் பூமி யாவையும்**
அமைத்து ஆளும் கர்த்தரே
உமது ஞானம், சத்தியம்
அளவில் அடங்காததே.

2. உமக்கு வானம் ஆசனம்,
பூதலம் பாதப் படியாம்;
எங்களுக்கு இருப்பிடம்
கிடைத்தது மா தயையாம்.

3. இவ்வீட்டில் நாங்கள் வசித்து
பக்தியோடும்மைப்போற்றுவோம்
இடைவிடாமல் துதித்து,
கொண்டாடித்தாழ்ந்து சேவிப்போம்.

4. இங்கே இருக்கும் நாள் மட்டும்
உற்சாகத்தோடு உமக்கே
அடங்கி நாங்கள் நடக்கும்
குணத்தை தாரும்; கர்த்தரே.

5. ஜீவன் பிரியும் நேரத்தில்
உம்மண்டை வந்து சேரவும்
முடிவில்லாத இன்பத்தில்
நற்பங்கடையவும் செய்யும்.

6. இகத்திலும், பரத்திலும்,
செங்கோல் செலுத்தும் நாதரே,
உமக்கு நித்ய காலமும்
துதி உண்டாவதாகவே!

**317.** **(432)** **14, 14, 4, 7.**

**உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும்**
வல்ல பிதாவே;
உம்மைப் பணிகிறோம், ஸ்வாமி,
ராஜாதி ராஜாவே; உமது
மா - மகிமைக்காக, கர்த்தா
ஸ்தோத்திரம் சொல்லுகிறோமே.

2. கிறிஸ்தே, இரங்கும்; குமாரனே,
கடன் செலுத்தி,
லோகத்தின் பாவத்தை நீக்கிற
தேவாட்டுக்குட்டி,
எங்கள் மனு - கேளும்; பிதாவினது
ஆசனத் தோழா, இரங்கும்.

3. நித்ய பிதாவின் மகிமையில்,
இயேசுவே நீரே,
பரிசுத்தாவியோ டேகமாய்
ஆளுகிறீரே.
ஏகமாய் நீர் அர்ச்சிக்கப் படுகிறீர்.
உன்னத கர்த்தரே. ஆமேன்.

**318. Old Hundredth,** **L.M.**

"Herr Jesu Christ dich zu uns wend"

**ஒன்றாக ஆட்சி செய்கிற**
த்ரியேக தேவனாகிய
பிதா குமாரன் ஆவிக்கே
மா ஸ்தோத்திரம் உண்டாகவே!

**319. Southampton, Christ Church - Lenox.** **6, 6, 6, 6, 8, 8.**

"Doxology"

**கெம்பீரமாகவே**
சங்கீதம் பாடுங்கள்,
மாந்தர் எல்லாருமே,
மகிழ்ந்து போற்றுங்கள்;
பிதா, குமாரன், ஆவியாம்
த்ரியேகருக்குத் துதியாம்.

**320. Ashley, Margaret,** **8, 8, 8, 8, 7.**

"Honor, glory, power and blessing"

**மேன்மை, கனம், துதி, பலம்**
கர்த்தருக்கு என்றும் ஏற்கும்;
எங்கள் மீட்பர் யேசு க்றிஸ்து;

அல்லேலூயா! அல்லேலூயா!
கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**321. Benediction, Dismissal.** **8s, 7s, 6l.**

"Doxology"

**பரமண்டலத்திலுள்ள**
வானோர், நீங்கள் பக்தியாய்
இந்தப் பூமி எங்குமுள்ள
மண்ணோர், நீங்கள் களிப்பாய்
துதியுங்கள், துதியுங்கள்
பிதா சுதன் ஆவியை.

**322. Deerhurst, Nettleton** **8s, 7s, 8l.**

"Gratitude"

**தேவன் தந்த ஈவுக்காக**
என்றென்றைக்கும் தோத்திரம்!
விண்ணோர், மண்ணோர் கூட்டமாக
பாடுவார் சங்கீர்த்தனம்,
மீட்கப்பட்ட யாவராலும்
ஏக தேவரீருக்கே
ஆரவாரமாய் என்றைக்கும்
தோத்திரம் உண்டாகவே!

**323. Alleluya dulce cermen - Praise my soul** **8, 7, 8, 7, 8, 7.**

**"Praise my soul the King of Heaven"**

**ஆத்மமே, உன் ஆண்டவரின்**
திருப்பாதம் பணிந்து,
மீட்பு, சுகம், ஜீவன், அருள்
பெற்றதாலே துதித்து,
அல்லேலூயா, என்றென்றைக்கும்
நித்திய நாதரைப் போற்று.

2. நம் பிதாக்கள் தாழ்வில் பெற்ற
தயை நன்மைக்காய்த் துதி;
கோபங்கொண்டும் அருள் ஈயும்
என்றும் மாறாதோர் துதி;
அல்லேலூயா, அவர் உண்மை
மா மகிமையாம், துதி.

3. தந்தைபோல் மாதயை உள்ளோர்;
நீச மண்ணோர் நம்மையே
அன்பின் கரம் கொண்டு தாங்கி
மாற்றார் வீழ்த்திக் காப்பாரே;
அல்லேலூயா, இன்னும் அவர்
அருள் விரிவானதே.

4. என்றும் நின்றவர் சமூகம்
போற்றும் தூதர் கூட்டமே;
நாற்றிசையும் நின்றெழுந்து
பணிவீர் நீர் பக்தரே;
அல்லேலூயா, அனைவோரும்
அன்பின் தெய்வம் போற்றுமே.

**324. Hnover** **10, 10, 11, 11.**

"O worship the King all glorious above"

**மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்,**
வல்லவர் அன்பர் பாடிப்போற்றுவோம்;
நம் கேடகம் காவல் அனாதியானோர்,
மகிமையில் வீற்றுத் துதி அணிந்தோர்.

2. சர்வ வல்லமை தயை போற்றுவோம்,
ஒளி தரித்தோர், வானம் சூழ்ந்தோராம்;
குமுறும் மின் மேகம் கோப ரதமே;
கொடும் கொண்டல் காற்றிருள் சூழ் பாதையே

3. மா நீச மண்ணோர் நாணல் போன்றோர் நாம்;
என்றும் கைவிடீர் உம்மை நம்புவோம்;
ஆ! உருக்க தயை! முற்றும் நிற்குமே;
மீட்பர் நண்பர் காவலர் சிருஷ்டிகரே.

4. ஆ, சர்வ சக்தி! சொல்லொண்ணா அன்பே!
மகிழ்வாய் விண்ணில் தூதர் போற்றவே,
போற்றிடுவோம் தாழ்ந்தோர் நாம் அற்பர் என்றும்,
மெய் வணக்கமாய் துதி பாடலோடும்.

**கிறிஸ்துவின் வருகை**

**325. Veni Emmanuel** **10, 10, 10, 10, with refrain.**

"O come, O come, Emmanuel."

**இம்மானுவேல் வாரும், வாருமே,**
மெய் இஸ்ரவேலைச் சிறை மீளுமே;
மா தெய்வ மைந்தன் தோன்றும் வரைக்கும்
உன் ஜனம் பாரில் ஏங்கித் தவிக்கும்,
மகிழ்! மகிழ்! சீயோனின் சபையே,
இம்மானுவேலின் நாள் சமீபமே.

2. ஈசாயின் வேர்த் துளிரே, வாருமே,
பிசாசின் வல்ல கோஷ்டம் நீக்குமே;
பாதாள ஆழம் நின்று ரட்சியும்,
வெம் சாவின்மேல் பேர் வெற்றி அளியும்.

3. அருணோதயமே, ஆ! வாருமே,
வந்தெங்கள் நெஞ்சை ஆற்றித் தேற்றுமே;
மந்தார ராவின் மேகம் நீக்கிடும்,
இருண்ட சாவின் நிழல் ஓட்டிடும்.

4. தாவீதின் திறவுகோலே, வாருமே,
விண் வாசலைத் திறந்து தாருமே;
ஒடுக்கமாம் நல் வழி காத்திடும்,
விசாலமாம் துர்ப் பாதை தூர்த்திடும்.

5. மா வல்ல ஆண்டவா, வந்தருளும்;
முற்காலம் சீனாய் மலை மீதிலும்
எக்காளம் மின்னலோடு தேவரீர்
பிரமாணம் இஸ்ரவேலுக் களித்தீர்.

**326. Bristol, St. Stephen** **C.M.**

**"Hark! the glad sound the Saviour Comes."**

**நற்செய்தி! மேசியா இதோ!**
ஆவலாய் நோக்குவோம்;
பற்றோடு ஏற்று ஆன்மாவில்
ஆனந்தம் பாடுவோம்.

2. வல்லோனால் சிறையானோரை
வல் சிறை நீக்குவார்
நில்லாதே எவ்விரோதமும்
பொல்லாங்கை மேற்கொள்வார்.

3. நருங்குண்டோரை ஆற்றியே
நலிவை நீக்குவார்;
பரத்தின் பாக்கிய செல்வத்தால்
இரவோர் வாழ்விப்பார்.

4. ஓசன்னா! ஆர்க்கும் ஓசன்னா!
சாந்த இவ்வேந்தர்க்கும்;
இயேசுவின் இன்ப நாமமே
பாடுவார் விண்ணோரும்.

### கிறிஸ்து ஜயந்தி பண்டிகை

**327. Forest Green - Christmas Carol.** **D.C.M.**

**"O little Town of Bethlehem"**

**ஓ பெத்லகேமே சிற்றூரே**
என்னே உன் அமைதி!
அயர்ந்தே நித்திரை செய்கையில்
ஊர்ந்திடும் வான் வெள்ளி,
விண் வாழ்வின் ஜோதி தோன்றிற்றே
உன் வீதியில் இன்றே;
நல்லோர் நாட்டம் பொல்லார் கோட்டம்
உன் பாலன் இயேசுவே.

2. கூறும், ஓ விடி வெள்ளிகாள்!
இம் மைந்தன் ஜன்மமே;
விண் வேந்தர்க்கு மகிமையே,
பாரில் அமைதியாம்
மா திவ்விய பாலன் தோன்றினார்
மண் மாந்தர் தூக்கத்தில்,
விழித்திருக்க தூதரும்
அன்போடு வானத்தில்.

3. அமைதியாய் அமைதியாய்
விண் ஈவு தோன்றினார்;
மாந்தர்க்கு ஸ்வாமி ஆசியும்
அமைதியால் ஈவார்;
கேளாதே அவர் வருகை
இப்பாவ லோகத்தில்;
மெய் பக்தர் ஏற்பார் ஸ்வாமியை
தம் சாந்த ஆன்மாவில்.

4. வேண்ட நற் சிறு பாலரும்
இத் தூய பாலனை,
அழைக்க ஏழை மாந்தரும்
இக் கன்னி மைந்தனை,
விஸ்வாசமும் நம் பாசமும்
வரவைப் பார்க்கவே,
இராவை நீக்கித் தோன்றுவார்
இம்மாட்சி பாலனே.

5. பெத்லெகேம் தூய பாலனே,
இறங்கி வருவீர்;
ஜனிப்பீர் எங்களில் இன்றும்
எம் பாவம் நீக்குவீர்;
நற்செய்தி இவ்விழா தன்னில்
இசைப்பார் தூதரே;
ஆ வாரும், வந்து தங்கிடும்
இம்மானுவேலரே.

**328. Noel** **D.C.M.**

**"It came upon the mid-night clear"**

**நள்ளிரவில் மா தெளிவாய்**
மாண் பூர்வ கீதமே
விண் தூதர் வந்தே பாடினார்
பொன் வீணை மீட்டியே;
“மாந்தர்க்கு சாந்தம் நல் மனம்
ஸ்வாமி அருளாலே”
அமர்ந்தே பூமி கேட்டதாம்
விண் தூதர் கீதமே.

2. இன்றும் விண் விட்டுத் தூதர்கள்
தம் செட்டை விரித்தே,
துன்புற்ற லோகம் எங்குமே
இசைப்பார் கீதமே;
பூலோகக் கஷ்டம் தாழ்விலும்
பாடுவார் பறந்தே;
பாபேல் கோஷ்டத்தை அடக்கும்
விண் தூதர் கீதமே.

3. விண்ணோரின் கீதம் கேட்டுப்பின்
ஈராயிரம் ஆண்டும்,
மண்ணோரின் பாவம் பகை போர்
பூலோகத்தை இன்றும்
வருந்தும்; மாந்தர் கோஷ்டத்தில்
கேளார் அக்கானமே;
போர் ஓய்ந்தமர்ந்து கேட்டிடும்
விண் தூதர் கீதமே.

4. பார் வாழ்க்கையின் மா பாரத்தால்
நைந்து தவிப்போரே,
சோர்ந்தே போய்ப்பாதை நகர்ந்து
தள்ளாடிடுவோரே,
நோக்கும், இதோ உதித்ததே
மா நற் பொற்காலமே!
நோவை மறந்து கேட்டிடும்
விண் தூதர் கீதமே.

5. தோன்றிடும் இதோ சீக்கிரம்
பேரின்ப காலமே!
சான்றோராம் தீர்க்கர் ஆண்டாண்டும்
உரைத்த காலமே!
போர் ஓய்ந்து பூமி செழிக்கும்
பூர்வ மாண்போடுமே
பாரெங்கும் பரந்தொலிக்கும்
விண் தூதர் கீதமே.

**329. Austria** **8, 7, 8, 7, D.**

**ஆண்டவா, உமக்கே ஸ்தோத்ரம்,**
அடியேனைக் காத்தீரே
மீண்டும் என்னை உமக்கேற்ற
சேவை செய்ய கொள்வீரே;
என் இதயம் மனம் செயல்
யாவும் உம்மைத் துதிக்கும்;
ஆண்டவா, உமக்கே ஸ்தோத்திரம்!
அடியேனை ஆட்கொள்ளும்.

2. இவ்வுலக வாழ்நாள் எல்லாம்
நான் உமக்காய் வாழவும்
அன்பு, தியாகம், அருள், பக்தி
அனைத்தும் பெற்றோங்கவும்,
பாவ அழுக்கெல்லாம் நீக்கி
தூய பாதை செல்லவும்,
ஆண்டவா, உம் அருள் தாரும்
அடியேனை ஆட்கொள்ளும்.

3. வியாதி, துக்கம், தொல்லை வந்தால்
உம்மை நோக்கிக் கெஞ்சுவேன்;
உம் பிரசன்னம் எனக்கின்பம்
சாவுக்கும் நான் அஞ்சிடேன்;
துன்பத்தில் என் நண்பர் நீரே,
இன்பம் ஈபவர் நீரே,
ஆண்டவா, நீர்தாம் என் தஞ்சம்,
அடியேனை ஆட்கொள்ளும்.

4. மூவராம் திரியேகர்க் கென்றும்,
மாட்சி மேன்மை மகிமை,
விண்ணில் தூதர் தூயர் கூட்டம்
அவர் நாமம் துதிக்கும்;
மண்ணில் மாந்தர் கூட்டம் யாவும்
அவர் பாதம் போற்றவும்,
ஆண்டவா, உம் அருள் தாரும்,
அடியாரை ஆட்கொள்ளும்.

**330. Cruger, Meirionydd** **7, 6, 7, 6, D.**

"Hail to the Lord's Anointed"

**ஆ மேசியாவே வாரும்,**
தாவீதின் மா மைந்தா!
பார் ஆள ஏற்ற காலம்
நீர் வந்தீர் மா கர்த்தா;
சிறைகளையே மீட்டு
கொடுங்கோல் முறிப்பீர்;
சிறப்பாய் நீதி செய்து
பாவமும் போக்குவீர்.

2. நிஷ்டூரம் யாவும் நீக்கி
சகாயம் நல்குவீர்;
கஷ்டத்தில் ஏழை தேற்றி,
நல் பலம் ஈகுவீர்;
மாய்வோர் திரளை மீட்டு
களிப்பால் நிரப்பி,
உய்விப்பீர் ஒளி ஈந்து
இருளை அகற்றி.

3. நல் மாரிபோல் நீர் வாரும்
இப்பூமி செழிக்க;
நம்பிக்கை மகிழ்வன்பும்
எங்கெங்கும் மலர;
நாதர் முன் தூதனாக
நற் சமாதானமும்
நீதியும் நதியாக
எங்கெங்கும் பாய்ந்திடும்.

4. விழுவார் தாழ்ந்து வேந்தர்
பொன் போளம் படைத்தே;
தொழுவாரே, பார் மாந்தர்
துதித்துப் பாடியே;

ஓயா மன்றாட்டு ஸ்தோத்ரம்
சமூகம் ஏறிடும்;
ஒழியாதோங்கும் ராஜ்யம்,
என்றும் நிலைத்திடும்.

5. மாற்றார் எல்லாரும் மாய
மாண்பாக ஆளுவீர்;
பேற்றின்மேல் பேறுண்டாக
ஆண்டாண்டும் ஆளுவீர்;
நிற்கும் ஓயாத காலம்
உமது ஆணையே;
அன்பாம் உமது நாமம்
ஆம் சதாகாலமே.

**331. Dix** **7, 7, 7, 7, 7.**

**" As with gladness men of old"**

**விண் மீன் நோக்கிக் களிப்பாய்**
சாஸ்திரிமார் தாம் ஆவலாய்,
பின் சென்றார் அவ்வெள்ளியை
முன் நடத்தும் ஜோதியை,
நேச கர்த்தா, நாங்களும்
உம்மைப்பின் செல்வோம் என்றும்.

2. தாழ்வாம் கொட்டில் நோக்கியே
மகிழ்வோடு விரைந்தே,
விண் மண்ணோரும் வணங்கும்
பாதம் வீழ்ந்தார் பணிந்தும்,
மனதார நாங்களும்
தேடிப் பாதம் சேரவும்.

3. முன்னணையின் முன்னதாய்
பொன் படைத்தார் பணிவாய்,
படைப்போமே நாங்களும்
பொன் சம்பத்து யாவையும்,
தூய்மை பக்தி பூரிப்பாய்
கிறிஸ்துவாம் விண் வேந்தர்க்காய்

4. தூய இயேசு நித்தமும்
ஜீவ பாதை நடத்தும்,
பாரின் வாழ்க்கை முடிவில்
ஆவியை நீர் மோட்சத்தில்
சேர்ப்பீர், உந்தன் மாட்சியே
போதும் வேண்டாம் ஜோதியே.

5. ஒளிர் மோட்ச நாட்டிலே
வேண்டாம் சிஷ்டி ஜோதியே;
நீரே நித்ய சூரியனும்
ஜோதி இன்பம் கிரீடமும்
வேந்தே, என்றும் போற்றுவோம்,
அல்லேலூயா பாடுவோம்.

**தபசு காலம்**

**332. St. Philip** **7, 7, 7.**

"Lord, in this Thy mercy's day"

**இந்த அருள் காலத்தில்,**
கர்த்தரே, உம் பாதத்தில்
பணிவோம் முழந்தாளில்.

2. தீர்ப்பு நாள் வருமுன்னே,
எங்கள் பாவம் உணர்ந்தே,
கண்ணீர் சிந்த ஏவுமே.

3. மோட்ச வாசல், இயேசுவே,
பூட்டுமுன் எம் பேரிலே
தூய ஆவி ஊற்றுமே.

4. உந்தன் ரத்த வேர்வையால்,
செய்த மா மன்றாட்டினால்,
சாகச் சம்மதித்ததால்.

5. சீயோன் நகர்க்காயக் கண்ணீர்
விட்டதாலும், தேவரீர்,
எங்கள் மேல் இரங்குவீர்.

6. நாங்கள் உம்மைக் காணவே,
அருள் காலம் போமுன்னே
தஞ்சம் ஈயும் இயேசுவே.

**333. Heinlein** **7, 7, 7, 7.**

**"Forty days and forty nights"**

**நாற்பது நாள் ராப் பகல்**
வனவாசம் பண்ணினீர்;
நாற்பது நாள் ராப் பகல்
சோதிக்கப்பட்டும் வென்றீர்.

2. ஏற்றீர் வெயில் குளிரை
காட்டு மிருகத் துணை;
மஞ்சம் உமக்குத் தரை,
கல் உமக்குப் பஞ்சணை.

3. உம்மைப்போல நாங்களும்
லோகத்தை வெறுக்கவும்,
உபவாசம் பண்ணவும்
ஜெபிக்கவும் கற்பியும்.

4. சாத்தான் சீறி எதிர்க்கும்
போதெம் தேகம் ஆவியை
சோர்ந்திடாமல் காத்திடும்
வென்றீரே நீர் அவனை.

5. அப்போதெங்கள் ஆவிக்கும்
மா சமாதானம் உண்டாம்;
தூதர் கூட்டம் சேவிக்கும்
பாக்கியவான்கள் ஆகுவோம்.

அட்டவணை

**334. St. Theodulph refrain.** **7, 6, 7, 6 with**

"All glory laud and honour"

**ஓசன்னா பாலர் பாடும்**
ராஜாவாம் மீட்பர்க்கே
மகிமை, புகழ், கீர்த்தி
எல்லாம் உண்டாகவே

1. கர்த்தாவின் நாமத்தாலே
வருங்கோமானே, நீர்
தாவீதின் ராஜ மைந்தன்,
துதிக்கப்படுவீர்.

2. உன்னத தூதர் சேனை
விண்ணில் புகழுவார்;
மாந்தர், படைப்பு யாவும்
இசைந்து போற்றுவார்.

3. உம்முன்னே குருத்தோலை
கொண்டேகினார் போலும்,
மன்றாட்டு, கீதம், ஸ்தோத்திரம்
கொண்டும்மைச் சேவிப்போம்

4. நீர் பாடுபடுமுன்னே
பாடினார் யூதரும்;
உயர்த்தப்பட்ட உம்மை
துதிப்போம் நாங்களும்.

5. அப்பாட்டைக் கேட்ட வண்ணம்
எம் வேண்டல் கேளுமே;
நீர் நன்மையால் நிறைந்த
காருணிய வேந்தரே.

**335. St. Drostane. - Winchester New** **L.M.**

"Ride on ride on in majesty"

**தயாள இயேசு, தேவரீர்**
மாண்பாய்ப் பவனி போகிறீர்;
வெள்ளோலை தூவிக் கூட்டத்தார்
ஓசன்னா ஆர்ப்பரிக்கிறார்.

2. தாழ்வாய் மரிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
மரணம் வெல்லும் வீரரே,
உம் வெற்றி தோன்றுகின்றதே.

3. விண்ணோர்கள் நோக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
வியப்புற்றே அம் மோக்ஷத்தார்
அடுக்கும் பலி பார்க்கிறார்.

4. வெம் போர் முடிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
தம் ஆசனத்தில் ராயனார்
சுதனை எதிர்பார்க்கிறார்.

5. தாழ்வாய் மரிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
நோ தாங்கத் தலை சாயுமே
பின் மேன்மை பெற்று ஆளுமே.

**பாடுபட்ட வாரம்**

**336. Bavarian 129** **L.M.**

"Die Seele Christi hell'ge mich"

**மரிக்கும் மீட்பர் ஆவியும்,**
வதைக்கப்பட்ட தேகமும்,
என் ஆவி தேகம் உய்யவே
என்றைக்கும் காக்கத்தக்கதே.

2. அவர் விலாவில் சாலவும்
வடிந்த நீரும் ரத்தமும்
என் ஸ்நானமாகி, பாவத்தை
நிவிர்த்தி செய்யத்தக்கதே.

3. அவர் முகத்தின் வேர்வையும்
கண்ணீர் அவஸ்தை துக்கமும்,
நியாயத்தீர்ப்பு நாளிலே
என் அடைக்கலம் ஆகுமே.

4. அன்புள்ள இயேசு கிறிஸ்துவே,
ஒதுக்கை உம்மிடத்திலே
விரும்பித் தேடும் எனக்கும்
நீர் தஞ்சம் ஈந்து ரட்சியும்.

5. என் ஆவி போகும் நேரத்தில்
அதை நீர் பரதீசினில்
சேர்த்தென்றும் உம்மைப் போற்றவே
அழைத்துக் கொள்ளும், கர்த்தரே.

## சிலுவை திருவசனங்கள்

**337. St. Margaret** **7, 6, 7, 6.**

**"Forgive them O my Father"**

***பிதாவே, இவர்களுக்கு மன்னியும்,***
***தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே.***

**கூர் ஆணி தேகம் பாய**
மா வேதனைப் பட்டார்;
“பிதாவே, இவர்கட்கு
மன்னிப்பீயும்” என்றார்.

2. தம் ரத்தம் சிந்தினோரை
நல் மீட்பர் நிந்தியார்;
மா தெய்வ நேசத்தோடு
இவ்வாறு ஜெபித்தார்.

3. எனக்கே அவ்வுருக்கம்
எனக்கே அச்செபம்;
அவ்வித மன்னிப்பையே
எனக்கும் அருளும்.

4. நீர் சிலுவையில் சாக
செய்ததென் அகந்தை;
கடாவினேன், இயேசுவே,
நானுங் கூர் ஆணியை.

5. உம் சாந்தக் கண்டிதத்தை
நான் நித்தம் இகழ்ந்தேன்;
எனக்கும் மன்னிப்பீயும்,
எண்ணாமல் நான் செய்தேன்.

6. ஆ, இன்ப நேச ஆழி!
ஆ, திவ்விய உருக்கம்!
நிந்திப்போர் அறியாமல்
செய் பாவம் மன்னியும்.

**338. Ellers, Finlandia** **10, 10, 10, 10.**

**"Lord when Thy Kingdom comes remembers me."**

**உம் ராஜியம் வருங்காலை, கர்த்தரே,**
அடியேனை நினையும் என்பதாய்
சாகும் கள்ளன் விஸ்வாச நோக்காலே
விண்மாட்சி கண்டு சொன்னான் தெளிவாய்.

2. அவர் ஓர் ராஜா என்று சொல்லுவார்
எவ்வடையாளமும் கண்டிலாரே;
தம் பெலனற்ற கையை நீட்டினார்;
முட் கிரீடம் நெற்றி சூழ்ந்து பீறிற்றே.

3. ஆனாலும், மாளும் மீட்பர் மா அன்பாய்
அருளும் வாக்கு, 'இன்று என்னுடன்
மெய்யாய் நீ பரதீஸிலிருப்பாய்'
என்பதுவாம் – விஸ்வாசத்தின் பலன்

4. கர்த்தாவே, நானும் சாகும் நேரத்தில்
‘என்னை நினையும்’ என்று ஜெபித்தே
உம் சிலுவையை, தியானம் செய்கையில்
உம் ராஜியத்தைக் கண்ணோக்கச் செய்யுமே.

5. ஆனால், என் பாவம் நினையாதேயும்
உம் ரத்தத்தால் அதைக் கழுவினீர்;
உம் திரு சாவால் பாவமன்னிப்பும்
ரட்சிப்பும் எனக்காய்ச் சம்பாதித்தீர்.

6. 'என்னை நினையும்', ஆனால், உமக்கும்
என்னால் உண்டான துன்பம் கொஞ்சமோ?
சிலுவை, நோவு, ரத்த வேர்வையும்,
சகித்த நீர், இவை மறப்பீரோ?

7. 'என்னை நினையும்' நான் மரிக்கும் நாள்
'நீயும் என்னோடு தங்குவாய் இன்றே
நற் பரதீஸில்’ என்னும் உம் வாக்கால்
என் ஆவி தேர்ந்து மீளச் செய்யுமே.

**339. Stabat Mater.** **8, 8, 7, D.**

**" At the Cross Her station keeping"**

***அம்மா, அதோ, உன் மகன்...***
***அதோ, உன் தாய்.***

**சிலுவையைப் பற்றி நின்று**
துஞ்சும் மகனைக் கண்ணுற்று,
விம்மிப் பொங்கினார் ஈன்றாள்;
தெய்வ மாதா மயங்கினார்;
சஞ்சலத்தால் கலங்கினார்;
பாய்ந்ததாத்துமாவில் வாள்.

2. பாக்கியவதி மாதா உற்றார்
சிலுவையை நோக்கிப் பார்த்தார்,
அந்தோ, என்ன வேதனை;

ஏக புத்திரனிழந்து,
துக்க சாகரத்தில் ஆழ்ந்து,
சோகமுற்றனர் அன்னை.

3. இணையிலா இடருற்ற
அன்னை அருந்துயருற
யாவரும் உருகாரோ?
தெய்வ மைந்தன் தாயார் இந்த
துக்க பாத்திரம் அருந்த,
மாதாவோடழார் யாரோ?

4. தம் குமாரன் காயப்பட,
முள்ளால் கிரீடம் சூட்டப்பட,
இந்த நிந்தை நோக்கினார்;
நீதியற்ற தீர்ப்புப் பெற
அன்பர், சீஷர் கைவிட்டோட
அவர் சாகவும் கண்டார்.

5. அன்பின் ஊற்றாம், இயேசுஸ்வாமி,
உமதன்னைக்குள்ள பக்தி
என்தன் நெஞ்சில் ஊற்றிடும்;
அன்பினால் என் உள்ளம் பொங்க;
அனல் கொண்டகம் உருக
அருளைக் கடாட்சியும்.

**340. Arfon, gethsemane, - Redhead 76.** **7, 7, 7, 7, 7, 7.**

**"Throned, upon the awful Tree"**

***என் கடவுளே, என் கடவுளே; ஏன் என்னைக் கைவிட்டீர்?***

**துயருற்ற வேந்தரே,**
சிலுவை ஆசனரே,
நோவால் வாடும் முகத்தை
இருள் திரை மூடிற்றே;
எண்ணிறந்த துன்பம் நீர்
மௌனமாகச் சகித்தீர்.

2. பலியாக மரிக்கும்
வேளை வரும் அளவும்
மூன்று மணி நேரமாய்,
துணையின்றி மௌனமாய்
காரிருளில் தேவரீர்
பேயோடே போராடினீர்.

3. தெய்வ ஏக மைந்தனார்,
அபிஷேக நாதனார்,
தேவனே, என் தேவனே,
என்தனை ஏன் கைவிட்டீர்?'
என்றுரைக்கும் வாசகம்
கேள், இருண்ட ரகசியம்!

4. துயர் திகில் இருண்டே
சூழும்போது, தாசரை
கைவிடாதபடி நீர்
கைவிடப்பட்டிருந்தீர்;
இக்கட்டில் சமீபம் நீர்
என்றிதாலே கற்பிப்பீர்.

**341. Assisi, Misericordia** **8, 8, 8, 6.**

"His are the thousand sparkling rills"

***தாகமாயிருக்கிறேன்.***

**அருவிகள் ஆயிரமாய்**
பாய்ந்து இலங்கிடச் செய்வார்,
அனைத்தும் ஆள்வோர், 'தாகமாய்
இருக்கிறேன்' என்றார்.

2. வெம்போரில் சாவோர் வேதனை,
வியாதியஸ்தர் காய்ச்சலும்,
குருசில் கூறும் இவ்வொரே
ஓலத்தில் அடங்கும்.

3. அகோரமான நோவிலும்,
மானிடர் ஆத்துமாக்களை
வாஞ்சிக்கும் தாகம் முக்கியம்;
என் ஆன்மாவும் ஒன்றே.

4. அந்நா வறட்சி, தாகமும்
என்னால் உற்றீர், பேர் அன்பரே;
என் ஆன்மா உம்மை முற்றிலும்
வாஞ்சிக்கச் செய்யுமே.

**342. Aber** **S.M.**

**"O perfect lift of Love."**

***முடிந்தது***

**பூரண வாழ்க்கையே!**
தெய்வாசனம் விட்டு,
தாம் வந்த நோக்கம் யாவுமே
இதோ முடிந்தது!

2. பிதாவின் சித்தத்தை
கோதற முடித்தார்;
தொல் வேத உரைப்படியே
கஸ்தியைச் சகித்தார்.

3. அவர் படாத் துக்கம்
நரர்க்கு இல்லையே;
உருகும் அவர் நெஞ்சிலும்
நம் துன்பம் பாய்ந்ததே.

4. முள் தைத்த சிரசில்
நம் பாவம் சுமந்தார்;
நாம் தூயோராகத் தம் நெஞ்சில்
நம் ஆக்கினை ஏற்றார்.

5. எங்களை நேசித்தே
எங்களுக்காய் மாண்டீர்;
ஆ, சர்வ பாவப் பலியே,
எங்கள் சகாயர் நீர்.

6. எத்துன்ப நாளுமே,
மா நியாயத்தீர்ப்பிலும்,
உம் புண்ணியம், தூய மீட்பரே
எங்கள் அடைக்கலம்.

7. இன்னும் உம் கிரியையை
எங்களில் செய்திடும்
நீர் அன்பாய் ஈந்த கிருபைக்கே
என் அன்பு ஈடாகும்.

**343. Strength and Stay (A.M.12) Commendation. 11, 10, 11, 10.**

**" And now beloved Lord Thy Soul resigning"**

***பிதாவே, உம்முடைய கைகளில்***
***என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.***

**இப்போது, நேச நாதா, தலை சாய்த்து**
தெளிந்த அறிவோடு ஆவியை
ஒப்புவித்தீர் பிதாவின் கரமீது;
பொங்கு நெஞ்சம் மூச்சற்றொடுங்கிற்றே.

2. சாமட்டும் சாந்தமாய் என் துக்கப் பாரம்
நீர் தாங்கி, மனதார மரித்தீர்;
உம் சாவில் பெலன் உற்றே, ஆவியையும்
அமைதலாய்த் தந்தைக்கொப்புவித்தீர்.

3. நல் மீட்பரே, சாவிருள் என்னைச் சூழ்ந்து,
மரண அவஸ்தை உண்டாகையில்,
தொய்யும் ஆவியில் சமாதானம் ஈந்து,
ஒளி உண்டாக்கும் அச்சராவினில்.

4. நான் மாளும்போதும் சிலுவையைக் காட்டும்;
என் தலையை உம் மார்பில் அணைத்தே
என் கடை மூச்சை அன்பாய் ஏற்றுக்கொள்ளும்
அப்பால் உம் நித்திய ஓய்வு என்னதே.

### பரி. யோவான் ஸ்நானகன் திருநாள்

**344. Winchester New** **L.M.**

"On Jordan's banks the Baptist's cry"

**கர்த்தர் சமீபமாம் என்றே**
யோர்தான் நதியின் அருகே,
முன் தூதன் யோவான் கூறிடும்
நற்செய்தி கேட்க விழியும்.

2. விருந்தும் போன்றே நாதனார்
நம் நெஞ்சில் வந்து தங்குவார்;
அவர்க்கு வழி ஆகவும்
அகத்தைச் சுத்தம் பண்ணுவோம்.

3. நாதா, நீர் எங்கள் தஞ்சமும்,
ரட்சிப்பும், ஜீவ க்ரீடமும்;
உம் அருள் அற்ற யாவரும்
உலர்வார் புஷ்பம் போலவும்.

4. நோய் கொண்டோர் சொஸ்தமாகவும்
வீழ்ந்தோர் கால் ஊன்றி நிற்கவும்,
பூலோகம் சீர் அடையவும்,
எழும்பி நீர் பிரகாசியும்.

5. உமக்கு சாட்சி கூறியே
வழி ஆயத்தமாகவே,
யோவான் ஸ்நானன்போல் நாங்களும்
உம் அருள் பெறச் செய்திடும்.

**345. Ravenshaw** **6, 6, 6, 6.**

"Lord Thy word abideth."

**நாதன் வேதம் என்றும்**
எங்கள் வழி காட்டும்;
அதை நம்புவோர்க்கும்
மகிழ் ஒளி வீசும்.

2. ஆறுதலின் வேதம்
மீட்பின் சுவிசேஷம்
சத்துரு கிட்டும் போதும்
பயம் முற்றும் நீக்கும்.

3. புசல், அலை மோதின்,
மேகம் இருள் மூடின்,
வேதம் ஒளி வீசும்,
க்ஷேம வழி சேர்க்கும்.

4. வாக்குக் கெட்டா இன்பம்,
எண்ணில்லாத செல்வம்,
பேதை மானிடர்க்கும்
தெய்வ வார்த்தை ஈயும்.

5. ஜீவனுள்ள மட்டும்
வேதம் பெலன் தரும்;
சாவு வரும்போதும்
வேதம் ஆற்றித் தேற்றும்.

6. நாதா, உந்தன் வாக்கை
கற்றுணர்ந்து உம்மை
நேசித்தடியாரும்
என்றும் பற்றச் செய்யும்.

**346. S.S.680** **7, 6, 7, 6, D.**

**"Stand up stand up for Jesus."**

**நல் மீட்பர் பட்சம் நில்லும்!**
ரட்சணிய வீரரே!
ராஜாவின் கொடியேற்றி
போராட்டம் செய்யுமே!
சேனாதிபதி இயேசு
மாற்றாரை மேற்கொள்வார்;
பின் வெற்றி கிரீடம் சூடி
செங்கோலும் ஓச்சுவார்.

2. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
எக்காளம் ஊதுங்கால்,
போர்க்கோலத்தோடு சென்று
மெய் விசுவாசத்தால்
அஞ்சாமல் ஆண்மையோடே
போராடி வாருமேன்;
பிசாசின் திரள் சேனை
நீர் வீழ்த்தி வெல்லுமேன்.

3. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
எவ்வீர சூரமும்
நம்பாமல், திவ்விய சக்தி
பெற்றே பிரயோகியும்;
சர்வாயுதத்தை ஈயும்
கர்த்தாவை சாருவீர்;
எம்மோசமும் பாராமல்
முன் தண்டில் செல்லுவீர்.

4. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
போராட்டம் ஓயுமே;
வெம்போரின் கோஷ்டம், வெற்றி
பாட்டாக மாறுமே!
மேற்கொள்ளும் வீரர் ஜீவ
பொற்கிரீடம் சூடுவார்;
விண் லோக நாதரோடே
வீற்றரசாளுவார்.

**347. St. Denio** **11, 11, 11, 11.**

**"Immortal invisible God only wise."**

**என்றென்றும் ஜீவிப்போர் அதரிசனர்,**
எட்டா ஒளியிலுள்ளோர் சர்வ ஞானர்,
மா மேன்மை மகத்துவர் அநாதியோராம்;
சர்வவல்லோர் வென்றோர் நாமம் போற்றுவோம்.

2. ஒய்வோ துரிதமோ இன்றி ஒளிபோல்
ஒடுங்கா பொன்றா சக்தியோடாள்வதால்,
வான் எட்டும் மலைபோல் உம் நீதி நிற்கும்;
அன்பு நன்மை பெய்யும் உந்தன் மேகமும்.

3. பேருயிர், சிற்றுயிர் ஜீவன் தேவரீர்,
யாவர்க்குள்ளும் உய்வீர் மெய்யாம் ஜீவன் நீர்;
மலர் இலைபோல் மலர்வோம், செழிப்போம்,
உதிர்வோம், சாவோம், நீரோ மாறாதோராம்.

4. மா மாட்சி பிதா, தூய ஜோதி தந்தாய்!
தாழுவர் உம் தூதர் மா வணக்கமாய்;
துதிப்போம் மகத்தாய்க் காணத் தோற்றுவீர்,
கண் கூசும் ஜோதியாம் ஜோதி தேவரீர்.

## கடவுள் இரட்சகர்

**348. Nottingham** **C.M.**

**"The Head that once was crowned with thorns"**

**முள் கிரீடம் பூண்ட நாதனார்**
மா மாட்சி பெற்றாரே;
விண் கிரீடம் இப்போ சூடினார்
வென்றோராம் வீரரே.

2. உன்னத ஸ்தானம் விண்ணிலே
இவர்க்கே சொந்தமாம்;
மன்னாதி மன்னர் கர்த்தரே
விண் மாட்சி ஜோதியாம்.

3. அண்ணலின் நாமம் அன்பையும்
நன்றாய் அறிந்தோராம்
விண்ணோர் மண்ணோர் மகிழ்ச்சியும்
இம்மீட்பர் நாதராம்.

4. சிலுவையின் மா நிந்தையும்
பேரருள் பெறுவார்,
நிலையாம் நாமம் பூரிப்பும்
அன்னோர் அடைகுவார்.

5. நாதர்போல் பாரில் பாடுற்றே
அவரோடாள்வாராம்;
தெய்வன்பின் மறை அறிவே
சந்தோஷம் பலனாம்.

6. சிந்தை சாவான சிலுவை
நம் ஜீவன் சுகமாம்;
நம் சம்பத்து, நம் நம்பிக்கை,
நம் ஓயா த்யானமாம்.

## பரிசுத்தமாகுதல்

**349. S.S.608** **11, 11, 11, 11.**

**"Take time to be holy"**

**தூய்மை பெற நாடு; கர்த்தர் பாதமே**
நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே;
கூடி பக்தரோடு சோர்ந்தோர் தாங்குவாய்,
யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்.

2. தூய்மை பெற நாடு; லோகக் கோஷ்டத்தில்
தனித்திரு நாளும் அவர் பாதத்தில்;
யேசுவைப் போலாவாய், நோக்கின் அவரை
பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை.

3. தூய்மைபெற நாடு; கர்த்தர் நடத்த,
என்ன நேரிட்டாலும், அவர் பின் செல்ல;
இன்பம் துன்பம் நேர்ந்தும் விடாய் அவரை;
நோக்கியவர் வாக்கில் வைப்பாய் நம்பிக்கை.

4. தூய்மை பெற நாடு; ஆத்மா அமர்ந்து,
சிந்தை செய்கை யாவும் அவர்க்குட்பட்டு,
அன்பின் ஜீவ ஊற்றைச் சேர்ந்து ருசிக்க;
முற்றும் தூய்மையாவாய் விண்ணில் வசிக்க.

## தெய்வ நடத்துதல்

**350. Martydom** **C.M.**

"O God of Bethel by whose Hand"

**அன்போடு எம்மைப் போஷிக்கும்**
பெத்தேலின் தெய்வமே;
முன்னோரையும் நடத்தினீர்
கஷ்டம் இவ்வாழ்விலே.

2. கிருபாசனமுன் படைப்போம்
எம் ஜெபம் ஸ்தோத்ரமும்;
தலைமுறையாய்த் தேவரீர்
எம் தெய்வமாயிரும்.

3. மயங்கும் ஜீவ பாதையில்
மெய்ப்பாதை காட்டிடும்;
அன்றன்றுமே நீர் தருவீர்
ஆகாரம் வஸ்திரமும்.

4. இஜ்ஜீவிய ஓட்டம் முடிந்து,
பிதாவின் வீட்டினில்
சேர்ந்திளைப் பாறுமளவும்
காப்பீர் உம் மறைவில்.

5. இவ்வாறான பேர் நன்மைக்காய்
பணிந்து கெஞ்சினோம்;
நீர் தாம் எம் தெய்வம் என்றுமே,
சுதந்தரமுமாம்.

**351. S.S.556** **7, 7, 7, 7, 7, 7.**

**"Jesus Saviour pilot me"**

**இயேசு நாதா! காக்கிறீர்,**
இளைப்பாறச் செய்கிறீர்;
மோசம் நேரிடாமலும்,
பாதம் இடறாமலும்,
என்னைத் தாங்கி நிற்கிறீர்;
நேச நாதா! காக்கிறீர்.

2. வாரிபோன்ற லோகத்தில்
யாத்திரை செய்து போகையில்,
சூறைக் காற்று மோதினும்,
ஆழி கோஷ்டமாயினும்,
அமைதல் உண்டாக்குவீர்;
நேச நாதா! காக்கிறீர்!

3. சற்றுத் தூரம் செல்லவே,
மோட்ச கரை தோன்றுமே!
துன்பம் நீங்கி வாழுவேன்;
இன்பம் பெற்று போற்றுவேன்
அது மட்டும் தாங்குவீர்;
நேச நாதா! காக்கிறீர்.

## அன்பு

**352. St. Margaret's** **9, 9, 9, 9, 6.**

**"O Love that will not let me go."**

**அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்**
சோர்ந்த என் நெஞ்சம் உம்மில் ஆறும்;
தந்தேன் என் ஜீவன் நீரே தந்தீர்,
பிரவாக அன்பில் பாய்ந்தென்றும்
ஜீவாறாய்ப் பெருகும்.

2. ஜோதி! என் ஆயுள் முற்றும் நீரே;
வைத்தேன் உம்மில் என் மங்கும் தீபம்;
நீர் மூட்டுவீர் உம் ஜோதியாலே;
பேர் ஒளிக் கதிரால் உள்ளம்
மேன்மேலும் ஸ்வாலிக்கும்.

3. பேரின்பம் நோவில் என்னைத் தேடும்!
என் உள்ளம் உந்தன் வீடே என்றும்;
கார் மேகத்திலும் வான ஜோதி
விடியுங்காலை களிப்போம்!
உம் வாக்கு மெய் மெய்யே.

4. கரூசே! என் வீரம் திடன் நீயே
உந்தன் பாதம் விட்டென்றும் நீங்கேன்;
வீண் மாயை யாவும் குப்பை நீத்தேன்;
விண் மேனியாய் நித்திய ஜீவன்
வளர்ந்து செழிக்கும்.

## போராட்டம்

**353. St. Oswald, Sussex - Marching.** **8, 7, 8, 7.**

**"Through the night of doubt and sorrow"**

**துக்கம் திகில் இருள் சூழ,**
மோட்ச யாத்திரை செய்கிறோம்;
கீதம் பாடி முன்னே நோக்கி
மோட்ச பாதை செல்கிறோம்.

2. இருள் சூழ்ந்தும் பிரகாசிக்கும்
தீப ஸ்தம்ப ஜோதியும்;
வீரமாக ஐக்கியமாக
முன்னே செல்வோம் ராவிலும்.

3. பக்தரோடு தங்கிச் செல்லும்
தெய்வமாம் ஒளி ஒன்றே;
இருள் நீங்க அச்சம் நீங்கும்,
பாதை முற்றும் பகலே.

4. எங்கள் ஜீவ நோக்கம் ஒன்றே,
குன்றா விசுவாசமும்;
எங்கள் ஊக்க வாஞ்சை ஒன்றே,
ஒன்றே எம் நம்பிக்கையும்.

5. மோட்சம் செல்லும் கோடிப்பேரும்
பாடும் பாட்டு ஒன்றேயாம்;
ஆபத்து, போராட்டம், தெய்வப்
பாதை செல்வதும் ஒன்றாம்.

6. மோட்ச கரை சேர்ந்தபின்னும்
பூரிப்பானந்தம் ஒன்றே;
ஒரே சர்வ வல்ல பிதா
அன்பால் அரசாள்வாரே.

7. முன்னே செல்வீர், தோழரே நீர்,
சிலுவை உம் பலமாம்;
நிந்தை தாங்கி போர் புரிவீர்
ஆயுள் காலமும் எல்லாம்.

8. நியாயத்தீர்ப்பு மா தினத்தில்
கல்லறை விட்டெழுவோம்;
துக்கம் திகில் யாவும் நீங்கும்,
பாடும் ராவும் ஓய்ந்துபோம்.

**354. Monro and Redhead** **6, 4, 6, 3.**

"In His own raiment clad"

*(I. கேள்வி)*

**தம் ரத்தத்தில் தோய்ந்த**
அங்கி போர்த்து,
மாதர் பின் புலம்ப
நடந்து;

2. பாரச் சிலுவையால்
சோர்வுறவே,
துணையாள் நிற்கின்றான்
பாதையே.

3. கூடியே செல்கின்றார்
அப்பாதையே;
பின்னே தாங்குகின்றான்
சீமோனே.

4. குருசைச் சுமந்தெங்கே
செல்லுகின்றார்?
முன் தாங்கிச் சுமக்கும்
அவர் யார்?

*(II. மறுமொழி)*

5. அவர்பின் செல்லுங்கள்
கல்வாரிக்கே,
அவர் பராபரன்
மைந்தனே!

6. அவரின் நேசரே,
நின்று, சற்றே
திவ்விய முகம் உற்று
பாருமே.

7. சிலுவைச் சரிதை
கற்றுக் கொள்வீர்;
பேரன்பை அதனால்
அறிவீர்.

8. பாதையில் செல்வோரே,
முன் ஏகிடும்
ரூபத்தில் காணீரோ
சௌந்தரியம்?

*(III. சிலுவை சரிதை)*

9. குரூசில் அறையுண்ட
மனிதனாய்
உம்மை நோக்குகின்றேன்
எனக்காய்.

10. கூர் முள் உம் கிரீடமாம்,
குரூசாசனம்;
சிந்தினீர் எனக்காய்
உம் ரத்தம்.

11. உம் தலை சாய்க்கவோ
திண்டு இல்லை;
கட்டையாம் சிலுவை
உம் மெத்தை.

12. ஆணி கை, கால் ஈட்டி
பக்கம் பாய்ந்தும்,
ஒத்தாசைக்கங்கில்லை
எவரும்.

13. பட்டப்பகல் இதோ
ராவாயிற்றே;
தூரத்தில் நிற்கின்றார்
உற்றாரே.

14. ஆ, பெரும் ஓலமே!
தோய் சோரியில்
உம் சிரம் சாய்க்கிறீர்
மார்பினில்

15. சாகும் கள்ளன் உம்மை
நிந்திக்கவும்,
சகிக்கின்றீரோ நீர்
என்னாலும்?

16. தூரத்தில் தனியாய்
உம் சொந்தத்தார்
மௌனமாய் அழுது
நிற்கின்றார்

17. "இயேசு நசரேத்தான்
யூதர் ராஜா"
என்னும் விலாசம் உம்
பட்டமா?

18. பாவி என் பொருட்டு
மாளவும் நீர்
என்னில் எந்நன்மையை
காண்கின்றீர்?

### *(IV. சிலுவையின் அழைப்பு)*

### *(குருவானவர் பாடுவது)*

19. நோவில் பெற்றேன், சேயே;
அன்பில் காத்தேன்;
நீ விண்ணில் சேரவே
நான் வந்தேன்.

20. தூரமாய் அலையும்
உன்னைக் கண்டேன்;
என்னண்டைக் கிட்டிவா,
அணைப்பேன்.

21. என் ரத்தம் சிந்தினேன்
உன் பொருட்டாய்;
உன்னைக் கொள்ள வந்தேன்
சொந்தமாய்

22. எனக்காய் அழாதே
அன்பின் சேயே
போராடு, மோட்சத்தில்
சேரவே.

### *(V. இயேசுவை நாம் வேண்டல்)*

23. நான் துன்ப இருளில்,
விண் ஜோதியே,
சாமட்டும் உம் பின்னே
செல்வேனே.

24. எப்பாரமாயினும்
உம் சிலுவை,
நீர் தாங்கின் சுமப்பேன்
உம்மோடே.

25. நீர் என்னைச் சொந்தமாய்
கொண்டால், வேறே
யார் உம்மிலும் நேசர்
ஆவாரே?

26. இம்மையில் உம்மண்டை
நான் தங்கியே,
மறுமையில் வாழ
செய்யுமே.

**355. Lammas, Coena Domini** **10, 10.**

**"Draw nigh and take the Body"**

**கர்த்தரின் மாம்சம் வந்துட்கொள்ளுங்கள்,**
சிந்துண்ட ரத்தம் பானம் பண்ணுங்கள்.

2. தூய ரத்தத்தால் ரட்சிப்படைந்தோம்,
நற்பெலன் பெற்று துதி ஏற்றுவோம்.

3. தெய்வ குமாரன், மீட்பின் காரணர்,
தம் சிலுவையால் வெற்றி பெற்றவர்.

4. தாமே ஆசாரி, தாமே பலியாய்,
தம்மைச் செலுத்தினார் எல்லார்க்குமாய்.

5. பண்டை ஏற்பாட்டின் பலிகள் எல்லாம்,
இந்த ரகசியத்தின் முன் குறிப்பாம்.

6. சாவின் கடூர வன்மை மேற்கொண்டார்,
தம் பக்தருக்கருள் கடாட்சிப்பார்.

7. உண்மை நெஞ்சோடு சேர்ந்து வாருங்கள்,
ரட்சிப்பின் பாதுகாப்பை வாங்குங்கள்

8. தம் பக்தரை ஈங்காண்டு காக்கிறார்,
அன்பர்க்கு நித்திய ஜீவன் ஈகிறார்.

9. விண் அப்பத்தாலே திருப்தி செய்கிறார்,
ஜீவ தண்ணீரால் தாகம் தீர்க்கிறார்.

10. எல்லாரும் தீர்ப்பு நாளில் வணங்கும்,
அல்பா ஒமேகா நம்மோடுண்டிங்கும்.

**356. Caswall, North coates** **6, 5, 6, 5.**

**"Jesus gentlest Saviour"**

**சாந்த இயேசு சுவாமி,**
வந்திந்நேரமும்,
எங்கள் நெஞ்சை உந்தன்
ஈவால் நிரப்பும்.

2. வானம், பூமி, ஆழி
உந்தன் மாட்சிமை
ராஜரீகத்தையும்
கொள்ள ஏலாதே.

3. ஆனால், பாலர் போன்ற
ஏழை நெஞ்சத்தார்
மாட்சி பெற்ற உம்மை
ஏற்கப் பெறுவார்.

4. விண்ணின் ஆசீர்வாதம்
மண்ணில் தாசர்க்கே
ஈயும் உம்மை நாங்கள்
போற்றல் எவ்வாறே?

5. அன்பு, தெய்வ பயம்,
நல் வரங்களும்
சாமட்டும் நிலைக்க
ஈயும் அருளும்.

**357. Clarion** **8, 7, 8, 7.**

**"Strengthen for service Lord"**

**தூய பந்தி சேர்ந்த கைகள்**
சேவை செய்யக் காத்திடும்;
தூய தொனி கேட்ட செவி
தீக்குரல் கேளாமலும்;

2. "தூயர் தூயர்" என்ற நாவு
வஞ்சனை பேசாமலும்,
தூய அன்பைக் கண்ட கண்கள்
என்றும் நம்பி நோக்கவும்;

3. தூய ஸ்தலம் சென்ற கால்கள்
ஒளியில் நடக்கவும்;
தூய ஆவி பெற்ற எம்மில்
நவ ஜீவன் பொங்கவும்.

**358. PIcardy 84.** **15, 15, 15.**

"Let all mortal flesh keep silence"

**பயத்தோடும் பக்தியோடும் தூய சிந்தையுள்ளோராய்**
சபையார் அமர்ந்து நிற்க, ஆசீர்வாத வள்ளலாம்
தெய்வ சுதன் கிறிஸ்து நாதர் ராஜனாய் விளங்குவார்.

2. வேந்தர்க்கெல்லாம் வேந்தர் முன்னே கன்னிமரி மைந்தனாய்
பாரில் வந்து நின்றார்; இதோ, சர்வ வல்ல கர்த்தராய்
வானாகாரமான தம்மால் பக்தரைப் போஷிப்பிப்பார்.

3. தூத கணங்கள் முன் சென்று பாதை செவ்வை பண்ணவே
விண்ணினின்று அவர் தோன்ற ஜோதியில் மா ஜோதியாய்
வெய்யோன் கண்ட இருள் எனத் தீயோன் ராஜ்யம் மாயுமே.

4. ஆறு செட்டையுள்ள சேராப், கண்வளரா கேரூபின்
செட்டையால் வதனம் மூடி, என்றும் ஆரவாரித்து
அல்லேலூயா, அல்லேலூயா, கர்த்தா, என்று போற்றுவார்.

**359. Unde et Memores** **10, 10, 10, 10, 10, 10.**

"And now O father mindful of Thy love"

**பிதாவே, எங்களை கல்வாரியில்**
நீர் மீட்ட அன்பை நாங்கள் உணர்ந்தே
நரர்க்காய் விண்ணில் உம் சமுகத்தில்
பரிந்து பேசும் கிறிஸ்துவுடனே
ஒரே மெய்யான பலி படைப்போம்
இங்கே அதை உம்முன் பாராட்டுவோம்.

2. ஆ! எங்கள் குற்றம் கறை யாவையும்
பாராமல் கிறிஸ்து முகம் நோக்குமே
விஸ்வாஸம் மங்கி, ஜெபம் குன்றியும்
உம் பேரருளைப் போக்கடித்தோமே;
என்றாலும், எங்கள் பாவம் ஆக்கினை
இடையில் வைத்தோம் மீட்பர் புண்ணியத்தை.

3. இவ்வேளை எங்கள் நண்பர்க்காகவும்
உம் சன்னிதானம் வேண்டல் செய்வோமே;
சிறந்த நன்மை யாவும் அளியும்;
உம் மார்பினில் அணைத்துக் காருமே;
எத்தீங்கும் அணுகாமல் விலக்கும்;
உம்மில் நிலைக்கப் பெலன் அருளும்.

4. இவ்வாறு அண்டினோம் உம் சரணம்.
மா சாந்தமுள்ள மீட்பரான நீர்
பேரின்பம் தரும் திவ்விய போஜனம்
கொடுப்பதாலும் தீமை நீக்குவீர்.
உற்சாகத்தோடு உம்மை என்றைக்கும்
சேவித்துப் பற்றத் துணை புரியும்.

**முடிவு கவி**

**360.**

**ஸ்தோத்ரம் ஸ்தோத்ரம் இஸ்ரவேலின்**
நித்ய கர்த்தா யெகோவாவுக்கே
எல்லாருமே ஆமென் என்போம்,
ஆமென், கர்த்தாவுக்கே ஸ்தோத்ரம் – ஆமென்

**361. S.S.207**

"Be glad in the Lord"

**ஏகோபித்துச் சேருங்களேன்**
கர்த்தாவில் ஆனந்திக்கவும்,
விசாரம் விட்டோங்களேன்
கெம்பீரித் தாராதிக்கவும்.

செய்வோம்! செய்வோம்!
திரியேகரைத் துதிசெய்வோம்!

2. பராபரன் மெய் வஸ்துவாம்
தயாபரர் ஆண்டவரே
வந்தார் வையகத்திலேயாம்
இரட்சிக்க வல்லவரே.

3. பிசாசின் உபாயங்களால்
பயங்கர மோசமுண்டாம்
ஆனாலும் தேவாவியினால்
ஒத்தாசையும் ஜெயமுமாம்.

4. ஏகோபித்துப் பாடுங்களேன்
மகோற்ச வானந்தத்தினால்
திரியேகரைப் போற்றுங்களேன்
கெம்பீர சங்கீதத்தினால்.

**362.** **ஏக தாளம்**

**தோழரே சேர்ந்து வாருங்கள்**
தேவனைப் புகழ்ந்து பாடுங்கள்
சேனையின் தேவன் நல்லவர்,
தேவன் நல்லவர், தேவன் நல்லவர்,
என்றல்லேலூயா சொல்லிபாடுங்கள்;

1. காவலர் தளர்ந்து போய்ப் பெல
சாலிகள் கூனிப் போமுன்னும்
கிண்ணிகள் நசுங்கிப் போமுனும்
கேட்பவர் குன்றிப் போமுனும்
பார்ப்பவர் மறைந்து போமுனும்
ஆதரவான யேசுநாதனை
வாலிபத்தினில் நீர் நினைத்திடும்

2. மைந்தனார் பதத்தைப் போற்றிநல்
விந்தையாய் சிறந்து நல்வேத
மந்தையில் சேர்த்திடும் திரு
வேந்தனை வணங்கிடும், பரி
சுத்தனைப் போற்றிடும்; மறு
லோகமதினில் தூதசேனையோ
டேகி மாமகிழாகி வாழலாம்

**363. Moscow** **6, 6, 4, 6, 6, 6, 4.**

**கீழ் வான கோடியின்**
செம் காந்தி சூரியன்
எழும்பிடும்;
அடியார் ஆன்மத்தின்
நீதியின் சூரியன்
ஆரோக்யம் சீருடன்
எழும்பிடும்.

2. இராவிருள் நீங்கிற்றே
காந்தியும் தோன்றிற்றே
பூமி தன்னில்;
பாவாந்தகாரமும்
எவ்வறி வீனமும்
நீங்கிடத் தோன்றிடும்
எம் நெஞ்சத்தில்.

3. வடிவம் வர்ணமும்
வான் புவி வண்ணமும்
காணுவோமே;
உம் சிருஷ்டி நோக்கத்தை
உம் ஞான ஜோதியை
உந்தன் நற்பாதையைக்
காட்டுவீரே.

**364. St. Clement.** **L.M.**

"The day Thou gavest Lord is ended"

**நீர் தந்த நாளும் ஓய்ந்ததே**
கர்த்தாவே இராவும் வந்ததே;
பகலில் உம்மைப் போற்றினோம்
துதித்து இளைப்பாறுவோம்.

2. பகலோன் ஜோதி தோன்றவே,
உம் சபை ஓய்வில்லாமலே
பூவெங்கும் பகல் ராவிலும்
தூங்காமல் உம்மைப் போற்றிடும்.

3. நாற்றிசையும் பூகோளத்தில்
ஓர் நாளின் அதிகாலையில்
தொடங்கும் ஜெபம் ஸ்தோத்ரமே
ஓர் நேரம் ஓய்வில்லாததே.

**365.**

"Have thine own way Lord"

**உம் சித்தம் தேவா என் பாக்கியம்!**
குயவன் நீர் தாமே, களிமண் நானே;
உம் சித்தம்போல ஆக்கும் என்னை,
ஒப்புவித்தேனே பூரணமாய்.

**366. S.S.300** **S.M.**

"Lord keep us safe this night"

**கர்த்தாவே, இரவின்**
பயங்கள் நீக்கிடும்;
விழிக்கு மட்டும் தூதரின்
நற்காவல் ஈந்திடும்.

**367. Spanish Chant** **7s, 8l.**

**செல்வோம் யாம் கோயிலுக்கு**
ஓய்வுநாட்கள் தோறுமே;
துதி செய்வோம் யாம் நன்றாய்
ஓய்வுநாட்கள் தோறுமே;
பாரும் நேச தெய்வமே!
எங்கள் நெஞ்சம் ஆற்றுமே,
ஓய்வுநாட்கள் தோறுமே.

2. வேலையை யாம் விடுவோம்
ஓய்வுநாட்கள் தோறுமே;
உம்மையே யாம் வாழ்த்துவோம்
ஓய்வுநாட்கள் தோறுமே;
ஆபாசம் நீர் நீக்குவீர்,
உமதருள் ஊற்றுவீர்
ஓய்வுநாட்கள் தோறுமே.

3. தேவ வாக்கை யாம் கேட்போம்
ஓய்வுநாட்கள் தோறுமே
அதை சித்தியாக்குமே
ஓய்வு நாட்கள் தோறுமே;
போகும் இடம் தங்குவீர்
ஆசீர்வாதம் தருவீர்
ஓய்வுநாட்கள் தோறுமே.

**368.**

**தூய தேவா! திரியேக தேவா!**
நீர் வாரும், நீரே வாரும்;
இதயத்தைத் திறந்தே இருக்கிறேன்
இதையும் திருப் பீடமாக்கிடுமே;
இரத்தத்தினால், இரத்தத்தினால்
கழுவும் கருணை நிறைந்தென்னையே,
கர்த்தாதி கர்த்தனே.

**369.**

**சேனைகளின் பரன் யெகோவா**
பரிசுத்தர்; பரிசுத்தர்,
பரிசுத்தர்; ஆமென்
திருமகிமை நிறைந்தவராம்
பாரிலெங்கும் ஹல்லேலூயா.

2. சர்வ சுத்தர் பரன் யெகோவா
பரிசுத்தர்; பரிசுத்தர்,
பரிசுத்தர்; ஆமென்
இருந்தவர்கள்தான் இருக்கிறவர்
வருபவர்தான் ஹல்லேலூயா.

**370.**

**என்பிதா வீட்டில் பலவாசஸ்தலங்கள்**
மேன்மையாகவே விளங்கிடுது!
என்பிதா வீட்டில் பலவாசஸ்தலங்கள்
உன்னதத்தில் மேன்மையாம்;

இன்பம், இன்பம், என்பிதா வீட்டில்
இன்பம், இன்பம், என் பங்காகிடும்;
இன்பம், இன்பம், என்பிதா வீட்டில்
என் பங்கா கிடும் என்றும்!

**371.**

**அவிசுவாசத்தில் துவைந்து**
ஆபத்தில் ஏன் நிற்கிறாய்?
நம்பேன் இப்போ, இரட்சிப்பார் அப்போ,
மனதைத் தா நம்பிக்கையாய்
இரட்சிக்க வல்லவர் யேசு,
மீட்கவல்லோர், காக்கவல்லோர்
பாவியை மீட்க வல்லோர்.

2. ஏழைப் பலவீனன் ஐயோ!
பாவத்தை வெல்லேன் என்றாய்;
மெய்தான்; ஆனால் அவரைச் சேர்ந்தால்
மீட்டுன்னைப் பாதுகாப்பார்.

3. இவர் என்னைத் துக்கத்தில் கண்ட
அன்பாக சொஸ்தம் செய்தார்
இருள்நீக்கி, இவர் என்னைத் தூக்கி
மெய் வெளிச்சத்தைத் தந்தார்.

4. துக்கங்கள், துன்பங்கள் வந்து,
சோதனை என்னைச் சூழ்ந்தால்,
என்றும் இவர் தாங்குவார் என்னை;
எந்தனுக் கேது பயம்.

**372.**

**துதி கனம் மகிமையுமக்கே**
ஓ எல்லாமுமே, ஓ எல்லாமுமே;
ஓ நீரே ராஜாவே,
ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
ஸ்தோத்திரமே மிக ஸ்தோத்ரம்
ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
ஓ நீரே ராஜாவே;

துதி கனம் மகிமை யுமக்கே,
ஓ எல்லாமுமே, ஓ எல்லாமுமே;
ஓ! நீரே ராஜாவே.

**373.**

**மெய்யின்பம் இருக்கும் இடம் அறிவேன்,**
துய்யன் வழியில் நடப்பதால்,
மெய் சந்தோஷம் பெருகும் இடமறிவேன்,
துய்யன் வழியில் நடப்பதால்.

தேவ சமுக ஜீவியம் திர்ப்தி தருமே
மூவருடன் போவது சந்தோஷமாகுமே,
ஆத்தும தோல்வி அறியவேண்டாமே,
ஆயன் வழியில் நடப்போமே.

**374.**

**ஆசையாய்க் கூடுவோம்**
அன்புடன் பாடுவோம்
ஈசனார்தம் நேசமாக
வீந்ததைக் கொண்டாடுவோம்

மா சந்தோஷம் மா கெம்பீரம்
மாந்தர் நாமெல்லாருக்கும்
மாட்சியுறும் காட்சிகாண
வாரும் பெத்லகேமுக்கு.

2. முன்னணை மீதினில்
சின்னவோர் பாலனாய்
உன்னத னொரே குமாரன்
ஒய்யாரமாய்த் தோன்றினார்

3. ரூபமில் லாதவர்
சோபித பூரணர்
சாபம் நிறை பாவ மாம்ச
ரூபெடுத்து வந்தனர்.

4. தேகறை பாலகர்
ஜேசென்னும் பேரினர்
மாசு திகில் நீக்கி நம்மை
மீட்க மனுவாயினர்.

**375. S.S.66** **P.M.**

**"Who is he in yonder stall"**

**அதோ! மாட்டுத்தொழு பார்!**
மேய்ப்பர் போற்றும் பாலன் யார்?

இவர் தாம் மாவல்ல கர்த்தர்
இவர் மகிமையின் ராஜா;
திருப்பாதம் பணிவோம்,
ராஜக்ரீடம் சூட்டுவோம்.

2. அன்பின் வார்த்தை சொல்வதார்?
ஜனம் துதி செய்வோர் ஆர்?

3. லாசரின் கல்லறை பார்,
அங்கு கண்ணீர் விட்டோர் ஆர்?

4. சிலுவையின் காட்சி பார்,
அரும் ஜீவன் விட்டதார்?

5. ராஜ கோலம் அணிந்தார்
லோகம் யாவும் ஆள்கிறார்.

**376.**

**"Silent Night Holy night"**

**ஒப்பில்லா திரு இரா!**
இதில்தான் மா பிதா
ஏக மைந்தனை லோகத்துக்கு
மீட்பராக அனுப்பினது
அன்பின் அதிசயமாம்
அன்பின் அதிசயமாம்!

2. ஒப்பில்லா திரு இரா!
யாவையும் ஆளும் மா
தெய்வ மைந்தனார் பாவிகளை
மீட்டு விண்ணுக்குயர்த்த, தம்மை
எத்தனை தாழ்த்துகிறார்!
எத்தனை தாழ்த்துகிறார்!

3. ஒப்பில்லா திரு இரா!
ஜென்மித்தார் மேசியா
தெய்வ தூதரின் சேனைகளை
நாமும் சேர்ந்து, பராபரனை
பூரிப்பாய் ஸ்தோத்திரிப்போம்
பூரிப்பாய் ஸ்தோத்திரிப்போம்.

**377.**

**அற்புதம்! அற்புதம்!**
இயேசு எனக்கு
யோசனை கர்த்தராம்
வல்ல மீட்பராம்
பாவம் சாபம் யாவும் நீக்கப்
பாரில் ஜன்மித்தார்
அற்புதம்! என் யேசுவுக்கு
ஸ்தோத்திரம்.

**378. Warrington** **L.M.**

**ஆதி திரு வார்த்தையான**
கோதில்லா இயேசு கர்த்தனே,
மேதினியோரை ஈடேற்ற
பூதலம் வந்தீர் ஸ்தோத்திரம்!

2. உன்னதருக்கே மகிமை,
உலகினில் சமாதானம்,
இத்தரை மாந்தர்மேல் அன்பு
உண்டான தும்மால், ஸ்தோத்திரம்!!

3. பொன் செல்வம் ஆஸ்தி மேன்மையும்
பூலோக பொக்கிஷங்களும்
எங்களுக்கு எல்லாம் நீரே,
தங்கும் நெஞ்சத்தில், ஸ்தோத்திரம்!!

**379.**

**மாறா மீட்பர் அன்பு,**
ஆழியின் அகலமும்
ஆகாயத் துயரமும்
மகா ஆழமாம்;
அபாரத்தின் என்னைப்
பிள்ளைபோல் பாதுகாப்பார்;
நான் எங்கே போனாலும்,
பாதகன் ஆனாலும் நேசிப்பார்.

**380. Bullinger, St. Helen's** **8, 5, 8, 3.**

**ஆத்ம நேசர் ஆவல்கொண்டு**
காத்து நிற்கிறார்
“நீச பாவி வா என்னண்டை”
என்கிறார்.

2. பாடுபட்டேன் சிலுவையில்
மாண்டேன் உனக்காய்,
எந்தன் மீட்பைத் தள்ளிடாமல்
நம்புவாய்.

3. பாவத்தால் நீ கட்டுண்டாலும்
ரட்சகர் நானே,
பூரிப்பாய் உன் மீட்பர் பின்னே
செல்வாயே.

4. நேசர் உன்னை மாறி மாறி
கூவி நிற்கிறார்,
பிராணநாதர் இன்ப சத்தம்
கேட்கப்பார்.

5. இப்போதே ரட்சண்ய காலம்,
தாமதியாதே,
மீட்பர்பாதம் அண்டிக்கொள்வாய்
இன்றைக்கே.

6. யேசுநாதா! இதோ வந்தேன்
ஏற்றுக் கொள்ளுமே,
பாவம் போக்கி மோட்ச பாக்யம்
தாருமே.

**381. Jesus lives, St. Albinus** **7, 8, 7, 8 with Alleluia**

**இயேசு உயிர்த்தெழுந்ததால்**
சாவின் பயம் அணுகாது;
உயிர்த்தெழுந்தார்! ஆதலால்
சாவு நம்மை மேற்கொள்ளாது,
அல்லேலூயா!

2. உயிர்த்தெழுந்தார்! மரணம்
நித்திய ஜீவ வாசல் ஆகும்
இதினால் பயங்கரம்
சாவில் முற்றும் நீங்கிப்போகும்
அல்லேலூயா!

3. உயிர்த்தெழுந்தார்! மாந்தர்க்காய்
ஜீவன் ஈந்து மாண்டதாலே,
இயேசுவை மா நேசமாய்
சேவிப்போம் மெய்ப்பக்தியோடே
அல்லேலூயா!

4. உயிர்த்தெழுந்தார்! பேரன்பை
நீக்க முடியாது ஏதும்;
ஜீவன் சாவிலும் நம்மை
அது கைவிடாது காக்கும்,
அல்லேலூயா!

5. உயிர்த்தெழுந்தார் வேந்தராய்
சர்வ லோகம் அரசாள்வார்;
அவரோடானந்தமாய்
பக்தர் இளைப்பாறி வாழ்வார்,
அல்லேலூயா!

**382.**

**நேற்றும் இன்றும் என்றும் மாறார்**
இயேசு இரட்சகர்;
எல்லாம் மாறினும் இயேசு மாறார்
மகிமை அவர்க்கே.

**383.**

**உளையான சேற்றில் நின்றெடுத்தார்**
மலையான கல்மேல் நிறுத்தினார்.
நிலையான பாட்டை வாயில் தந்தார்,
மலைக்காமல் துதிப்பேன் அல்லேலூயா.

**384.**

"Only a sinner saved by grace"

**கிருபையாலே ரட்சித்தீரே**
கிருபையாலே ரட்சித்தீரே,
கெட்டகுமாரனைபோல அலைந்தேனே
நான் கெட்டழிந்தேனே என்னை மீட்டீரே.

**385.**

"Salvation Army Tune-54"

**வானம் பூமி யாவற்றிலும்**
யேசு மேலானவர்
மனிதர், தூதர், பேய்தானும்
அவர் முன் வீழுவர்.

நான் நம்புவேன், நான் நம்புவேன்
யேசு எனக்காய் மரித்தார்,
பாவம் நீங்கச் சிலுவையில்
உதிரம் சிந்தினார்.

2. இரட்சகர் உயிர் விட்டதும்
எந்தனுக்காகவே;
வெறெந்த மாமன் றாட்டுக்கும்
ஆங்கிட மில்லையே.

3. பாவத்தின் மாளும் யாவர்க்கும்
உயிரளிக்குமே;
பெலனற்ற ஆத்மாவுக்கும்
சக்தி கொடுக்குமே.

4. லோகம் இவ்வன்பின் மாட்சிமை
ருசித்துப் பார்க்காதோ?
மீட்ப ருதிர வல்லமை
வந்து சோதியாதோ?

5. என் மரணப் படுக்கையில்
யேசென்ற நாமத்தை,
பிரஸ்தாபிக்கும் சந்தோஷத்தில்
அடைவேன் நித்திரை.

**386. Bavarian 102** **L.M.**

**சுத்த இருதயத்தை நீர்,**
கர்த்தாவே, என்னில் சிஷ்டியும்,
திட ஆவியை, தேவரீர்,
என் உள்ளத்தில் புதுப்பியும்.

2. ஆ, உம்முடைய முகத்தை
விட்டென்னை நீர் தள்ளாமலும்,
என்னிடத்தில் தெய்வாவியைப்
பேர்த் தெடுக்காமலுமிரும்.

3. மீண்டும் உமதிரட்சிப்பின்
சந்தோஷத்தைத் தந்தருளும்,
இனிப் புதிய ஆவியின்
உற்சாகம் என்னைத் தாங்கவும்.

**387. G.B.421**

**என் மேய்ப்பரே நல்நேசரே!**
எனதுள்ளத்தின் சந்தோஷமே!
நான் உம்மை சமீபிக்கிறேன்
நீர் என்மேல் க்ருபையாயிரும்.
பேசும்! பேசும்! ஜெபம் செய்யும்போது
மீட்பரே! உமது சித்தத்தை
அடியேன் காண க்ருபை செய்யும்.

2. பாவ மேகத்தின் அந்தகாரம்
பாவி உள்ளத்தை மறைக்குதையோ
வல்லவா! உந்தன் ஆவியாலே
அதை வெல்லக்ருபை செய்யாயோ.

3. அங்குமிங்கும் ஓடுதே உள்ளம்
எங்கும் நிற்கப் பெலன் இல்லையே
அப்பனே! உந்தன் சத்யநெறி
இப்போ தேழைக்குப் பெலனாகவே.

**388. S.S.218**

**"I feel like singing"**

**எந்நேரமேயும் பாடுவேன்;**
விசாரம் நீங்கிற்றே,
இம்மனுவேலைப் போற்றுவேன்
சந்தோஷமாயிற்றே.

சங்கீதம், கீதம், கீதம் பாடுவேன்
கீதம், கீதம், சங்கீதம் பாடுவேன்.

2. என் பாவ பலி யேசுவைக்
கல்வாரியிற் கண்டேன்,
அத்தாலுண்டான துக்கத்தை
விட்டாறித் தேறினேன்.

3. பொல்லாத சோதனை உண்டே,
என்றாலும் வெல்லுவேன்
என் வல்ல கர்த்தர் யேசுவே;
நான் நித்தம் பாடுவேன்.

4. பேரன்பின் சுவிசேஷத்தை
எல்லோருக்குந் தெரிவி,
இப்பூமியெங்கும் வேதத்தைப்
பிரஸ்தாபித் தறிவி.

**389. S.S.529**

**"Down in the valley with my saviour"**

**பூவின் நற்கந்தம் வீசும்**
சோலையாயினும்
நல்ல தண்ணீர் ஓடும்
பள்ளத் தாக்கிலேயும்,
இயேசு நாதர் பின்சென்றேகி
மோட்சம் நாடுவேன்,
விண்ணில் சூடும் க்ரீடம்
நோக்கி ஓடுவேன்.

பின் செல்வேனே!
மீட்பர் பின்செல்வேனே!
எங்கேயும் எப்போதும்
பின்னே செல்லுவேன்.
பின் செல்வேனே!
மீட்பர் பின் செல்வேனே
இயேசு காட்டும் பாதை
யெல்லாம் செல்லுவேன்.

2. கார்மேகம் மேலே மூடும்
பள்ள மென்கிலும்
காற்றகோரமாக மோதும்
ஸ்தானத்திலும்
யேசு பாதை காட்டச் சற்றும்
அஞ்சவே மாட்டேன்;
இரட்சகர்கை தாங்கத்
தைரியம் கொள்ளுவேன்.

3. நாள்தோறும் இயேசுநாதர்
கிட்டிச் சேருவேன்;
மேடானாலும் காடானாலும்
பின் செல்லுவேன்,
மீட்பர் என்னை மோசமின்றிச்
சுகமே காப்பார்;
விண்ணில் தாசரோடு
சேர்ந்து வாழ்விப்பார்.

**390. S.S.873 Blessed assurance**

**இயேசுவை நம்பி பற்றிக் கொண்டேன்**
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவ குமாரன் ரட்சை செய்தார்;
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்.

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்,
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்,
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்,
நீடூழி காலம் ஸ்தோத்தரிப்பேன்.

2. அன்பு பாராட்டி, காப்பவராய்
எந்தனைத் தாங்கி, பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்

3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்
துய்ய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்து விட்டார்
விண்ணிலும் சேர்த்து வாழச்செய்வார்

**391. He has pardoned a rebel**

**பாவிக் கவர் காட்டின மா நேசத்தால்,**
சிலுவையில் தொங்கின யேசு,
திரு சிரசிலவர் மண்முடியைச் சூண்டார்,
பெரும்பாவி என்னை இரட்சிக்க.

பெரும்பாவி என்னை இரட்சிக்க,
திரு சிரசிலவர் முண்முடியைச் சூண்டார்
பெரும் பாவி என்னை இரட்சிக்க.

2. ஓர் காலமவர் ஏழைப் பாவிக்காகச்
சொரிந்தாராம் மிகவும் கண்ணீர்;
“தாகமுள்ள எல்லாரும் வாரும் நானே”
என்றார், “இளைப்பாற்றும் ஜீவ தண்ணீர்”.

3. உமதற்புத மா நேசம் பாவி எந்தன்
கல் இருதயத்தை இளக்கி,
மனஸ்தாபத்தோடு சுவாமி நான் உன்தன்
திருப்பாதத்தைத் தேடி வந்தேன்.

4. எப்பேர்க்கொத்த பாவியையும் ரட்சிக்க
ஆம் வல்லவர் எனது மீட்பர்;
உன் பாவத்தை வெறுத்து வந்தால் உன்னை
இவர் சத்தியமாக மீட்பார்.

**392. S.S.379**

"Have you been to Jesus"

**பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா**
ஒப்பில்லாத் திருஸ்நானத்தினால்?
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

மாசில்லா–சுத்தமா?
திருப்புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கி விடகுணம் மாறிற்றா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்?
மறுஜன்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்?
மோட்ச கரை ஏறிச்சுகிப்பீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

4. மாசு கரை நீங்கும், நீசப்பாவியே!
சுத்தரத்தத்தின் சக்தியினால்
முத்திப்பேறுண்டாகும் குற்றவாளியே!
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

**393. S.S.351**

**"Why do you wait dear brother"**

**பாவம் தீராததென்ன?**
ஓ! தாமதம் பண்ணுவானேன்?
தயாபரர் நித்திய ஜீவன்
ஈவாரே, சந்தேகிப்பானேன்?

வாவேன்! வாவேன்!
வாவேன்! இக்ஷணமே!

2. உணர்வில்லாத தென்ன?
பயங்கர மோசமுண்டாம்
இயேசுவினாலே யல்லாமல்
விமோசனமே யில்லையாம்.

3. குணப்படாத தென்ன?
ரட்சண்ய நல் நாளிதுவே!
ராக்காலம் சமீபித்துவர
மா மோசமும் சாவுமுண்டே.

4. சுத்தமில்லாத தென்ன?
மா திவ்ய ஸ்நானமுண்டே
உம் பாவம் நிவாரணமாகும்
சமூலம் இந்நேரத்திலே.

**394. S.S.306**

**"There shall be showers of blessing"**

**'அருள் ஏராளமாய் பெய்யும்'**
உறுதி வாக்கிதுவே;
ஆறுதல் தேறுதல் செய்யும்
திரளாம் மிகுதியே.

அருள் ஏராளம்
அருள் அவசியமே;
அற்பமாய்ச் சொற்பமாயல்ல
திரளாய்ப் பெய்யட்டுமே

2. 'அருள் ஏராளமாய்ப் பெய்யும்'
மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்

3. 'அருள் ஏராளமாயப் பெய்யும்'
பொழியும் இச்சணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே.

4. 'அருள் ஏராளமாய் பெய்யும்'
இயேசு! வந்தருளுமேன்!
இங்குள்ள கூட்டத்திலேயும்
இறங்கி தங்கிடுமேன்.

**395. S.S.309**

**"Revive thy work O Lord"**

**கர்த்தாவே! இரங்கும்!**
ப்ரசன்னமாகுவேன்;
மெய் பக்தர் நெஞ்சில் இப்போதும்
வந்தனல் மூட்டுமேன்

கர்த்தாவே! இரங்கும்!
நற்சீரைத் தாருமேன்,
மா வல்ல க்ரியை செய்யவும்
இந்நேரம் வாருமேன்;

2. கர்த்தாவே! இரங்கும்!
நல்மீட்பர் நாமமும்
மா சுடர்போல் ப்ரகாசிக்க
பேரன்பைக் காட்டவும்

3. கர்த்தாவே! இரங்கும்!
பேர் நன்மை செய்யுமே
விண்மாரி பெய்ய, மேன்மையும்
உண்டாகும் உமக்கே

**396. Trentham (G.B.151)** **S.M.**

**"Breath on me Breath of God"**

**ஊதும், தெய்வாவியை;**
புத்துயிர் நிரம்ப;
நாதா, என் வாஞ்சைசெய்கையில்
உம்மைப் போல் ஆகிட.

2. ஊதும், தெய்வாவியை;
தூய்மையால் நிரம்ப;
உம்மில் ஒன்றாகி யாவையும்
சகிக்க, செய்திட.

3. ஊதும், தெய்வாவியை;
சாகேன் நான் என்றுமாய்;
சதாவாய் வாழ்வேன் உம்மோடு
பூரண ஜீவியாய்.

**397. S.S.38**

**"God's love"**

**வான பிதா தந்த வேதத்திலே**
நான் மகிழ்வேன்
அன்பு சொல்லுகிறார்;
இவ்வித ஆச்சர்யம் யாவினுள்ளே
ஆச்சர்யம் யேசென்னை நேசிக்கிறார்.

ஆனந்தம் யேசு நேசிக்கிறார்
நேசிக்கிறார், நேசிக்கிறார்
ஆனந்தம்! இயேசு நேசிக்கிறார்,
நேசிக்கிறார் என்னையும்.

2. நான் மறந்தேடினும் நேசித்தென்னை
சென்ற இடம் வந்து தேடுகிறார்;
மீண்டும் நினைத்தவர் நேசந்தன்னை
ஆண்டவர் அண்டுவேன், நேசிக்கிறார்.

3. நேசிக்கிறார், நானும் நேசிக்கிறேன்
மீட்கவந் தாத்துமம் நேசிக்கிறார்;
சாவுமரத்தில் அந்நேசங்கண்டேன்
நிச்சயம் யேசென்னை நேசிக்கிறார்.

4. நிச்சயத்தால் இன்ப ஓய்வு பெற்றேன்
நம்பும் என்யேசென்னை வாழ்விக்கிறார்
சாத்தான் நில்லாதஞ்சி ஓடக்கண்டேன்
நான் சொல்ல, யேசென்னை நேசிக்கிறார்.

**398. S.S.357**

**"Sing them over again"**

**காது குளிர பாடுங்கள்**
கிருபா சத்தியம்
புத்தி தெளியக் காட்டுங்கள்
திவ்விய வசனம்
வெல்க! சத்திய வேதம்,
வாழ்க! நித்திய வேதம்.

அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்
அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்.

2. நல்ல செய்தியைக் கூறுமே
கிருபா சத்தியம்,
பாவ நாசத்தைக் காட்டுமே
திவ்விய வசனம்
வான வருஷமாரி,
ஞான பொக்கிஷவாரி

3. வேத நாயகர் பொழியும்
கிருபா சத்தியம்;
ஜீவ மங்கள மொழியும்
திவ்விய வசனம்
யேசு எந்தனைப் பாரும்,
நித்தம் எந்தனைக் காரும்

**399.**

**இரட்சிக்க வல்லவர் யேசு**
மீட்கவல்லோ, காக்கவல்லோர்
இரட்சிக்க வல்லவர் யேசு
பாவியை மீட்க வல்லோர்

**400. S.S.814**

**"Rescue the perishing"**

**கெட்டோனை ரட்சியும்;**
சாவோனைக் காரும்
பாவமும் சாபமும்
நீங்கச் செய்யும்
சோர்வோனைத் தாங்கிடும்
வீழ்ந்தோனைத் தாங்கிடும்
சுப விசேஷத்தை அறிவியும்.

கெட்டோனை ரட்சியும்,
சாவோனைக் காரும்!
யேசு தயாபரர்,
யேசு வல்லோர்.

2. தீக்குணம் நெஞ்சிலே
மங்கிப்போனாலும்
மோட்சத்தை நாடும்
நல்லாசையுண்டாம்;
அன்பின் விசேஷத்தால்,
சத்தியத்தாலும்
குன்றிய வாஞ்சையும்
மேலிடுமாம்.

3. கெட்டோனை ரட்சியும்,
ஆத்திரத்தோடு,
ஆவியின் வல்லமை அருளுவார்;
ரட்சிப்பைக் கூறவும்
உருக்கத்தோடு
தேவாசீர்வாதமும்
தந்திடுவார்.

**401. S.S.475**

**"I here Thy welcome voice"**

**வா! நீச பாவி வா,**
என்றென்னைக் கூப்பிட்டீர்;
என் தோஷம் தீர ரக்ஷகா!
சுத்தாங்கம் பண்ணுவீர்.

அருள் நாயகா!
நம்பி வந்தேனே,
தூய திரு ரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமே.

2. சீர் கெட்ட பாவி நான்,
என் நீதி கந்தையே,
என்றாலும் உமதருளால்
துர்க்குணம் மாறுமே.

3. மெய்ப் பக்தி பூரணம்
தேவாவியால் உண்டாம்,
உள்ளான சமாதானமும்
நற்சீரும் பெறலாம்.

4. உண்டான நன்மையை
நீர் விர்த்தியாக்குவீர்
இப்பாவக்குணத் தன்மையை
நிக்ரகம் பண்ணுவீர்.

5. ஆ! தூய ரத்தமே
ஆ! அருள் நாயகா!
ஆ! கிருபா விசேஷமே!
ஆ! லோக ரக்ஷகா.

**402. S.S.476**

"Jesus my Lord to Thee I cry"

**தயாபரா! கண்ணோக்குமேன்!**
உம்மாலேயன்றி சாகுவேன்,
என் சீரில்லாமை பாருமேன்!

என் பாவம் நீக்குமே!
என் பாவம் நீக்குமே!
என் பாவம் நீக்குமே!
உம் ரத்தமே என் கதியே!
என் பாவம் நீக்குமே!

2. என் பாவ ஸ்திதி அறிவீர்,
மாசற்ற ரத்தஞ் சிந்தினீர்,
சீர்கேட்டை யெல்லாம் மாற்றுவீர்
என் பாவம் நீக்குமே!

3. மெய்ப்பக்தி ஒன்றுமில்லையே!
நற்க்ரியை வீண் பிரயாசையே,
உம் ரத்தத்தின் நிமித்தமே
என் பாவம் நீக்குமே!

4. இதோ! நற்பாத மண்டினேன்
தள்ளாமற் சேர்த்துக் கொள்ளுமே
என்றைக்கும் பாதுகாருமேன்,
என்பாவம் நீக்குமே!

**403. S.S. 874**

"What can wash away my sin"

**பாவ தோஷம் நீக்கிட,**
மீட்பரின் இரத்தம் தானே!
தீய குணம் மாற்றிட
மீட்பரின் இரத்தம் தானே!

மெய்யாம் ஜீவ நதி!
பாவம் போக்கும் நதி!
வேறே நதியை அறியேன்
மீட்பரின் இரத்தம் தானே!

2. என்னைச் சுத்தமாக்கிட
மீட்பரின் இரத்தம் தானே!
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் இரத்தம் தானே!

3. வேறே ரட்சிப்பில்லையே!
மீட்பரின் இரத்தம் தானே!
என் புண்ணியம் வாய்க்குமோ?
மீட்பரின் ரத்தம்தானே!

4. மோட்ச மார்க்கம் இதுவே!
மீட்பரின் ரத்தம் தானே!
ஏசு சுத்த தீர்த்தமே!
மீட்பரின் ரத்தம் தானே!

**404. S.S. 481**

**"Lone and weary, sad and dreary"**

**சீர்பெறாமல்; திக்கில்லாமல்,**
யேசுவண்டை சேருவேன்,
ஆவலோடும் ஆசையோடும்
திருப்பாதம் அண்டுவேன்.

அண்டினேனே! அண்டினேனே!
ஆசீர்வாதம் தாருமேன்,
அண்டினேனே அண்டினேனே
ஆற்றித் தேற்றிக் காருமேன்

2. தயவாக – நேசமாக
சீரைத் தந்து ரட்சிப்பீர்,
பாவத் தீங்கும் தூர நீங்கும்,
சர்வ சுத்தியாக்குவீர்.

3. குணம் மாற – நெஞ்சம் ஆற
பரவசமாகுவேன்;
கரையேற, மோட்சஞ் சேர,
ஊழிகாலம் வாழுவேன்.

4. அருள்தாரும் – பாதுகாரும்
மறு மாசில்லாமலே,
வாழ்விலேயும் தாழ்விலேயும்
தாங்கிவாரும் நாயனே!

**405. S.S. 883**

**"I am not ashamed to own my Lord"**

**நான் உம்மைப்பற்றி, – ரட்சகா?**
வீண் வெட்கம் அடையேன்,
பேரன்பைக் குறித்தாண்டவா!
நான் சாட்சி கூறுவேன்.

சிலுவையண்டையில்
நம்பி வந்து நிற்கையில்
பாவபாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

2. ஆ! உம்தன் வல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்,
நீர் கைவிடீர் இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்.

3. மா வல்ல வாக்கின்
உண்மையைக்
கண்டுணரச் செய்தீர்,
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்.

4. நீர் மாட்சியோடு வருவீர்,
அப்போது களிப்பேன்,
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்,
மெய்ப் பாக்யம் அடைவேன்.

**406. S.S.577**

**"I need Thee ev'ry hour"**

**எந்நேரம், யேசுவே!**
சகாயராயிரும்,
அன்பான சத்தத்தால்
என் ஏக்கம் நீக்கிடும்.

எந்நேரம் நீரே வேண்டும்;
இந்நேரம் நீரே வேண்டும்;
நீர் என்னை நோக்கிப்பாரும்
பேரன்பரே!

2. எப்போதும், யேசுவே!
இப்பாவியோடிரும்,
தீயோனின் சோதனை
ஓயாமல் விலக்கும்.

3. எக்காலும் யேசுவே!
இக்கட்டு வாழ்விலும்,
அன்பாகத் தங்குவீர்
என் நீச நெஞ்சிலும்.

4. எப்போதும் யேசுவே!
இப்பேதைக் கிரங்கும்
மெஞ்ஞானம், சத்தியம்
செய்நன்றி போதியும்.

5. எக்காலும், யேசுவே!
எக்கேடும் நீக்குமேன்,
காருண்ய நாயகா
நீர் என்னை ஆளுமேன்.

**407. S.S.1079**

**"We have heard the joyful sound"**

**நல்ல செய்தி! யேசுவை**
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
நம்பிவந்து அவரை
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
எந்தப் பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்
த்ரோகம் செய்த போதிலும்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
தேசாதேசம் கூறுவோம்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
எந்த நாடு தீவிலும்
யேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆகிலும்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!

3. இன்னும் கேள்! மா நேசராம்!
யேசுவே! காக்கிறார்!
நம்பும் பக்தரையெல்லாம்
யேசுவே! காக்கிறார்!
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக்கொள்ளுவார்
கேடுபாடில்லாமலும்
யேசுவே! காக்கிறார்.

4. சுவிசேஷம் இதுவே
யேசுவே! காக்கிறார்!
பாவம் நீங்கி பின்னுமே
யேசுவே! காக்கிறார்!
மோட்சஞ் சேருமளவும்
தாங்கிக் கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும்
யேசுவே! காக்கிறார்

**408. S.S.89**

**"The great physician now is near"**

**பேரன்பர் யேசு நிற்கிறார்**
நாம் அண்டிக்கொள்வோமே
கடாட்சமாகப் பார்க்கிறார்
நல் நாமம் போற்றுவோமே

விண்ணில் மேன்மை பெற்றது
மண்ணோக்கின்பமாவதது;
பாடிப்போற்றும் நாமமது;
யேசு என்னும் ஆ! நாமம்.

2. ரட்சண்ய வல்ல நாமத்தால்
விசாரம் நீங்கிப் போகும்,
அவ்வின்ப நாமம் கேட்பதால்
சந்தோஷமும் உண்டாகும்.

3. நல் மீட்பர் யாவர் பேரிலும்
கடாட்சம் வைக்கிறாரே,
தம்மண்டை சிறியோரையும்
தள்ளாமல் சேர்க்கிறாரே.

4. ஆனந்தமாகப் பாடுவோம்
பேராவலோடு வாரும்
ஏகோபித்தார வாரிப்போம்,
மெய்ப்பக்தர் தாசர் யாரும்.

5. பேரின்ப மோட்ச லோகத்தில்
மாண்பாகக் கூடுவோமே,
ரட்சண்ய நாதர் பாதத்தில்
சாஷ்டாங்கம் பண்ணுவோமே.

**409. S.S.422**

**"Knocking knocking who is there?"**

**தட்டித் தட்டி நிற்கிறார்**
காத்துக் கொண்டிருக்கிறார்,
பரதேசிபோல வந்தும்
ராஜனாய் இருக்கிறார்
உள்ளமே, இவ்வன்புணர்ந்து
கதவைத் திறக்கப்பார்!

2. தட்டித் தட்டி நிற்கிறார்
காத்துக் கொண்டிருக்கிறார்,
நிலையோரம் புல் முளைத்து,
கீலும் துருப்பட்டது
கதவசையாமல் தங்கி
திறவாமற் போயிற்று!

3. தட்டித் தட்டி நிற்கிறார்
காத்துக் கொண்டிருக்கிறார்;
சூட்டப்பட்ட சிரசுள்ளார்!
காயப்பட்ட கைகள் பார்!
நேசப் பார்வையுற்ற மீட்பர்
இன்னும் காத்து நிற்கிறார்!

4. உள்ளே வாரும் யேசுவே!
எந்தன் நெஞ்சில் தங்குமே,
திவ்ய அன்பை உணராமல்,
முன்னே வாசல் பூட்டினேன்,
இப்போதே! என் நேசநாதா!
உள்ளே வாரும்! வாருமேன்!

**410. S.A.**

**"When Jesus was born in the Manger"**

**இரட்சகரொருவர் அன்பு,**
பேரன்பென்று கேள்விப்பட்டேன்,
ஆனால் மெய்தானா மோட்சம்விட்டு
என்னை மீட்க மனிதனானார்?

ஆம்! ஆம்! ஆம்!
என்னை நேசித்ததாலே தானே;
ஆம்! ஆம்! ஆம்!
என் மேல் க்ருபை கூறுகிறார்.

2. அவர் பாடும் அனுபவமும்
அதிகமாய்க் கேள்விப்பட்டேன்!
ஆனால் மெய்தானா யிவை எல்லாம்
பாவி எந்தனுக்காகத்தான்?

3. மகா யேசுவினடியார்க்கு
மேல் வீடொன்றிருக்கிறதாம்;
ஆனா லேழைப்பாவி எனக்கு
அங்கோர் பங்கு இருக்கிறதா?

4. தேவே! இந்த என் விண்ணப்பத்தை
அன்பாக நீர் ஏற்றுக்கொண்டு,
உமதாவியா லிவை யெல்லாம்
என் பங்கென்று காட்டிடுவேன்.

**411. Martydon** **C.M.**

**நீரோடையை மான் வாஞ்சித்துக்**
கதறும் வண்ணமாய்
என் ஆண்டவா, என் ஆத்துமம்
தவிக்கும் உமக்காய்.

2. தயாள கர்த்தா, உமக்காய்
என் உள்ளம் ஏங்காதோ?
உம் மாட்சியுள்ள முகத்தை
எப்போது காண்பேனோ?

3. என் உள்ளமே, விசாரம் ஏன்?
நம்பிக்கைக் கொண்டு நீ
சதா உன் ஜீவ ஊற்றேயாம்
கர்த்தாவை ஸ்தோத்திரி.

4. நாம் வாழ்த்தும் கர்த்தனார் பிதா,
குமாரன், ஆவிக்கும்;
ஆதிமுதல் என்றென்றுமே
துதி உண்டாகவும்.

**412. S.A.173**

"On the cross of calvary"

**கல்வாரி சிலுவையில்**
தொங்கி ஜீவனை விட்டீர்;
மானிடரிதயத்தில்
மாறுதல் உண்டாக்க நீர்,
மாசற்ற ஜீவ நதி,
பாவம் போக்கத் திறந்தீர்;
எனக்காக மரித்தீர்
கல்வாரி சிலுவையில்.

அக்கல்வாரி! அக்கல்வாரி!
எனக்கேசு மரித்தார்
கல்வாரி சிலுவையில்

2. இந்த அன்பின் பாசத்தான்
மீட்பருக்கு எந்தனை
முழு தத்தஞ் செய்யத்தான்,
ஆவி, ஆத்மா தேகத்தை,

சர்வாங்க பலியாக
யேசுவே படைக்கிறேன்;
எனக்காக மரித்தீர்,
கல்வாரி சிலுவையில்.

3. நானுமக்குச் சொந்தமே,
என்னையேற்றுக்கொள்ளுமேன்
நேச மீட்பர் நித்தமே
என்னில் வாசம் பண்ணுமேன்,
பாவத்தை வெல்ல நெஞ்சை
ஸ்திரமாகத் தாருமேன்;
எனக்காக மரித்தீர்,
கல்வாரி சிலுவையில்.

4. நேசரே! நீர் பட்ட நாள்,
பூலோக மதிர்ந்தது
குத்துண்டு மரித்ததால்
கோவே! இரட்சை வந்தது;
உம்மை நான் விடுவேனோ?
எந்தன் ஆத்ம நாயகா!
எனக்காக மரித்தீர்,
கல்வாரி சிலுவையில்.

**413. S.A.95**

**தீர்த்தப் பாவக் கூரொடித்துச்**
சிறையை மீட்கிறார்
இரத்தத்தினால் பாவம் தீர்த்து
யேசு ஜீவன் தாரார்.

மாமகத்துவ ஊற்று,
மாமகத்துவ ஊற்று,
மாமகத்துவ ஊற்று,
எனக்காய்ப் பாயுது,

2. என்னையாளும் பாவத்தை நீர்
நிர்மூல மாக்குவீர்,
காயத்தினில் பாயும் செந்நீர்
வல்லமை காட்டுமேன்.

3. ஆத்மம் தேகம் மற்றுமெல்லாம்
மெய்யாய்ப் படைக்கிறேன்;
இம்மை செல்வம் அற்பப் புல்லாம்
உம்மைப் பெற வந்தேன்.

**414.**

**ஜீவ ஒளியிற் போகிறேன்**

போகிறேன், நான் போகிறேன்;
மீட்பர் நடந்த பாதையில்
போகிறேன், நான் போகிறேன்.

ஓர் வெண்ணங்கி, ஓர் பொன்முடி
ஓர் வாத்தியம், ஓர் மேல்வீடு
ஓர் செயக்கொடி, ஓயா வின்பம்
எனக்குண்டு மோட்சத்தில்,
யேசு என் ரட்சகர்,
பாவந் தீர்த்தார்;
கல்வாரி மலையிலென் கடன் தீர்த்தார்

அவரன்பில் நான் மூழ்கி
என்றும் பாடுவேன்;
மகிழ்வேன் ஜீவ ஊற்றில்
வாழ்வேன்.

2. பாவிகள் நடுவில் போகிறேன்
போகிறேன், நான் போகிறேன்;
மீட்பர் பின் சென்றால் ஜெயமுண்டு
போகிறேன், நான் போகிறேன்.

3. வீண் பக்திக்காரரர் நகைத்தாலும்
போகிறேன், நான் போகிறேன்;
பூரண அன்பு பயம் நீக்கும்,
போகிறேன், நான் போகிறேன்.

4. சிலுவைகொடியுடன் போகிறேன்
போகிறேன், நான் போகிறேன்;
மீட்பரின் நேசத்தைக் காட்ட நான்
போகிறேன், நான் போகிறேன்.

5. பரிசுத்தாவியால் நிறைந்து,
போகிறேன், நான் போகிறேன்;
மோட்சம் சேருமட்டும் நிலைத்து,
போகிறேன், நான் போகிறேன்.

**415. S.S.698** **11s.**

**"Yield not to temptation"**

**தீவினை செய்யாதே**
மா சோதனையில்,
பொல்லாங்கனை வென்று
போராட்டத்தினில்
வீண் ஆசையை முற்றும்
கீழடக்குவாய்,
யேசையரை நம்பி
வென்றேகிப் போவாய்

ஆற்றித் தேற்றியே காப்பார்,
நித்தம் உதவி செய்வார்,
மீட்பர் பெலனை ஈவார்,
ஜெயம் தந்திடுவார்.

2. வீண் வார்த்தை பேசாமல்,
வீண் தோழரையும்
சேராமலே நீங்கி,
நல்வழியிலும்
நின் றூக்கமும் அன்பும்
சற்றேனும் விடாய்,
யேசையரை நம்பி
வென்றேகிப் போவாய்

3. மெய் நம்பிக்கையாலே
வென்றேகினோன் தான்
பொற்கிரீடம் பெற்றென்றும்
பேர்வாழ்வடைவான்;
மா நேசரின் பெலன்
சார்ந்தே செல்லுவாய்,
யேசையரை நம்பி
வென்றேகிப் போவாய்

**416. St. Lawrence** **L.M.**

**"O Thou who makest souls to shine"**

**கர்த்தாவே, பரஞ்சோதியால்**
ஆன்மாவைப் ப்ரகாசிப்பிப்பீர்;
சீர் அருள் என்னும் பனியால்
உம் அன்பாய்வோரை உய்விப்பீர்.

2. உம் மந்தை சுத்தமாகவும்,
விளக்கெல்லாம் இலங்கவும்
போதகர் சபையாருக்கும்
வரப்ரசாதம் அருளும்.

3. விண் ஆள் தாம் முதல் ஆகியே,
மற்றோரை ஆங்குயர்த்தவும்,
விஸ்வாசம், நம்பிக்கை, அன்பே
ப்ரசங்கிப்போருக்கு ஈந்திடும்.

4. எவ்வேழையான பேர்களும்
மேலான ராஜ்யம் சேரவே,
கேட்போருக்குக் கற்க விருப்பம்,
சற்குணம், சாந்தம் நல்குமே.

**417. Irish** **C.M.**

**"The Son of Man from Jordan rose"**

**யோர்தான் விட்டேறி, மனுஷ**
குமாரன் ஜெபித்தார்;
வானின்றப் போதிறங்கின
புறா உருக் கண்டார்.

2. நல்லாவி அபிஷேகமாய்
அவர் மேல் தங்கினார்;
என் நேச மைந்தன் என்பதாய்
பிதா விளம்பினார்.

3. அவ்வாறு ஸ்நானத்தால் புது
பிறப்பை அடைந்தார்,
மெய்த் தெய்வ புத்திரர் என்று
விஸ்வாசத்தால் காண்பார்.

4. கபடில்லாப் புறாத்தன்மை
தரிக்கப்படுவார்
நல்லாவித் தங்கள் உள்ளத்தை
நடத்தப் பெறுவார்.

5. உம் ரத்த ஊற்றால் பாவத்தை
நீக்கின கிறிஸ்துவே,
தூய்மையோரான தாசரை
தற்காத்துக் கொள்ளுமே.

6. சீர் கெட்டலோகம் மீட்டோரே,
பிதா ஆவியையும்
உம்மோடு ஏகராகவே
என்றென்றும் துதிப்போம்.

**418.**

**தர்மக் காசைப் பாரும்**
விழும் ஓசை கேள்;
யேசுவுக்கு யாவும்
நேசமாயீவோம்.

ஓசை, ஓசை, ஓசை, ஓசை
காசின் ஓசை கேள்;
யேசுவுக்கு யாவும்
நேசமாயீவோம்.

2. சிறியோர் நமக்கு
செம்புப் பெர்க்கிஷம்
பெரியோ ரானாலோ
ஈவோம் கனகம்.

3. எங்கள் சொந்தக் காசை
யேசுநாதர்க்கே
தந்தோம் நல் உதார
சிந்தையோடுமே.

4. சிறியோர் ஈந்ததை
ஏற்றுக்கொள்ளுமே;
சிறிதான விதை
சித்தியாகுமே.

**419. Wir Pflugan** **7, 6, 7, 6, D with refrain**

**"We plough the fields andscatt"**

**வயல் உழுது தூவி**
நல் விதை விதைப்போம்;
கர்த்தாவின் கரம் அதை
விளையச் செய்யுமாம்;
அந்தந்தக் காலம் ஈவார்
நற்பனி மழையும்,
சீதோஷ்ணம் வெயில் காற்று
அறுப்பு வரையும்.

நல் ஈவுகள் யாவும்
ஈபவர் கர்த்தரே,
துதிப்போம் என்றும் துதிப்போம்
அவர் மா அன்பையே.

2. விண் வானம் ஆழி பூமி
அவரே சிருஷ்டித்தார்;
புஷ்பாதி விண் நட்சத்திரம்
பாங்காய் அமைக்கிறார்
அடக்கி, ஆழி காற்று

உண்பிப்பார் பட்சிகள்
போஷிப்பிப்பார் அன்றன்றும்
மைந்தாராம் மாந்தர்கள்.

3. நல் ஈவு பலன் பாக்கியம்
விதைப்பு அறுப்பை
ஜீவன் சுகம் ஆகாரம்
தரும் பிதா உம்மைத்
துதிப்போம், அன்பாய் ஏற்பீர்
படைக்கும் காணிக்கை;
யாவிலும் மேலாய் கேட்கும்
தாழ்மையாம் உள்ளத்தை.

**420. S.S.789** **8, 7**

**"Must I go and empty handed."**

**கரையேறி, உமதண்டை**
நிற்கும் போது ரக்ஷகா!
உதவாமல், பலனற்று,
வெட்கப்பட்டுப் போவேனோ?

ஆத்மா ஒன்றும் ரக்ஷிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா,
வெறுங்கையனாக, உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திராமல் சோம்பலாய்
காலங்கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நீர்ப்பந்தராய்.

3. தேவரீர் கைதாங்கச் சற்றும்
சாவுக்கஞ்சி கலங்கேன்,
ஆயினும் நான் பலன் காண
உடைக்காமற் போனேனே.

4. வாணாள் எல்லாம் வீணாளாகச்
சென்று போயிற்றே! ஐயோ!
மோசம் போனேன்! விட்டநன்மை
அழுதாலும் வருமோ?

5. பக்தரே! உற்சாகத்தோடு
எழும்பிப் ப்ரகாசிப்பீர்!
ஆத்துமாக்கள் யேசுவண்டை
வந்துசேர உழைப்பீர்.

**421. S.S.372** **8, 7, 8, 7 with refrain**

**"There is a gate that stands ajar"**

**அதோ! ஓர் ஜீவ வாசலே!**
அவ்வாசலில் ஓர் ஜோதி
எப்போதும் வீசுகின்றதே,
மங்காத அருள் ஜோதி.

ஆ! ஆழ்ந்த அன்பு இதுவே!
அவ்வாசல் திறவுண்டதே!
பாரேன்! பாரேன்!
பார்! திறவுண்டதே.

2. அவ்வாசலுள் ப்ரவேசிப்போர்
கண்டடைவார் மெய்வாழ்வும்;
கீழோர், மேலோர், இல்லோர், உள்ளோர்
எத்தேச ஜாதியாரும்.

3. அஞ்சாமல் அண்டிச் சேருவோம்,
அவ்வாசலில் உட்செல்வோம்;
எப்பாவம் துன்பும் நீங்கிப்போம்,
கர்த்தாவைத் துதி செய்வோம்.

**422. S.A.474**

**"Shout aloud"**

**இரட்சிப்பை யுயர்த்திக் கூறுவோம்**
லோகம் நடுங்க
நரகாக்கினையைச் சொல்லுவோம்
பாவமடங்க
பூர்வ கால தேவ தாசர்
விஸ்தரித்தாப் போல்;
மோட்ச லோகம்
போகுமுன்னமே

செல்வோம்; செல்வோம்
ஆர்ப்பரிப்புடனே;
செய்வோம், செய்வோம்;
போர் பலத்துடனே;
நானா ஜாதி பாஷைக்காரர்
இரட்சிப்படைய
மோட்ச லோகம்
போகு முன்னே.

2. யேசு வீரர் யுத்த சத்தம்
பூமியெங்கும் கேள்!
மீட்படைந்த பேதைகளின்
சாட்சிகளுங்கேள்!
முழு லோகத்தையும் வெல்ல
இன்னும் கொஞ்சநாள்
மோட்ச லோகம்
போகுமுன்னே.

3. தீதாய்ச் சத்துருக்க ளென்ன
சொன்ன போதிலும்
சுத்தாவியின் பலத்தை
பெற்று யாவிலும்
உண்மையாகப் போர் புரிந்தால்
வெல்வோம் சாவிலும்
மோட்ச லோகம்
போகுமுன்னே.

**423. S.S.696**

**"Only an armour-bearer."**

**ஆயுததாரி நான்,**
அபாத்திரனே
சேனாபதிக்கோ
பின் செல்வேனே,
நில், செல் என்றவர்
சொல்லக் கேட்கவும்,
யேசுவின் நல்வாக்கை
நம்பி வெல்லவும்.

பேரொலி கேட்குதே!
ஜெயமுண்டாம்!
போராடுவோம்
முனை முகமெல்லாம்.
சேனாதிபதி என்னை
நோக்குவார்;
ஆயுததாரியையும்
நம்புவார்.

2. ஆயுததாரி நான்,
இந்நேரத்தினில்
சன்னத்தனாகப்
படை முகத்தில்
போர்க்களத்தில் தாரவாரங்
கேட்கவே
பயமில்லாமல் யுத்தஞ்
செய்வேனே.

3. ஆயுததாரி நான்,
அசக்தனுமாய்க்
காணப்பட்டாலும்,
வெற்றி வேந்தனாய்
நித்திய காலமும்
மிக வாழுவேன்,
முக்தி மோட்ச வீட்டில்
நிலைத்திருப்பேன்.

**424. S.S.751**

**"To the work to the work"**

**முயல்வோம்! முயல்வோம்!**
தேவ ஊழியரே!
செல்லுவோம் யேசு நாதர்
நற்பாதையிலே,
மிக்க ஞானத்தினால்
வழி நடத்துவார்;
வல்ல ஆவியின்
பெலனை அருளுவார்.

முயல்வோம்–முயல்வோம்
முயல்வோம்–முயல்வோம்;
நம்புவோம்–நாடுவோம்,
நல் மீட்பர் வருமளவும்.

2. முயல்வோம்! முயல்வோம்!
சுவிசேஷகரே!
காட்டுவோம் தெளிவாய்
ஜீவ மார்க்கத்தையே;
பாவ நாச விசேஷத்தை
எடுக்கவும்,
பிராயச்சித்த நற்செய்தி
விஸ்தரிக்கவும்.

3. முயல்வோம்! முயல்வோம்!
விசுவாசிகளே!
கூறுவோம் கிறிஸ்துவின்
ராஜரீகத்தையே;
அந்தகாரத்தின் கிரியைகள்
நொறுக்குவார்;
பரலோக பேரின்பத்தை
நாட்டுவிப்பார்.

4. முயல்வோம்! முயல்வோம்!
தேவதாசர்களாய்,
சேருவோம் மோக்ஷலோகம்
மகத்துவமாய்;
அந்த லோகத்தின் ஜோதியில்
ஆனந்திப்போம்;
சுகவாழ்வும் சந்தோஷமும்
கண்டடைவோம்.

**425. S.S.703**

**"Sound the battle cry"**

**வீர தீரமாய் நேரும் சீருமாய்**
நின்று ஏகமாய்போர் செய்வோம்;
பயமின்றியும் பின்வாங்காமலும்,
கீதம் பாடியும் முன் செல்லுவோம்.

சோம்பும் சோர்வும் நீக்கி–வீரராக
யாரும் வாரும், யுத்தம் பண்ணுவோம்,
செல்லும் வெல்லும் ஆரவாரமாக
யேசு நாதர் நம்பிப் போகிறோம்

2. கொடி ஏற்றுவோம், காளம் ஊதுவோம்;
வாளும் வீசுவோம்; போர்கோலமாய்
கர்த்தர் தாங்குவார்; கூடப்போகிறார்,
வெற்றி சிறப்பார் கெம்பீரமாய்.

3. சேனைக்கர்த்தரே! யேசு நாதரே!
தேவரீரையே துதிப்போம்;
உம்மால் வல்லமை! உம்மால் மகிமை
உம்மால் வெற்றியை கண்டடைவோம்.

**426. S.S.757**

**"Sowing in the morning"**

**சத்ய வேதமான**

விதை காலை மாலை
விதைப்போம் எப்போதும்
ஒய்வில்லாமலே,
அறுப்பின் நற்காலம்
எதிர் நோக்குவோமே,
சேருவோம் எல்லோரும்
அரிக்கட்டோடே

அரிக்கட்டோடே
அரிக்கட்டோடே
சேருவோம் எல்லோரும்
அரிக்கட்டோடே.

2. மழையடித்தாலும்
வெயிலெரித்தாலும்
குளிர்ச்சியானாலும்
வேலை செய்வோமே;
நல்ல பலன் காண்போம்,
துன்பம் மாறிப்போகும்
சேருவோம் எல்லோரும்
அரிக்கட்டோடே.

3. கவலை, விசாரம்;
கஷ்ட நஷ்டத்தோடு
விதைத்தாலும் வேலை
விடமாட்டோமே
இளைப்பாறக் கர்த்தர்
நம்மை வாழ்த்திச் சேர்ப்பார்
சேருவோம் எல்லோரும்
அரிக்கட்டோடே.

**427. S.S.427**

**"Oh, think of the home over there"**

**மெய்யாம் வாசஸ்தலமுண்டே**
ஜீவ நதியின் ஓரத்திலாம்;
மோட்ச வாசிகளானவரே
பரிசுத்த சம்பூரணராம்.

அங்குதான் – அங்குதான்
மெய்யாம் வாசஸ்தலமுண்டே.

2. என் பிரிய சிநேகிதரும்
அந்த ஸ்தலத்தில் சென்றிருப்பார்
பரஞ்சோதி சமுகத்திலும்
சுகவாழ்வையும் பெற்றிருப்பார்.

3. என் அருமை ரக்ஷகரும்
பரலோகத்தின் சூரியனாம்,
அந்த வீட்டில் நான் சேர்ந்திடவும்
நீங்கிப்போகும் விசாரமெல்லாம்.

4. சேர்வேன் அதி சீக்கிரமே
மோக்ஷலோகத்தில் ஆனந்திப்பேன்
ஜீவ நதியின் ஓரத்திலே
என் மீட்பரை ஸ்தோத்தரிப்பேன்.

**428.**

**இயேசுவிடம் வா – இன்றே**
இரட்சிப்பார் உன்னை, – இன்றே
நம்பி வாறேன் – இன்றே
அல்லேலூயா – ஆமென்.

**429. Cradle Song** **11, 11, 11, 11.**

"Away in a Manger"

**பார், முன்னணை ஒன்றில்**
தொட்டில் இன்றியே
பாலனாம் நம்
இயேசு கிடந்தனரே
வெளியில் புல்மீது
தூங்கும் பாலன்தாம்
காண மின்னிட்டதே வான் வெள்ளிகள் தாம்.

2. மா, மா, எனும் சத்தம்
கேட்டு விழிப்பார்,
ஆயின் பாலன் இயேசு
அழவே மாட்டார்;
நான் நேசிக்கும் நாதா,
நீர் நோக்கிப் பார்ப்பீர்,
தூக்கத்தில் நீர் தங்கி
ராவெல்லாம் காப்பீர்.

3. என் நாதா, என்றும்
நீர் என்னை நேசிப்பீர்,
என்னோடு தரித்தே
அன்பாய் அணைப்பீர்;
உம் பாலர்தம்மை
நீர் ஆசீர்வதித்தே
சேர்த்திடும் விண் வீட்டில்
தூயோராக்கியே.

**430. Royal Oak** **7, 6, 7, 6 with refrain**

"All things bright and beautiful"

**நேர்த்தியான தனைத்தும்**
சின்னம் பெரிதெல்லாம்,
ஞானம், விந்தை ஆனதும்
கர்த்தாவின் படைப்பாம்.

1. பற்பல வர்ணத்தோடு
மலரும் புஷ்பமும்,
இனிமையாகப் பாடி
பறக்கும் பட்சியும்.

2. வசந்த காலத் தென்றல்,
பூங்கனித் தோட்டமும்,
காலத்துக்கேற்ற மழை,
வெய்யோனின் காந்தியும்.

3. ஆம், சர்வவல்ல கர்த்தா
எல்லாம் நன்றாய்ச் செய்தார்;
இதை நாம் பார்த்துப் போற்ற
நாவையும் சிஷ்டித்தார்.

**431. Easter, Alleluya** **L.M. with Alleluyas**

**எல்லா நன்மைக்கும் காரணா!**
எல்லாரும் போற்றும் ஆரணா!
நல்ல நாதா! வல்ல வேந்தா!
பொல்லாப்பைப் போக்கும் பேர் மன்னா!
பலகோடி நன்றி பூரணா!
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா!

**432. Lobe den Herren** **14, 14, 4, 7, 8.**

**போற்றிடு ஆன்மமே சிருஷ்டி**
கர்த்தாவாம் வல்லோரை
ஏற்றிடு உனக்கு இரட்சிப்பு
சுகமானோரை; கூடிடுவோம்
பாடிடுவோம் பரனை
மாண்பாய் சபையாரெல்லோரும்.

2. போற்றிடு யாவையும் ஞானமாய்
ஆளும் பிரானை;
ஆற்றலாய்க் காப்பரே தம் செட்டை
மறைவில் நம்மை; ஈந்திடுவார்
ஈண்டு நாம் வேண்டும் எல்லாம்;
யாவும் அவர் அருள் ஈவாம்.

3. போற்றிடு காத்துனை
ஆசீர்வதிக்கும் பிரானை;
தேற்றியே தயவால் நிரப்புவார் உன்
வாணாளை; பேரன்பராம்
பராபரன் தயவை
சிந்திப்பாய் இப்போதெப் போதும்.

4. போற்றிடு ஆன்மமே, என் முழு
உள்ளமே நீயும்;
ஏற்றிடும் கர்த்தரை ஜீவ இராசிகள்
யாவும் சபையாரே,
சேர்ந்தென்றும் சொல்லுவீரே
வணங்கி மகிழ்வாய் ஆமேன்.

**433. S.S.706**

**"Onward Christian soldiers"**

**பால்ய வீரர், வாரும்**
பாவம் வெறுத்தே,
திட்டி வாசல் சேரும்
உட்சென்றிடவே;
தட்டுவோருக்கெல்லாம்
வாசல்திறக்கும்,
யேசு வாழ்த்திச் சேர்ப்பார்
தேடும் யாரையும்!
பால்ய வீரர், வாரும்
முன்னே செல்லுவோம்;
விரைந்தோடி வாரும்,
வெற்றி சிறப்போம்.

2. பால்ய வீரர், வாரும்,
வெற்றிக் கீதமும்
பாடும் விண்ணோரோடும்
சேரும் அளவும்;
மோக்ஷ வீட்டில் கூடி
இன்பத் தொனியாய்,
தூயர், தூயர், தூயர்!
என்போம் ஏகமாய்.

**434.**

**செய், என்று சிற்றாறு,**
செய், நீ செய், தர்மஞ் செய்;
செய், என்று சிற்றாறு
இரையும் சத்தம் நீ கேள்;
சிறு ஆறாம் என் செயல் நீ பாரு
செய், நீ செய், தர்மஞ்செய்
சிறு ஆறாம் என் செயல் நீ பாரு
செழிப்பிப்பேன் நாடுகள்.

பாடிப்பாடி நாளெல்லாம்
செவ்வையாம்; நீ செவ்வையாம்
பாடிப்பாடி நாளெல்லாம்
தர்மஞ் செய்வையாம்.

2. செய், என்று மல்லிகை
செய், நீ செய், தர்மஞ் செய்
செய், என்று மல்லிகை
வீசும் வாசம் நீ பார்;
விருப்பங்கொள்வார் முகர என்னை
செய், நீ செய், தர்மஞ் செய்
விருப்பங்கொள்வார் முகர என்னை
மணம் என்பாரே மலர்.

3. செய், யேசுவுக்காகச் செய்,
செய், நீ செய், தர்மஞ்செய்,
செய், யேசுவுக்காகச் செய்
எவரென்றாலும் நீ செய்
ஜலம் புஷ்பம்போல களிப்பாய் நீ செய்;
செய், நீ செய், தர்மஞ் செய்;
ஜலம், புஷ்பம் போல் களிப்பாய் நீ செய்;
கிறிஸ்துவின் நிமித்தம் செய்.

## 128ம் சங்கீதம்

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில்**
நடக்கிறவன் / எவ/னோ, அவன்/ பா/க்கிய /வான்.

உன் கைகளின் பிரயாசத்தை நீ/சாப்பிடு/வாய்;
உனக்குப் பாக்கியமும் நன்மையும் / உண்டா /யிரு /க்கும்.

உன் மனைவி, உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக்
கொடியைப் போல் /இரு /ப்பாள்; உன் பிள்ளைகள்
உன் பந்தியைச் சுற்றிலும்,
ஒலிவ மரக்கன்றுகளைப் போல் /இரு/ப்பார்/கள்.

இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற /மனு/ஷன்; இவ்விதமாய்
ஆசீர்/ வதிக்கப்/படு/வான்.

கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்/வதிப்/பார்;
நீ ஜீவனுள்ள நாளெல்லாம்,
எருசலேமின் / வாழ்வைக் /காண்/பாய்.

நீ உன் பிள்ளைகளின் பிள்ளை/களை/யும்,
இஸ்ரவேலுக்கு உண்டாகும்
சமாதானத்/தையும்/காண்/பாய்.

பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த/ஆவி/க்கும்;
மகி/மை உண்/டாவ/தாக.

ஆதியிலும், இப்பொழுதும், எப்/பொழுது/மான;
சதா காலங்களிலும், மகிமை
உண்டாவ/தாக. ஆ/மென்.

skrajann@gmail.com